# வில்லடிப்பாட்டு



பல்கலைவித்தகர் மூ. அருளம்பலம்
(ஆரையூர் அருள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லடிப்பாட்டு

**பல்கலைவித்தகர் மூ. அருளம்பலம்**
(ஆரையூர் அருள்)

வெளியீடு

**நாகசக்தி கலைமன்றம்**
முனைக்காடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு : வில்லடிப்பாட்டு
ஆசிரியர் : பல்கலைவித்தகர் மூ. அருளம்பலம் (ஆரையூர் அருள்)
உரிமை : ஆசிரியருக்கு
முதற் பதிப்பு : தை 2021
வெளியீடு : நாகசக்தி கலைமன்றம், முனைக்காடு
அட்டைப்படம் : செல்வி தவனேசராசா திவ்யா
பக்கங்கள் : XX + 190
அளவு : 1/8 (A5)
விலை : 680/-
சர்வதேச குறியீடு : 978 - 624 - 5421 - 00 - 8

**Title :** Villadipaddu
**Author :** Araiyoor M. Arulampalam (Araiyoor Arul)
**Copyright :** Author
**First Edition :** January 2021
**Published by :** Nagashakthi Kalai Mandram, Munaikadu.
**Cover Design :** Ms. T. Divya
**Size :** 1/8 (A5)
**Pages :** XX + 190
**Price :** 680/=
**ISBN :** 978-624-5421-00-8
**Pritning :** Agshayan Press
Main Street, Kokkadicholai, Batticaloa, Eastern Province.

**வடிவமைப்பும் அச்சுப் பதிப்பும்**
அக்ஷயன் அச்சகம்,
பிரதானவீதி, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு,
கிழக்கு மாகாணம், இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பட்டப்படிப்பிற்காய் பல்கலைக்கழகம் செல்லாவிடினும்,
நல்லறிவு தேடிக்கற்று, பட்டம் பெறாப் பண்டிதனாய்ச் சிறந்து,
எல்லையற்ற கலை, இலக்கியத்துறைகளில் எழுத்தாளராக
அன்று, இன்று மென்றும் பல்கலை வித்தகராய்ப் பரிணமித்து,
இற்றை வரை முத்தான, சத்தான முழுவிலக்கியக் கூறுகளிலும்
முப்பத்தாறு நூல்களைப் புணைந்து பெற்றெடுத்து
தமிழன்னையின் மார்பிலங்கு ஆரங்களாயணிவித்துப்
பேரிலங்க, ஆனால் வித்தாரக்கெறுவின்றி மற்றோரையும்
ஊக்குவித்து உதவிகளாற்றி, எப்பொழுதும் நல்லதையே
சமூக மேம்பாட்டிற்கு சிந்தித்து சிறந்தவற்றை தேர்ந்தெடுத்துச்
செயலாற்றி, எழுத்தாளர்களுக்கு எடுத்துக்காட்டாயிருந்து
உற்சாகப்படுத்தி ஏற்றிவிடு ஏணியாகவமைந்து, நன்றே
செய்யதையும் மின்றே செய்கவென உந்துதளித்து,
திருவள்ளுவர் குறள் வாக்குகளுக்கு செயல் வடிவம் கொடுத்து
நடந்து காட்டி, ஒப்பற்ற உயர்வோடு விளங்கு அன்பர்

**ஆ.மு.சி. வேலழகன் ஐயா**

அவர்களுக்கு நற்கலைஞர் சார்பாக இந்நூலை மரியாதை
கலந்த மகிழ்வோடு தாள்களிலே அர்ப்பணமலராக அளிக்கை
செய்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு முனைக்காடு அருள்மிகு
ஸ்ரீ நாகலிங்கேஸ்வரர் ஆலய பிரதம குரு அவர்கள் உவந்தளித்த

# ஆசியுரை

ஆரையம்பதியீன்ற அழகு தமிழ் மைந்தன்
அன்போடு அறம் வளர்க்கும் ஆற்றலுடைய திறலோன்
இன்பமுடன் கவிபாடி ஏற்றமதை தருவான்
இலகு தமிழ் மொழியின் இருப்பிடமானோன்
கள்ளமில்லா உள்ளமுடன் கடவுள்தனை பாடி
கருணையுடன் கவிவடிக்கும் கண்ணியவான்
வில்லிசைபாடி மெய் சிலிர்க வைக்கும்
விவேகி தனக்கு இறையருள் வேண்டி வாழ்த்துவோம்

வில்லுப்பாட்டென்பது வீரமைந்தர்களால் சோகம் மாற்ற பாடிய இன்னிசைப் பாடல் என ஆசிரியர் விதந்துரைத்துள்ளார் வில்லென்பது வீரர்களுடைய ஆயுதம், மிக சக்தி வாய்ந்தது அண்ட சராசரங்களையும் அதிர வைக்கும் ஓசையுடையது என மகாபாரதம் கூறுகின்றது. அவ்வாறான பயங்கரமான ஆயுதத்திலிருந்து எழும் ஒலி பக்கவாத்தியம் பாடல் இசை பற்றியெல்லாம் முகவுரையில் குறிப்பிடுகின்றது ஆசிரியரின் கவித்துவம், தாளலயம், தரு, வசனம், மெட்டு கதைத்தொடர்பாடல் நகைச்சுவை ஆக்கத்திறன் தலைப்பு என்பன ஆசிரியரின் திறமையை பறை சாற்றுகின்றது இவரால் எழுதப்பட்ட கடவுள் பற்றிய பாடல்கள், நாட்டுக்கூத்துக்கள், கும்மிப்பாடல்கள், வசந்தன் பாடல்கள் எனும் இன்னோரன்ன விடயங்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவது இந்த வில்லுப்பாட்டு தொடர்பற்ற வசனங்களை தொடர்புபடுத்தி கதை சொல்லும் விதம் ஏற்றமுடையது இத் தன்மையினை, இலக்கியவாதிகள் குறை கூறினாலும் கவிஞருடைய கவி வளம் மெருகுபடுத்தி பார்க்கத்தக்கது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பெரியோனும் ஆசானுமாகிய அருளாளன் கவிவல்லோன் கற்பனைக்கெட்டாத சொற்பதமாகிய ஆரையூர் அருள் என அன்புடன் அழைக்கப்படும் அருளம்பலம் ஐயா அவர்கள் இயற்றிய வில்லுப்பாடல்கள் கவி நயம் மிக்கவை இவருடைய தன்னிகரற்ற தமிழ்பணி வானுள்ளவரை வையகம் புகழவேண்டும் இவரின் தன்னலமில்லா பணி, சுயசிந்தனையாகவும் தமிழ் கூறும் நல்லுலகம் பாராட்ட கடைப்பாடுடையது இவரின் ஆயுள், ஆரோக்கியம் குறைவற இருக்க வேண்டும் என அகில உலகத்தையும் தாங்கும் சக்தி படைத்த நாகலிங்கேஸ்வரர் பெருமானை வேண்டி என்னுடைய ஆசியினையும் தெரிவிக்கின்றேன்.

இவ்வண்ணம்

**சிவஸ்ரீ பரசுராமன் மானாகப்போடி குருக்கள்**

முனைக்காடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

தமிழர் கலைவெளி பரந்தது சமூகம், சாதி, இனம் பிரதேசம் என்று ஒவ்வொன்றிற்கும் தனித்துவம் காணப்படுகின்றன, இதனடிப்படையில் கதை கூறும் கலை மரபிற்குள் உள்ளடக்கி பார்க்க கூடியதும், ஆற்றுகைக் கலைகளுக்குள் உட்படுத்தக் கூடியதுமான கலை வடிவம் வில்லுப்பாட்டாகும். வில்லை பிரதானமான வெளிப்படுத்துகை கட்புல சாதனமாக பயன்படுத்தி கதை கூறி பாடலுடன் நகர்த்தப்பட்டு ஆற்றுகை செய்யப்படும். பொதுவாக கதை கூறும் மரபு நம் வாழ்வியலோடு இணைந்தது வீட்டு முற்றத்தில் கூட்டாக வட்டமாய் அமர்ந்து மூத்தோர் கதை சொல்ல ஆ......ம் என்ற பதிற்குறிகளை வழங்கி கட்புல, செவிப்புல வழியாய் உற்று உன்னிப்பாய் பார்த்து கேட்டு நம் சிந்தனையை அதிகரிக்கச் செய்து கேள்விகளையும் உருவாக்கும் தன்மையை ஏற்படுத்தக் கூடியவை, கதை கூறுவோர் சொல்லாடலும் உடல் மொழியும் கவனிப்புக்குரியவை இவற்றை வில்லுப்பாட்டில் அவதானிக்கலாம்.

காலனிய கொள்கை கொணர்ந்த சித்தாந்தம் மனிதர்களது சுயமான சிந்தித்தலுக்குரிய அறிவை இல்லாது செய்து தமது நிகழ்ச்சி நிரலுக்குள் மட்டும் சிந்தனையை குவித்துள்ளமையினால் நமக்குரிய அறிவு, திறன் இல்லாது கபளிகரம் செய்யப்படுகின்றன. இவ்விடத்தில் உள்ளூர் எழுத்தாளர்கள், புலவர்கள், கலைஞர்கள், படைப்புக்களை பொதுவெளியில் கருத்துருவாக்கம் செய்ய வேண்டிய தேவை இன்றைய படைப்பு வெளிக்கு இருக்கின்றது.

"வில்லடிப்பாட்டு" என்ற இன்நூல் கலாபூசணம் ஆரையூர் அருளம்பலம் அவர்களின் துறைசார் பற்றறா தொடர் அனுபவத்தின் எழுத்துக்களாக உருவானாவை தமிழ் படைப்பாக்க சூழலிற்கு நீண்ட காலம் தொட்டு அதிகமான கலை இலக்கிய கலைப்படைப்புக்களை தந்திருக்கின்றார். இவரது எழுத்துக்கள் தனியாக ஆய்வு செய்யப்பட வேண்டியவையாகும். பல்துறை ஆற்றல் கொண்ட இவரது எழுத்துக்களை ஈழத்து இலக்கிய வரலாற்று வெளி விடுபட்டு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பேசமுடியாது கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம், விமர்சனம், கூத்து, கரகம், காவியம், காவடி, தாலாட்டு, ஊஞ்சல், கோலாட்டம், கும்மி போன்ற பல்கலைகளில் பாண்டித்தியம் பெற்றதன் விளைச்சலே இவை சார்ந்து வெளி வந்து கொண்டிருக்கும் எழுத்துக்களாகும்.

இந்நூல் ஆசிரியரினால் பல சந்தற்பங்களில் எழுதப்பட்டு ஆற்றுகை செய்யப்பட்ட வில்லுப்பாட்டுக்களை தொகுத்து வெளியீடுகின்றோம். இவை ஒவ்வொன்றும் தேசிய, மாகாண மாவட்ட மற்றும் கலை கலாசார விழாக்களில் பங்குபற்றி பாராட்டுக்களையும் பரிசில்களையும் விருதுகளையும் பெற்றவை இவற்றில் அதிகமானவை தமிழ்த்தின போட்டிகளுக்கு பாடசாலைகளுக்காக எழுதப்பட்டுள்ளன.

வில்லுப்பாட்டுக்கான விதியொன்று உண்டு அவை ஆற்றுகையில் மட்டுமல்லாது எழுத்துருவிலும் கவனிப்பை பெறும் இவ்விதிமுறைகளை நன்கறிந்து அவற்றிற்கேற்றால் போல் எழுத்துருவை ஆக்கியிருப்பது என்பது பதிவு செய்யப்பட வேண்டியவை. அத்துடன் இந்நூலில் காணப்படும் வில்லுப்பாட்டுக்களை அவதானிக்குமிடத்து பொதுவாக கிராமிய பாடல்களின் மெட்டுக்களில் அதிகம் காணப்படுகின்றன ஆசிரியரின் எழுத்துரு ஆக்குகையின் இன் நுணுக்கம் சுட்டிக்காட்ட வேண்டியவை மேலும் தொகுக்கப்பட்ட இவ்வில்லு பாட்டுக்களின் பாடு பொருள் என்பது சமகால சமூக வாழ்வுமுறையில் பேசப்படவேண்டியவையாகும்.

பாரம்பரிய நடைமுறைகள் சார்ந்து வெளியீடுகள் அரிதாக வெளி வந்து கொண்டிருக்கும் ஈழத்து இலக்கிய சூழலில் இம்முயற்சி ஊக்கம் கொடுத்து வெளியிட வேண்டியது எம்கடமையாயின நாகலிங்கேஸ்வரர் ஆலயத்தோடும், நாகசக்தி கலை மன்றத்தோடும் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் இந்நூலாசிரியர் ஆலயத்தின் பெருமைகளை எழுதி ஒலிப்பேழையாக வெளியிட்ட காவியம் ஆலய வரலாற்றினை மீட்டிப் பார்ப்பதற்கான அடையாளமாகும்.

இயலும் கதையும் கலந்த இன்நூலின் மொழி பொருள் விளங்க ஒவ்வொரு தமிழுக்குமான ஆற்றுகை முறைமைகள் நுண்ணிய முறையில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இவை ஆசிரியரின் மொழி மேல் கொண்ட பரீட்சையமும் பாண்டித்தியமும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னூல் தொடர்ச்சியாக வரும் ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள், புலவர்கள், மாணவர்கள், அனைவருக்கும் நல்லதொரு புரிதலையும் தேவைக்கேற்ப மேலதிக தரவுகளையும் கொடுக்கும் என நினைக்கின்றேன்.

இன்நூலினை தொகுத்து வெளியிடுவதில் என்னோடு இணைந்து செயற்பட்ட நண்பர்களான கேதீஸ்வரன், துஷாந்தன் உதவியாக இருந்தனர். அத்துடன் நாகசக்தி கலை மன்ற நிருவாகத்தின் ஏனைய உறுப்பினர்களும் ஊக்கம் கொடுத்தனர். அவ்வகையில் அவர்களையும் இவ்விடத்தில் சுட்டி காட்டுவதுடன் இன்நூலுருவாக்க த்திற்கான நிதியினை நாகசக்தி கலைமன்ற அனுசரணையோடு, சமூகசார் பொது செயற்பாடுகளுக்கு உதவி புரியும் இரத்தினசிங்கம் – பிரதீபன் அவர்கள் வழங்கியுள்ளார். ஆகவே கலை மன்றத்தின் சார்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன் நூலிற்கான அணிந்துரை, மதிப்பீட்டுரை, ஆசியுரை, வழங்கியோரும் இன்நூலின் அட்டைப்படத்தினை வடிவமைத்த செல்வி. தவனேசராசா திவ்யா அவர்களுக்கும் அச்சிட்டு நூலுருவாக்கிய அக்ஷயன் அச்சகத்தினருக்கும் நன்றிகளை கூறிக் கொள்கின்றேன்.

**இ. குகநாதன்**
நாகசக்தி கலை மன்றம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

இன்றைய நவீன நாகரீக மோகம், உலக மயமாக்கல் செல்வாக்கு, அக்கறையற்ற தமிழ்ச் சமூகம் மனோபாவம் முதலான காரணங்களினால், இன்று அழிந்துவிடும் நிலையிலுள்ள தமிழரது தொன்மையான கலைகளுள் 'வில்லிசை' யுமொன்றாகின்றது கிழக்கிலங்கையைப் பொறுத்தவரையில் மாஸ்டர் சிவலிங்கம் தொடக்கம் மண்டூர் அசோகா வரை 'வில்லிசை' யுடன் தொடர்புபட்ட பல கலைஞர்களுமிருந்தாலும் அவர்களது வில்லிசைப் பிரதிகள் போதியளவு ஆவணப்படாமல் காற்றோடு சங்கமித்து விடுகின்ற அவல நிலையே காணப்படுகின்றது. இத்தகைய ஆரோக்கியமற்ற கலை, இலக்கியச் சூழலில் மட்டக்களப்பு கலை, இலக்கிய வரலாற்றில் முக்கிய இடம் பிடித்துள்ளவரான ஆரையம்பதியைச் சேர்ந்த கவிஞருமான அறியப்படாத ஆய்வாளருமான மூ.அருளம்பலம் (ஆரையூர் அருள்) அவர்கள் தாம் அவ்வப்போது இயற்றி அவைக்காற்றியளித்துள்ள வில்லுப் பாடல்களுள் சிலவற்றை இன்று நூலுருவாக்கித் தந்திருப்பது பாராட்டிற்கும், மகிழ்ச்சிக்குமுரியது என்பதில் ஐயமில்லை.

இந்நூலின் இரு சிறப்பியல்புகளிலொன்று மேலே குறிப்பிட்டிருப்பது போன்று வில்லிசைப் பாடல்களின் தொகுப்பாக இது இருப்பது இந்நூலிலுள்ள வில்லிசைப் பாடல்களின் பேசுபொருள் பன்முகப்பட்டவையாகவிருப்பது பற்றி முதலில் குறிப்பிட்டாக வேண்டும். இந் நூலினால் பயன்பெறுவோர் நன்மை கருதி பின்வருமாறு வகைப்படுத்திக் காட்ட முற்படுகின்றேன்.

01) பெரியோர்கள், அறிஞர்கள் பற்றியவை (வித்தகர் விபுலானந்தர்)

02) வைவ அடியார்கள் பற்றியவை ஜீவசேவையே சிவசேவை (இளையான்குடி மாற நாயனார்)

03) பழந்தமிழ் இலக்கியங்கள் எடுத்துரைக்கும் விழுமியங்கள் பற்றியவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒன்றேகுலம் ஒருவனே தேவன்" (திருமந்திரம்)

"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்" (சிலப்பதிகாரம்)

" நோதலும் தணிதலும் அவற்றோர் அன்ன" (புறநானூறு)

" தேறற்க யாரையும் தேறாது" (திருக்குறல்)

"தானேவரும் தன்கேடு" "மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை" முதலியவை

04) பண்டைய கால அரசர்கள், புலவர்கள், முனிவர்கள் பற்றியவை

"அல்லற்காலை நில்லலன் மன்னே"

"சமநீதியே சரிநீதி" (எல்லாளன் கதை)

"சித்திர புத்திரர் (கௌதம முனிவர்கதை)

05) சுகாதார விதிமுறைகள் பற்றியவை "சுத்தம் சுகம் தரும்"

06) கல்லூரி ஆசிரியர்கள் பற்றியவை "ஞானவிளக்கு"

(திரு.ஞானேந்திரன்)

ஆரம்பத்திலே குறிப்பிட்டவாறான இன்றைய தமிழ்ச்சமூகச் சூழலிலே குறிப்பாக கல்விச் சூழலிலே கல்லூரி மாணவர்களுக்கு வாழைப்பழத்திலே ஊசி ஏற்றுவது போன்று, நற்போதனைகள் செய்வதற்கு வாய்ப்பான அவைக் காற்றுக் கலைகளுள் வில்லிசைக்கு முக்கிய இடமுள்ளது என்பதை வில்லிசைக் கவிஞர்களும் கலைஞர்களும் நன்கு புரிந்து வைத்துள்ளார்களோ என்னவோ இந்நூலாசிரியர் அவற்றை நன்கு புரிந்து வைத்துள்ளாரென்பது இப்பிரதிகளை வாசிக்கும் போது புலப்படுவது குறிப்பிடத்தக்கது. இத்தகைய புரிதல் காரணமாகவேதான் முற்குறிப்பிட்ட பல்வகையான வில்லிசைகளுக்கிடையேயும் வெகு இயல்பான முறையில், இன்றைய காலச் சூழ்நிலையைப் பிரதிபலிக்குமாறுள்ள நகைச்சுவை, உரையாடல்களும், ஓசைநயம் மிக்க பாடல்களும் இடம்பெற்றிருப்பதும் பாராட்டப்படவேண்டிய தாகின்றது.

இந்நூலின் காணக்கூடிய மற்றொரு தனித்துவமான சிறப்பு விடயம், அவசியமான, அத்தியாவசியமான விடயம் மற்றொரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவென்று கூறத்தக்கவாறுள்ள வில்லிசையின் தோற்றமும் வில்லிசையின் இயல்புகளும் வரலாறும் பற்றிய பன்முகப் பார்வை கொண்ட ஆய்வுப் பகுதியாகும். சுவையானதும், அறியப்படாததுமான பல்வேறு தகவல்கள் இப்பகுதியில் இடம்பெற்றிருப்பது நூலாசிரியரின் கடின உழைப்பின் வெளிப்பாடாகிறது. ஈராண்டுகளுக்கு முன்னர் புலமையாளரும் யாழ்ப்பாணத்திலுள்ள கலாபூசணம் சைவப் புலவர் செல்லத்துரையவர்கள் வில்லிசைப்பாடல் என்ற தலைப்பிலே தாமெழுதிய 22 பாடல்களை ஆய்வு முன்னுரையோடு நூலுருவாக்கி துணைவியார் நினைவாக வெளியிட்டிருந்தார். அந்நூலினைப் பார்வையிட்ட வேளையில் கிழக்கு மாகாணத்திலிருந்தும் தொகுப்பும் ஆய்வும் கொண்ட அவ்வாறானதொரு நூல் வெளிவராதவென்று ஆதங்கம் எனக்குள் ஏற்பட்டிருந்தது. என்போன்றோரது அத்தகைய ஆதங்கத்தை இந்நூலின் வரவோடு அகற்றி வைத்த இந்நூ லசிரியருக்கும், இதனை வெளியிட முன்வைத்த கலை இலக்கிய சமூகத்தினர் நன்றிக்கடன் பட்டிருக்கின்றனர். ஆதலின் இந்நூலினை வாங்கிப் பயன்படுத்தி வில்லிசைக் கலையை வளர்ப்பதனூடாக தமது நன்றிக் கடனைச் செலுத்துவார்களென்று எதிர்பார்கின்றேன்.

வாழ்த்துக்களுடன்

**பேராசிரியர். செ.யோகராசா**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மதிப்பீட்டுரை

கலாபூசணம் மூ.அருளம்பலம் அவர்கள் (ஆரையூர் அருள்) நாடறிந்த எழுத்தாளர்; சிறந்த கலைஞர்; வில்லுப்பாட்டு என்னும் மரபுக் கலை அருகிச் செல்லும் இக்கால கட்டத்தில் அதனை மீளுயிர்ப்புச் செய்யும் வகையில் பங்களிப்பினை இம்மண்ணில் வழங்கி வருபவர் 'வில்லடிப்பாட்டு' என்னும் தலைப்பில் இலக்கிய எழுத்தாக்கமாகத் தற்போது நூலாக்கம் செய்துள்ளார். பல்வேறு தந்தர்ப்பங்களில் அதாவது போட்டிகளுக்காகவும், வெவ்வேறு விசேட நிகழ்வுகளுக்காகவும் அவரால் எழுதப்பட்டு மேடையேற்றப்பட்ட வில்லுப்பாட்டுகளுள் இருபது ஆக்கங்கள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

நூலின் முற்பகுதியில் வில்லுப்பாட்டின் தோற்றம், அதன் வளர்ச்சி, வரலாறு, காலத்துக்குக் காலம் அதன் பிரதியாக்கத்திலும் அளிக்கை முறையிலும் ஏற்பட்டு வந்த மாற்றங்கள், வில்லின் தத்துவம், வில்லிசையில் உடுக்கையின் சிறப்பு பயன்படுத்தப்படும் முதன்மை மற்றும் துணைக்கருவிகள் முதலான பல விடயங்களை நூலாசிரியர் விளக்கியுள்ளார் இக் குறிப்புகள் வில்லுப் பாட்டின் வரலாறு அதன் அழகியல் பற்றி அறிய விழைவோருக்கு பெருந்துணை புரிகின்றன.

வில்லுப்பாட்டின் தோற்றம் தொடர்பாக வாய்மொழி வழியாக வழங்கிவரும் கதையொன்றினை நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். காட்டிலே வேட்டையாடுவதற்குச் சென்ற மன்னன் ஒருவனின் மனமாற்றமே இக்கலை வடிவத்தின் உருவாக்கத்திற்கான காரணமாகச் சொல்லப்படுகின்றது. வேட்டையின்போது மிருகங்களைக் கொன்று குவிக்கும் அம்மன்னன் அவற்றின் அழிவாலும், அவலக்குரலாலும் வேதனையுறுகின்றான். அதிலிருந்து விடுபட எண்ணும் அவன் கொலைக் கருவிகளாகப் பயன்படுத்திய வில்லையும் அம்பையும் இசைக்கருவிகளாக்கி மனமுருக வேண்டுதல் செய்கிறான். இதனடியாகவே வில்லுப்பாட்டு தோன்றியது என்னும் கதை இங்கு குறிப்பிடப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வில்லின் இருமுனைகளிலும் நாண் இணைக்கப்படுகின்றது இவ்விரு முனைகளிலும் ஒரு முனை அரசாகவும், மறுமுனை மக்களாகவும் கருதப்படுகின்றது மன்னனும் மக்களும் இணைந்து வாழ்வதே நாடு என்ற தத்துவம் இதனுள் அடங்கியிருக்கின்றது. தமிழ் நாட்டின் நெல்லை மாவட்டம் வில்லுப்பாட்டின் பிறப்பிடமாகக் கருதப்படுகின்றது. இக் கலை வடிவமானது வில் பாட்டு, வில்லுப்பாட்டு, வில்லிசைப் பாட்டு, வில்லடிச்சான் பாட்டு எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டு வருவதைக் காணலாம்.

வில்லுப்பாட்டின் முதன்மைக் கருவிகளாக வில், குடம், மணி (சதங்கை) என்பனவும் துணைக் கருவிகளாக வீசுகோல், உடுக்கு, சல்லாரி, உறுமி, மேளம், தக்கை, பம்பை, துந்துமி, கட்டை என்பனவும் பயன்படுத்தப்படுகின்றன.

வில்லுப்பாட்டு கலைஞர்கள் பற்றியும் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணர், கொத்த மங்கலம் சுப்பு, கவிஞர் சுப்பு ஆறுமுகம் அகியோர் தொடக்கம் தமிழ் நாட்டுக் கலைஞர்களைக் குறிப்பிடும் நூலாசிரியர் இலங்கைக் கலைஞர்களான உடப்பூர் பெரி, சோமாஸ்கந்தர், ஏழாலை சோக்கல்லோ சண்முகம் முதலானோரையும் மட்டக்களப்பில் இக் கலையை வளர்த்தோரென மாஸ்டர் சிலிங்கம், முழக்கம் முருக்பா, செ.குணரெத்தினம், மு.கணபதிப்பிள்ளை, ஆரையூர் அருள், காத்தான்குடி முஸ்தபா முதலானோரையும் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் லடீஸ் வீரமணியும் இக்கலையை வளர்த் தோருள் முக்கியமானவர். முன்னைய காலங்களைப் போல் இல்லா விட்டாலும் இலங்கையில் அவ்வப்போது போட்டி நிகழ்வுகளிலும் சமய மற்றும் கலாசார விழாக்களிலும் வில்லுப்பாட்டு அரங்கேற்றுவதைக் காணமுடிகின்றது. குறிப்பாக தமிழ்மொழித் தினப் போட்டிகளில் 'வில்லுப்பாட்டு' இடம் பெறுவதனால் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் இதில் ஊக்கமுடன் பங்கு பெறுவதனைக் காண முடிகின்றது. ஆசிரியர்களும் தாமே இவற்றை இயற்றுவதனைக் குறிப்பிடலாம். தற்போது இதன் அளிக்கைக்கான நேர எல்லையும் ஏறத்தாழ 20 – 30 நிமிடங்கள் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தொகுப்பிலுள்ள இருபது வில்லுப்பாட்டு ஆக்கங்களும் சமூகநல நோக்கிலானவை இந் நோக்கத்திற்காக இதிகாசம், இலக்கியம் ஆகியவற்றிலிருந்து விடயங்கள் எடுத்தாளப்பட்டுள்ளன அத்துடன் ஒழுக்க விழுமியங்கள், வரலாற்றுத் தகவல்களும் பயன்படுத்தப்படுத்தப்பட்டுள்ளன. ஜீவசேவையே சிவசேவை ஜீவகாருண்யத்தை வலியுறுத்துகின்றது. 'ஞான விளக்கு' ஆரையம்பதி ஆசிரியர் ஞானேந்திரன் என்பவரது ஆசிரியப்பணியைக் கூறுவதனூடாக ஆசிரிய சேவையின் மகத்துவத்தைக் குறிப்பிடுகின்றது. 'சுத்தம் சுகம் தரும்' என்னும் ஆக்கம் உடல், உள மற்றும் சமூக ஆரோக்கியம் ஆகியவற்றை பேணுவதே ஆரோக்கியமான வாழ்வு என்பதைக் கூறுகிறது. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது மனிதரிடையே உயர்வு – தாழ்வு பேதம் பார்க்கக் கூடாது என்பதையும் மனிதாபிமானத்திற்கு முன்னால் இப்பேதங்கள் யாவும் அர்த்தமற்றவை என்பதையும் உணர்த்துகின்றது. தானே வரும் கேடு என்பது பிறரைத் துன்புறுத்தினால் தமக்கே அதன் வினை வந்து சேரும் என்பதையும் மகளிர் நிறை காக்கும் காப்பே தலை' என்னும் வில்லுப்பாட்டு கற்பொழுக்கத்தின் மேன்மையையும், குறைப்பர் தம் மேலே வீழப்பனை என்பது தீயது செய்தால் தீயதே விளையும் என்பதையும், மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் என்பது மானத்தின் மேன்மை மதிக்கத் தக்கது என்பதையும் வலியுறுத்துகின்றன.

மகாபாரதத்திலிருந்து மூன்று வில்லுப்பாட்டுகள் இயற்றப் பட்டுள்ளன நோதலும், தணிதலும் அவற்றோரன்ன என்பது துரியோதனன் தன் தீய குணங்களால் அழிவுற்றமையைக் கூறுவதன் மூலம் ஆக்கமும் கேடும் தாமே வருந்திக் கொள்வன என்பதை விளக்குகின்றது. 'தேறற்ற யாரையும் தேறாது' என்பது கர்ணனின் குணவியல்பைக் கூறுவது தன்னை அங்க தேசத்திற்கு அதிபதியாக்கியதன் மூலம் அரச அந்தஸ்து கொடுத்துக் காத்தமைக்காக துரியோதனுடனான நட்பை வலுப்படுத்திக் கொள்ளும் கர்ணன் குந்திதேவி அழைத்தபோதும் மறுத்து விடுகிறான். ஆராய்ந்து தெளிந்த பின் அவர் கருத்தை ஐயமின்றி ஏற்கும் தன்மை இதன் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்னும் தலைப்பிலான வில்லுப்பாட்டும் கர்ணனின் உயர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பண்புகளைக் குறிப்பிடுகின்றது. தன் உயிர்க்கு இறுதி வருமெனத் தெரிந்திருந்தும் கவச குண்டலத்தை இந்திரன் தானமாகக் கேட்ட போது வழங்கியமை, குந்திதேவியின் வேண்டுகோளை அதாவது நாகாஸ்திரத்தை ஒரு முறைக்கு மேல் அர்ச்சுனனை நோக்கி ஏவாதிருத்தல் முதலானவற்றை செயலாக்கியமை.

'சினம் சினந்தாரைக் கொல்லும்' என்னும் வில்லுப்பாட்டு இராமாயாணக் கதையை அடிப்படையாகக் கொண்டது. இலக்குமணனால் மூக்கறுபட்ட சூர்ப்பனகையின் சினம் இராம – இராவண யுத்தத்தைத் தோற்றுவிக்கக் காரணமாக அமைந்து அரக்கர் குலத்திற்கு அழிவை ஏற்படுத்துவது இதில் விளக்கப்படுகின்றது.

இலக்கியங்கள் கூறும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டும் சில வில்லுப்பாட்டுகள் இயற்றப்பட்டுள்ளன. சிலப்பதிகாரக் கதையினை மையமாகக் கொண்டு ஆக்கங்கள் உள்ளன. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் ஆகிய இரண்டும் முறையே பாண்டிய மன்னன் நீதி தவறியதால் அவன் அழிதலையும் அதன் மூலம் மக்களும், நாடும் அழிவிற்கு உள்ளாவதையும் விளக்குகின்றன.

'மயிர் நீப்பின் வாழாக் கவரிமான்' என்னும் ஆக்கம் மானத்திற்குப் பங்கம் வந்துற்றபோது வடக்கிலிருந்து உயிர் துறந்த சேரமான் நெடுஞ்சேரலாதன் கதையினையும் கோப்பெருஞ் சோழனின் கதையினையும் கூறுகின்றது. நாவடக்கமற்ற பண்பால் போரை எதிர்கொண்டு தோற்கடிக்கப்பட்ட சேரச் சிற்றரசன் மூவனின் கதையைக் கூறுவதாக 'யாகாவாராயினும் நா காக்க' என்னும் வில்லுப்பாட்டு அமைந்துள்ளது நட்பின் மகத்துவத்தைக் கூறுவதாக அமையும் 'அல்லற்காலை நில்லலன் மன்னே' கோப்பெருஞ்சோழன் – பிசிராந்தையார் நட்பு விவரிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம்.

'சமநீதியே சரிநீதி' என்னும் ஆக்கம் மனுநீதிச் சோழனின் நீதி தவறாமையைக் கூறுகிறது. சைவசமயத்தில் கடைப்பிடிக்கப்படும் சித்திரா பௌர்ணமி விரதம் பற்றியும்; சித்திரபுத்திரனின் தோற்றம் பற்றியும் கூறுவதாக சித்திர புத்திரன் என்னும் ஆக்கம் அமைந்துள்ளது.

'புலித்தலையை நாய் மோத்தல் இல்' என்னும் வில்லுப்பாட்டு


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பெருந்தன்மையும் பெருமையும் உடைய சான்றோர் வறுமையினால் வாடியபோதும் அவரை அணுகும் தகுதி சிறியோர்க்கில்லை என்பதை விளக்குகிறது.

வில்லுப்பாட்டு ஆக்கங்களின் தலைப்புகளை நோக்கும்போது அவை பெரும்பாலும் பழந்தமிழ்ச் செய்யுள்களில் உள்ள அடிகளாக அமைந்திருப்பதைக் காணலாம் ஔவையார் பாடல், சங்கச் செய்யுள்கள், திருக்குறள் ஆகியவற்றிலிருந்து அவை எடுத்தாளப்பட்டுள்ளன. அதிகமான தலைப்புகள் திருக்குறளடிகளைக் கொண்டவை 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமான்', 'யாகாவாராயினும் நாகாக்க' ஆகிய சில உதாரணங்களாகும்.

ஒழுக்க விழுமியங்களை வலியுறுத்துவனவாக அமைந் துள்ள இவ்வாக்கங்களில் சமகாலப் பிரச்சினைகளும் முன் வைக்கப் பட்டுள்ளமையைக் காணலாம். சீடர்களின் உரையாடலில் இவை கூறப்படுகின்றன. இணையத்தளப் பயன்பாடு, முகப்புத்தக அறிமுகம், போதை வஸ்து, தீயநட்பு, முதலான பல விடயங்களும் கூறப்பட்டுள்ளன. சமூக சீர்திருத்த நோக்கில் அங்கதம் பயன்படுத்தப் பட்டுள்ளன. தவிரவும் மட்டக்களப்புப் பேச்சுவழக்கு சீடர்களின் உரையாடலில் மிகச் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமக ஊட்டில் (வீட்டில்) அவனுகள் என்ன செஞ்சவனுகள் ஆகியவற்றைக் கூறலாம். வழக்கிலுள்ள உவமைத் தொடர்களையும் பொருத்தமுற ஆசிரியர் கையாண்டுள்ளார். உதாரணம்: கண்ணாக் காட்டுக்குள்ள கொக்கு எச்சம் போல என்னும் உவமைத் தொடரைக் கூறலாம். தொகுத்து நோக்குமிடத்து ஆரையூர் அருள் அவர்களின் இந்த நூல், வில்லுப்பாட்டு எனும் கலை வடிவப் பயணத்தில் ஒரு மைல் கல் என்று கூறலாம். புற்றீசல் போல குறித்த காலத்தில் அக்காலத்தின் தேவை கருதி மட்டுமே இயற்றப்பட்டு பின் மேடையேற்றப்பட்டு ஈற்றில் அழிந்து போகும் பிரதிகளின் நிலைமைக்கு மத்தியில் இக் கலையை ஆத்மார்த்தமாக நிலைமைக்கு நேசிக்கும் கலைஞரான இவர் தான் எழுதி மேடையேற்றிய வில்லுப்பாட்டுகளை இலக்கியத் தொகுப்பாகவும் தந்திருப்பது இக்கலையின் வளர்ச்சிக்குப் பேருதவி புரிவதாகும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இக் கலைப்பணியில் தொடர்ந்து பயணித்து இன்னும் பல ஆக்கபூர்வமான ஆக்கங்களை இவர் தொடர்ந்தும் வழங்க வாழ்த்துகின்றேன்.

**திருமதி. றூபி வலன்ரீனா பிரான்சிஸ்**
சிரேஷ்ட விரிவுரையாளர், மொழித்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
2020.10.16


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனதுரை

எமது பாரம்பரிய மூத்த கலைகளின் ஒன்றான வில்லுப்பாட்டு, தற்கால எதிர்கால எமது சந்ததியினருக்கு சரியான முறையான வகையில் விளக்கமின்றிப்போய்விடக்கூடாதென்பதற்காக, வில்லினை அடியாகக் கொண்டு பிறந்த இப்பாட்டினை "வில்லடிப்பாட்டு, என்றும் வில்லில் அடித்துப் பாடும் பாட்டினாலும் வில்லடிப்பாட்டு என்றும் தலையங்கமிட்டு இந்தப் புத்தகத்தின் மூலம் சொல்ல விளைகின்றேன்.

வில்லுப்பாட்டு பிறந்த கதையினை, வேடர்கள் வேட்டையாடச் சென்ற போது, மிருகங்கள் அகப்படாததினால் தேடியலைந்தபோது இருட்டி விட்டதனால் இரவைப் போக்கவும், மிருகங்களிடம் இருந்து தங்களையும் பாதுகாக்கவும் வேடர்களினால் பாடப்பட்டதே வில்லுப்பாட்டு என்று விடையம் தெரியாத சிலர் விளக்கமளிப்பதனை பல இடங்களில் செவியுற்றிருக்கின்றேன். வில்லிசை பிறந்த சரியான கதையினை அறிய முயற்சித்து கிடைத்த சரியான ஆதாரத்துடன் யாவரும் அறிந்து கொள்வதற்காக அதன் கதையைக் கூறியுள்ளேன்.

ஆரம்ப கால மரபுரீதியான வில்லுப்பாட்டு காலப்போக்கில் சில மாற்றங்களுக்குட்பட்டு, தற்போதுள்ள நிலையினையும் சுருங்கக் கூறி விளங்கவைக்க முயன்றிருக்கின்றேன்.

தற்காலத்தில் கூறப்படும் சுற்றுநிருப நிபந்தனைகளை நடத்துனர்கள் சரியாக விளங்கி அதற்கமைய கொடுக்கப்படும் தலைப்புக்களுக்கமைய கதைகளை தேர்ந்தே எழுதி அக்கதைக்கேற்ப சரியானஇடங்களில்சினிமாப்பாடல்கள்பிரதிபலிக்காதஎமதுகிராமிய, தெம்பாங்கு மெட்டுக்களில் பாடல்களையாக்கி அக்கதையினூடாக இறுதியில் சமுகத்திற்கு ஒரு செய்தியை, அதாவது படிப்பினையை கொடுக்கக் கூடியதாக அமைவதே சிறந்த முறையாகுமென்பதெனது கருத்தாகும். அன்றியும் நடுவனம் வகிப்பதற்கு வில்லுப்பாட்டில் மிகத் தேர்ச்சியும், புலமைத்துவமும் மிக்க வித்தகர்களையே நடுவர்களாக தெரிவு செய்யப்படுவதோடு அவர்களிடம் முன் கூட்டியே சுற்றுநிருப் பிரதிகளைக் கையளித்து வாசித்து விளங்கிக் கொண்ட பின்பே


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவனம் வகுக்க ஆவண செய்வதனால் மாத்திரமே நம்பகத் தன்மையையும், வெளிப்படைத்தன்மையையும், பங்கு பற்றுபவர்கள் சரியாக தெரிந்து கொள்வார்கள் பிரச்சனைகளும் தவிர்க்கப்படும்.

இவ்வாறான போட்டிகளில் பங்கு பற்றிய 1975ஆம் ஆண்டிலிருந்து 2020ஆம் ஆண்டு வரை எழுதிய வில்லுப்பாட்டுகளுள் 20 வில்லுப்பாட்டுக்களை இதில் சேர்ந்திருக்கின்றேன் பிரதேச, வலய, மாவட்ட, தேசிய மட்டம் வரை பங்குபற்றி பரிசு பெற்ற வில்லடிப்பாட்டுக்களையே தந்துள்ளேன். வில்லுப்பாட்டிற்கு விருப்பமுடன் ஆசியுரை வழங்கிய மட்/முனைக்காடு அருள்மிகு ஸ்ரீ நாகலிங்கேஸ்வரர் ஆலய பிரதம குரு, சிவஸ்ரீ பரசுராமன் மாணிக்கப்போடி ஐயா அவர்களுக்கும் மதிப்பீட்டுரை வழங்கிய கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி றூபி வலன்ரினா பிரான்சிஸ் அவர்கட்கும், அணிந்துரை வழங்கிய பேராசிரியர் செ. யோகராசா அவர்கட்கும், வெளியீட்டு உரை வழங்கிய முனைக்காடு நாகசக்தி கலை மன்றத்தினருக்கும், இப்புத்தகத்தினை வெளியீடு செய்வதற்கு பெருமனத்தோடு அனுசரணை வழங்கி வெளியிடும் அம் மன்றத்தினருக்கும் தட்டச்சு செய்துதவிய திரு.அ.பூஸிதன் அவர்களுக்கும் சிறந்த முறையில் நூலுருவாக்கம் செய்த அக்ஷயன் அச்சகத்தாருக்கும் அட்டைப்படம் வரைந்துதவிய செல்வி.தவநேசராசா திவ்வியா நுண்கலைத்துறை சுவாமி விபுலாந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்கு பல்கலைக்கழகம் மற்றும் ஊக்கமும், உற்சாகமும் அளித்த அனைவரும்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மூ. அருளம்பலம்**

ஆரையம்பதி


Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | |
|---|---|
| வில்லுப்பாட்டின் தோற்றமும் மாற்றமும் | 1 |
| வில்லுப்பாட்டு பிறந்த கதை | 2 |
| வில்லின் தத்துவம் | 4 |
| வில்லிசையில் உடுக்கின் சிறப்பு | 4 |
| குடத்திற்குக் கிடைத்த இடம் | 7 |
| வில்லுப்பாட்டின் முதன்மை, துணைக் கருவிகள் | 8 |
| வில்லுப்பாட்டு அன்றும், இன்றும் | 8 |
| இறைவணக்கப் பாடலில் ஏற்பட்ட மாற்றங்கள் | 11 |
| வில்லுப்பாட்டின் அமைப்பு | 17 |
| வில்லுப்பாட்டுக்கள் | |
| வித்தகர் விபுலானந்தர் | 19 |
| ஜீவசேவையே சிவசேவை | 26 |
| ஞானவிளக்கு | 34 |
| சுத்தம் சுகம் தரும் | 40 |
| ஒன்றே குலம் ஒருவனே தேவன் | 45 |
| அல்லற்காலை நில்லலன் மன்னே | 55 |
| சமநீதியே சரிநீதி | 64 |
| சித்திர புத்திரன் | 75 |
| அரசியல் பிழைத்தோர்கு அறம் கூற்றாகும் | 87 |
| நோதலும் தணிதலும் அவற்றோர் என்ன | 94 |
| தேறற்க யாரையும் தேறாது | 101 |
| தானே வரும் தன்கேடு | 108 |
| மகளீர் நிறை காக்கும் காப்பே தலை | 117 |
| சினம் சினந்தாரைக் கொல்லும் | 127 |
| மன்னன் உயிர்த்தே மலர்த்தலை உலகம் | 137 |
| புலித்தலைமை நாய் மோத்தல் இல் | 142 |
| குறைப்பர் தம்மே வீழப்பனை | 150 |
| மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் | 158 |
| யாகவராயினும் நா காக்க | 170 |
| உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் | 179 |




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வில்லுப்பாட்டின் தோற்றமும் மாற்றமும்

கிராமிய பாரம்பரிய, மரபுக்கலைகளிலே மிகச்சிறப்பான இடத்தினைப் பெற்றிருப்பது வில்லுப்பாட்டாகும். இதற்கு வில்பாட்டு, வில்லுப்பாட்டு, வில்லடிப்பாட்டு, வில்லடிச்சான்பாட்டு, வில்லிசைப்பாட்டு என்று பல பெயர்கள் உண்டு. வில்லுப்பாட்டின் தாயகம் குமரி, நெல்லை மாவட்டம் என்று கூறுவர். "வில்லடிச்சான் கோயிலிலே விளக்கு வைக்க நேரமில்லை" என்ற பழமொழியும் அதற்கு சான்று பகர்கின்றது.

வில்லுப்பாட்டானது தமிழ் சமுதாயத்தினால் பல்லாண்டு காலமாகப் பாரம்பரிய பெருமையுடன் வளர்ந்து வரும் வெற்றிப்பாட்டு. கலை நயத்துடன் பாடி, கேட்போரின் கருத்தைக் கவரும் பாட்டு. எந்தக் கிராமத்திலுமே வில்லுப்பாட்டிற்கு ஒரு தனி வரவேற்பு உண்டு. ஆலயங்களில், அரசமேடைகளில், பாடசாலைகளில், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களிலும் இன்று இடம் பிடித்து இனிக்கின்றது. அன்றியுமின்று நகர்ப்புறங்களிலும் வித்தாகி முளைத்து விருட்சமாகி சத்தாகப் பரவி சகலரையும் ரசணைப்படுத்துகின்றது. மக்கள் வில்லுப்பாட்டில் மிகுந்த அக்கறை காட்டியதற்குக் காரணம், இந்த வில்லுப்பாட்டிற்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு, என்பதனாலாகும். அதைப்பார்க்கும் போது வில்லின் பெருமை மட்டுமல்ல, தமிழினத்தின் கலை உணர்ச்சியும் வளர்ச்சியும் நன்கு புலப்படும். இத்தகைய வில்லிசை ஒரு கிராமியக்கலையே.

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தகுடி" என்பது தமிழ்க்குடியின் பெருமை கூறும் சொற்றொடர். அதற்கேற்ப காலம் கணிக்க முடியாத கன்னித் தமிழின் ஓர் அங்கம் தான் வில்லிசை என்று சொல்லவும் வேண்டுமா?


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வில்லுப்பாட்டு பிறந்த கதை

தெற்கு சீமையை ஆண்ட திறமான மன்னன் இராஜசேகர பாண்டியன் காட்டு விலங்குகள் தன் நாட்டிற்குள் வந்து, மக்களைத் துன்புறுத்திய சேதிகேட்டு, போர்க்கோலம் தாங்கி, வேண்டிய வீரர்களோடு வேளை பார்த்துப் பாயும் புலிக் கூட்டத்தை நோக்கிப் பாயும் மற்றொரு மனிதப் புலியாகப் பாய்கின்றான்.

வேட்டைக்குச் சென்ற தென்பாண்டி வேந்தன் காலை முதல் மாலை வரை வேட்டையாடினான். வில்லிலிருந்து புறப்பட்ட அம்புகள்,வேதமுனிவர்களின் வாயிலிருந்து புறப்பட்ட சொற்கணைகள் போல் குறிதவறாது வேலையைச் செய்து கொண்டிருந்தன. அதாவது கோபுரம் போன்று நிமிர்ந்து வந்த மிருகங்களை குப்பைமேடுகள் போன்று கொன்று குவித்தன. பாண்டியன் எய்த அம்புகள் வேங்கையின், யானையின் சிங்கத்தின் அங்கங்களில் பாய்ந்து அதனால் சிந்தியோடிய இரத்த ஆறு புத்தம் புதிய புறநானூற்று வரிகளை அரங்கேற்றிக் கொண்டிருந்தன.

அந்தி சாயும் நேரம்! செத்துக் கொண்டிருந்த சிறுத்தைகளின் அவலக்குரல், யானைகளின் மெலிந்து கொண்டு வந்த பிளிறல்கள், சிங்கத்தின் தேய்வுற்ற மெல்லிய கர்ச்சனை, புலியின் பொல்லாத உறுமல், வேலை முடிந்த வெறியில் நரிகளின் ஊளை! எல்லாம் சேர்ந்து கேட்க, காணச்சகிக்காத நிலை. சேவகர்கள் தீப்பந்தம் ஏந்தினர். மன்னனுக்கு மரங்களுக்கு மத்தியில் சிறுமைதானம் போல் புற்றரையில் சிறுமைதானம் அமைத்தனர். மன்னன் மத்தியில் அமர்ந்தான். அமைச்சர்கள், வீரர்கள் ஒவ்வொருவராக ஓடையில் முகங்கழுவியும், கை, கால் கழுவியும் சுத்தம் செய்தபடி வந்து கொண்டிருந்தனர்.

"அமைச்சரே! இது அரசியல் வெற்றி, ஆனால் ஆன்மீகத் தோல்வி! மக்களுக்குப் புண்ணியம், என் மனதுக்கு நானே செய்து கொண்ட பாவம்! பிராணிகள் செத்துக் கொண்டிருக்கும் சத்தத்தைக் கேட்டீரா! அவைகளிடம் இருந்து வரும் கடசிக் குரல்கள், அதில் கேட்கும் பிராத்தனைகள், அதில் என்னைப் பற்றி இறைவனிடம் கூறும் குற்றச் சாட்டுக்கள் எல்லாம் கேட்டீரா? அமைச்சரே! உயிர் கொடுக்கும் சக்தியில்லாத எனக்கு, உயிர் எடுக்க ஏது உரிமை? உயிர்களைப் படைத்த இறைவனுக்கு மட்டும்தான் உயிரை எடுக்கும் உரிமையுண்டு. நான் செய்தது பாவம் அல்லவா? இதற்குக் கழுவாய் உண்டா?" என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏக்கமுடன் மன்னன் வினவினார்.

"அரசே! செய்த பாவங்களைத் தீர்த்தருளும்படி இறைவனிடம் பாடி, அழுது புலம்புவதைத் தவிர நாம் வேறெதுவும் செய்ய முடியாது. என்று அமைச்சர் கூறினார். "அப்படி நான் பாடவேண்டுமானால் வாத்தியக்கருவிகள் வேண்டுமே" என்ற அரசனுக்கு,"தங்கள் தோளில் கிடக்கும், தங்களைக் கொலை புரியத் தூண்டிய வில்லை எடுத்து, தங்கள் மடியில் குழந்தை போல் கிடத்திக் கொண்டு, அதன் நாணைத் தங்களிடமுள்ள அம்புக்களில் இரண்டை எடுத்து ஒவ்வொரு கையிலும் வைத்துக் கொண்டு தாளத்திற்கேற்ப தட்டித் தட்டிப் பாடுங்கள்" என்று அமைச்சர் கூறியதை ஒப்புக் கொண்ட மன்னன்,"வில் மடியில் எப்படி, பிடியில்லாமல் நிற்கும்" என்றதற்கு,"வேட்டை முடிந்ததும் நரிக்கொம்பு, யானைத் தந்தம், புலித்தோல், மான்தோல், கவரிமான் முடி, கஸ்தூரி, பல மருந்து மூலிகைகள், கொம்புத்தேன் கொண்டு செல்வதற்காகக் கொண்டு வந்த குடம் இருக்கிறதே, அது உதவி செய்யும்" என்றார் அமைச்சர்.

வில்லைமடியோரம் நிறுத்தி, அதன் கழுத்தில் குடம் கட்டப்பட்டது. குடம் கடமாக மாறியது. கொலைக் கருவிகளான வில்லும், அம்பும் கலைக் கருவிகளாக மாறின. மன்னன் வில்லை அம்பினால் தட்டித் தட்டி தெய்வத்திடம் தன் வேண்டுதலை, விண்ணப்பத்தை வில்லிசையாக்கிப் பாடத் தொடங்கினான். அமைச்சர்கள் உடன் சேர்ந்து பாடத் தொடங்கினார்கள். இரவுப் பயணத்தின் போது வழிமுழுவதும் ஒலி எழுப்புவதற்கென்று ஈட்டியில் கட்டியிருந்த மணிகளை (சதங்கை) கழற்றி வில்லின் ஓரங்களில் கட்டிக் கொண்டார்கள். மணியும் ஒலியை முழங்கி, இராப்பொழுது இன்னிசைப் பொழுதாகியது. கொலையுணர்வு மறைந்தது, கலையுணர்வு பிறந்தது. கண்ணீர் விட்ட நேரத்தில் கலை பிறந்தது. தன்னை உணர்ந்த அந்த மன்னனின் நெஞ்சில் ஒரு புதிய தமிழ்க்கலை பிறந்தது. இதுவரை காட்டில் கூட மன்னனிடம் பழகப் பயந்த படை வீரர்கள் கூட, மன்னன் ஒரு கலைஞனான வில்லின் பக்கம் உட்கார்ந்து தட்டித் தட்டி தமிழ் பாடும் போது கூட்டுக் குரல் தரும் குயில்கள் ஆகிவிட்டார்கள். பழக்கத்தில்பயம் நீங்கியது. ஒரு பாசம் அரும்பியது. அன்றுதான் காட்டினிடையே அமர்ந்திருந்த அந்த அரசனின் மடியில் தான் வில்லிசை என்ற ஓர் அரிய கலை பிறந்தது. அதுவரை அவலங்களைச் சுமந்து வந்த பொதிகை மலைத் தென்றல் காற்று, அன்புக் குரலை, ஆன்மாவின் ராகத்தை, இதயத்து உணர்வுகளை,



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இன்னிசைப் பாடல்கலை, வேதனை தீர்த்த வில்லிசையை சுமந்து வந்தது.

உயிர் பறிக்கும் விலங்குகளை வேட்டையாடச் சென்ற மன்னன், உயர் கலையொன்றை வேட்டையாடிக் கொண்டு வந்தான். குருதிக் கறையுடன் வரவிருந்த வீரர் கூட்டம் ஒன்று ஒரு கூட்டுப் பாட்டுக் குரலுடன் நாட்டுக்கு வந்து கொண்டிருந்தனர். வேந்தர் குழு பாடி வரும் வில்லடிப் பாட்டு, தொலை தூரத்தில் ஒலிக்கும் குரலைக் கேட்டு, மன்னனின் வருகையை அறிந்த நாட்டு மக்கள் அவர்களை மன மகிழ்வுடன் வரவேற்றார்கள். மறுநாள் கொலு மண்டபத்தில், காட்டில் நடந்தவற்றை விபரமாகக் கூறி, வனத்தில் தான் கண்டறிந்த வண்ணக் கலையை ஒரு நிகழ்ச்சியாகவே அளிக்கை செய்து,"நாங்கள் நிகழ்திய வில்லுப் பாட்டு கலையிது. புலவர்களே இதற்கு வேண்டிய இலக்கணத்தை, இலட்சனமாக ஆக்கித் தாருங்கள்" என்று கூறி வெகுமதிகளையும் அறிவித்தான் மன்னன். புலவர்கள் போட்டிபோட்டுக் கொண்டு நல்லிலக்கணம் வகுத்தார்கள். காட்டில் பிறந்த கலை நாட்டில் நடமாடத் தொடங்கியது.

## வில்லின் தத்துவம்

வில்லாக வளைந்திருக்கும் ஒரு கழியின் ஒரு முனையிலிருந்து கயிறு போன்ற அளவிலான ஒரு மாட்டுத்தோல்நாணாகப் புறப்பட்டு மறுமுனையில் கட்டப்படுகின்றது. ஒன்று மக்கள் முனை. மற்றொன்று மன்னன் முனை. அரசும், மக்களும் இணைந்து வாழ்வது தான் ஒரு நாடு, என்பதனைச் சொல்லாமல் சொல்கிறது என்ற அரிய தத்துவத்தை விளக்கிக் கூறுகிற தென்றார்கள் புலவர்கள். அது சாதாரணமான கழியல்ல வைரம் பாய்ந்த பனையின் நடுப்பாகம் பெரும் சிரமப்பட்டுத்தான் வளைக்க முடியும். ஒடியவே ஒடியாது.

## வில்லிசையில் உடுக்கின் சிறப்பு

வில்லிசைக் கலையில் துணைக் கருவிகளாக பயன் படுத்தப்படும் தாள வாத்தியங்களிலே மிகவும் மூத்தது, உயர்ந்தது, புனிதமானது, புகழ்வாய்ந்தது. இசைக்க சற்றுக் கடினமானது உடுக்கு ஆகும். எல்லோராலும் உடுக்கினை தெறிக்கவும் முடியாது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிவபெருமானே உயர்வாகத் தன்கையில் எடுத்துக் கொண்டது இந்த உடுக்குத்தான். இது தான் வில்லுப்பாட்டின் ஆதார சுருதியான வாத்தியக் கருவி. இதைத் தெறிக்கும் போது உற்றுக் கேட்க, "அமிழ்து" ,"அமிழ்து" என்று ஒலித்தது. இறுதியில் அது "தமிழ்","தமிழ்" என்றே ஒலிக்கக் கேட்கலாம். தமிழ் பிறந்தது உடுக்கினிலே என்று சொல்வாரும் உண்டு. ஆகவே, எப்படியோ, உடுக்கிற்கும் பொதிகைக்கும் தமிழுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்திருக்கிறது.

"தாளம், தாளம், தாளம்!
தாளத்திற்கோர் தடையுண்டாயின்
கூளம், கூளம், கூளம்!"

என்று பாரதியார் பாடியது போல, உடுக்கில்லாத வில்லுப்பாட்டும் கூளமேதான். வில்லுப் பாட்டினை கேட்கும் ஒரு தலை சிறந்த ரசிகன் முதலில் அக்குழுவில் உடுக்கு தெறிக்கும் திறனைக் கண்டு அந்த கலைஞனைத்தான் பாராட்டுவான். ஏனென்றால் அவருக்கு புரியும் உடுக்குத் தெறிப்பதும், வீணை வாசிப்பதும் ஒன்றுதான் என்று. வீணையின் நரம்புகளை இடக்கைவிரல்கள் அழுத்தும் அழகில்தான் இனிய ஒலிகளே பிறக்கின்றன. அதே மாதிரி, உடுக்கின் இரண்டு புறங்களையும் இணைக்கும் மத்தியிலுள்ள நூல் கயிறுகளை உடுக்கு தெறிப்பவரின் இடக்கை விரல்கள் அழுத்தும் அழகில்தான்."டுண்! டுண்! டுண்! டுண்!" என்ற இனிய ஒலி எழுகிறது. எனவே, இவரது விரல்களில் தான் வில்லிசையின் வெற்றியே இருக்கிறது. சங்கீத இரகசியம் உடுக்கில் உறங்கிக் கொண்டிருப்பதால்தான், இதனால் பேயவும் ஓட்ட முடிகிறது, சேயையும் உறங்க வைக்க முடிகிறது, பெருமானையும் ஆடவைக்க முடிகிறது.

சாத்தனாரின் கூத்துநூல்,

"மோனத்து இருந்த முன்னோன் கூத்தில்
உடுக்கில் பிறந்தது ஓசையின் கழலே
ஓசையில் பிறந்தது இசையின் உயிர்ப்பே!"

என்று, உடுக்கிற்குப் புகழ்வரி கூறி, என்றும்

"உடுக்கில் பிறந்தது ஓம் எனும் ஒலியே
ஓம் எனும் ஒலியே, நாட்டியத் தொலியாம்,"

என்றும் பேசி, உடுக்கின் ஒலியின் பெருமையைப் பரப்புகிறது. அன்றியும் அருணகிரிநாதர் திருப்புகழில் நாதம் தான் மூத்தது என்றும், அந்த


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாதம், ஓசை, உடுக்கில் பிறந்து சுழல்கிறது. இப்படிச் சுழலும் வட்டங்களில் தோன்றிய கோலப்புள்ளி ஒலியலைகள் தான். இசையிலுள்ள ச - ரி - க - ம - ப - த - நி எனும் ஏழுஸ்வரங்கள். இந்த உடுக்கின் மூலம் உலகெலாம் உணர்ந்தோதற்கரியவனான இறைவன் காற்றெலாம் கானத்தை, ஞானத்தை உலகெலாம் பரப்பினான் என்று கொள்வதன் மூலம் உடுக்கினை அடிப்படையாகக் கொண்ட வில்லுப்பாட்டின் பெருமையையும் உணர்ந்து கொள்ள முடிவதையே "நாதவிந்துகலாதி நமோ நமோ", என்றுரைத்தார். எனவே, இசைக்கலையில் மிகவும் மூத்த, சிறப்புக் கொண்ட உடுக்கிற்கு உரிய பழம் பெருமைக்கு (மரபுக்கு) ஏற்ற வகையில் இன்று மேடைகளில் நல்ல இடத்தைக் கொடுக்க பலரும் முன்வருகிறார்களா? முன்வரவேண்டும் என்பதே ஏக்கமாகின்றது.

சிவன் கை உடுக்கு, புருசோத்மன் கையில் புல்லாங்குழல், வாணி கையில் வீணை என்று ஒவ்வொரு இந்துக் கடவுளரும் பழைய இசைக்கருவிகளுடன் தொடர்பு கொண்டவர்களாகவே காணப்படுகின்றார்கள்.

ஓம்! ஒலி உடுக்கினில் பிறப்பதனாலே, அத்தெய்வீக இசையை எழுப்பும் உடுக்கினைத் தெறிக்கும் முறையினை ஆச்சார சீலத்தோடு முதலில் ஒரு குருவிடமே கற்க வேண்டும். உடுக்கின் தத்துவ விளக்கத்தினை குரு முறையாக விளக்கி,அதனைத் தெறிக்கும் முறைதனை கற்போருக்கு போதிப்பார்.

"உடுக்கெடுத்துப் பிடித்தகைக்குப் பெயர்தான் சொல்லு
ஓங்கிஓங்கி அடித்தகைக்குப் பெயர்தான் சொல்லு
தூங்குகின்ற சல்லடத்தின் பெயர்தான் என்ன?
துடுக்குடனே வளையமொடு தரிசிதானும் யாருடைய
நரம்பென்று அறிந்து சொல்லே",

"உடுக்கெடுத்துப் பிடித்த கையோ ஆதிசக்தி
ஓங்கிஓங்கி அடித்த கையோ உருத்திரமூர்த்தி
தூங்குகின்ற சல்லடமோ இரணியன்தன் குடலாகும்
துடுக்குடனே வளையமொடு தரிசிதானும் ஆதித்தன்
சுடரென்று அறிந்து சொன்னேன்"

"எடுக்கு முன்னே இதன் பெயர் உரைத்தேனப்பா.
இனியாகுதல் உடுக்கெடுத்து தெறிக்கலாமோ?"



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

என்று உடுக்கினைத் தெறிக்க முறைப்படி பயின்றவரிடம் வினாவ, அவர் சரியான விடையைக் கூறிய பின்னரே உடுக்கினைத் தெறிக்க அனுமதிக்கப்படுவார். இக்கேள்வியை பின்வருமாறும் கேட்பர்.

"உடுக்குதான் பிடித்தகைக்கு பெயர்தான் சொல்லும்?
ஓங்கிஓங்கி அடித்தகைக்கு பெயர்தான் சொல்லும்?
உடுக்குடனே சல்லடங்கள் தரிசிதானும்
உந்தமனே பிறந்தஇடம் எங்கே சொல்லும்?
அறிந்துஅதன் பெயர் விரித்து உரைத்தாயானால்
அவரை நாம் குருவென்று வணங்கலாமே!"

"உடுக்குதான் பிடித்தகையே சக்தியாகும்
ஓங்கிஓங்கி அடித்தகையே சிவமதாகும்
உடுக்கதுவோ பிரமனது சிரசியாகும்
உத்தமனே சல்லடங்கள் சடையேயாகும்
தரிசிதான் ஈசன்கை நரம்பதாகும்.
சாற்றினார் அதன் பொருளை அறிந்து கொள்ளேன்"

உண்மையிலேயே இசைக்கலையில் மிகவும் மூத்த சிறப்புக் கொண்ட உடுகிற்கு உரிய மரபு முறைக்கேற்ற வகையில், இன்று மேடைகளில் நல்ல இடத்தைக் கொடுக்க வில்லிசைக் கலைஞர்கள் முன்வரவேண்டும்.

## குடத்திற்குக் கிடைத்த இடம்

வில்லிசைப்பதற்கு குடத்தின் கழுத்தில் வில்லின் ஒருமுனை கழியில் கட்டி வில்லுப்பாட்டு முடியும் வரை அவிழ்ந்து விடாமல் இருக்க வேண்டும். அப்போதுதான் வில்லைத் தட்ட அதில் கட்டியுள்ள மணியொலியும், குடத்தின் வாயைத் தட்ட கும்கார ஓம் காரமும் ஒலித்துக் கொண்டேயிருக்க முடியும். என்னதான் மனிதன் ஆடினாலும், பாடினாலும் கடசியில் வாழ்க்கை இந்த மண்குடம் போல்தான் என்பதைக் கணத்துக்குக் கணம் சொல்லாமல் சொல்வது போல் இதன் ஒலி அமைவதைக் காணலாம். இருக்கும் வரை நன்றாக வாழ்ந்து விடு,"தும், பம் தீந்-தோம்", என்று அடிக்கடி கேட்கும் தாளம் இடைவிடாமல் வாசிப்பது இந்தத் தத்துவத்தைச் சொல்லிக் கொண்டேயிருக்க வேண்டும் என்பதற்காகத்தான். இது வில்லிசைக் கலையில் பங்கு பெறும் குடத்திற்காகச் சொல்லி வைக்கப்பட்டிருக்கும் பக்குவமானதொரு தத்துவம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புலவர்கள் குடம் என்று சொன்னார்கள். அதே குடத்தை இசைக் கலைஞர்கள் அதில் ஏதோ மாற்றம் விரும்பி, மடியில் கவிழ்த்துப் போட்டு கடம் என்றார்கள். நிமிர்த்தினால் குடம், கவிழ்தால் கடம்.

லயம் என்றால் தாளம், தாளத்தையே தன் பெயரோடு இணைத்து சிவனுக்கு "லயகாரகன்" என்ற பெயர். சிவன் ஆடும் ஆட்டத்திற்கும், மனிதனின் இதயத்துடிப்பிற்கும் ஏதோ தொடர்புண்டு. மனிதனின் உயிர் அவன் நெஞ்சுக்குள் எவ்வாறு ஒரு தாளகதியில் ஆடிக் கொண்டிருக்கிறதோ, அவ்வாறே சிவனும் ஆடுகிறான் என்பதும், அதனால் சிவனை "ஜீவன்" என்பதும் சைவ சமய மரபாகும். தாளம் என்பதும் கணக்கு என்பதும் ஒன்றுதான் ஒரு கண நேரத்தில் இத்தனை பிரிவு, அதற்கு ஒவ்வொரு தாளம் என்றெல்லாம் கணக்கு முறையுண்டு.

## வில்லுப்பாட்டின் முதன்மை, துணைக் கருவிகள்

வில்லுப்பாட்டின் உறுப்புக்களாக அமைந்த வில், குடம், மணி (சதங்கை) முதன்மைக் கருவிகள் என்றும், வீசுகோல், உடுக்கு, ஜால்ரா, கட்டை, பம்பை, உறுமி, தக்கை, துந்துமி, மேளம் இவையெல்லாம் மன்னர் காலத்திருந்து, தமிழ் நாட்டுக் கலையுலகில் வில்லிசைத் துணைக் கருவிகளாகப் பாவிக்கப்பட்டு வந்தவைகளாகும். தற்போது விற்கடம், ஹார்மோனியம், மிருதங்கம், தபேலா, டோல்கீ, டோலக் போன்ற தோல் கருவிகளும் துணைக் கருவிகளாகப் பயன் படுத்தும் மாற்றம் பெற்றுள்ளதைக் காணலாம்.

## வில்லுப்பாட்டு அன்றும், இன்றும்

அந்தக் காலங்களில் வில்லுப்பாட்டினை அநேக ஊர்களில் விடிய விடிய நிகழ்த்து கலையாகப் பாடினார்கள். அக்காலக் கிராம மக்கள் ஏருடன் பாடுபட்டு ஊருடன் வாழ்ந்து வந்தார்கள். இவர்களால் விடிய விடிய விழித்திருக்க முடியும். இன்றைய நிலைமையதுவல்ல. கிராமங்கள் வளர, மக்களுக்குப் பல அலுவல்கள், தேவைகள் பெருகிக் கொண்டேவர, அதிக நேர வில்லுப்பாட்டுக்கள் மக்கள் பொறுமையை இழக்கச் செய்து விடுகின்றன. தற்காலத்தில் மக்கள் உரிய நேரத்திற்கு உறங்கச் சென்று, அதிகாலையில் எழுந்து பணிக்குச் செல்ல வேண்டியவர்கள். ஒரு நல்ல கலைப்படைப்பின் இலக்கணமே அது


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சுருங்கிய வடிவில் இருப்பதுதான். சில கதைகளைக் குறிப்பிட்ட நேரத்திற்குள் சொல்ல முடியாது என்பது உண்மை. அது போன்ற கதைகளை இரண்டு அல்லது மூன்று நாட்களில் முடிக்கும் வகையில் தொடர் நிகழ்ச்சியாக நடத்தலாம். "இராமாயண வில்லிசையை" கவிஞர் சுப்பு ஆறுமுதல் பத்து நாள் நிகழ்ச்சியாக நடாத்தி வில்லுப்பாட்டு வரலாற்றில் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தினார். அது போன்று அக்கால பல வில்லிசைக் கலைஞர்கள் பல இராமாயண, பாரதக் கதைகளை தொடர் நிகழ்ச்சியாக வில்லுப்பாட்டின் மூலம் நிகழ்த்திக் காட்டியுள்ளனர்.

தற்காலத்தில் வில்லுப்பாட்டினை இடம், பொருள், ஏவலறிந்து ஒருமணி, அரைமணி நேரத்துக்குள் ஒரு குறித்த விடயத்தை வில்லுப்பாட்டில் நிகழ்த்தும் மாற்றம் பெற்றுள்ளதோடு, மருவி வரும் வில்லுப்பாட்டினிற்கு புத்துயிரளித்து இளம் சந்ததியினருக்கு, வில்லிசையில் விருப்பை ஏற்படுத்தி பாரம்பரிய மரபுக்கலையான வில்லுப்பாட்டினை வழக்கொழிந்து போகாது வாழ வைக்கப் பாடசாலைகளில் தமிழ்த் தினப்போட்டியில் வில்லுப்பாட்டு நிகழ்வினை இருபது நிமிடங்களுக்கு மட்டுப்படுத்தி கொடுக்கப்படும் தலைப்புகளுக்கமைய மாற்றம் செய்துள்ளமையை காணமுடிகிறது.

ஆரம்பகாலத்தில் வில்லுப்பாட்டிற்கு உயிர் கொடுத்தவர் கலைவாணர் என். எஸ். கிருஸ்ணர் தொடர்ந்து மரபிலிருந்து சிற்சில மாற்றங்களைச் செய்து வில்லுக்கு கை கொடுத்தவர் கொத்த மங்கலம் சுப்பு, கவிஞர் சுப்பு ஆறுமுகம், உசரவிளை அப்பாவுநாடார், தேவாளை சுந்தரம்பிள்ளை, புன்னார்குளம் கோபாலபிள்ளை, செபக்குளம் தங்கையா, புளியங்குடி பெருமாள்தேவர், ஆத்தூர் கோமதி, நெல்லை ஐயாப்பிள்ளை, குற்றுங்குளம் நாராயணபிள்ளை, கழனிக்குளம் மாடசாமி,கோவில்பட்டிச் சின்னப்பா, நெல்லைச் சந்தனகுமாரி, தேரூர் ஆண்டார்பிள்ளை, விளாத்திக்குளம் இராசலட்சுமி இன்னும் பலர் வில்லுப்பாட்டுக் கலையை வாழவைத்த கை தேர்ந்த கலைஞர்கள். இன்றும் பலர் தமிழ் நாட்டில் வில்லுப்பாட்டுக் கலையை பல மாற்றங்களுக்குட்படுத்தி நிகழ்த்திக் கொண்டு வருவதை அவதானிக்க முடிகிறது. இலங்கை மண்ணில் முழங்கிய எஸ். எஸ். இராசேந்திரனின் சிலப்பதிகார வில்லுப்பாட்டு சிறப்புற நடந்தேறியுள்ளது. இந்திய வில்லிசைக் கலைஞர்கள் பலர் இலங்கையிலும் வில்லிசை நடத்தி, இந்தியாவில் விழுதூன்றிய வில்லிசையை இலங்கையிலும் கிளைவிட்டுப் பரவுவதற்கு வழிவகுத்துள்ளனர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தன்னினத்தின் தன்மானத்தை காப்பதாகவும், நாட்டின் முற்போக்குச் சக்திகளை ஒன்றாக்கியதும் வில்லிசைக் கலையின் வரலாற்றில் இவருக்கு முன்பு இப்படியான புரட்சிகளை எவரும் செய்ததுமில்லை, செய்ய நினைக்கவுமில்லையென கலைவாணர் என். எஸ். கிருக்ஷ்ணனின் வில்லிசைகளைப் பார்த்து ருசித்து, ரசித்த பெரியார் கூறியுள்ளார். வாத்தியங்களை மட்டுமல்லாது வாக்கியங்களையும் மாற்றி, சமுதாயப் பிரச்சனைகள் அனைத்தையும் சபைக்குக் கொண்டு வந்தவர் கலைவாணர் அவர்களே. முத்து முத்தாய்க் கதை சொல்லும் கொத்த மங்கலம்சுப்பு சிந்தனைச் சுடர் தெறிக்கும் பாடல்களை நாட்டுப்புற மெட்டுக்களிலே அள்ளி அள்ளி வீசும் வில்லுப்பாட்டுக்களிலே பக்தி, இலக்கியம், வில்லின் தாளம், சொல்லின் ஆழம் அனைத்துக்கும் மேலான மனிதநேய மனப்பான்மை யாவும் இருந்தன. மேற்போந்தோரின் வில்லிசையை கேட்ட போது, வில்லிசை போலோரு நல்லிசை இல்லையென அனைவரும் அங்கலாய்த்தனர்.

வள்ளுவப் பெருந்தகை வில்லிசை பாடினால், சாதாரணமாக நம்மைப்போல் வில்லையும், மண்பானையையும் மற்றக் கருவிகளையும் வைத்துக்கொண்டு பாடமாட்டார், இயற்கையையே தமக்கு ஏதுவாக வைத்துக் கொண்டுதான் பாடியிருப்பார் எனுமினிய கற்பனையால் கவிஞர் சுப்பு ஆறுமுகத்தின் பாடலைக் கேட்போம்.

"வானவில்லைப் பறித்து வந்து
வில்லாக்கி மடியில் வைத்து
நட்சத்திர மணியைக் கோத்து
நாதமூட்டும் பாட்டுமேதை வள்ளுவனாரு - ஹோலி
நட்சத்திரத்த வீசுகோலா மாத்திகிட்டாரு.
பால் சோற்றுப் பௌர்ணமியைப்
பானையாக்கி பக்கம் வைத்து
தந்தனத்தோம் குட மடிச்சி
தமிழ்தாயை தடம் புடிச்சி - வள்ளுவனாரு நமது
தமிழ்மறையாம் திருக்குறளைத் தந்திருக்காரு!
முன்பாட்டு இவர் பாட
பின்பாட்டு மனைவி பாட
பண்பாட்டு திருக்குறளைப்
பத்துப்பத்தா முத்து முத்தா - வள்ளுவனாரு
உலகச்சொத்தெனவே உயிலெழுதித் தந்திருக்காரு!


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கவிஞர், கற்பனையில் வாழ்வின் உண்மை வந்து வழக்கமான மின்னல்போல் வழிகாட்டிச் செல்லுகின்றன. வள்ளுவரை வில்லிசைக் கலைஞராக்கிப் பார்ப்பதில் கவிஞர் சுப்பு ஆறுமுகம் அடையும் மகிழ்ச்சி அளவற்றதுதான் - உண்மையில் வில்லிசைக் கலைஞர்களின் கற்பனைத்திறன் இப்படியான மெய்ப்புரைப்பதாக அமைய வேண்டும்.

## இறைவணக்கப் பாடலில் ஏற்பட்ட மாற்றங்கள்

வில்லிசைப் புலவர்கள் எல்லோரும் கடவுள் வாழ்த்துப் பாடலாக விநாயகரை முன்னிறுத்தி, கடவுள் வாழ்த்துப் பாடலாக ஒரு பாடலைப் பாடியே நிகழ்ச்சியைத் தொடங்குவது வழக்கம். அது விநாயகர் தேவாரம் அல்லது துதியாகயிருக்கலாம். பிற்காலத்தில் வந்தவர்கள்

**"தந்தனத்தோம் என்று சொல்லியே**
**வில்லினில் பாட வந்தருள்வாய் கணபதியே",**

என்று பாடினார்கள். பின்னர் அடுத்ததாக வரும் அடியை, "வந்தருள் சந்தான தெய்வமே", என்றும் அதன் பின் "வந்தருள் அறிவான தெய்வமே", என்றும் அதன் பின்,"வந்தருள் கலைமகளே", என்று கல்வித் தெய்வமான கலை மகளை வணங்கி விட்டு, கலைத் தொழிலைத் தொடங்கினார்கள்.

அடுத்து குரு வணக்கம், அஞ்ஞானத்தை நீக்குபவர் குரு, குருவடி பாடுதல் இது.

"கணபதியும் என்குருவும்
கனவிலயும் நான்மறவேன்! - எனக்கு
சொல்லிவைத்த வாத்தியாரை
சொப்பணத்தில் நான்மறவேன்!
நானொருநாள் மறந்தாலும் - எந்தன்
நாவொருநாள் மறப்பதில்லை
நெஞ்சொருநாள் மறந்தாலும் - எந்தன்
நினைவொருநாள் மறப்பதில்லை!

என அமைத்து குருவை மதித்து, விழித்து வில்லிசையைத் தொடங்கினர். ஆனால் தற்போது குரு வணக்கம் இடம் பெறுவது மிகமிகக்குறைவு.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அடுத்து, "அவையடக்கம்" பாடுதல் என்னும் மரபைக் கையாண்டு வந்தனர். ஒவ்வொரு கலைஞர்களும் ஒவ்வொரு விதமான அவையடக்கத்தினைப் பாடுவார்கள். எப்போதுமே பெரியவர்களுக்கு அடங்கிப் போகிறவன் என்றுமே கவலைக்கு ஆளாக மாட்டான், உயர்ந்து விடுவான். என்ற இந்த உயரிய பாடத்தைக் கூட வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் மற்றவர்களுக்கும் சொல்லித் தருகின்றார்கள்.

ஏட்டைக் கண்டறிந்து, அதிலுள்ள பாட்டையும் படித்தறிந்து முறையாகப் பாடவும் தெரிந்தவர்கள் தமக்கு எதுவுமே தெரியாதவர்களாகக் குறிப்பிட்டு மேடையிலே பாடுவது உண்மையான அவையடக்கம்தான். இதோ அவையடக்கப் பாடலொன்று,

"பாடறியேன் படிப்பறியேன் - நான்
பாட்டிலுள்ள வகையறியேன்
ஏடறியேன் எழுத்தறியேன் - நான்
ஏட்டிலுள்ள பொருளறியேன்,"

முதலில் கடவுள் வணக்கம், குரு வணக்கம், அவையடக்கம் பிறகே கலை முழக்கம். இதை நடைமுறைக்குக் கொண்டு வந்தது வில்லிசையே. மனித அறங்களை மக்களிடையே பரப்பவே வில்லிசை முழங்கின. உலக நியாயங்களை வேண்டியே உடுக்குகள் ஒலித்தன. வேதங்களுக்குச் சாதகமாகவே வில்லின் நாணில் தட்டப்படும் வீசுகோலும் ஒலித்து வந்தன. குடத்தைத் தட்டித் தட்டி "ஆமா! ஆமா!" என்று ஆமாப் போட்டு வரும் பக்கப் பாட்டுக்காரரும் கூடாத சேதிகளுக்கு ஆமாப் போட்டதில்லை. புலவரின் நா புனிதமானவற்றைத் தவிர, வேறு எதனையும் தவறியும் சொன்னதில்லை. இத்தகைய மரபுகளிலின்று சிறு மாற்றங்களும் முளைத்திருக்கின்றன. மேடையில் பாடகர் பாட, மக்கள் கேட்கும் பாடலாகவே வில்லுப்பாட்டு இருந்ததே தவிர, ஏட்டில் எழுதி வைத்து, பூட்டிய பெட்டியில் தூங்கும் பாடலாக இருந்ததில்லை. வேதம் எப்படியோ வில்லிசையும் அப்படியே.

வில்லிசைக் குழுவில் புலவர் (குரு) நடுநாயகமாக வீற்றிருப்பார். இடது புறம் குடத்து (கடத்து) காறர். இவர்களின் முன்பு குடத்தினிலுள்ள வில் இருக்கும். வீசு கோலைக்கொண்டு வில் நாணைத்தட்ட வசதியாக இருக்கும். புலவருக்குப் பின்னால் வரிசையாக பிற்பாட்டுக்காரர், சுருதிமீட்பவர், உடுக்கு, தாளம், தோல்வாத்தியம் போன்றவற்றை இயக்குபவர்கள் அமர்ந்திருந்து அளிக்கை செய்வார்கள்.

தற்கால வில்லிசைப் போட்டிகளின் நிபந்தனைப்படி, மொத்தமாக ஏழு பேர் பங்குபற்றுவர். வில்லுப்பாட்டானது வெற்றி பெறவேண்டுமாயின், குரு சொந்தக்கதையை மறக்க வேண்டும். சொல்லும் கதையையே நினைக்க வேண்டும். அவர் எந்தக் கதையை சொல்லிக் கொண்டு இருக்கிறாரோ, அந்தக் கதையிலே ஒன்றி விடவேண்டும். அதற்காகக் கலைத் தேவதையை வணங்கி இதனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்போதுதான் வில்லிசை சுவைக்கும். பல கதாபாத்திரங்களின் குரலையும் வெளிப்படுத்த வேண்டிய வில்லுப்பாட்டின் பாவம் வரவேண்டும். பல நிலைகளிலும் பாடும், பேசும், பாடல் வசனங்களைக் கூட்டவும் குறைக்கவும் வேண்டும். பக்க வாத்தியங்களைப் பக்கா வாத்தியங்களாக அமைத்துக் கொள்ள வேண்டும். சுருதி சுத்தம், லயசுத்தம் என்பது சத்தியம் போல இருக்க வேண்டும். அணுகூடப் பிறழக்கூடாது. சுருதி மாதா, லயம் பிதா. இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். மேடையில் அமர்ந்திருக்கும் பக்க வாத்தியக்காரரோடு கவிஞன் மனமும் ஒன்று பட்டு சுருதி சேரவேண்டும். அதனால் வில்லுப்பாட்டுக்காரர்கள் தன்னோடு சரியாகச் சரிப்பட்டு வருபவர்களை மட்டுமே மேடையில் வைத்துக் கொள்ள வேண்டும். வில்லிசைக் கலைஞன் மனதை ஒரு குண்டூசி டப்பா போலாக்கி, அவர் பேச்சில், பாட்டில் கொடுமையில்லாக் குத்தலாக, கேட்பவர்களின் நெஞ்சத்தைத் தைத்து, நிலை பெறுவதாக இருக்க வேண்டும். நகைச்சுவை - நயம் - குத்தல் - இங்கிதம் எல்லாம் வில்லுப்பாட்டுக் கலைஞர்களிடம் இந்தப் பக்குவத்தில் இருக்க வேண்டும். அப்போதுதான் மக்கள் இரசித்துக் கேட்பார்கள். சும்மா செய்தி படிப்பது போல், எதையோ எழுதி வைத்துப் படித்தால் வில்லுப்பாட்டுக் கலை வாழ்வது மிகக்கடினம்.

வில்லிசைக் கலை தற்கால சூழ்நிலை காரணமாக அருகி விட்டதென்றே சொல்ல வேண்டும். ஒரு சில ஆலயங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்களில் சில நிகழ்வுகளின் போதும், தமிழ் தின, கலாச்சாரப் போட்டிகளுக்காக மிகவும் சுருக்கமாக இருபது நிமிடங்கள் அல்லது குறித்த நேரங்களுக்கு வரையறுத்து நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இலங்கையில் வடக்குக் கிழக்கிலும், தமிழர்கள் வாழும் பகுதிகளிலும், பாடசாலைகளிலும் ஓரளவு இன்றும் வில்லுப்பாட்டு நிகழ்வு நடைபெற்றுவருவது மகிழ்வைத்தருகின்றது. அன்று இலங்கையின் பல பகுதிகளில் வில்லுப்பாட்டு நிகழ்வு நடைபெற்றுள்ளன. 1965 இலிருந்து உடப்பூர் பெரி. சோமாஸ்கந்தர் நான்கு தசாப்தகாலமாக


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

2000இற்கும் மேற்பட்ட வில்லிசை நிகழ்ச்சிகளை நிகழ்த்தியுள்ளார். சிலாபம் பெரீஸ் சோமாஸ்கந்தர் ஆலயங்கள் உட்பட பல இடங்களில் 100க்கும் மேற்பட்ட வில்லுப்பாட்டுக்களை அளிக்கை செய்துள்ளார். ஏழாலை சோக்கல்லோ சண்முகம், மகாகவியின் காவியங்களை வில்லுப்பாட்டாக மாற்றி சாதனை படைத்ததோடு 20க்கும் மேலான வில்லிசை நிகழ்வுகளை நிகழ்த்தியுள்ளார். வில்லிசை நிகழ்வுகளிலே ஜெயந்தி அப்புக்குட்டி பெண்பாத்திரங்களுக்கு குரல் கொடுத்துள்ளார்.

மட்டக்களப்பிலே வில்லிசைக்கு வித்திட்டு, பல இடங்களில், வானொலி நிகழ்ச்சிகளில் வில்லுப்பாட்டினைப் பாடி "வில்லிசை வேந்தர்" எனும் பட்டதகைப் பெற்று மிளிர்கின்றவர் மாஸ்டர் சிவலிங்கமாவார். அன்று இவர் குழுவில் காசியானந்தன், முழக்கம் முருகப்பா, கவிஞர் குணரெத்தினம், சத்தியகாசன், பத்மநாதன், தட்சணாமூர்த்தி, பாஸ்கரன், கிருபைரெத்தினம் ஆசிரியர் போன்ற பலரையும் இணைத்துக் கொண்டு நூற்றுக்கும் மேற்பட்ட வில்லுப்பாட்டு நிகழ்வுகளை நிகழ்த்தியுள்ளார். பின்னர் இக்குழுவைச் சேர்ந்த முழக்கம் முருகப்பா, செ. குணரெத்தினம் இன்னும் சிலர் தனித்தனியாக வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளை நிகழ்த்தி வந்துள்ளனர்.

காத்தான்குடியில் ஆரம்பகாலத்தில் முஸ்தபா ஆசிரியர் பல வில்லுப்பாட்டினை நடத்தியுள்ளார். மண்டூர் அசோகா, தணிகாசலம் ஆகியவர்களும் அப்பகுதிகளில் பல வில்லிசை நிகழ்வுகளைத் தயாரித்து நடாத்தியள்ளனர். ஆசிரியர்களாகிய திருமதி. ரவீந்திரமூர்த்தி தம்பதியினர் சில வில்லுப்பாட்டுக்களைத் தயாரித்து பாடசாலைகளில் தமிழ் தினப் போட்டிகளில் மாணவர்களைக் கொண்டு பயிற்சியளித்து பரிசில்களையும் பெறவைத்துள்ளனர். இதே போன்று சுந்தரமதி வேதநாயகமும், வில்லூரானும் ஒரு சில வில்லுப்பாட்டினை நிகழ்த்தியுள்ளார். சிறுவயதிலிருந்து இன்றுவரை நூற்றுக்கு மேற்பட்ட வில்லுப்பாட்டுகளை நடாத்தி தமிழ் தினப் போட்டிகளில் பல மட்ட வெற்றிகளைப் பெற்று "வில்லிசைவாணர்" எனும் பட்டத்தைப் பெற்ற எ. பிரியகாந்தன், அதே போன்று எவ். என். ஆனந்தராஜன் இன்றும் வில்லிசையில் மிளிர்கின்றார். மு. கணபதிப்பிள்ளை, அமரர் நல்லரெத்தினம், ஆரையூர் அருள், கேதீஸ்வரன், குகநாதன், துஷ்யந்தன் போன்றவர்களும் வில்லிசைப் பாடல்களை அரங்குகளில் அளிக்கை செய்துள்ளனர்.

அன்றியும் இன்று பல்கலைக்கழகங்களில் நாடகமும் அரங்கிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் பட்டம் பெற்ற பல விரிவுரையாளர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் பல்கலைக்கழகங்களிலும், பாடசாலைகளிலும் வில்லுப்பாட்டு கலையைக் கற்பிப்பதனாலும் நிகழ்வாக அளிக்கை செய்வதனாலும் வில்லுப்பாட்டு பட்டி தொட்டியெங்கும் முளைவிட்டு புத்துணர்வு பெற்று வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது.

இத்தகைய வில்லுப்பாட்டுப் பாரம்பரிய கலையானது இன்னும் வளர வேண்டும். இதற்கு அரசும், மக்களும், பாடசாலைகளும், பல்கலைக்கழகங்களும், கலைக் கழகங்களும் கை கொடுத்து மென்மேலும் வளர்க்க வேண்டும். வில்லுப்பாட்டுக் கலைஞர்களும் தங்கள் தங்கள் பழைய பாதைகளிலிருந்து சற்று விலகி, புத்தம் புதிய செய்திகளையும், தற்கால சம்பவங்கள், கதைகளையும் அன்றாடம் சேர்த்து மாற்றத் துக்குள்ளாக்கி வருகின்றது வரவேற்கத்தக்கதாகும். இப்படிப் பழமையில் புதுமை சேர்த்து, பழமைவாதிகளையும் இன்றைய தலைமுறையினரையும் ஒருங்கே கவரக் கூடிய வகையில் கதைகளைச் சொல்ல வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் மென்மேலும் முன்வரவேண்டும். அவர்களை நாட்டு மக்களும் ஆதரித்து ஊக்கமளிக்க வேண்டும்.

அப்போதுதான் மூத்த கலையான முத்தமிழ் கலையான இந்த வில்லுப்பாட்டுக்கலை தலை நிமிர்ந்து வாழும், வாழ வழி பிறக்கும்.

வில்லுப்பாட்டின் தோற்றம், வளர்ச்சி, அதன் அமைப்பு என்பவற்றை மேற்போந்த கட்டுரையிலிருந்து ஓரளவு அறிந்திருப்பீர்கள். எமது மரபுக் கலையான வில்லுப்பாட்டு பல காரணிகளால் வழக்கொழிந்து போனாலும், அதன் கருப்பொருள் எதிர்கால சந்ததிகளான மாணவர்கள் மனங்களிலே வித்தாக விதைக்கப்பட்டு, அது விருட்சமாக வளர்க்கப்பட்டு சத்தான கலையாக வளர்க்கப்பட வேண்டும் என்பதற்காக பாடசாலைத் தமிழ் தினப் போட்டிகளிலும், பல்கலைக்கழகங்களில் நாடகமும் அரங்கியலும் எனும் துறைசார் கற்பித்தலினூடாகவும் வில்லுப்பாட்டு கற்பிக்கப்பட்டு, காப்பாத்தப்பட்டு வருவது கருத்தில் கொள்ளப்படத்தக்கது

பல்கலைக்கழகங்கள், கலைக்கழகங்கள், தமிழ் தினப் போட்டிகளில் கால நேரம் கருதி, வில்லிசைக் கலை ஓரளவேனும் வேரூண்ட வேண்டும் என்பதற்காக, தற்காலப் போட்டிகளில் இருபது நிமிடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு போட்டிகளில் அளிக்கை செய்வதற்கு சுற்றுநிருபங்களின் மூலம் விபரங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதன்படி, வில்லுப்பாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புகள் பின்வருமாறு வரையறை செய்யப்பட்டுள்ளது.

வில்லுப்பாட்டின் கதை (கருப்பொருள்) பாட்டினாலும் உரையினாலும் நகர்த்தப்பட வேண்டும். கதையின் கருப்பொருள் புராணம், இதிகாசம் தழுவியதாகவோ, சமூகம் சார்ந்த சமகால சம்பவங்களாகவோ, இலக்கியக் கதைகள் சார்ந்தவையாகவோ அமையலாம். குரு, சிஷியர்களின் உரையாடலின் வாயிலாகவும், பாட்டாலும் வில்லின் கதை சொல்லப்பட வேண்டும்.

வினா - விடைப் போக்கில் கதை வளர்க்கப்பட்டு, சிஷியர்களின் வினாக்களுக்குப் பதிலாகவே குருவின் உரையும் பாட்டும் அமைதல் வேண்டும். கதைக்குப் பொருத்தமான வினாக்களைத் தொகுத்து விடையைக் காண்பதாக அமைய வேண்டும். பேச்சு வழக்குச் சொற்பிரயோகமே பிரதானமாக அமைய வேண்டும். அதாவது கதை சொல்லும் பாங்கிற்கும், உரையாடற் பாங்கிற்கும் வேறுபாடு தென்படக் கூடியவாறு ஓசை அமைதல்வேண்டும். எனவே குரு (புலவர்) அவரே கதையைக் கொண்டு நகர்த்துவராதலால், குரல் வளம் மிக்கவராகவும், முகபாவம், அபிநயம் காட்டக் கூடியவராகவும் நகைச்சுவை உணர்வு மிக்கவராகவும் திகழவேண்டும். ஏழு பேர்கள் பங்குபற்ற வேண்டும், ஏனைய ஆறுபேரும் சிஷியர்கள் ஆவர். இவர்களும் குரல்வளம் மிக்கவராகவும், ஒத்தோசையுடன் பாடக் கூடியவர்களாகவும், இசைக்கருவிகளான விற்கடம், ஹார்மோனியம், உடுக்கு என்பவைகளோடு நான்காமவர் தோற்கருவிகளுள் மிருதங்கம், தபேலா, டோல்கி, டோலக் போன்ற கருவிகளுள் ஒன்றை வாசிக்கக் கூடியவராக இருக்கவேண்டும். இக்கருவிகளே பயன் படுத்தப்பட வேண்டும்.

பாடல்கள் நாட்டார்பாடல் தழுவியதாகவும், தென்பாங்கு மெட்டுக்களைத் கொண்டதாகவும் கிராமிய - நாட்டாரியல் கூறுகளைக் கொண்டு அமைய வேண்டும். சினிமாப் பாடல்களோ, சினிமாப் பாடல் மெட்டுக்களோ இடம் பெறக்கூடாது. வில்லின் நீளம் அண்ணளவாக மூன்று மீற்றரும், வில்லின் நாணிலும் கீழ்த்தண்டிலும் ஆங்காங்கே சதங்கைகள் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். விற்கடம் (வில்லுடன் இணைத்துக் கட்டப்பட்டிருத்தல் வேண்டும்). பங்குபற்றும் அனைவரும் அதே பாடசாலை மாணவர்களாகவும், போட்டியாளர்களாகிய நால்வரே பக்க வாத்தியங்கள் வாசிக்க வேண்டும்.

பங்குபற்றும் ஆண், பெண் பாலினர் ஆடம்பர ஆடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிகள் அணியாது. பொருத்தமான ஆடை, அலங்காரங்கள் ஒரே சீராகத் தத்தம் கலாசார உடைகளில் பங்குபற்ற வேண்டும்.

## வில்லுப்பாட்டின் அமைப்பு

காப்பு, அவையடக்கம், கதை அறிமுகம் (கதை ஆரம்பம், வளர்ச்சி, முடிவு) கற்பனையாயினும், கதை நிகழ்விட விவரணம், கதாபாத்திர முன்னுரை என்பன சீராக அமைந்து, கருவின் தன்மை தெளிவாகப் புலப்படும் படி, போதனையுடன் நிகழ்ச்சி அமைய வேண்டும். ஒரேசீராக ஆடி, அசைதல் தவிர்க்கப்பட வேண்டும்.

போட்டிக்கான புள்ளித்திட்டம்

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | நடையும் இசையும் | 20 |
| ii | ஆக்கமும் நயமும் | 30 |
| iii | பக்கப்பாட்டு, வினாக்கள், நகைச்சுவை | 15 |
| iv | உணர்ச்சி வெளிப்பாடு | 15 |
| v | அபிநய பாவங்கள் | 10 |
| vi | ஆடை அலங்காரம் | 05 |
| vii | நேரம் | 05 |
| | மொத்தம் | 100 |

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமைய ஆண்டுதோறும் கொடுக்கப்படும் இரு தலையங்கங்களுக்கமைய வில்லுப்பாட்டினைத் தயாரிக்க வேண்டும். கொடுக்கப்படும் தலையங்கங்கள் பெரும்பாலும் அகநானூறு, புறநானூறு, திருக்குறள், பழமொழிநானூறு எனும் பகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்படும் இப்படியாக கடந்த காலங்களில் கொடுக்கப்பட்ட தலையங்கங்களுக்கு அமையத் தயாரித்து தமிழ் தினப் போட்டிகளிலே பங்கு பற்றி பல மட்டங்களில் வெற்றி பெற்ற வில்லுப்பாட்டுக்களும், வேறு நிகழ்வுகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற வில்லுப்பாட்டுக்களும் இங்கு தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இவ் வில்லுப்பாட்டுக்கான பிரதியாக்கங்கள் வெவ்வேறுபட்ட பாடசாலைகளுக்காகவும் ஆலய விழாக்கள், ஆசிரியர் தினநிகழ்வுகளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னால் ஆக்கப்பட்டவை என்பதும், பழக்கப்பட்ட தென்பதும் குறிப்பிட்டாக வேண்டும்.

இப்போட்டிகளை நடாத்தும் தேசியமட்ட, மாகாணமட்ட, மாவட்டமட்ட, பிரதேசமட்ட தமிழ் தினப் போட்டிக்கான கல்வி அதிகாரிகள் சுற்று நிருபத்திற்கு அமைவாகவும், அதற்கான சிறப்பான தேர்ச்சியுள்ள, அனுபவம் மிக்க நடுவர்களைக் கொண்டு பக்கச்சார்வற்ற முறைகளில் அளிக்கை செய்யும் மாணவர் குழுக்களைத் தெரிவு செய்ய ஆவண செய்து, போட்டி முடிவுகளில் நம்பகத் தன்மையையும், வெளிப்படைத் தன்மையையும் உறுதி செய்ய வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லுப்பாட்டுக்கள்

## 1. வித்தகர் விபுலானந்தர்

கடவுள் வணக்கம்

"ஆனைமுகமும் ஒருகொம்பும்
அகன்றமார்பும் சிறுகண்ணும்
பானைபோன்ற பெருவயிறும்
பாங்கான பூணூல் அழகும்
தானே தோன்றி என்உள்ளத்தில்
தயவாய் நிற்கும் விநாயகரே!
நானே உன் பாதம் தொழுதேன்
நாவில் உதிப்பாய் கணபதியே!

குழு: "தந்தனத்தோம் என்று சொல்லியே
வில்லினில் பாட.. ஆமா
வந்தருள்வாய் சந்தான தெய்வமே."..

குரு: வில்லுப்பாட்டுக் கேட்கவென்று விருப்புடனே
வந்திருக்கும், அறிஞர்களே! அரிவையரே! வணக்கம்
நல்ல பெரியோரே உங்களுக்கும் அன்பு வணக்கம்
அண்ணன்மார்க்கும், அக்காமார்க்கும் இனிதான
எங்கள் வணக்கம். சொன்ன சொல்லைக் கேட்டிடாத
சுட்டிதம்பி தங்கையருக்கும் சுபமான எங்கள் வணக்கம்

குழு: வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

சீடன் 1: என்ன எல்லோருக்கும் வணக்கம் சொல்லியாகிவிட்டதா?
இல்லை பாக்கி ஏதாவது இருக்கின்றதா?

சீடன் 2: என் நினைவுக்கு எட்டியவரை எல்லோருக்கும் இல்லை, இல்லை... என்னைத்தவிர எல்லோருக்கும் சொல்லி விட்டார்.

சீடன் 1: உங்கள, உங்கட ஊட்டிலேயே மதிக்கிறல்ல! இந்த நாட்டில


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி மதிக்கிற? குருவே, நீங்க சொல்ல வந்த விடயத்த சொல்லுங்க குருவே.

குரு: பொறு பொறு அவசரப்படாதே. அதற்குத்தானே வந்திருக் கின்றேன் (ஆமா, ஆமா) நமது பகுதிக்கும் (ஆமா) நமது நாட்டுக்கும் (ஆமா) தமிழுக்கும் சேவை செய்து நமக்கெல்லாம் பெருமை தேடித்தந்த தனிப்பெருமை வாய்ந்த, விபுலானந்த அடிகளாரைப் பற்றி சொல்லப் போகின்றேன். அவரின் வாழ்க்கையில் இடம் பெற்ற சில சம்பவங்களை உங்கள் முன்னிலையில் சொல்லலாம் என்று வந்திருக்கிறேன்.

சீடன் 1: அடிகளாரைப் பற்றி விரிவாக அறிவதென்றால் காலமும் நேரமும் இடம் தராதே!

சீடன் 2: காலம் நேரம் பற்றி, கண்டது நிண்ட தெல்லாம் கதைக்க தொடங்கித்து, இதுவும் காலந்தான், நீங்க சொல்லுங்க குருவே.

குரு : முதலில் அடிகளாரின் பிறப்பைப் பற்றி கூறுகிறேன் கேளுங்கள்.

பாட்டு : மட்டு மாநகரின் தென்திசையாம் - அது
காரேறு ஊரெனும் காரைதீவாம்
சாமித்தம்பி கண்ணமைக்கும் சான்றோனாக
பங்குனித் திங்கள் பதினாறில் அவதரித்தார்.

குரு : அதாவது, 1892ம் ஆண்டு (ஆமா) பங்குனித்திங்கள் (ஆமா) 27ந் திகதி, முத்தமிழ் மானியாக வித்தகர் விபுலன் விடிவெள்ளி யாகப் பிறந்தார். இவரது பிறப்புப் பெயர் என்ன தெரியுமா?

சீடன் 1: ஆமா! நன்றாகத் தெரியுமே! மயில்வாகனன்.

குரு : அதுதான் இல்லை. பெற்றோர் அடிகளாருக்கு வைத்த பெயர் தம்பிப்பிள்ளை.

சீடன் 2: வடிச்சல், துண்டால முகத்த துடைச்சுக்கங்கோ. அப்ப! இந்த மயில்வாகன மெப்ப வந்தது?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு : அதையும் சொல்லுகின்றேன் கேளுங்கள். அடிகளார் பிறந்திருக்கும் போது, நோய்வாய்ப்பட்டு, உடல் மிக மெலிந்து, வாடுவதைக் கண்ட பெற்றோர் கதிர்காமக் கந்தனுக்கு நேர்த் திக்கடன் வைத்து, அடிகளாரைக் கந்தனிடத்தில் எடுத்துச் சென்று மனமுருகி இப்படி வேண்டலாயினர்.

பாட்டு : மால்மருகா எழில் வேல்முருகா - உன்னை
ஆவலுடன் தேடிநாடி வந்தோமே
முருகா வடிவேலா கந்தா - கதிர்வேலா
கதிர்மலைக் கந்தவேளே காப்பது நீயேயையா
கதியே நீயென்று உன்னைச் சரணடைந்தோம்
காத்தருள் வாய்வேலா எம்குறை தீர்த்ருள்வாய்பாலா

சீடன் 1: வேண்டுதலுக்குப் பலன் கிடைத்ததா குருவே?

குரு : ஆமாம்! சில நாட்களுக்குள்ளாக, அடிகளாரின் (ஆமா) தம்பிப் பிள்ளையின் உடல் நிலையில் அதிசயிக்கத்தக்க முறையில் பெரிதும் முன்னேற்றம் காணப்பட்டது. இதனால் அடிகளுக்கு கதிர்காமக்கந்தன் நினைவாக மயில்வாகனன் என்ற திரு நாமத்தை பெற்றோர் சூட்டினர்.

சீடன் 2: அடிகளாரின் இளமைக் காலத்தைப் பற்றி சிறிதளவு சொல்லுங்கள் குருவே.

குரு : அடிகளார் தமது 14 வயதில் மட்டக்களப்பு அர்ச்மிக்கல் கல்லூரியில் ஆரம்பக்கல்வியை ஆரம்பித்து, அப் பருவத்திலேயே பெற்றோர், ஆசிரியர்கள், பெரியோர்களின் வார்த்தைகளுக்கு மதிப்பளித்தும், அவர்களை மதித்தும் நடந்து உன்னத நிலையை அடைந்தார். தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மும்மொழிகளிலும் கற்றார். பௌதீக சாஸ்திரத்தில் பி. எஸ். ஸி பட்டமும், மதுரை தமிழ் சங்கத்தின் பண்டிதர் பட்டமும் பெற்றார். அடிகளாரின் ஆற்றல், திறனைக் கண்டு அனைவரும் அதிசயித்தனர்.

சீடன் 2: இக்காலத்துப் பிள்ளைகளைக் கண்டாலே பெரியவங்க ஒதுங்கி, ஒரமாகப் போறாங்க. அதுவும் ஒருவித மரியாததான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு : ஆமா, ஆமா காலம் மாறி விட்டதல்லவா? இப்பத்தையப் பிள்ளைகளுக்கு பெரியவர்கள் மதிப்பளிக்க வேண்டும். இல்லாவிட்டால் மரியாதை கெட்டு விடும்.

சீடன் 1: சரியாகச் சொன்னீர்கள் குருவே.

குரு : அடிகளாரின் இளமைப்பருவ செயல்களைக் கண்டு மட்டு நகர் மண்மாதா எப்படி மனமகிழ்ச்சியடைந்தது தெரியுமா?

சீடர்கள்: எப்படிக் குருவே.

பாட்டு : விபுலன் பிறந்தான் எங்கள் விபுலன் பிறந்தான்
அமுத முத்தமிழே தழைத்ததம்மா
வித்தகன்வரவால் வித்தகன்வரவால் மனமகிழ்ச்சி - மலர்ததம்மா
கன்னித்தமிழை கைவிடாமல் காத்தானம்மா?

குரு : இவ்வாறு இருந்து வருகின்ற காலத்திலே (ஆமா) அதே பாடசாலையில் (ஆமா) உயர்வகுப்பிற்கான (ஆமா) கேம்பிறிச் எனப்படுகின்ற (ஆமா) பரீட்சையில் சித்தி பெற்று, சில காலத்தின் பின்னர் அங்கேயே ஆங்கில ஆசிரியராக தமது சேவையைத் தொடங்கினார். அன்றியும், 1922ம் ஆண்டு, தமது 26 வயதினிலே ஸ்ரீமத் சுவாமி சர்வானந்தரினால் சென்னையிலுள்ள இராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்து பிரமச்சரிய விரதத்தை மேற்கொண்டு பிரபோதசைத்தன்னியர் எனும் நாமத்தை பெற்றார்.

சீடன் 2: என்ன பிரபோதசைத்தன்னியரா? இப் பெயரை இதுவரையில் கேள்விப் பட்டதேயில்லையே!

சீடன் 1: அப்போ விபுலானந்தர் என்ற பெயர் அடிகளாருக்கு யார் சூட்டினார்கள்.

குரு :அதனை இராமகிருக்ஷ்ண பரமஹம்சனின் மாணாக்கனாகிய சிவானந்த சுவாமி 1924ம் ஆண்டு சுவாமி விபுலானந்தர் என்ற பெயரைச் சூட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன் 2: ஆமா! அடிகளார் ஏதோ, ஏதோ நூல்கள் எல்லாம் இயற்றினாராமே? அது பற்றி எதுவும் சொல்ல வில்லையே.

குரு : அதனையும் இச் சந்தர்ப்பத்தில் சொல்லி வைக்கின்றேன் கேளுங்கள்.

பாட்டு : நாடகத்துறை நூல்களைப் பார்த்து
ஆராய்ச்சி செய்தாரே - அடிகள்
ஆராய்ச்சி செய்தாரே
ஷேக்ஸ்பியர், தனஞ்செயர், இளங்கோ என்போர்
நூல்களைப் படித்தாரே
மதங்கசூளாமணி நூலை இயற்றித்தந்தாரே
நாடகநூலாக அதை இயற்றித்தந்தாரே
நானிலமறிய தேன்சுவையாகத் தித்திக்கச் செய்தாரே.

சீடன் 1: மதங்கசூளாமணி பற்றி அழகாகச் சொன்னீர்களே. யாழ்நூல் பற்றிச் சொல்லவில்லையே.

சீடன் 2: அது எல்லோரும் அறிந்த விடயம் என்பதால், அதனை விட்டு விட்டார் போலும்.

குரு : நிட்சயமாக இளவேனிற் காலத்தில் பூரணைத் திங்கள், கல்லடிப்பாலம் அமைந்துள்ள வாவிக்கு அடிகளார் தமது சில நண்பர்களுடன், இரவு வேளைகளில் செல்வது வழக்கம். அந்த அமைதியான சூழலிலே வாவியிலிருந்து இனியகானம் எழுவதை பல தடவைகள் கேட்ட அடிகளார் அது நீரர மகளீர்கான ஒலிதான் என எண்ணலாகினார்.

சீடன் 2: அது என்ன நீரரமகளீர்? பெண் மீனா?

குரு : ஆமாம்! இடுப்பிற்கு மேலே மனிதப்பெண் உருவத்தையும், இடுப்பிற்கு கீழ்ப்பகுதி மீனின் வால் வடிவத்தையும் கொண்டிருக்கும்.

சீடன் 1: அடேயப்பா! என்ன அதிசயம்! அற்புதம்! ஆச்சரியம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு : அது மட்டுமல்ல இவ்வாறான ஒலி வடஅமெரிக்காவிலுள்ள கலிபோர்ணியாவிலும் (ஆமா) மட்டக்களப்பு வாவியிலும் (ஆமா) தவிர்ந்த எந்த இடத்திலும் இல்லையென அறிஞர்கள் கூறுகின்றனர்.

சீடன் 2: இதனையும் இசையுடன் கூறினீர்கள் ஆனால் நன்றாக இருக்கும்.

குரு : உங்களுக்குப் பேராசை! சரி! சரி! கூறுகின்றேன்.

பாட்டு : மீன்மகள் பாடிநின்றாள்
வாவிமகள் ஆடிநின்றாள்
மட்டுநகர் வாவியெனும் மேடையிலே - இதில்
எட்டுத்திசையிலும் புகழின் வாடையம்மா
ஏலேலோ! ஏலேலோ! ஏலேலோ!
மீனின் இசையென்றும் கேட்கலையோ - நீங்கள்
விபுலன் யாழ்நூல் தானும் பார்க்கலையா?
ஊரூராய் விபுலனின் சிறப்பம்மா - அவரால்
கிழக்கினிலே கலைச்செல்வம் நூறம்மா
ஏலேலோ! ஏலேலோ!! ஏலேலோ!!!

சீடன் 1: ஆகா அருமை! அருமையிலும் அருமை. அது சரி, அடிகளாரைப் பற்றி நினைத்தால் அவருக்குப் பிடித்தமான பாடல் நினைவிற்கு வரவேண்டும் என்பார்களே!

குரு : ஆமா! மறந்தே விட்டது. தக்க தருணத்தில் கேட்டாய், அடிகளுக்குப் பிடித்த அப்பாடல், கல்லடி விபுலானந்த மணிமண்டப வளவில் அமைந்துள்ள அடிகளாரின் சமாதியில் இன்றும் காணக் கூடியதாய் இருக்கிறது.

பாட்டு : வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.
காப்பவிழ்ந்த தாமரையோ, கழுநீர் மலர்தொடையோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ
காப்பவிழ்ந்த மலருமல்ல, கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பியகைக்காந்தளடி கோமகனார் வேண்டுவது.
பாட்டளிசேர் பொற்கொன்றையோ பாரிலில்லாக் கற்பகமோ
வாட்ட முறாதவர்க்கு வாய்த்த மலரெதுவோ
பாட்டளிசேர் கொன்றையல்ல பாரிலில்லாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது.

சீடன் 2: ஆமா, அவர் பூவுலகை விட்டுப் பொன்னுலகம் சென்றது பற்றிக் கூறவில்லையே?

குரு : 1947ல் இறைபதமடைந்தாலும் அவர் எங்களைவிட்டு எங்கே சென்றார். அவர் எங்களுக்குள்ளே வாழ்கின்றார். தமது பேச்சு மூச்சு அனைத்தையும் தாம் வாழ்ந்த பகுதி மக்களுக்கும், கிழக்கு மாகாணத்திற்கும், ஏன் தமிழ், சைவம் போன்ற நல்லுலகத்திற்கும் தம்மை அற்பணித்தார். அப்படிப்பட்ட மகானின் வில்லிசை இதுவரை கேட்டு இரசித்த அனைவருக்கும்

பாட்டு : வில்லுப்பாட்டுக் கதை சொன்னோம்
விபுலனவன் சிறப்பு சில உரைத்தோம்
விருப்புடனே வந்திருந்து - விபுலன்
வில்லுப்பாட்டு கேட்டிருந்து
இரசித்தவங்க எல்லோருக்கும்
வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

1975 இலிருந்து பல மேடைகளில்
அளிக்கை செய்யப்பட்டது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. ஜீவசேவையே சிவசேவை

காப்பு

தந்தனத்தோம் என்று சொல்லியே வில்லினில் பாட
தந்திமுக விநாயகரே காத்திடையா - வந்து
சந்தங்களை இட்டுக்கட்டி, சந்தோசமாய் பாடுதற்கு
எந்நேரமும் எங்க நாவினிலே நீயிருந்து
சொந்தமதாய்ச் சுருதி தன்னைத் தந்துதவு சரஸ்வதியே
வந்தனம் செய்தோம் சிந்தையிரங்கி காத்திடு தெய்வமே.

அவையடக்கம்

வில்லுப்பாட்டுக் கேட்கவென்று
விருப்புடனே சபைவீற்றிருக்கு
எல்லையற்ற ஆற்றல்மிகு அறிஞர்கட்கும்
நல்லவர்க்கும் நாட்ட முள்ளவர்க்கும்
நன்றியுடன் எங்களது அவையடக்கம் - என்று
முருத்தாகட்டும் முதல்வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

பக்க பாட்டு 1:

வில்லுப்பாட்டு, வில்லுப்பாட்டு எங்கிறீங்க. அந்த வில்லின்
பெருமை பற்றிக் கொஞ்சம் சொல்லுங்க குருவே.

குரு: காளியம்பாள் கையிலும் வில்லு
(பாட்டு) காண்டிபனார் கையிலும் வில்லு
மன்னன் இராமன் கையிலும் வில்லு
பாண்டவர்க்கு நீதி படைத்ததும் வில்லு
ஏழுநிறமாகி வானில் எழும்பும் வில்லு
தாரையாக பொழிமழையை தருவதும்வில்லு
பொங்கிவரு துன்பதுயர் போக்குமிந்தவில்லு
இன்னலிட ரத்தனையு மறுத்தெறியும்வில்லு
ஆண்டவனை வேண்டிவரமடையும் பாட்டுவில்லு
அதுதானன்று,
பாண்டிமன்னன் மடியினிலே பிறந்ததிந்தவில்லு
வில்லின் பெருமை சொல்ல கேட்டீரோ.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பக்க பாட்டு 2:

வில்லும், வில்லுப்பாட்டுப் பிறந்த கதையும் சொல்லக் கேட்டுள்ளம் மகிழ்கிறது குருவே.

பக்க பாட்டு 1:

ஆமா, இன்றைக்கு, இங்க, நீங்க வில்லிசைத்து யாருடைய கதை சொல்லப் போறீங்க

பக்க பாட்டு 2:

இதிலென்ன சந்தேகம், இப்ப எல்லாம் ஸ்பெசல், இம்சையரசன் 23ம் புலிகேசி கதைதானே! அதுதானே குருவே.

பக்க பாட்டு 1:

வாயக்கழுவு சிவபூசைக்குள்ள கரடிக் கூத்து மாதிரி. இடம், பொருள், ஏவல் எதுவும் உனக்குத் தெரியாது. நீங்க சொல்லுங்க குருவே.

குரு : இன்றைக்கு சீவன்களுக்குச் சேவை செய்த ஒரு ஜீவகாருண்யருடைய கதை சொல்லப் போகிறேன்.

பக்க பாட்டு 2:

எனக்குத் தெரியும். இன்றைக்கு சீவன்களுக்கெல்லாம் சேவை செய்வது போதைவஸ்து தானே. நல்லாரிக்கும் சொல்லுங்க குருவே.

பக்க பாட்டு 1:

அறிவிலாதவனே! அடக்கி வாசி.

பக்க பாட்டு 2:

சரியாய் சொன்னாய், நான் அறிவில் சூரியன்தான்.

பக்க பாட்டு 1:

அடடா! அறிவு இல்லாதவனே என்று சொன்னேன்.

குரு : உங்களுடைய சண்டையை முதலில் நிறுத்துங்க.


noolaham.org | aavanaham.org

பக்க பாட்டு 2:

எல்லோரும் சண்டைய நிறுத்து! சண்டைய நிறுத்து எண்டுதான் சொல்லுறாங்க. ஆனா, லோகத்தில் சண்டதான் நிண்ட பாடில்ல,நீங்க சொல்லுங்க குருவே.

குரு : எல்லா சீவன்களையும் அடியார்களாக ஏற்று, அவர்களுக்கு சேவைசெய்த "இளையான்குடிமாற நாயனார்", தொண்டின் சிலவற்றைச் சொல்லப் போகிறேன்.

பாட்டு : இளையான்குடி ஊரில் வேளாளர் குலத்தில்
களையான குடும்பத்திலே மேலான குணத்தில்
மாறநாயனார் பேறாகத் தோன்றி
கருணையதோடு காருண்யமும்
அருள் நிறைவான அன்புள்ள மதுவும்
அன்பேயுருவான அடக்க வொடுக்க
சொல்லினிமையது கன்னலை யொக்கும்
செயலின் திறனதுவோ இமயத்தை எட்டும்
இப்படியான சிறப்புடைய நாயனார்,
"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்வர்"

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்
வீணே உண்டு களிப்போரை நிந்தனை செய்வோம்"
என்பதற்கு இலக்கணமாக, இலட்சணமாகக் கொண்ட அறவழி நிண்டு, அதில் பெரும் செல்வத்தை அடியார்களுக்கு அமுதளித்து அகமகிழ்வதிலே இளையான்குடி மாறனார் இன்புற்று வாழ்ந்தார்.

பக்க பாட்டு 2:

அதுசரி குருவே, அதென்ன "அறவழி நிண்டு' என்று சொன்னீங்க, அதுதான் இந்த மண்டுக்கு விளங்கல்ல.

பக்க பாட்டு 1:

இப்பவாவது, உண்மையை ஒப்புக்கொண்டாயே.

குரு : அறவழி என்பது, தருமமான முறையில், பிறருக்கு


noolaham.org | aavanaham.org

துயரிழைக்காது, சரியான முறையில் கடமைகளைச் செய்கின்ற முறைமையைக் குறிக்கும்.

பக்க பாட்டு 2:
இப்பபுரியிது! தூய்மையான, சுத்தமான முறையில் தொழிலைச் செய்ய வேணும்.

பக்க பாட்டு 1:
இப்பதானே எதிலயும் தூய்மையில்ல, சுத்தமில்ல, மிளகில பப்பாசிக் கொட்ட கலக்கிற, அரிசில கல்லக்கலக்கிற, தேனுல சீனிப்பாகெண்டு அடுக்கிக் கொண்டே போகலாம்.

பக்க பாட்டு 2:
மேலமேல, அடுக்கிக் கொண்டுபோனா முழுவதும் விழுந்து, வீணாகத்தான் போகும்.

பக்க பாட்டு 1:
உன்னைப் போல! ஆமா! குருவே, வீட்டுக்கு வரும் எல்லாருக்கும் உபசாரமும், பசியார உணவுமளிப்பாரா? குருவே.

குரு : கருணையென்ற உள்ளமன்றி வருணம் பார்த்து அழைப்ப வரல்ல, வருமடியாரனைவரையும் வரவேற்று உளம் களித்து மேற்று.

பக்க பாட்டு 2:
எப்படி? எப்படி? உபசரிப்பார் குருவே?

குரு (பாட்டு) :

அடியவரை எதிர்கொண்டழைத்து எதிர்கொண்டழைத்து
அடிதொழுது நன்குவரவேற்று நன்குவரவேற்று
படிமுறையா பாதம்கழுவி பாதம்கழுவி
துணிகொண்டு துறைத்திடுவார் துறைத்திடுவார்
அமர்வதற்கு ஆசனமளித்து ஆசனமளித்து
அறுசுவைப் போசனமளிப்பார் போசனமளிப்பார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாக நால்வகையுணவை நால்வகையுணவை
அன்போடு அவரளிப்பார் அவரளிப்பார்.

பக்க பாட்டு 2:

அறுசுவை, நால்வகை உணவென்றால் என்ன குருவே.

பக்க பாட்டு 1:

அதெல்லாம் உனக்குச் சொன்னா விளங்காது. திண்டுற மட்டும்தான் விளங்கும்.

குரு : அறுசுவையுணவு என்பது, தித்திப்பு, கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு, உண்ணப்படுவது, தின்னப்படுவது, நக்கப்படுவது, பருகப்படுவதுவே நால்வகையான உணவுகளாகும்.

பக்க பாட்டு 2:

அப்ப, எல்லாருக்கும்?

குரு : அப்படியல்ல, அவரவர்கள் விருப்பப்படியான உணவு வகைகளைத் திருவமுது செய்திடுவார்.

பக்க பாட்டு 1:

இது வல்லவோ ஜீவகாருண்யம்.

பக்க பாட்டு 2:

எச்சிக் கையால, காகம் விரட்டாத, பச்சோந்திகளாக மனிதர்கள் வாழுகின்ற போது, இப்படியொரு நாயனாரலதான், இடைக்கிடை மழை பெய்யுது போல!

குரு : இத்தகைய ஜீவவன்பினால், அவருடைய தினந்தோறும் மகேசுர பூசைப்பலத்தினால்,

பாட்டு : குவிந்ததே செல்வமது குபேரனுக்கு ஈடாக
குலையாதே மனத்தே நிலையாகத் தான்நிறுத்தி
வழுவாது வரும் அடியவர்க்கு அமுதளித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நழுவாது நாள்தோறும் நன்மைகள் தான்செய்து.
மக்கள் தொண்டையே மகேசன் தொண்டாயேற்றவரின்
மனதறியவே யிறைவன் திருவுளமது கொண்டு
குறைய வைத்தார் செல்வமதை படிப்படியாகவேதான்
வறுமையுற வழிவகுத்து வருந்திடவே செய்தனரே.

பக்க பாட்டு 2:
ஐயோ பாவம்! அப்படிப்பட்ட வருக்கா! இறைவன் இப்படிச் செய்தார்.

குரு : வறுமை வரும்படி அருளினார். அதனால் செல்வந்தான் சுருங்கியது. நாயனாரின் மகேசுர பூசையில் பதிந்த மனம் சுருங்குதலின்றி, தமது நிலபுலமெல்லாம் விற்று, இறுக்கத்தக்களவு கடன்களை வாங்கியும், தான் செய்த திருப்பணியைத் தளராது செய்து வந்தார்.

பக்க பாட்டு 1:
அடா கடவுளே! எந்தக் காலத்திலயும் எல்லாரையும் ஏய்த்து, நிலபுலங்களப் புடுங்கிற வங்களத்தான் கேள்விப்பட்டிருக்கம்.

பக்க பாட்டு 2:
கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன் என்று கடன்ட கொடுமை தெரிந்தும் இவர் இப்படி புத்தி கெட்டு நடக்கலாமா?

குரு : அதுமட்டுமல்ல இன்னும் மேலும் துன்பம்

பாட்டு : அன்று முழுவதும் மழைபொழிய - தின்ன
அன்னமின்றிக் களைப்படைந்து
என்ன செய்வதென்றறியாது - களைத்து
சொல்ல வழியின்றி தூங்கயிலே.
தள்ளாத வயதோடு பொல்லூன்றி - ஆடி
அல்லலுற்று மழையில் நனைந்து
மெல்லக் கதவைத் தட்ட - நாயனார்
துள்ளிக்குதித்து எழுந்தாரே.


noolaham.org | aavanaham.org

பக்க பாட்டு 2:

அந்த இருட்டில தள்ளாடி வந்த பொல்லாத மனிதர் யார் குருவே! அவரு!

குரு: ஓர் அடியார்தான். உடனே தப்பட்ட தொப்பட்டமாக நனைந்த அடியாரைத் தலைதுவட்டி இருக்கையளித்த பின், மனைவியிடம், எம்பசியைப் பொறுத்துக் கொள்ளலாம். இவர் பசிபோக்க என்ன வழி என்று வினவினார். அதற்கு மனைவி

பாட்டு : நேரமும் இரவாகி நெடுநேர மாச்சுதே
வேறெவரு முதவவழியு மற்றுப் போச்சு
பகல் வயலில் விதைத்த நெல்லையெடுத்துமே
வாருங்கள் வேறு வழி தெரியவில்லை என்றாள் மனைவி.

குரு : காரிருள் ஏகி கடுகியே அள்ளி வந்தார், விதைத்த நெல்லை வாரி, முளைத்த நெல்லை வறுத்து அரிசியாக்கி, ஆக்கினால் அன்னம் அரைநொடியில், நாட்டியிருந்த கீரை முளைகளைப் பிடுங்கி, கறிசமைத்து விட்டு அடியாரை எழுந்தருயச் செய்ய.

பாட்டு : உண்பதற்கு அன்னம் சமைத்து விட்டோமையா
உண்டு களைதீர்ந்து உறங்கு மெய்யா
காக்க வைத்த குறைகளைந்து வாருமையா
நீக்கமற நின்தாள் போற்றி போற்றியையா என்று துயிலெழுப்ப

பக்க பாட்டு 2:

துயிலெழுப்ப.

குரு (பாட்டு) :

அடிமுடி தேடியன்று திருமாலோடு பிரம்மன்நின்றும்
காணாத சோதி தன்னை கண்டனரே
சிவகாம வல்லியோடு சிவனிடப மேறி
மண்ணுயிர்க் கீர்ந்தசேவை மாண்புற வைத்தது என்று சிவன் காட்சி கொடுத்து.

குரு : நல்லோர்க்கு வறுமையைக் கொடுத்தல் அவர்கள் நயத்தலுக்கும்,


noolaham.org | aavanaham.org

அந்நயம் இறுதியிலே பலிக்கும் அதையறியாது புண்ணியம் செய்த எம்மை நோதல் பழுதாகும் என்பதை மண்ணோர்க் குணர்த்தவே இந்த நாடகம் என்று கூறி வாரிவரமளித்து மறைந்தார்.

பக்க பாட்டு 2:

சீவன் சேவையே சிவசேவை என்பதை எவ்வளவு அழகாக உணர்ந்து கொண்டோம் குருவே.

பக்க பாட்டு 1:

உலகிலே எல்லோரும் தன்னைப்போல் பிறரை, இந்த நாயன்மார் போல் நேசித்து, போசித்தால், சாந்தி, சமாதானம் தானாகவே தளைத்தோங்கு மென்பதில் ஐயமில்லைக் குருவே.

குரு : ஆமாம். எல்லோரும் சீவராசிகளை நேசித்து, அன்போடும் அறநோடும் நடந்து, நாட்டில் அமைதி, சுபீட்சமுண்டாக வாழ்வோமாக.

பாட்டு: விருப்புடனே வந்திருந்து
வில்லுப்பாட்டு கேட்டிருந்த
உங்களுக்கு எங்களது
வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

1976ம் ஆண்டு தேசிய மட்டத்தில்
1ம் இடம் பெற்றது


noolaham.org | aavanaham.org

## 3. ஞானவிளக்கு

காப்பு

சொல்லினிய செந்தமிழ் பூக்கள் இணைத்து - மாலை
வல்லவை கணபதிக்கு நாங்க தொடுத்து
வெள்ளைக் கமலத்தில் வீணை மீட்டிருக்கும் - அன்னை
கல்விக்கதிபதி கலைவாணி பாதம் துதித்து
வில்லிசைத்துப்பாட வந்தோம் நல்ல கதையை - நீங்க
உள்ளமதில் பதிவு செய்வீர் நல்ல முறையில்.

அவையடக்கம்

தந்தனத்தோம் தந்தனத்தோமென வில்லிசைத்து
சந்தோசமாய்ப் பாடவந்தோம் முங்களிடத்தில்
ஆண்டவனே நாங்க பாடவரம்தா - வந்து
அழகுடனே இனிமையாக பேசவரம்தா
கற்றவர்களே! உயர் வுற்றவர்களே!
மற்றவர்களே! நற்றமிழ் கற்றவர்களே!
நாங்கள் நவின்றோம் நல்லவணக்கம்!
அன்பு வணக்கம்! ஆசைவணக்கம்!
அனைவருக்கும் எங்க நேசவணக்கம்!
வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

சீடன் 1: நீங்க சொல்லின் செல்வனையா! செந்தமிழ் சிற்பியையா!

சீடன் 2: உமக்கு தெரிந்த வசனத்தை ஒப்புவித்து விட்டாயா?

சீடன் 1: அவமானம்! அவமானம்! குருவிற்கே அவமானம்!

சீடன் 2: வெகுமானம்! வெகுமானம்! நீங்க பேசாதிருப்பதே குருவிற்கு வெகுமானம்!

குரு : சீடர்களே இன்று அகிலம் போற்றும் ஆசிரியர் தினம் கொண்டாடக் கூடியிருக்கும் இவர்களுக்கும், உங்களுக்கும், ஆசிரியர் ஞானவிளக்கு ஞானேந்திரனின் கதையை இவ்விடத்தில் சொல்வது சாலவும் பொருந்துமென நினைக்கின்றேன்.


noolaham.org | aavanaham.org

சீடன் 1: அலாவுதீனும் அற்புத விளக்கும் கேள்விப் பட்டிருக்கன். இது என்ன புதுவிளக்கு! ஞானவிளக்கு! ஞானேந்திரன் என்ர பேரே ஞானோதயம்! என்ர ஞானத்துக்குப் பிடிபடாம எங்க மறைஞ்சி கிடந்தது இந்த விளக்கு.

சீடன் 2: நீங்க ஞான சூனியம்! உங்களுக்கு நல்ல விடயங்கள் எண்டைக்குத்தான் புரிஞ்சிருக்கு. நீங்க சொல்லுங்க குருவே!

குரு : ஆசான் ஞானவிளக்கு அவன்
(பாட்டு) அருமை, பெருமை கேளும்
ஆரல் எனும் கீரையோடை
இரு மருங்கும் வளர்ந்து
பூத்துச் சொரிதேன் ஓடி
மட்டு வாவியிலே கலக்க
பூரிப்போடு மீனின முண்டுபாட
ஆடிடுமே வாவிய தாடியசைந்து
ஆரையூரா ராடும் கூத்துக்கிசைந்து
இவ்வாராக மட்டுநகர் ஆரையூர் அழகுபதி.

சீடன் 1 : எனக்குத் தெரியுமே மட்டக்களப்பு ஆரையம்பதி

சீடன் 2: அதிகப்பிரசங்கி! மட்டு என்பது தேன்பூவினம் சொரிதேன் நகர்ந்து ஆரையெனும் ஓடையில் ஓடி மட்டுவாவியில் கலந்து மீனினம் உண்டு கானம்பாடும்.

குரு : சரியாகச் சொன்னாய் சீடா! மட்டுநகர் ஆரையம்பதி, தேன்நகரும் (அசைந்தோடு) இனிமையான ஆரையம்பதியிலேதான் ஆசான் ஞானேந்திரன் பிறந்தான். தாய்க்குத்தலை மகனாகவும், மூன்று உடன் பிறப்புக்களை உடையவனாகவும், இளவயதிலே தகப்பனையிழந்து, குடும்பச்சுமை தாங்கியாகவும் இடிதாங்கியாகவும் விடாமுயற்சியால் கற்று, உயர்வுற்று ஆசிரியராக கடமையாற்றிய ஓர் அகல் விளக்குத்தான் ஞானேந்திரன்.

சீடன் 1: ஐயையோ! நீங்க சொல்லுறதக் கேட்டா சரியான கஷ்டப்பட்டிருப்பாரு போல.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன் 2 : என்னப்போல, துன்பத்தின் பிடியில் சிக்கிசின்னா பின்னாமாயிருப்பாருபோல.

சீடன் 1: என்ன நீங்க, நான் எதைச் சொன்னாலும், சினிமாவில பாவமந்த செந்திலக் கவுண்டமணி வம்புச்சண்டைக் கிழுத்து அடி, உதை கொடுக்கிற மாதிரி என்னோட சண்டைக்கு வாரீங்க.

குரு : உங்கட சண்டைய பிறகு ஓர் ஓரமாக வைச்சிக்கங்க! இப்ப கதையைச் சொல்ல விடுங்க இளமையிற் கொடுமை வறுமை. அதனைத் தமது வாழ்விலே நிதர்சனமாகச் சந்தித்து பட்டறிவு பெற்றதனால், ஞானேந்திரன் வாழ்வில் மற்றவர் களுக்கு அத்துன்பம் வரக்கூடாதென்ற குறிக்கோளுடனே, வாழ்ந்த தனால் தமது குடும்பத்தை சகோதரங்களை வீட்டில் நல் வழிப்படுத்தியது போல, பாடசாலைகளிலும் மாணவர்களுக்கு தாய்க்குத் தாயாக, தந்தையாக, நண்பனாக ஏன் கடவுளாக கூட இருந்து அவர்களின் வாழ்க்கையை உயர்த்திவிட்ட உத்தம ஆசிரியன் அவன்.

பாட்டு : "துள்ளித்திமிருமெந்த, துடுப்பான பிள்ளைகட்கும்
பள்ளிப் பாடங்களை, பாயாசமா யினிக்கவைத்து
அள்ளியறிவதூட்டும், அதிசிறந்த ஆசானவன்
நல்லறிவாளர்களாய், நாட்டினிலே சிறந்துவாழ
எல்லோர்க்குமறிவூட்டி, உயரஏற்றிவிடு ஏணியவர்
கல்விக்கடலைகடக்க, கைகொடுக்கும் தோணியவர்
நல்லவற்றைப்பகுத்தூட்டி, நலம்கொடுக்கும் ஞானியவர்"

இப்படியாக, பல பாடசாலைகளில் கல்வி கற்பித்து எண்ணற்ற மாணவர்களின்வாழ்க்கையை திண்ணமுடன் உயர்த்தி, சமுதாயத்தின் மடமையென்ற இருளகற்றி ஒளிகாட்டிய ஒளிவிளக்காக கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, பொறுமை, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, மற்றவர் சொல்வதை செவிமடுக்கும் தன்மை என்ற பூமியை மிஞ்சிய பொறுமைசாலியாக மற்றவர் வாழ்வுக்கு வழிஅமைத்த சிகரமாவார் ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன் 2: பொறுமை என்பதை மிக அழுத்தமாக கூறியது அனைத்து ஆசிரியர்களுக்கும் பொருத்தம் என்பதற்காகவா குருவே.

குரு : உண்மை, உண்மையிலும் உண்மை. ஆசிரியர் என்பவர்களைச் சமூகம் ஏதோ உரு கிள்ளுக் கீரையாகத்தான் மதிப்பீடு செய்கிறதும், இக்கால மாணர் சமூகம் நக்கல், நையாண்டி, கிண்டல் என வதைப்பதும், அதிபர்களின், அதிகாரிகளின் அதிகார அடக்கு முறைகளும் அவர்களை அழுத்தத்துக் குள்ளாக்கி விடுகின்றன.

பாட்டு: "எத்தனையோ பிரச்சனைகள் பிரச்சனைகள்
எண்ணற்ற சிக்கல்வந்தும் சிக்கல் வந்தும்
அத்தனைதடைக் கற்களையும் கற்களையும்
மிக்கநல்ல படிக்கற்களாய் படிக்கற்களாய்
தப்பறச் செப்பணிட்டு செப்பணிட்டு
கற்பித்து கட்டியெழுப்புவர் கட்டியெழுப்புவர்"

சீடன் 1: உண்மைதான், இந்த சமுகமோ, மாணவர்களோ ஆசிரியர்களை மதிக்கிறல்ல என்பது உண்மைதான்.

சீடன் 2 : அவங்க மதிக்காட்டியும், மிதிக்காம இருக்க வேண்டும். ஆசிரியப் பணியே அறப்பணி, அதற்கேற்ப தங்களை அர்பணித்த ஆசிரியர்களை அவமதிப்பது அவர்களை அவர்களே அவமதிப்பதாகுமில்லையா குருவே.

குரு : கல்விக்காரியாலயத்திற்கு ஒரு ஆசிரியர் தங்கள் சம்பள உயர்ச்சி சம்பந்தமாகவோ அல்லது வேறு கல்வி சம்பந்தமான விடயமாகவோ புதன்கிழமைகளில் மாத்திரம் வரவேண்டு மென்று சொல்லிவிட்டு, அவர்கள் அன்று சென்றால் அதிகாரிகள் இல்லை, அதட்டல்கள், மிரட்டல்கள் ஏன்வந்தாய், எதற்காக வந்தாய், உங்கள் கோவையில் அதுஇல்ல, இது இல்ல, பிறகுவா என்று ஆசிரியர் உள்ளத்தை கேள்விக்கணைகளால் உடைத்து விடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டு: கல்வித் திணைக்களம் போனால் - அங்கே
கதிரைகள் யாவுமே காலியாயிருக்கும்
புதன் கிழமையென்று சென்றால் - அப்ப
அவரில்லை இவரில்லையென்று சொல்லி
நாயாக, பேயாக எங்களை அலைச்சி - எங்க
வேலைமுடிக்காது வெறுத்திடச் செய்வார்.

சீடன் 1: ஓம் குருவே, இந்த சமுதாயம் வெளியில ஆசிரியரக் கண்டா, என்ன இண்டைக்குப் பாடசாலைக்குப் போகவில்லையா? என்று அதிகாரிகளுடைய தோரணையில கேட்பாங்க. அண்டைக்கு லீவு நாளாக இருக்கும். என்னமோ ஆசிரிய ரென்றால், 24 மணிநேரமும் பள்ளியில இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறது.

சீடன் 2: இப்பதான் உருப்படியான ஓர் உண்மையை சொல்லியிருக்கா. சில அதிகாரிகளுந்தான், ஆசிரிய ஆலோசகரும் தான் தங்க, தங்க கடமைகளை மறந்து ஆசிரியர்களின் திறமை, திருப்தியை ஜீரணிக்கமாட்டாது, எங்கயாவது எப்படியாவது ஒரு பிழையாவது பிடிக்கத் திரிவாங்க.

குரு : இப்படியாக, எத்தனையோ இடர்களை அனுபவித்து மற்றவர்களின் வாழ்வுக்கு வழிகாட்டி, தமது வாழ்வையே தியாகம் செய்து, பொருளாதாரத்திற் கூட முன்னேற்றமின்றி, பிறர் வாழ்வுக்காக ஒளி கொடுத்து உருகித்தமையழிக்கும் மெழுகுவர்த்திகளாக, பிறர்க்கு மணம் கொடுத்து எரிந்தழியுமூது பத்திகளாக, சூழலுக்கு வெளிச்சம் கொடுத்து தம்மை இருளாக்கும் ஞானவிளக்குகள்தான் ஞானேந்திரன் போன்ற ஆசிரியர்கள்.

சீடன் 1: ஏன் குருவே, இத்தகைய ஆசிரியர்களை மதித்து கௌரவிக்க மாட்டார்களா?

சீடன் 2: இத்தகைய ஆசிரியர்களை மதிக்க வேண்டும், கௌரவிக்க வேண்டுமென்றே, ஐக்கிய நாடுகள் சபையே ஒக்டோபர் மாதம் ஆறாந் திகதி ஆசிரியர் தினமாகப் பிரகடனப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தியிருக்காமே குருவே.

குரு : ஆண்டு தோறும் ஆசிரியதினம் கொண்டாடப்படுமிந்த நாளில், அன்று பிறர்க்கு ஒளியளித்து, தன்னொளியிழந்து, இன்று அதோ அந்த மூலையில் ஆசிரிய தினத்தில் தன்னைக் கௌரவிப்பது பெருமையிலும் பெருமை. எனது பிறவிப் பெரும் பயனை இன்று அடைந்து விட்டேனென்று, ஞான விளக்கென கண்கள் பிரகாசிக்கும் ஞானேந்திரனை வழிகாட்டியாகக் கொண்டு ஞானவிளக்கான ஆசிரியர்களை சமுதாயமே முன்னின்று சர்வதேச ஆசிரிய தினத்தில் அவர்களுக்கான மதிப்புக்களை அளிப்பீர்கள் என நினைத்து.

சீடன் 2: நினைத்ததோட குருவே, இன் நன்நாளில் இறுதியாக ஆசிரிய பெருந்தகை விளக்குகளை விளக்கி பாடலால் ஆசிரியர்களை பாராட்டி, முடிப்போமே குருவே.

குரு : நல்லது, கட்டாயமாக

பாட்டு : கல்வி அறிவூட்டுவதிலே - நல்ல
கலங்கரை விளக்கு
மங்களமாய் வாழவழிகாட்டு - மவரே
மங்காதமங்கல விளக்கு
குன்றாது மாணவர் குறைகள் - நன்று
என்றும் போக்கிடு குலவிளக்கு
சொக்கதங்கமான வாசான்கள் - எங்க
சொந்தமான சொர்ண விளக்கு
பொன்றாது புதுமைகள் போதிக்கும்
நன்றான வாசான் பொன்விளக்கு
விசேட தேவையுடை யோர்க்கும்
விசேட வழிகாட்டு விடிவிளக்கு
ஆசிரியர்கள் அனைவருமே - என்றும்
அணையாத அகல்விளக்கு
ஞானேந்திர ஆசிரியர் - ஒரு
ஞயமான ஞானவிளக்கு. ஆகிய அனைத்து ஆசிரியர்கள்
என்றும் புகழுடன் வாழ நாமும் வாழ்த்தி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்புடனே வந்திருந்து
வில்லுப்பாட்டை கேட்டிருந்த
நல்லவர்கள் அனைவருக்கும்
வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

1989ம் ஆண்டு ஆசிரியர் தினத்தில்
பாடப்பட்டு பாராட்டைப் பெற்றது

**4. சுத்தம் சுகம் தரும்**

தந்தனத்தோம் என்று சொல்லியே வில்லினைப்பாட - ஆமாம்
வில்லினைப்பாட வந்தருள்வாய் கலைமகளே
வந்தனங்கள் செய்து மகிழ்ந்தோம் - ஆமாம்
வந்தனங்கள் செய்து மகிழ்ந்தோம் - உன்
அருள்தந்து வாழ்த்த வேண்டும் கலைமகளே.

அப்பப்போய் ஆமாப்போய் அப்படிப்போடு
தானதந்தத்தோடு ஏழு சந்தங்களும் தாளங்களும்
பானை கும்மி உறுமி கட்டை குங்குமியோடு
ஓகோ! குங்குமியோடு
அத்தனையும் மேளத்தோடு
குங்கும் எனும் உடுக்குஒலி
குடத்தில் வரும் கேளுங்க
சதங்கை ஒலிச் சங்கீதம் வந்தனங்கள் செய்து மகிழ்ந்தோம்
குலுங்கு மிசை கேளுங்க
விதம் விதமாய் வில்லிசை
விளங்கு மினிய நல்லிசை
சங்கீதமே வில்லிசையாய்
தானொலிக்க கேளுங்க
வில்லுப்பாட்டுகதை சொல்லுவோம்
விளக்கமாகத்தான் சொல்லுவோம்
ஆண்டவனே தாண்டவனே
தாள ஞானம்தா
அழகுடனே பாடப்பேச
தக்க வரம்தா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு : சபையோர்களே மற்றும் இங்கு கூடியிருக்கும் குழந்தை குட்டிகளே.

சீடர் : ஆமாம்

குரு : பெரியோர்களே தாய்மார்களே

சீடர் : பாட்டிமார்களே

குரு : இந்த அருமையான சந்தர்ப்பத்தில

சீடர் : எறியாமலும்

சீடர் : கொட்டாவி விடாமலும்

சீடர் : நித்திரை கொள்ளாமலும்

குரு : இருந்து ரசிக்குமாறு மிக பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சீடர் : ஆமாம்.

குரு : இன்றைக்கு நாமெல்லாம் எதுக்காக கூடியிருக்கோம் தெரியுமா?

சீடர் : தெரியும் தெரியும் பக்கத்து வீட்டு அக்காவப்பத்தி தானே கதைக்க போரம்.

சீடர் : ஓம் ஓம் கூட்டம் கூடினாலே பக்கத்து வீட்டு அக்காட கதையும் அந்த நாடகம் எப்படி இருந்தது அதில என்ன புடவ கட்டி வந்தவங்க என்பத கதைக்கிறது தானே வேல.

குரு : சரி சரி நிப்பாட்டுங்க நாம இப்ப அதுக்கு கூடல உங்களுக்கு எல்லாம் சுகாதாரம் பற்றி சில விடயங்களை சொல்ல போறன்.

சீடர் : சுகாதாரம் என்டா என்ன என்று எனக்கு தெரியாதா? சாப்பிட்ட பின் கை கழுவுவது தானே சுகாதாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடர் : தண்ணீரை கொதிக்க வைத்து குடிப்பதும் சுத்தமான ஆடைகள் தானே சுகாதாரம்.

சீடர் : இது எல்லாம் எங்களுக்கு தெரியாதா? புதுசா நீங்க என்னத்த சொல்லப் போறீங்க?

குரு : ஓம் நீங்க சொன்னது எல்லாம் சரிதான். ஆனால் அது மட்டும் சுகாதாரம் இல்லை.

சீடர் : அப்ப வேறென்ன சுகாதாரம்

குரு : சுகாதாரம் என்பதற்கு - அம்மா
நல்லதொரு கருத்தினையே
வில்லினையே சொல்வதற்கு நாங்கள்
உங்கள் முன்னே வந்துள்ளோமே!
ஆமாம் உங்கள் முன்னே வந்துள்ளோமே
ஆமா உங்கள் முன்னே வந்துள்ளோமே.

சீடர் : நிப்பாட்டுங்க! அப்ப சுகாதாரம் என்றால் என்னென்று சொல்லுங்களேன்.

குரு : சுகாதாரம் என்றால் உடல் ஆரோக்கியம் மட்டும் சுகாதாரம் இல்ல. உடல், உள, சமூக ஆரோக்கியம் சேர்ந்ததுதான் சுகாதாரம் எனப்படும்.

சீடர் : அட நான் நினைச்சன் நோய் இல்லாமல் இருப்பதுதான் சுகாதாரம் என்று.

சீடர் : உடல், உள, சமூக ஆரோக்கியமா? அப்படி என்றால் என்ன?

குரு : அட அவசரப்படாதே நீ ஒரு அவசரக்குடுக்கை இப்ப அதத்தானே சொல்லப்போறன்.
நோய் இல்லாமல் இருப்பதுமே
நோய் இல்லாமல் இருப்பதுமே
மகிழ்ச்சியா இருப்பதுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியா இருப்பதுமே
ஒற்றுமையா வாழ்வதுமே
ஒற்றுமையா வாழ்வதுமே
உடல், உள ஆரோக்கியமே
உடல், உள ஆரோக்கியமே.

சீடர் : என்ன நோயில்லாமல் இருப்பது உடல் ஆரோக்கியமா?

சீடர் : என்ன மகிழ்ச்சியா இருப்பது உள ஆரோக்கியமா?

சீடர் : என்ன ஒற்றுமையாக இருப்பது சமூக ஆரோக்கியமா?

குரு : ஆமாம் இந்த மூன்று ஆரோக்கியமும் ஒருவரிடத்தில் இருந்தால் மட்டுமே அவர் முழுமையான சுகாதாரமுடைய மனிதனாக கருதப்படுவார்.

சீடர் : அப்படி என்றால் நீங்களும் ஆரோக்கியமான மனிதன் இல்ல.

சீடர் : ஓம் ஓம் நீங்க எப்பவும் மற்றவர்களத்தான் பாருங்க நாம எப்படி இருக்கம் என்பத மட்டும் பாக்காதீங்க.

சீடர் : சரியா சொன்னடா.

சீடர் : எனக்கு நோய் இல்ல. மகிழ்ச்சியா இருக்கன் ஆனா எங்க போனாலும் சண்டைதான் பிடிக்கிறன்.

சீடர் : அப்படி என்றால் உனக்கும் பூரண சுகாதாரம் இல்ல.

சீடர் : நான் எல்லோருடனும் ஒற்றுமையா இருக்கன், மகிழ்ச்சியாகவும் இருக்கன் ஆனால் எப்பவும் ஏதோ ஒரு நோய் வரும்.

சீடர் : அப்படி என்றால் உனக்கும் பூரண சுகாதாரம் இல்ல.

சீடர் : அப்ப இந்த சமூகத்தில யாருமே பூரணமான சுகாதாரத்துடன் இருக்க மாட்டார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடர் : இல்லடா எங்கட பக்கத்து வீட்டில சுப்புக்குட்டி அண்ணன் இருக்கார். அவர் மகிழ்ச்சியாகவும் எல்லோருடனும் ஒற்றுமையாகவும் நோயில்லாமலும் இருக்கார்.

குரு : அப்ப அவர்தான் முழுமையான சுகாதாரமுடையவர். அவரைப் போல் எத்தனை பேர் இருக்கிறார்கள். ஆனால் எல்லோரிடமும் உடல் ஆரோக்கியம் இருக்கும். உள ஆரோக்கியமமும் இருக்கும். ஆனால் சிலரிடம் சமூக ஆரோக்கியம் இருக்காது.

சீடர் : ஆமாம் இந்த சமூக ஆரோக்கியம் இல்லாமத்தான் நம்மட நாடு இப்படி சண்டையும் சச்சரவுடனும் இருக்கு.

சீடர் : டேய் வாயமூடு இதெல்லாம் நாம் கதைக்க கூடாது. இதெல்லாம் கதைக்க இருக்காங்க.

குரு : நிறுத்துங்க! இதக் கதைக்க நாம வரல கதைக்க வந்த விக்ஷயத்துக்குப் போவம்.
அம்மா ஒற்றுமை இல்லாமலே
இன்று நம் நாட்டினிலே
நிலை குளைந்து சீரளிந்து
செல்கின்றோமே இன்று நாங்கள்
செல்கின்றோமே இன்று நாங்கள்.

சீடர் : என்னப்பா இது ஆ! ஊ என்டா பாடத் தொடங்கிறீங்களே.

குரு : ஆமாம் நாம நம்மட விக்ஷயத்துக்கு போவம்.

சீடர் : அப்படி என்றால் இன்றிலிருந்து நான் ஒரு முழுமையான சுகாதாரமுள்ள மனிதனாக மாற முயற்சி எடுப்பேன்.

சீடர் : நீ மட்டுமள்ளாமல் அதனை இங்கிருக்கின்ற எல்லோருமே நினைக்க வேண்டும்.

குரு : அப்ப எல்லோருக்கும் நான் சொன்னது எல்லாம் விளங்கிட்டுத்தானே. ஆகையால இந்த சுகாதாரம் பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணக்கருவை நாம் ஒவ்வொருவரும் மனதில் நிறுத்தி வாழ்வில் உயர்வடைவோமாக என்று கூறி இவ்வில்லிசையினை நிறைவு செய்து கொள்கிறோம்.

வாழியவே பல்லாண்டு காலம் - இங்கு
வந்தவர் வராதவர் வாழியவே
பெரியோருக்கும் தாய்மாருக்கும் எங்கள் நன்றி
உரியதாக வாழிய வாழிய வாழியவே
ஆ! ஓ! ஆ! ஓ!
தலாங்கு தகிடதோம்

2001ல் சிறுவர் பாடசாலையில்
மாகாண மட்டத்தில் 1ம் இடம்பெற்றது.

## 5. ஒன்றே குலம் ஒருவனே தேவன்

காப்பு

தந்தனத்தோம் என்று சொல்லியே - வில்லினில் பாட
தந்தனத்தோம் என்று சொல்லியே - வில்லினில் பாட
வந்தருள வேண்டும் வல்லவை கணபதியே
நல்லவரம் தந்தருள வேண்டும் குணநிதியே.

அவையடக்கம்

குலம் அறிவோம் - நல்ல
குணம் அறிவோம்
கொண்ட பிடிவாதம் அறிவோம் - ஆமா
கொண்ட பிடிவாதம் அறிவோம்
மனம் அறிவோம் - உள்ள
மகிமை அறிவோம்
பாடிடும் வகை அறியோம் - ஆமா
நாங்கள் அறியோம்
வந்திருக்கும் சபையோரே வணக்கம்! வணக்கம்!
தந்திடு மாதரவுக்கும் வணக்கம்! வணக்கம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன் 1 : ஆமா, குருவே இன்று வில்லிசைத்து சொல்லப்போகும் கதையின் தலைப்பு என்ன?

சீடன் 2 : இது தெரியாதாக்கும், இப்ப எங்கு பார்த்தாலும் கேட்டாலும் 20க்கு 20 தான்.

சீடன் 3 : 20க்கு 20இல "மாலிங்க" விக்கட் விளாசிற மாதிரி விளாசாத.

சீடன் 1: "மாலிங்க"ய அதாரு?

சீடன் 2 : கண்ணாக் காட்டுக்குள்ள கொக்கு எச்சம்போல தொங்குற முடிக்காறன்.

சீடன் 3 : சத்தம் போட்டுக் கதையாத! அதுவும் இப்பத்தைய முடி மை! நாகரீகம். மாலிங்க ஆதரவாளர்கள் உனக்கு விளாசிடு வாங்க.

சீடன் 1 : இவனுகளுக்கு எப்பவும் விளையாட்டு புத்திதான். அதுதான் விளையாடுறானுகள். நீங்க சொல்லுங்க குருவே.

குரு : "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" கதைகள் உண்டு. அதில ஒரு கதையை இங்க சொல்லுறன்.

பாட்டு : தங்க நகரென்று ஒரு ஊராம்
திங்கள் ஒளியாக அதன் பிரகாசம்
வங்கக் கடலொலி சொல்லும்
மக்கள் மனமது வீசும் மலரது - வாசம்.

சீடன் 1 : அடடா! அழகான பிரதேசம் நல்ல உள்ளம் கொண்ட மக்கள்.

சீடன் 2 : என்ர மனம் போல "பால் போல வெள்ளை".

சீடன் 3 : நீயே தார்ரோட்டுப் போல கறுப்பு மனம் அமாவாசை இருட்டப் போலதான் இருக்கும்.

குரு : ஆமா! இருட்டுத்தான்! அந்த இயற்கை எழில் சூழ்ந்த பிரதேச


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலகத்துக்குள்ள உயர்பதவி வகிக்கும் அதிகாரி கோபாலன். பிராமண குலத்தவராம்.

பாட்டு : வேதாந்தியென்று தன்னை நிறம் காட்டி
தீண்டாமையென்ற தீயால் மனம் வாட்டி
மக்கள்சேவை மகேசன் சேவையென மதியாது
எப்பொழுதுமே எரிந்து விழுந்து
தப்பான தாளங்கள் தன்னையே போட்டு
உடன் வேலை செய்வோரை உறுட்டி - மிரட்டி
குலம்என்ற வலுவற்ற ஆயுதம் தாங்கி
நலமற்ற செயலாலே நலிவுறச் செய்வார்!

சீடன் 1 : இந்தக் கணணியுகத்திலே இப்படியொரு கயமை உள்ளமுள்ளவரா?

சீடன் 2 : சூறாவளி, சுனாமி, பூமியதிர்ச்சியெல்லாம் குலம் பாத்தா, சாதிசமயம் பாத்தா அழித்தது.

சீடன் 3 : மனிதனைப் படைத்தவன் இறைவன். குலத்தை வகுத்தவன் மனிதன். அதிலயும் தன்னை உயர்த்தி, மற்றவர்களைத் தாழ்த்துபவன் பிராமனன் என்ற குலத்திலேறும் வேதாந்தி.

குரு : அந்த அலுவலகத்தில் அவரோட பிரிவில் வேலை செய்யும் கிறிஸ்த்தோப்பர் கிறிஸ்தவர் நடுத்தரக் குடும்ப குறைந்த சாதியான எழுதுவினைஞர். இராமன் தாழ்த்தப்பட்ட குடிமரபில் தோன்றிய ஒரு சுத்திகரிப்புத் தொழிலாளி. இருவரும்,

பாட்டு : கடமைகள் செய்வதில் நிறைவானவர்கள்
கண்ணியம் மிக்கதிண்ணிய மனத்தர்
எண்ணியபடி எல்லோர்க்கும் உதவிடுவர்
உள்ளத்தால் மக்கள் உயர்வாய்மதிப்பர்
உயர்ந்தோர் தாழ்ந்தோரென்ற பாகுபாடின்றி
மலர்ந்த முகத்தோடு மறுதலிப்பின்றி
தீட்டென்று அதிகாரி கூப்பாடுபோடுமுன்பு
நாட்டமுடன் அனைத்துக் கடமைகளையும் முடிப்பர்.


noolaham.org | aavanaham.org

சீடர்கள் : தந்தனன னாதந்த னாதந்த னானா
(தரு) தனனா தனாதந்த னாதந்த னானா
தந்தனன னாதந்த னாதந்த னானா
தனனா தனாதந்த னாதந்த னானா

குரு: இப்படியான குணநல இயல்புள்ள அதிகாரியின் கொடூர மனப்பாங்கும், மற்றைய நல்மனத் தொழிலாளர்களின் "செய்யும் தொழிலே தெய்வம்" என்ற நோக்கும் போக்கும், அக்கிராமிய மக்களின் தேவைகளை சீர்செய்து கொண்டிருந்தது. அந்த இரு சேவகர்களும் நாள்தோறும் திட்டு வாங்காத நாளில்லை. சகிப்புத் தன்மையுடன் எதைச் செய்தாலும் குற்றம்! குற்றம்! என்ற கொடூர வார்த்தையால் குத்திக்காட்டப்பட்டுக் கொண்டேயிருந்தார்கள்.

சீடன் 1 : வேண்டாப் பொண்டாட்டி, கைபட்டாலும் குற்றம், கால்பட்டாலும் குற்றம் என்பாங்க.

சீடன் 2 : நீயோ கட்டப் பிரமச்சாரி, பாட்டு வாய்ச்சா கிழவியும் பாடுவர் என்ற மாதிரியிருக்கு.

சீடன் 3 : ஆமா, குருவே இவர் எப்படிப்படிச்சி வந்திருப்பாரு! எனக்குச் சந்தேகம்தான். மற்ற மாதிரித்தான் வந்திரப்பாரு போல.

சீடன் 1 : உனக்கு எதில? எப்ப? எப்படிச் சந்தேகம் வரவேணுமென்றே தெரியாது. எல்லாம் காலம் தான்.

சீடன் 2 : அவருக்குத் தெய்வ நம்பிக்கையுமில்லையா? "அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கு மென்பார்களே"

சீடன் 3 : அடே அறுப்பான் "எப்பவும் வாளின்றி அறுப்பதில் நீ வல்லவன்தான்"

சீடன் 1 : செயலக அதிகாரி எடுத்ததுக் கெல்லாம் கோபாலன் பரன்தாமா! பரன்தாமா! சிவசிவா! கந்தா கடம்பா என்று தெய்வங்களின் பெயரையே உச்சரிக்கிற உனக்குத் தெரியாதா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு : தெய்வம் பலபல சொல்லிப் - பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்
உய்ய தனைத்திலும் ஒன்றாய் - எங்கும்
ஓர் பொருளானது தெய்வம். என்று பாரதி பாடியிருக்கார். கோபாலன் படித்திருந்தும், இறுமாப்பு அவருக்கு இடம் கொடுப்பதில்லை. அது மட்டுமல்ல, "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்று கூறும் புறநானூறு புரிந்தவர்தான்.

சீடன் 1 : இப்ப கணணியகத்தில இன்ரநெற், ஈமெயில் என்றும், சந்திரனில காலடி வைத்து இப்படியொரு மனிசனா.

சீடன் 2 : நீங்க மனிதரில் பல நிறங்கள் என்று கேள்விப்படவில்லையா? அதில ஒன்றுதான் கோபாலன் போல.

குரு : சாதி சமய மென்றும்
தாழ்ந்தோர் உயர்ந்தோ ரென்றும்
நீதி முறை தவறும்
நீசர் இன்னுமுண்டு இப்பாரினிலே
நான்கு வருன மென்றும்
தாங்கள் பிராமன ரென்றும்
ஓங்கிப் பறை முழங்கி
ஒடுக்கி யடக்கிடுவார் மற்றவரை
கீழோரும் மேலோராவார்
மேலோரும் கீழோராவார்
தாம்செய்யும் செயலென்று
புரிபவரே உயர்வானவர்.

குரு : உயர்ந்தோராவதும், தாழ்ந்தோராவதும் தாங்கள் செய்யும் செயலினாலேயேயென்று தர்ம சாஸ்திரங்கள் கூறுகின்றது. இதை யார்தான் புரிந்து கொள்ளுகின்றார்கள் இன்று.

சீடன் 1: பட்டால்தான் தெரியும் முட்டாளுக்கு, இந்தப் பிராமணக் கொடுக்குக் கோபாலன், ஒரு நாளைக்குப் பட்டுத்தான் தீருவான்.


noolaham.org | aavanaham.org

சீடன் 2 : இவரு பெரிய விஸ்வாமித்திரரு சாபம் கொடுக்காரு சாபம். இப்படிப் பட்டவனுக்கெல்லாம் இருட்டடி கொடுத்தால்தான் திருந்துவானுகள்.

குரு : அவசரப் படாதீர்கள் கதையைக் கேளுங்கள்.

சீடன் : முந்திரிக் கொண்ட மாதிரி முந்திடு வாங்க. நீங்க சொல்லுங்க குருவே.

குரு : கோபாலனொரு நாள் தான் சாப்பிட்டுக் கொண்டிருக்கக்குள்ள ஏனைய அலுவலர்கள் ஏதோ கேட்க வர ஐயோ! அபச்சாரம்! அபச்சாரம்! தீட்டு! தீட்டு! என்று துப்பாக்கி வேட்டுக்கள் மாதிரி சத்தமிட்டான், சாப்பாடு தொண்டையில் சிக்க.

சீடன் 1 : தொண்டையில் சிக்க! சொல்லுங்க குருவே.

குரு : எப்படிச் சொல்லுவேன் என்னென்று சொல்லுவேன்
(பாட்டு) எப்படிச் சொல்லுவேன் என்னென்று சொல்லுவேன்
கண்களிரெண்டும் சொருகி நிற்க
கால்கையெல்லாம் சோர்ந்து கிடக்க
பிளந்துவிட்ட அண்டாபோல வாயதுவும் திறந்திருக்க
தொண்டைக்குழி மாத்திரமே
மேழும்கீழும் துடிதுடித்துப்பதைபதைக்க.

சீடன் 2 : நாங்க காணல்ல இந்தக் கண்கொள்ளாக் காட்சிய.

சீடன் 1 : வாயமூடு! பிறருடைய துன்பத்தில இன்பங்காண நினைப்பது தவறு. கோபாலனுக்கும் உனக்கும் பிறகு என்ன வித்தியாசம். பிறகு என்ன நடந்தது குருவே.

குரு : அந்த அமளி துமளியில ஏனைய அலுவலக ஆண்களும், பெண்களும் ஓடிவந்து கிட்டப் போகப் பயந்து எட்டி நின்றே ஏங்கித் தவித்தனர். எப்படியென்றாள்.

குரு : ஐயையோ! ஐயாவே
அட்டகாசத் துரையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கம்போல் கர்ஜிக்கும் - எங்கள்
சீமைத்துரை ஐயாவே
கிட்டவந்து தூக்கிவிட
ஒட்டவில்லை எங்கள்மனம்
தொட்டுத் தூக்கிவிட்டால்
தீட்டாகாதோ உங்களுக்கு
பல்சாதியாச்சே நாங்களையா
பாவிநாங்களென்ன செய்வோமையா? என்று உள்ளன்போடும்,
ஆனால் உதவி செய்யப் பயந்தும் நின்று தவித்தனர்.

சீடன் 2 : அதுதானே, தூக்கி உதவினா தீட்டென்று திட்டுவாரே. பிராமனர் அல்லவா?

சீடன் 1 : அப்படிப் பாத்திருக்க இதுவா சமயம். ஆபத்துக்குப் பாவமில்லதானே.

குரு : ஆமா! அனைவரையும் விலக்கி விட்டு கிறிஸ்தோப்பரும், இராமனும் தூக்கி, இராமன் மடியில் வைத்துத் தாங்கிப் பிடித்திருக்க, கிறிஸ்தோப்பர் ஓடிச்சென்று முச்சக்கர வண்டியொன்றைப் பிடித்து வந்து இருவருமாகத் தூக்கி ஏத்தி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல, மற்றவர்கள் அவரின் வீட்டுக்கு விடயத்தைக் கையடக்கத் தொலைபேசி மூலம் கூறினர்.

சீடன் 2 : இதுதான் மனிதாபிமானம் இப்படி உயர்ந்த மனிதனின் பிராமணக் குலம் செய்யுமா? அவரிடமுள்ள பணம் செய்யுமா?

சீடன் 1 : உனக்கு ஞானக்கண் திறந்திரிச்சி, கோபாலன் உணர்வு வந்த மட்டில கிறிஸ்தோப்பரையும், இராமனையும் என்ன பாடுபடுத்தப் போறாரோ? என்ற பயந்தான் எனக்கு வந்திரிச்சி.

குரு : வீட்டுக்காரர், சொந்தக்காரருடன் புடைசூழ ஆமா.

சீடன் 1 : புடைசூழ, சொல்லுங்க குருவே எனக்கு மூச்சி நின்றிடும் போல இருக்கு.


noolaham.org | aavanaham.org

சீடன் 2 : அய் உனக்கு மூச்சி நிண்டா! நமக்கு நாளைக்கு லீவுதான்.

குரு :
(பாட்டு) தொலைநக லூடாகவும் ஊடாகவும்
மின்னஞ்சல் ஊடாகவும் ஊடாகவும்
தகவலறிந்த சாதிசனங்கள் சாதிசனங்கள்
ஆசிபத்திரியில் கூடிவிட்டார் கூடிவிட்டார்.
என்ன செலவாகினாலும் ஆகினாலும்
எந்த நாட்டுவைத்தியரை எடுத்தாயினும் மெடுத்தாயினும்
குணப்படுத்த வேண்டுமென்று வேண்டுமென்று
குரல்கொடுத்து இறஞ்சிநின்றார் இறஞ்சிநின்றார்.
தானினன்னா தன்ன தானினன்னா தன்ன தானினன்னா -தன்ன
தனதானத் தானினன்னா தன்ன தானினன்னா

குரு : என்று உற்றார் உறவினர் ஏங்கித்தவிக்க சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் வந்து இவருக்கு அவசரமாக சத்திரசிகிச்சை செய்ய வேண்டு மென்றும் உடனடியாக 'வீ' (பொசிற்றிவ்) இரத்தம் இரண்டு பைந்துக்கு ஏற்பாடு விரைவாகத் செய்யும் படியும் இந்தக் குறுப்இரத்தம் இரத்த வங்கியிலும் இல்லையென்றும் கூறினார்.

சீடன் 2 : ஒரே குலம் தானே. அவங்கட எல்லாரிட இரத்தக் குறுப்பும் 'வீ' (பொசிற்றிவ்) ஆகத் தானே இருக்கும். இரத்தம் குடுத்தும் மிஞ்சுமாக்கும்.

குரு : ஆனா, அவங்கட சாதி, இன எல்லாருடைய இரத்தங்களும் சோதிக்கப்பட்டது. ஒருவரினதும் பொருந்த வில்லை. இலங்கையில் எல்லாப்பாகத்து இரத்த வங்கிகளிலும் கேட்டும் பிரயோசனமில்லை. டாக்டர் விரைவுபடுத்தி, தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் கோபாலனுயிருக்கு ஆபத்து என்றார்.

சீடன் 1 : ஐயோ! பாவம்! அப்படியானால் காப்பாத்த முடியவில்லையா? குருவே.

குரு : அலுவலக ஊழியர்கள் முண்டியடித்துக் கொண்டு வந்து தங்கள், தங்கள் இரத்தக் குறுப்புக்களையும் பரிசோதிக்க


noolaham.org | aavanaham.org

குடும்பத்தினர் அனுமதித்தும் பயனில்லை. ஆனால் கடைசியாகத் தயங்கித் தயங்கி சுத்திகரிப்பு தொழிலாளி இராமன் தனது குறுப்பையும் சோதிக்கும்படி கேட்க அதிகமான குடும்ப உறுப்பினர் முகம் சுழிக்க சிலர் வேண்டா வெறுப்பாக அனுமதிக்க பரீட்சித்த டாக்டர் 'வீ' (பொசிற்றிவ்) என்று கூற இராமன் எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்து ஐயாவை காப்பாற்றுங்கள் என்று கூறினான்.

சீடன் 2 : இரத்தத்தில குலமில்லை! பிராமண குலத்தில குறுப்பில்ல.

சீடன் 1 : இடம், பொருள், ஏவலறியாமக் கத்தாத! ஆமா, அப்புறம் குருவே.

குரு : 2 பொயின்றும் ஏற்றப்பட்டு சத்திரசிகிச்சை கட்சிதமாக முடிந்தது. கோபாலனுக்கு 6 மணித்தியாலத்தின் பின்தான் மயக்கம் தெளியுமென்றும், அனைவரையும் வீட்டுக்குப் போகும் படியும் ஆஸ்பத்திரி தாதிமார் கவனமாகக் கவனிப்பார்கள் என்றும் கூற, அனைவரும் வீடு சென்றனர். அலுவலக ஊழியர்கள் தங்கள், தங்கள் சமய, இஸ்ட தெய்வங்களான பிள்ளையார், கிருஷ்ணர், சிவன், சக்தி, முருகக் கடவுள்களை மானசீகமாக வேண்டி வழிபட்டனர்.

சீடன் 2: தெய்வம் ஒன்றே. அவர் பல பெயர்களால் அழைக்கப்படுகிறார். அவருக்குப் இப்பவாவுதல் புரிஞ்சிருக்குமா?

குரு: ஆமா, கோபாலன் கண்விழித்ததும் டாக்டர் அவரது குடும்பத்தினர், உறவினர்கள் சூழ்ந்து கொண்டு கதைகதையாக நடந்ததையும் தங்களது எண்ணம், நினைப்பு எல்லாமே "தப்பு" என்று ஆணித்தரமாக அடித்துக் கூறினர்.

சீடன் 2 : அவர்கள் போட்ட தாளங்கள் "தப்புத்தாளங்கள்" என்று உணர்ந்த தொன்றே போதும்.

குரு : சுகமாகி, வீடுசென்று, இருவார ஓய்வின் பின் அலுவலகம் வந்த கோபாலன் அலுவலக ஊழியர்கள் ஒவ்வொருவரையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கி ஆரத்தழுவி, கட்டியணைத்து உடனடியாக குழுக் கூட்டத்திற்கு ஒழுங்கு செய்து இராமனை அழைத்து கண்ணீர் மல்கக் கட்டியணைத்து மண்ணில் வாழும் அந்த இராமபிரானே நீதானையா! எங்களது மதியீனத்தால் குலம், கோத்திரம் என்ற மாயக்கண்களைத் திறக்க வைத்த மானிடத் தெய்வம் நீதானையா என்று ஆனந்தக் கண்ணீரினால் இராமனை அபிடேகம் செய்ததோடு தன்னை மறவாது உள்ள உணர்வு களைப் பாடலாகவும் பாடினார்.

சீடன் 2 : எப்படி.

குரு : ஒன்றே குலம் என்று பாடிடுவோம்
ஒருவனே தேவனென்று போற்றிடுவோம்
ஒற்றுமையாய்க் கரம் கோர்த்திடுவோம்
என்றும் வேற்றுமையின்றியே வாழ்ந்திடுவோம்
வேற்றுமை யென்றும் விலக்கிடுவோம்.
ஒன்றே குலம் என்று பாடிடுவோம்
ஒருவனே தேவனென்று போற்றிடுவோம்
ஒற்றுமையாய்க் கரம் கோர்த்திடுவோம்
என்றும் வேற்றுமையின்றியே வாழ்ந்திடுவோம்
வேற்றுமை யென்றும் விலக்கிடுவோம்.

சீடன் 2 : ஆமா, குருவே கோக்கடிச்ச மாதிரி உடம்பெல்லாம் கிக்கேறுது.

சீடன் 1 : ஜிஞ்சி பீயர் அடிச்சுப்பாரு நெஞ்செல்லாம் பஞ்சாகப் பறக்கும்.

குரு : செயலக அதிகாரி கண்டிப்பான தொனியில் கர்ச்சித்துக் கூறினார்.

சீடன் 2 : என்ன குருவே! பழையபடி வேதாளம் முருங்க மரத்தில ஏறிடிச்சா.

சீடன் 1 : இதென்ன விக்கிரமாதித்தன் கதையா தொக்கு நிக்கிறதுக்கு.

குரு : இல்லை! இல்லை எதிர்காலத்தில் வழமையாகச் சரஸ்வதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசை செய்வது போல, ஒளி விழாவும் தனது செலவிலே திறம்படச் செய்ய வேண்டும் என்று முழங்கினார்.

குரு : இவருதான் தெய்வம் குருவே.

குரு : விருப்புடனே வந்திருந்து
வில்லுப்பாட்டுக் கேட்டிருந்து
ரசித்தவங்க எல்லோருக்கும் வணக்கம்
எங்கள மதித்தவங்க எல்லோருக்கும்
வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

**2006ம் ஆண்டு மாவட்ட மட்டத்தில் 1ம் இடம்பெற்றது**

## 6. அல்லற்காலை நில்லலன் மன்னே

காப்பு

தந்திமுகத்தனை முன்னிறுத்தி சரஸ்வதியன்னையை நாவிருத்தி
செந்தமிழ் சொற்பூக்கள் தொடுத்து தெம்மாங்குப் பாட்டமைத்து
தந்தனத்தோமென வில்லிசைத்து பாடிடவந்த எங்களுக்கு
வந்தருள் புரியவேண்டுமையா தொந்திவயிற்றுக் கணபதியே.

அவையடக்கம்

வில்லுப்பாட்டு கேட்கவென்று விருப்புடனே வந்திருக்கும்
எல்லையற்ற ஏற்றம்மிக்க ஆற்றல்மிகு அறிஞர்கட்கும்
நல்லவர்க்கும் நாட்டமுள்ளவர்க்கும் நன்றியுடன் சொல்வோம்
நாங்கமுதல் வணக்கம்! சபையோர்க்கு வணக்கம்! சபையோர்க்கு வணக்கம்!

குரு : அவையில் அமர்ந்திருக்கும் பெரியோர்களே! சபையோர்களே! சான்றோர்களே! நாங்கள் வில்லசைத்து சொல்ல வந்தது, "அல்லற்காலை நில்லலன் மன்னே!" என்ற புறநானூற்றின் 215ம் பாடலில் வரும் ஈற்றடியின் உரிப்பொருளான "நட்புக்கு ஒரு மன்னன்! நட்புக்கு ஒரு புலவன்!" பற்றியே ஆகும்.


noolaham.org | aavanaham.org

சீடன் :என்ன குருவே! கொஞ்சம் மழை! கொஞ்சம் வெயில்! என்ற படம் போல, அல்லல் காலை நில்லலன் மன்னே! புதுப்படக் கதையா குருவே!

சீடன் :உனக்கு எந்நேரமும் சினிமாச் சிந்தனை தானே! தொல்லைக் காட்சி வந்ததும் வந்தது, பிள்ளைகள் கெட்டுக் குட்டிச் சுவரானதுதான் மிஞ்சியது. இவன் கிடக்கின்றான் சினிமாக் கிறுக்கன். நீங்க சொல்லுங்க குருவே.

குரு : "அல்லற்காலை நில்லலன் மன்னே!" என்பதை திருவள்ளுவரின் திருக்குறள் மூலம் விளங்கச் சொன்னால்,"அழிவினை நீக்கி ஆராய்ந்து அழிவின்கண் அல்லல் உழப்பதாம் நட்பு" அதாவது அழிவைத்தரும் தீய நெறிகளிலிருந்து நீக்கி, நல்வழிப்படுத்தி தவிர்க்க முடியாத கேடு வந்துற்றபோது தாமும் உடனிருந்து துன்பத்தில் பங்கு கொள்வதே நட்பு ஆகும்.

சீடன் : அடடா! அடடா! இவளவு பெருமையுடையதா நட்பு.

சீடன் : இல்ல, மட்பு அடிக்கும் வரை இணைந்திருப்பதே நட்பு என்று நினைச்சித்தானே, போன மாசம் நீ போதையில இருக்கக்குள பொலிஸ்காரர்களைக் கண்டு உன்ர நண்பர்கள் விட்டுப் போட்டோட நீ பிடிபட்டு 150 ரூபா அபராதம் கட்டின நீ. நீங்க கதையைச் சொல்லுங்க குருவே.

பாட்டு : கோழியூர் என்னும் உறையூர்நகரே
கோப்பெருஞ் சோழன் தலைநகரே
மேழிச்செல்வம் கோழை படாதிருந்து
மேன்மையாய் நாட்டை ஆண்டனனே!
வலக்கரம் கொடுப்பதை இடக்கரமறியாது
வாரிவழங்கிடு மன்னன் தென்னவனே!
புலமைமிக்க பாப்புனை வித்தகனே – தினம்
பொத்தியார் புலவனுடனிரு பூமானே!

குரு : உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மன்னன் கோப்பெருஞ்சோழன். கொடையிலும் வீரத்திலும் சிறந்த


noolaham.org | aavanaham.org

புலமைமிக்கவன், கற்றாரைக் கற்றாரே காமுறுவர், என்பதற் கேற்ப பொத்தியார், எயிற்றியனார், பூதநாகனார், கண்ணகனார் முதலிய புலவர்களை ஆதரிப்பவன். உண்பது, உறங்குவது தவிர மற்றெவ்வேளையிலும் பொத்தியரோடே உயிர் நண்பனாக இருப்பான். அவனது ஆட்சிக்காலத்தில் அமைதியாக இருந்ததனால் அறிஞர்களையும், புலவர்களையும் கூட்டி அறிவாராட்சி செய்வான்.

சீடன் : இந்தக் காலத்தில அமைதியுள்ள நாடே அமைதியென்றால் அவுன்சு எவளவு எனக்கேட்கிற நாடுகள்தான் இருக்கு.

சீடன் : இது கலிகாலம் எண்டு தெரியாதோ? நீதி அநீதியாகும், அநீதி நீதியாகும். உண்மை பொய்யாகும், பொய் உண்மையாகும். சனநாயகம் சர்வாதிகாரமாகும், சர்வாதிகாரம் சனநாயகமாகும்.

குரு : கோப்பெருஞ் சோழனின் பெருமை அண்டை நாடெல்லாம் பரவியது.

பாடல் : பிசிர் எனும் பாண்டிநாட்டுச் சிற்றூரிலே
பிறந்திட்ட ஆந்தைப் பெயர் கவிஞன்
கோப்பெருஞ் சோழனை நேரில் பாராமலே
மாப் புகழால் நண்பனாய் வரித்தனனே.

சொந்தநாடாம் பாண்டிநாட்டு மக்கள்
சோர்வுற்று நொந்தின்னலுற்ற காலை
மண்ணாளு மறிவுடைநம்பி மயக்கம்
கண்ணாயிருந்து காத்த கவிஞன்.

விருந்தெனக் கவிபாடி யெனைவீழ்த்தி
பெரும்பரிசில்கள் பெற்றார் சிலகவிஞர்
மருந்தெனக் கவியாடி மனம்திருத்தி - மீள
நாட்டை ஆளவைத்த பெரும்கவிஞன்.

குரு : பாண்டிய நாட்டில் பிசிர் எனுமூரில் ஒரு கவிஞர் வாழ்ந்தார். அவருக்கு ஒருமகன் ஆதன். அவனும் புலவனாவான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதன் தந்தையார் என அழைக்கப்பட்டு வந்தவரே.ஈற்றில் ஆந்தையார் எனப்பெயர் வந்துவிட்டது. பிசிர் ஊரில் பிறந்ததால், பிசிராந்தையாரென எல்லோராலும் அழைக்கப் பட்டார்.

சீடன் : ஊர்பேரை முன்னால வைச்சே நம்மட ஊரிலையும் சிலர் வாழுறாங்க.

சீடன் : பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவானினும் நனி சிறந்தது என்று அவர்கள் பிறந்த நாட்டை தம்பேரோடு சேர்த்து பிறந்த ஊரையே பெருமைப் படுத்துறாங்க. அது இந்த மரமண்டைக்கு எங்க விளங்கப்போகுது. நீங்க சொல்லுங்க குருவே.

குரு : பாண்டிய நாட்டு மன்னன் நம்பியை, சொந்தங்கள், பந்தங்கள் சூழ்ந்து கொண்டு தீப்பந்தங்களாகச் சுட்டும், அரணை அன்றாடம் இன்பப்பொழுது கழிக்கச் செய்து விட்டு, அரசியலை தமதாக்கி விளையாடிய அரசுத்துறையோரையும் அடையாளம் தெரியவைத்து, நாட்டின் நற்பெயரையும் காத்திடச்செய்து அறிவுடை நம்பிக்கே, ஓர் அறிவு விளக்காக அமைந்திட்ட தெளிவுடை செந்தமிழ் பேரொளியாம் பிசிராந்தை.

சீடன் : அப்ப அந்தக் காலத்திலையும் இந்த விளையாட்டெல்லாம் இருந்து தானே இருக்குக் குருவே.

சீடன் : அந்தக் காலத்து மன்னர்கள் பிழையைச் சுட்டிக்காட்டினா, வாது செய்யாது மனமுவர்ந்தேற்றித் திருந்தி நடந்தனர். இந்தக் காலத்தில்!

குரு : சரி! சரி! நீயென்ன சொல்லவாறாயென்று தெரியிது! அதவிடு. அந்தப் பிசிராந்தையர், சோழநாட்டு வேந்தன் கோப்பெருஞ் சோழன் மேல், சொல்லாலே நெய்வதற்கு இயலாத அன்புதனைக் கொண்டிருந்தான். கவிபுனையும் ஆற்றல், கற்றாரைப் போற்றுகின்ற திறன், புவியெங்கும் மெச்சிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றுகின்ற கொடைத்தன்மை, கண்ணிமையாய் நாட்டிடைக் காக்கின்ற கண்ணியம், தண்ணிலவை மிஞ்சுகின்ற தகை சால் உண்மை கோப்பெருஞ்சோழனிடம் குடிகொண்ட இக்குணங்கள் குளிர்புனல் இதயக்கவிஞர் பிசிராந்தையரை ஈர்த்தனால் உற்ற நண்பராய் ஏற்றார்.

சீடன் : இணையம், மின்னஞ்சல் (Internet, E-mail) மூலமாகவும் நட்புக்கொள்ளுகின்ற காலமிது குருவே.

சீடன் : இந்த நட்புக்களாலதானே இண்டைக்கு உலகத்தில போதை வஸ்து, கடத்தலெல்லாம் நடக்குது. நீங்க சொல்லுங்க குருவே.

குரு : பிறந்தஇடம் பிசிர்ஊரில் நிழல் அடர்ந்ததோப்பில்
(பாட்டு) பிசிராந்தையர் ஓய்வெடுத்து அமர்ந்திருந்த வேளை
அன்னச்சேவலொன்று ஆகாய வெளியில் பறக்க
கண்ணுற்ற பிசிர்சோழன் மீதுபாடலொன்றி யற்றினார்.
அன்னச்சேவலே! அன்னச்சேவலே! நீயுமிங்கேவாவேன்
திண்ணமாக இம்மடலை சோழமன்னன் கையில்சேரேன்
அணிமணிகள் பலவும் நின்பேடைக்க வனவளிப்பான்
அவருக்கு மெனக்கு மிடையிருப்பதென்றும் திகட்டாதநட்பு
ஓலைகண்டு சோழவேந்தன் பெருமகிழ்வு கொண்டு
வேளைவரும்போது நட்புசிரோடு இணைவேனென்றார்.

குரு: பிசிராந்தரின் நட்பின் நல்ல கவிவரிகள் சோழனுக்கு திகட்டாத தேனாயினித்தது. பிசிராந்தையர் என்னுயிர் தோழன் என்று சோழன் எல்லோரிடமும் கூறுவார். பிசிராந்தையரிடம் யாருனது அரசன் என்றால், குன்றாது கொடுத்து நன்றாய் தமிழ் வளர்க்கும் பண்பாளன், பலரின்காவலன், கோழியூர்க் கோட்டை வீற்றிருக்கும் கோமான், பெயர் கோப்பெரும்சோழன் என்பார். அறிவுடை நம்பியுன் அரசனல்லவோ? என்று எதிர் கேள்விகேட்போர்க்கு, அவர் பாண்டிய நாட்டிற்கு அரசன், நம்மக்களின் குடும்பத்திற்கும் தலைவன். கோப்பெருஞ்சோழன் என் உள்ளத்திற்குத் தலைவன் என்பார். பிசிராந்தையர் சோழநட்பின் பெருமை கண்டு எல்லோரும் வியந்தனர். பெற்ற பிள்ளைகளுடனே தந்தையே போர் செய்தால் கற்றவர்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றவர், மற்றவர் தூற்றுவார். அதனால் விடமாட்டோம், விடமாட்டோம். மக்களை நீ வென்றிட்டால் மிஞ்சிடும் தோல்வி. மக்கள் உமைவென்றால் விஞ்சிடும் பழிதான் "பணியுமாம் பெருமை" என்பதனாலும் நீங்கள் பணிவதால் உங்களுக்கே புகழ் என்பதாலும் விடமாட்டோம், விடமாட்டோம் என்று கூற, சரி உங்கள் உரிமை உணர்ச்சிக்கு இடமளித்தது போல வடக்கிருந்து போகும் என்னுயிர், மாசைப்போக்கி, என் மானத்தைக் காக்கும் பெருமையாவது எனக்கு அளிக்கட்டும் என்று உள்ளம் நொந்து கூறினார் மன்னன்.

சீடன் : அன்னம் தூதுபோனத பாட்டி சொன்னவ.

சீடன் அனுமான் தூதுபோனத சொல்லல்லையா?

குரு : உங்கட சண்டைய நிறுத்துங்க? அப்பபடிப்பட்ட சோழனுக்கு மக்களால் வந்தது பேரிடி!

சீடன்: இப்படிப்பட்ட மன்னனுக்கு மக்களான பேரிடியா?

சீடன் : இப்பபெற்ற மக்கள் தானே தாய், தந்தையை தலையிடியென நினைக்கிற காலமாய் போச்சி.

சீடன் : வடக்கிருத்தல் என்றால் என்ன குருவே.

சீடன் : வடக்கிருந்து போகும் என்னுயிர் என்று சொன்னதும் விழங்காத முண்டம்.

குரு : 'வடக்கிருத்தல் என்னும் பழங்கால நிகழ்வுவராற்று இலக்கியம் ஒரு வழக்கென உரைக்கும்" ஆற்றுக்கு நடுவில் உள்ள திட்டில் வடக்கிருத்தலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சோழனோ'

பாட்டு : ஆடையணி கலன்கள் அனைத்தும் அகற்றி
அமைதி ததும்பும் முகத்துடன் தோற்றி
அன்புடன் மாளிகை கோட்டம்விட்டுப் புறப்பட்டு
அகல நடந்தாரே வடதிசைக்கு நடையிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்றோர் புலவர்கள் அவர் பின்தொடர
சான்றாமைக் கோப்பெருஞ் சோழனுமப்போ
வடக்கிருந்து உயிர் துறந்திடவே
வந்தாரே ஆற்றுநடு திட்டி நோக்கியே

சீடன் : என்ன கொடுமை! என்ன கொடுமை!

சீடன் : மக்களால, மனைவியால மனமுடைந்த எத்தனையோ தந்தையர்கள் வயோதிப மடத்தில வாழுதுகள்.

குரு : சோழன் திட்டிலமர, உடன் வந்த சான்றோர் புலவர்களும் சுற்றிய மரத்தினுக்குற்ற மன்னன், தயைகூர்ந்து மற்றவர்கள் செல்லுங்களென்றார். வாழும் போது கூடிவாழ்வோம் மாழும் போது ஓடிவிட்டனர்.

குரு : கோப்பெருஞ்சோழனுக்கு கோக்கிள்ளி, இளங்கிள்ளி என்று அறிவு, ஆற்றல் மிக்க இரு புதல்வர்கள். தந்தை அறிவாராட்சி, மோட்ச உலகு என்று நாட்டில் நாட்டம் கொள்ளாது, கருவூலப் பொருட்களை புலவர்களுக்கும் வறியவர்களுக்கும் வழங்குவதால் நாட்டின் வளம் குன்றுவதோடு வீரமும் மறைந்து விடும் என்றஞ்சி, படைகளைத் திரட்டியதோடல்லாது, தந்தைக்கு ஒரு மடலும் வரைந்து அனுப்பியதோடு, அரண்மனையைச் சுற்றி முற்று கையுமிட்டனர்.

சீடன் : எப்படி ஓலை எழுதினார்கள் குருவே.

பாடல் : அப்பாவே உங்களறி வாராட்சிக்களவே இல்லையோதான்
அப்பாவே, அளவே இல்லையோதான்
தப்பான சிந்தனையாலே நாட்டுமக்கள் நலம் குன்றுதப்பா
நாட்டு மக்கள் நலம் குன்றுதப்பா
உங்களால தானாபத்து ஏற்படப் போகுதப்பா
வீரர்கள் இருக்குமிடத்தில் புலவர் கூட்டமிருக்குதப்பா
புலவர் கூட்டமிருக்குதப்பா
கோட்டை சுற்றி நாங்களிப்போ முற்றுகையிட்டுள்ளோம்
காட்டில் சென்று தவமிருந்து மோட்சம் பெற்றுக்கொள்


noolaham.org | aavanaham.org

தந்தையே மோட்சம் பெற்றுக்கொள்.

குரு : இவ்வாறிருந்த ஓலை கண்டு கோபமுடன் போர்புரிய நினைத்த சோழன் கண்சிவக்க "தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்", அதனை புதல்வர்களுக்கு நான் செய்து கற்றோர்களாக்கினேன். அவர்களை முந்தியிருக்கச் செய்யவில்லை யென்று முந்திக்கொண்டார்கள். போருக்கு புறப்பட ஏற்பாடு செய்யுங்கள் என்று கற்சித்தார். அப்போ எயிற்றியனார் விடமாட்டோம். ஐயா விடமாட்டோம், விடமாட்டோம். என்ற பழி வேண்டாம் மன்னா என்றனர். சிலர் பொத்தியர் போக மறுக்க, மன்னன் மற்றவர்களை நான் மறுக்க வில்லை. பொத்தியாரே உமக்கு குழந்தையில்லை இப்போதுதான் உன் மனையால் கருவுற்றிருக்கின்றாள். குழந்தை கிடைத்ததும் அதைக்கண்டு களித்து விட்டு வாரும். வலப்பக்கத்தில் பிசிராந்தையாருக்கு அடுத்த இடத்தில் உனக்கு இடம் ஒதுக்கி வைக்கின்றேனென்றார். (பொத்தியார்) உடனே,

பாட்டு : கண்ணாலே காணாத பிசிராந்தையர்க்கு
உனக்கு அருகில் இடமா?
உனக்கு அருகில் இருந்த எனக்கு
உன் அருகில் இடமில்லையா?
உன் அருகில் இடமில்லையா?
என்னுயிரோடு ஒன்றிவிட்ட உயிரான நண்பனவன்
தோன்றியெடுத்திட்ட தங்கமாய் தோன்றிடு நட்புவது
வளமோடு வாழும் கால்வரா விடினும்
தாழுங்கால் ஓடிவந்து துணைநிற்கும் தூயநட்பு
ஓடிவந்து துணைநிற்கும் தூயநட்பு.
பொன்னும் முத்தும் பவளமும் மணியும்
ஒன்றுக் கொன்று தொலைவில் விளையினும்
அவற்றை மின்னும் மணியாய்க் கோர்த்திடும்போது
பின்னிப் பிணைந்திடு நெருக்கம் போலவே
மன்னன் சோழன் உறையூர் தனிலும்
மாகவியாம் பிசிராந்தை பாண்டிய மன்னிலும்
பசும்பொன்னைப் போல் முத்தைப் போல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலகல் தொலைவில் தனித்தனி பிறந்தபோதும்
கோப்பெருஞ் சோழன் முத்து பிசிராந்தையர் பவளமாகும்
இதுவே எம்மிருவர் உயர் நட்பு என்றார்.
கயவராய், கடையராய், அமவாசை அகம்படைத்த மனிதராய்
கருதி, அவர் நட்பைக் கால்தூசிக்கும் கீழாகச்செய்திடலாம்
குயவர்செய் மட்பாண்டமேனும் உடைந்தபின்
உடைந்தபின் சிறுபயன் தருமெனலாம்
குள்ள நரிக்குணம் கொண்டோர் நட்பாலே பெரும்
தீமையே கொடிகட்டிப் பறக்குமென்பேன்
உள்ளமெலாம் சுயநலத்து சுரங்கமாக அமைந்தாலே
பள்ளம் போய்வீழ்கின்ற தண்ணீர்போல் ஆகிவிடும் பலர்நட்பு
அதனாலே நான் அறுதியிட்டு உறுதி கூறுகின்றேன்
இப்பாடலினாலென்று,
'தென்னன் பொருப்பன் நன்னாட்டு உள்ளும்
பிசிரோன் என்ப, என் உயிர் ஓம் புநனே
செல்வக் காலை நிற்பினும்
அல்லற்காலை நில்லலன் மன்னே" நான் வறுமையுற்று
வடக்கிருக்கும் காலை கட்டாயம் வருவார் பிசிராந்தையர்
என்றார் கோப்பெருஞ்சோழன்.

சீடன் : எனக்குப் பொறுக்க முடியிதில்லை குருவே பிசிராந்தையர் வந்தாரா?

குரு : பொத்தியர் சொன்னார், அதோ ஒரு இளைஞன் வருகின்றார்! புலவர்போல் தோன்றுகின்றதென்றார்.

பாட்டு : ஓடிவந்தேன்! ஓடிவந்தேன்! ஊங்களைக் காண
நாடிவந்தேன்! நாடிவந்தேன்! நானுமுன்னோட வடக்கிருக்க
ஏன்அழுறாய்! ஏன்அழுறாய்! என்அன்பரே ஏன்அழுறாய்
பார்த்தீர்களா! புலவர்களே பிசிராந்தையரைப் பார்த்தீர்களா
அன்புக்கு உண்டோ அடைக்கும் தாழ் அன்பரே
என்னுயிர் தோழன் துன்பியில் தாங்காது வரும் கண்ணல்
நானான்டகாலம் வாராதுமாழும் நேரமதில் வந்தீரோ?
நானெதை உமக்களிப்பேன் பாவியானதாலே.
பொன்பொருள் நிலையற்றது புரிந்தேன் நண்பா


noolaham.org | aavanaham.org

உன்னோடிருந்து இறப்பதே நிலையான புகழ்தோழா என்று கூறி பிசிராந்தையரும் உடனிருந்து கோப்பெருஞ்சோழனுடன் புலவர்களும் துறக்கம் எய்தினர். பொத்தியரும் தன் கடன் முடித்து, கோப்பெருஞ்சோழன் ஒதுக்கி வைத்த இடம் வடக்கிருந்து உயிர்நீத்தான்

வாழ்க நட்பின் பெருமை.

"விருப்புடனே வந்திருந்து வில்லுப்பாட்டுக் கேட்டிருந்து
ரசித்த வங்க எல்லோருக்கும் வணக்கம்
எங்கள மதிச்சவங்க எல்லோருக்கும்
வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

**2013ம் ஆண்டு மாகாண மட்டத்தில் 2ம் இடம்பெற்றது.**

## 7. சமநீதியே சரிநீதி

காப்பு

தங்கத் தமிழினைச் சரியாகவே கற்று
எங்களைத் தெளிய வைத்த - வல்லவரே
எங்கும்நிறை பரமேயுன் தாளடியில்
வில்லிசையைப் பணிவோடு வைத்தோமே

குரு : சங்கத்தமிழ் போற்று சரிநீதி காக்கும் நடுவர்களே! உங்கள் முன்னிலையில் உரைக்க வந்த நற்கதை ஒரு பக்கம் நீர் ஒழுகிப் பால் ஒழுகுமாறு "சமநீதியே சரிநீதி" எனும் தலைப்பில் வில்லிசைத்து சொல்ல விருப்புடனே கேட்டிடுவீர்.
சமநீதியென்பது செல்வந்தர் செல்வாக்கால் வாங்கிடும் பொருளுமல்ல. ஏழைகளை ஏமாற்றி மறுக்கப்படும் அருளுமல்ல. அது எங்கும், எப்போதும், ஏழை பணக்கார, சாதிமத பேதவித்தியாசமின்றி சகல மண்ணுயிர்களுக்கு சரிநீதி வழங்குவதே மனுநீதியாகும் என்பதைக் கூறி,
தந்தனத்தோம் என்று சொல்லியே வில்லினில் பாட


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குழு : ஆமா! வில்லினில் பாட

குரு : வந்து வரம் தந்திடு வல்லோனே
வில்லரனே நாவில் வந்து வீற்றிருந்து
நல்லாசிகள் தந்து நலமளிப்பாய்
நற்கலை வாணியே உமைப் பணிந்தோம்
தொல்லைகள் தீர்த்து நல்லாசி தந்திடம்மா
எல்லோர்க்கும் எங்கள் அன்பின் வணக்கம்

குழு : எங்கள் அன்பின் வணக்கம்!
வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

சீடன் 1 : சாதிக்கொரு நீதி! ஆளுக்கொரு நீதி! இதுதான் உலகநீதி! பார்க்கவும் சயிக்கல்ல. கேட்கவும் பிடிக்கல்ல. சரிநீதி! சமநீதி சொன்னா சுவையாத்தானிருக்கு. ஆனா எங்கயும் இப்ப நடக்கிறது அநீதியாகத்தானேயிருக்கு.

சீடன் 2 : உங்கட வீட்டில உனக்கு வெறும் தேத்தனியும், உன்ர கெட்டிக்காரத் தமயனுக்கு பால் தேநீரும் தாறதாக சொல்லி வருத்தப்படுவா? உங்கட நாட்டிலயும் இல்லயென்று சொல்லாதே.

குரு : சண்ட பிடித்தாலும்! ஓரளவு சரியான இடத்த நெருங்கிடீங்க. ஒரு நாட்டிலையோ, வீட்டிலையோ தலைவன், தலைவி அந்நாட்டு உயிர்களுக்கோ, பிள்ளைகளுக்கோ பாரபட்ச நீதிகாட்டுவது,

பாட்டு : செல்வந்தர் வறியவர்கள் தம்மண்ணில் மற்றுயிர்கள்
முறைமைகளைத் தெளிந் தறியாது
தம்குடிகளிடையே பாரபட்சம் பார்த்து நீதி
தவறு மரசருக்கு பழியே சேரும்.

குழு : ஆமா! பழியே வந்து நேரும்.

பாட்டு : முறைதெரிந்து செல்வர்க்கும் நல்கூர்ந்தவர்க்கும்
இறைதிரியான் நேரொக்க வேண்டும்


noolaham.org | aavanaham.org

முறைதிரிந்து நேரொக்கா னாயினதுவொரு
பக்க நீரொழுகிப் பாலொழுகுமாறு.

குழு :ஆமா! நீரொழுகிப் பாலொழுகுமாறு.

பாட்டு :நீதியின்முன் ஏழைபணக்கார ரெவ்வுயிறும்
ஆதியிறை படைப் பிலொன்றே
என்று பழமொழி நானூறிலொன்றிலே
புலியூர்கேசிகன் கூறினார் நன்று.

குழு : ஆமா! புலியூர்கேசிகன் கூறினார் நன்று.

பாட்டு : சொல்லுக்கும் புகழுக்கும் சுடர்சேர்த்த நாடு
செந்தமிழ் புரவலர்கள் சிந்தைகொள் நாடு
சைவத்தையும் தமிழயும் கட்டிக்காத்த நாடு
செல்வம் மிகுந்து சிறப்புற்றிருந்த நாடு
ஆண்டிட்ட சோழமன்னர்கள் அனுதினமும்
எண்ணிய தெல்லாம் உயர்வுடைய நாடு
நீதிதவறாத நெறிமுறைகள் கைக்கொண்டு
நீண்டகாலம் ஆட்சிபுரிந்த ஆழுமை நாடு

சீடன் 1 : ஆகா! ஆகா! நாடெண்டா இது நாடு.

சீடன் 2 : இப்பத்தய நாடுகள் போட்டி பொறாமை கொண்டு மோதும் நாடுகள்.

குரு : இதுமட்டுமன்றி, இத்தகைய சோழநாட்டின் பெருமைக்கு புகழ் கூட்டிய ஒரு கிராமமும் உண்டு.

சீடன் 1 : இந்தக்கால நாடுகளின்ற ஆட்சியில சமநீதி என்றா களஞ்சி என்ன விலையென்று கேக்கிறாங்க.

சீடன் 2 : உனக்கு கடையில களஞ்சிக் கணக்கில அபின் வாங்கின நினைவு. அந்தக் காலத்து மன்னர் ஆட்சியில சமநீதிக்கான தடயங்கள் இருந்ததா குருவே?


noolaham.org | aavanaham.org

குரு : எத்தனையோ மன்னர்கள் நீதி தவறாது ஆட்சி புரிந்த வரலாறுகள் பல. அவற்றுள் ஒரு கதையினைக் கூற உங்களை நான் சோழநாட்டிற்கு கூட்டிப் போகப்போகிறேன்.

சீடன் 1 : கொஞ்சம் பொறுங்க! நான் வீட்டபோய் சொல்லித்து வாறன்.

சீடன் 2 : ஆசை, தோசை, அப்பளம், வடை இவர உண்மையாக இந்தியாவுக்கு கூட்டித்துப் போறதாக நினைச்சித்தாரு. வடிச்சல்! முகத்தை துண்டால துறச்சிக்க.

குரு : நீதிதவறா மன்னர்கள் வாழ்ந்தநாடு அதுவாழ்ந்தநாடு
நீண்டகாலம் நெறிமுறை தவறாவாட்சி இருந்தநாடு இருந்தநாடு
நல்லோர்களா யனைவரையும் வாழவைத்தநாடு வாழவைத்தநாடு
சொல்லுக்கும் செயலுக்கும்பெயர் சேர்த்தநாடு சேர்த்தநாடு
சைவமும் தமிழும் சுடர்விட்டநாடு சுடர்விட்டநாடு
மாதம் மும்மாரி தவறாது பொழிந்தநாடு பொழிந்தநாடு.

குழு : ஆமா! மும்மாரி பொழிந்தநாடு பொழிந்தநாடு.

பாட்டு : அங்கே திருவாரூர் எனும் புண்ணியபூமி புண்ணியபூமி
எங்கும் தெய்வீக மணம் கமழும்பூமி மணம் கமழும்பூமி
சுற்றம் சூழசுதந்திரம் உலா வந்தநாடு உலா வந்தநாடு
அச்சமற மக்கள் அனுதினம் வாழ்ந்தநாடு வாழ்ந்தநாடு
பால்தயிர் நெய்யென்றும் நிறைந்தநாடு நிறைந்தநாடு
ஆயர்பாடி அழகோடு செல்வம் செளித்தநாடு செளித்தநாடு.

சீடன் 1 : அந்தக்காலத்தில, நானந்தப் பூமியில பிறக்காமப் போயித்தன். சுதந்திரமாக திண்டு கொழுத்திருப்பன்.

சீடன் 2 : ஓசில திண்டுரெண்டா உன்ன விடவாளில்ல. தப்ப விட்டுப் போட்டா! நீ செய்த புண்ணியம் இஞ்ச வந்து பிறந்திட்டா.

குரு : இத்தகைய சோழநாட்டின் திருவாரூரிலே ஆண்ட சோழமன்னன், மனுநீதி சாத்திரங்கள் வழுவாது, நீதி, நியாயம், நேர்மை தவறா தாட்சி செய்து வந்ததாலே,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டு : சோழமன்னன் நல்லாட்சி பேரானதாய் விளங்கியதாலே
மோதிய துன்பதுயரங்கள் தூளாகப் பறக்க
சூதுவாதில்லாது மக்கள், மிக்கநேசமுடன் வாழ்ந்தனரே
கோடான கோடிமக்கள் குறைகளேதுமின்றி வாழ்ந்தனரே.

குழு : ஆமா! குறைகளேதுமின்றி வாழ்ந்தனரே.

பாட்டு : தன்னுயிர்போல் மண்ணுயிரை, எண்ணியே காத்துவந்தனன் மன்னன்
அவ்வாட்சி கண்டவயிம் பூதங்களும், ஆனந்தம் கொண்டு ஆடிநின்றதுவே
மனுநீதிதவறாத சோழனுக்கு, மின்னாமல் முழங்காமல் வந்ததே பேரடியொன்று
துன்பத்தின் விளிம்பில் கொண்டு விட்டதே யவனாட்சியை யன்று.

குழு : தனம் தனம் தனதானா. தான தனாதன தானினதானா.

சீடன் 1 : அன்னியநாடு, ஆட்சியை பிடிக்க வந்து குண்டு போட்டதுவா குருவே! செல்லடித்து நாட்டைச் சின்னா பின்னமாக்கியதா குருவே!

சீடன் 2 : நீ வதந்திக் குண்டுகளை வீசி, எத்தனை பேர்ட வாழ்க்கையில இடிவிழவச்சத மறக்கல்ல மக்கள்.

குரு : உங்கட சாகசச் சண்டைகள நிப்பாட்டுங்க.

பாட்டு : சோழமன்னனுக்கு ஒரு மகன்தான் - அவன்
பேரான பேரழகுக் குகன்தான்
சின்னவயதில் தேரோட்டி மகிழ்ந்தான்
அன்னவன் பெயர்வீதி விடங்கனென்பதாம்.

குழு : ஆமா! வீதி விடங்கனென்பதாம்.

பாட்டு : தேரினில் சாலியாய்த் தெருவில் செல்கையில்
பால் மனம்மாறாப் பசுங்கன்றொன் றங்கே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளிக் குதித்துக் களித்து வீதியில் வந்தது
பொல்லாத காலத்தால் சில்லில்சிக்கி மாண்டது.

குழு : ஆமா! சில்லில்சிக்கி மாண்டது.

பாட்டு : கண்டதும் தாய்பசு கதறியது
கன்றினைச் சுற்றிச் சுற்றி வந்தது
விண்டிட முடியாத் துயரதால் வெந்தது
வேகமாய் அரண்மனை தேடிச் சென்றது.

குழு : ஆமா! வேகமாய் அரண்மனை தேடிச் சென்றது.

சீடன் 1 : ஐயையோ! என்ன பாவம்! பரிதாபம்! காக்காய்க்கும் தன்குஞ்சி பொன்குஞ்சிதானே.

சீடன் 2 : இஞ்சி திண்ட குரங்கு மாதிரி மிஞ்சின பாசமுள்ளவன் போல பாசாங்கு பண்ணாத முந்தநாள் ஒரு ஓணான ஓடஓட அடிச்சுக் கொண்ட நீ.

பாட்டு : அரசனின் அரண்மனை எங்கே! எங்கே!
என்று பசுயறிந்துமே சென்றது அங்கே! அங்கே!
ஆராட்சி மணியை முட்டிவேகமாயடித்தது! அடித்தறுத்தது!
பேரொலி அகிலம் அதிர ஒலித்தது! ஒலித்தது!

குழு : ஆமா! ஆமா! ஒலித்தது! ஒலித்தது!

பாட்டு : காவலனை அழைத்தான் மனுச்சோழன்! சோழன்!
மணியடிக்குமாளை அழைத்துவா என்றான்! என்றான்!
மணியடிக்கும் பசுவைக் காவலன் கண்டான்! கண்டான்!
மன்னனிடம் சென்று விபரம் விண்டான்! விண்டான்!

குழு : ஆமா! ஆமா! விபரம் சொன்னான்! சொன்னான்!

பாட்டு : மன்னன் சேதியறிந்து மனமுருகி நின்றான்! நின்றான்!
நின்று நிதானித்து யோசனை செய்தான்! செய்தான்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்று மடிந்தது போல்மகனும் மடிவானென்றான்! என்றான்!
பின்மன்றையுடனே கூட்டுங்கள் என்றான்! என்றான்!

சீடன் 1 : சபாஸ்! அதுதான் சரியான முடிவு. பலிக்குப்பலி! கொலைக்குக் கொலை! ரத்தத்துக்கு ரத்தம்!

சீடன் 2 : சத்தம் போடாத! அடுக்குமொழி பேசிறதாக நினைச்சி நீ அடுத்து என்ன சொல்லப்போறாயெண்டு.

சீடன் 1 : ஆமா! முத்தத்தக்கு முத்தம்!

சீடன் 2 : முத்தம் கொடுக்கப்போய் சித்திரவதய சிறையில அனுபவிக்கிற கதைய நித்தம் பத்திரிகை, தொலைக்காட்சியில வாறது தெரியாதா?

பாட்டு : ஆராட்சி மணியடித்த ஆவின் அபலச் செய்தி
நேராக விசாரித்து தனைத்து மறிந்து கொண்டேன்
ஆராட்சி மணியடித்த ஆவின் அபலச் செய்தி
நேராக விசாரித்து தனைத்து மறிந்து கொண்டேன்
வீதி விடங்கன் செய்த விபரீதமான தப்பு
வீதி விடங்கன் செய்த விபரீதமான தப்பு
நாட்டில் நடக்காதினி இருப்பதென்தன் பொறுப்பு
நாட்டில் நடக்காதினி இருப்பதென்தன் பொறுப்பு.

குழு : ஆமா! நடக்காதிருப்பதென்தன் பொறுப்பு.

பாட்டு : அவையினரே அமைச்சரே அறிந்து கொள்ளும்
நிலைநான் தவறாது சமநீதி காக்க வேண்டும்
அவையினரே அமைச்சரே அறிந்து கொள்ளும்
நிலைநான் தவறாது சமநீதி காக்க வேண்டும்.
அலைபாயும் உங்கள் மனதை அடக்கவேண்டும்
அலைபாயும் உங்கள் மனதை அடக்கவேண்டும்.
களையான மகனையிழந்து பசுபோல் பரிதவிக்க வேண்டும்
களையான மகனையிழந்து பசுபோல் பரிதவிக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழு : ஆமா! பசுபோலநானும் பரிதவிக்க வேண்டும்.

பாட்டு : சீறிச் சினந்த மன்னன் வார்த்தையில் அதிர்ந்து
சோகம் கொண்ட அவையோர் சொன்ன புத்தியொன்று
சீறிச் சினந்த மன்னன் வார்த்தையில் அதிர்ந்து
சோகம் கொண்ட அவையோர் சொன்ன புத்தியொன்று.
பாவத்திற்கு பரிகார தர்மங்கள் செய்து
பாவத்திற்கு பரிகார தர்மங்கள் செய்து.
வீதிவிடங்கனுக்கும் நீதிகாட்டு மென்றார்
வீதிவிடங்கனுக்கும் நீதிகாட்டு மென்றார்.

குழு : ஆமா! விடங்கனுக்கும் நீதிகாட்டு மென்றார்.

சீடன் 1 : நடந்தது நடந்து போச்சி! இதெல்லாம் சகசம் தானே! வீதியால போற ஆடு, மாடு, நாய், கோழி எத்தனை ஆட்டோ, மோட்டார் சைக்கிள், வசு காலில மாட்டுப் பட்டு செத்திருக்கு, அதனால எல்லாச்சாரதிக்கும் மரண தண்டனையா கிடைச்சது.

சீடன் 2 : ஓ! நீயிந்த தயிரியத்தாளதானா? முந்துறுலி பழகப்போய், மூன்றாட்ட அடிச்சிக் கொண்டதால ஞாயப்படுத்துறா. கலிகாலம்! கலிகாலம்!

குரு : அவையிலே அமைச்சர் சொன்னார், கொலைக்கு கொலை தர்மமாகாதரசே, அரச வீதியான தென்றும் அரசர்களின் பாவணைக்கே ஆவின்கன்றவ் வீதியினால் வந்ததனால் வந்த விபத்திதுவேயென்றுரைக்க. அரசன் அமைச்சரைப் பார்த்து பசுவும் கன்றும் எம் நாட்டின் உயிர்களே. சோழநாட்டு திருவாரூரில், அனைத்து உயிரும் ஆண்டவன் சொத்தே. தான தர்மம் செய்வதனால், தரமுடியாதே கன்றினுயிரை, நின்று தவிக்கும் பசுவின் துயரை நீக்கிவிட முடியுமோ? சொல்லுமென்றார். இம்முடிவைக் கேட்ட, அமைச்சரோ டனைவரும் அதிர்ந்து நின்றாங்களங்கே.

சீடன் 1 : தான தருமம் செய்தா தப்புச் சரியாகும் தானே குருவே.


noolaham.org | aavanaham.org

சீடன் 2 : செய்த தானதருமம் தலைகாக்கும் மென்பதற்காக, தப்பச் செய்துபோட்டு தானதருமம் செய்வதால் பயன் இல்ல. மன்னன் முடிவில் மாற்றம் கொண்டாரா குருவே.

குரு : என் ஆட்சியின் கீழ், வாழுகின்ற. ஆமா வாழுகின்ற அனைவருமே என் உறவுகள்தான். என் உறவுகள்தான் நீதி, நேர்மைக்கே நான் தலை வணங்குவேன். தலை வணங்குவேன் குற்றம் யார் செய்தாலும் தண்டிப்பதே கடமை ஆமா! தண்டிப்பில் மனிதசாதி, மிருகசாதியென்று வேறுபாடு பார்க்க மாட்டேன். ஆமா! பார்க்க மாட்டேன் மண்ணுயிரை என்னுயிராய் ஆமா! என்னுயிராய் மனதில் எண்ணி வாழுபவன். ஆமா! வாழுபவன். மனுச்சோழனென்றும் மாறமாட்டான். ஆமா! மாறமாட்டான்.

சீடன் 1 : மன்னன், அழுத்தம் திருத்தமாகவும், ஆணித்தரமாகவும் மகனுக்கு மரணம்தான் என்று சொல்லி விட்டாரா குருவே.

சீடன் 2 : வேலிக்க பொறுத்த வத்தவக்கா தலையா! குரு அடித்துச் சொல்லியும், உன்ர அறியாத்தனத்த அவுட்டுவிடாம சும்மாயிரு. நீங்க சொல்லுங்க குருவே.

குரு : மன்னனின் இறுதியான உறுதியான தீர்ப்பினால் அமைச்சர் துடித்தார் அரன்மனை கலங்கியது, ஏன் ஆயர்பாடியும் ஆடிப்போனது, ஆடிப்போனது, சோழநாட்டை சோகம் கௌவியது. தங்கள் தங்கள் ஆற்றாமையை ஒட்டி பேசிய ஒருசாரார் வெட்டியும் பேசினர்.

பாட்டு : ஐயையோ இதுவென்ன கொடுமை கொடுமை
பலிக்குப்பலி எடுப்பது மடமை! மடமை!
நீதிமாறாதவன் மனுச் சோழன்! சோழன்!
ஆதியின் ஆணையேயவன் தீர்ப்பு! தீர்ப்பு!
மண்ணில் புரண்டழுதோர் அநேகர்! அநேகர்!
துன்பத்தில் துடித்தார்கள் பலபேர்கள்! பேர்கள்!
மனிதசாதி மிருகசாதி ஒன்றே! ஒன்றே!
மற்றவர் திருந்திவிட தீர்ப்பு நன்றே! நன்றே! என்று பலர் ஆதரித்தும், சிலர் எதிர்த்தும் பேசிக்கொண்டேயிருந்தனர்.


noolaham.org | aavanaham.org

சீடன் 1 : மகனைக் கொண்ட மன்னன் என்று சிலை வைக்கப்போறாங்க.

சீடன் 2 : மனுநீதி தவறாத மன்னரெண்டு காலக் கண்ணாடி காட்டித் தேயிருக்கும். பிறகு என்ன நடந்தது குருவே.

பாட்டு : காவலர்களே! கடுதி வாருங்கள்!
வீதிவிடங்களை! வீதிக்கிழுத்து வாருங்கள்!
பாலகனோ தந்தையின் கட்டளைக்கு பணிந்தனன்
தேரிலேறி மன்னனும் வேகமாகச் செலுத்தினன்
ஆவின் கன்றிறந்த இடத்திலே மகனும் வீழ்ந்தனன்
ஓட்டிவந்த வேகத்தோடு மகன்மேலேற்றிக் கொன்றனன்.
சுக்கு நூறாக உடல் துண்டு துண்டாயானதே!
கண்டவர்கள் அனைவரும் கலங்கியே அழுதனர்
விண்டிட முடியாத் துயரில் விம்மிவிம்மி ஏங்கினர்
அந்தோ சுற்றும் பூமிகூட சுழற்சி தன்னை குறைத்தது
வானின் இருள்சோக மேகம் சூழ்ந்து துயர்பகிர்ந்தது
வீதிமரங்கள் யாவுமே சுழன்று சோகசுருதி மீட்டன
அரண்மனையிலசைந்த கொடிகள் அக்கணம் நின்று மீண்டுமசைந்தன.

சீடன் 1 : என் இரும்பு இதயமே இழகி அழுகிறதே!

சீடன் 2 : உன்னைச் சோகம் தொட்டால், உண்மை நீதி இருக்கும்.

பாட்டு : நீதியின் நேர்மைகண்டு அப்போது தேவர்கள்.
பூமழை பெய்தனர் பூரித்து வாழ்த்தினர்
மாமன்னன் சரிநீதி தன்னைப் போற்றினர்
எல்லாவுயிரும் ஒன்றேதான் இதில் வேற்றுப் பிரிவில்லையே
மனிதசாதி மிருகசாதி மண்ணிலென்று மொன்றேதான்
மானிடரேயிவனே மனுநீதி தவறாததால்
மனுநீதிச் சோழன் வாழ்கவென வாழ்த்துறோம்
சமநீதியே சரிநீதியென்ற அசரீரிவார்த்தையால்
நீதிதேவதையும் நெஞ்சை நிமித்தியனுசரித்தாள்.

சீடன் 1 : ஆகா! ஆகா! அற்புதம்!.... அற்புதம். இப்படியொரு மன்னன் இருந்திருக்கின்றாரென்பது திண்ணம்.


noolaham.org | aavanaham.org

சீடன் 2 : பந்தபாசம் பார்க்காது சொந்தமகனையே மனுநீதி காத்து சரிநீதி செய்த தயாள குணசீலனை தேவர்கள் கூட சரிநீதியென ஏற்று வாழ்த்தினது, வையகத்தில் வாழும் அனைவருக்கும் அறிவுரை புகட்டியுள்ளது.

சீடன் 1: சுட்ட மட்டிச் சுண்ணாம்பு குரு இவளவு தெளிவாகச் சொல்லியும் நீயே, இப்படி விளங்கிக் கொண்டா? மற்றவங்க எப்படிடா விளங்கிக் கொள்வாங்க. நீரொழுகிப் பாலொழுகுமாறு என்பதை, இன்னுமொருக்கா தெளிவாகச் சொல்லுங்க குருவே. இவண்ட விளக்கத்தை சரியோ என்று விளங்கிடுவாங்க.

குரு : ஏழை, பணக்காரரென்று பாகுபாடுபாராது மண்ணுயிர்கள் எதுவாயிருந்தாலும் பக்கச்சார்பிலாது சரிநீதி செய்ய தவறினால், ஒரு பெண்ணில் ஒரு பிள்ளைக்கு ஒரு பக்கம் நீரும், மறு பிள்ளைக்கு மறுபக்கம் பாலும் சுரப்பது போன்ற அநீதியாகும். எனவே, அவ்வாறு செய்யாது இருபிள்ளைகளுக்கும் பாலே சுரந்தால் அல்லது நீரே சுரந்தால் சமநீதி சரிநீதியாகும். அது போல, எவ்வுயிர்க்கும் சமநீதி செய்ய வேண்டும் என்பதே கருத்தாகும்.

சீடன் 1: நெற்றிக்கண் திறந்தாலும் குற்றம் குற்றமே அதுதான் சமநீதியதுவே சரிநீதியாகும்.

சீடன் 2 :நீ வத்தவக்கா களவெடுத்து பிடிபட்டு கட்டிவைக்க உங்கட அம்மா, அப்பா வெல்லாம் போய்க்கத்திகதற அவிட்டுவிட்டதும் சரிநீதியா?

குரு : நேரத்த இழுத்தடிக்கவென்றே நீங்க இரண்டு பேரும் இங்க வந்திருக்கீங்க எல்லாவுயிர்களும் ஒன்றே நடுவுடமை தவறாது, சரிநீதியே சமநீதியென்று தலைமேல் கொண்டு, நாட்டில் எல்லோரும் கடைப்பிடித்து நடக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு,

விருப்புடனே வந்திருந்து
வில்லுப்பாட்டு கேட்டுமகிழ்ந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் நாங்கசொன்னோம்
வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

2013ல் மட்டக்களப்பு வலயத்தில்
2ம் இடம்பெற்றது.

## 8. சித்திர புத்திரன்

காப்பு

"ஆனைமுகமும் ஒரு கொம்பும்
அகன்ற மார்பும் சிறுகண்ணும்
பானை போன்ற பெருவயிறும்
பாங்கான பூனூல் அழகும்
தானே தோன்றி என் உள்ளத்தில்
தயவாய் நிற்கும் விநாயகரே!
நானே உன் பாதம் தொழுதேன்
நாவில் உதிப்பாய் கணபதியே!

அவையடக்கம்

தந்தனந்தோம் என்று சொல்லியே
வில்லினின் பாட வில்லினில்பாட
வரம் தந்தருள வேண்டுமையா விநாயகரே-அருள்
தந்தருள வேண்டுமையா விநாயகரே.
மஞ்சையேறு மயில் வாகனனே தஞ்சமென்று
உன்தன் தாள்பணிந்தோம்
கஞ்சமலர் பதம் பணிந்தோம் காத்திடு கந்தவேளே
சிந்தையிலே செறிந்திருக்கும் செல்வா
நகருறை சிவனேஸ்வரனே
வந்தெங்களை ஆதரித்து வல்லமை தந்து
காத்தருள் வாய்! காத்தருள்வாய்!

குரு: இங்கு பெருந்திரளாய் கூடியிருக்கும் பக்தகோடிகளே! பெரியோர்களே! தாய்மார்களே! தந்தைமார்களே! தம்பிகளே! தங்கைகளே! குழந்தைகளே! உற்றோர்களே! மற்றோர்களே!


noolaham.org | aavanaham.org

குழு : வில்லிசையைக் கேட்கவென்று,
விருப்புடனே வந்திருக்கும்
உங்க அனைவருக்கும் அன்பார்ந்த
வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

குரு : இவ்வில்லிசையில் எதைச் சொல்லப் போறிங்க என்றும், எந்தக் கருப்பொருளை வைத்து உருவாக்கியுள்ளீர்கள் என்று உங்கள் ஒவ்வொருவர் அகமும் அங்கலாய்க்கின்ற விதம் எங்களுக்குப் புரிகின்றது. கொஞ்சம் பொறுத்திருங்கள் சிலவார்த்தைகள் செப்பிடலாமென நினைக்கின்றேன்.

சீடன்1 : செப்பப் போறீங்களா? என்ன குருவே இலக்கணச் சொல்லப் போட்டு குழப்புறீங்க!

சீடன்2 : இலக்கணமுமில்ல! தலைக்கணமுமில்ல செப்புதல் என்பது சொல்லுதல் என்று பொருள் இது இந்தக் கலட்டிக்கா தலையனுக்குப் புரியாது? நீங்க செப்புங்க குருவே

குரு பாட்டு : (கோவலன் கதைமெட்டு)
ஆ......, விரதங்களிலே எல்லாம், மிகச்சிறந்த விரதம்
ஆ......, அது இந்துக்கள் நோர்க்கும் இன்பமான விரதம்
ஆ....., சித்திரா பௌணமி, சித்திரகுப்தர் விரதம்

குரு : அதை எல்லோரும் நோர்க்கலாம், ஆனால், நோர்க்கும் முறை மாறாமல், அப்போதுதான் விமோசனம் கிடைக்கும்

சீடன்1 : அப்படிண்டா, கதையைச் சொல்லுங்க குருவே

சீடன்2 : ஏய்! அவசரக் குடுக்க... குருதான் சொல்லப்போறாரு. கொஞ்சம் பொறுமையா, கவனமாகக்கேள்.

குரு : நீங்க, கட்டிப் பிரளாதீங்க, நான் சொல்லுறன் சொல்லுறன்! நாளை விடிஞ்சா சித்திரா பௌர்ணமி என்று எல்லோருக்கும் தெரியும். சித்திரைச் சித்திரைச்கு மறுநாள் இந்த சித்திரா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌர்ணமி தினம், இந்துக்களாகிய நமக்கு நல்லதொரு சுப தினமாகும். இத்தினம் தான் சிவனுக்கும் - உமைக்கும் திருமணம் நடந்த தினமுமாகும்.

சீடன்1 : ஆகா? ஆகா? அம்மை, அப்பனின் திருக்கல்யாண நாள் அப்ப, அது அற்புதமான நந்நாள், பொன் நாள்.

சீடன் 2 : என்ன தம்பி, அடுக்குமொழி அண்ணா என்ற எண்ணமா! இவன் கிடக்கிறான் துடுக்குப் பயல் நீங்க செப்புங்க குருவே.

குரு : அது மட்டுமா, இம்மையில் புத்திரபாக்கியத்தோடு,மறுமையில் முத்தியின்பமும் கிடைக்கின்ற பொன் நாள் அந்த நன் நாளில் சித்திரபுத்திர நாயநாரின் வரலாற்றை சுருக்கமான முறையில், வில்லிசை மூலம் சொல்வது சாலச் சிறந்தது. சந்தர்ப்பத்துக்கும் ஏற்றது என நினைக்கின்றேன்.

பாட்டு : (மட்டக்களப்பில்)
சித்தரி புத்திரா நோன்பை
நோர்த்தால் துன்பம் தொடர்வதில்லை
பக்தியுடன் நோர்ப்போர்க்கு
பழவினை என்றும் பயில்வதில்லை.
அந்தப் பெருமை மிக்க, சித்திர புத்திர நாயனாருடைய வரலாற்றைச் சுருக்கமாகக் கூறப்போகின்றேன்.

சீடன்2 : ஆமாங்கோ! அவளவு நீட்டிச் சொன்னா! சனங்களும் தூங்கிடும்.

குரு: ஒருநாள் கயிலயங்கிரியிலே பெரிய கூட்டம், முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்து நாற்கோடி ரிஷிகளும், மற்றும் தபோதனர்களும் நிரம்பி அந்த இடமே அல்லோக கல்லோலப்பட்டது.

சீடன்2 : என்னவா இருக்கும் அவளவு கூட்டம் கூட?

சீடன்1 : கூட்டாளிக்கு இது தெரியா? அங்கேயும் சித்திர வருடத்திற்கு


noolaham.org | aavanaham.org

விளையாட்டுப் போட்டி நடத்திருப்பாங் கெண்டு சொல்லுறன் சரிதானே குருவே.

சீடன் 2 : ஓ எல்லாம் தெரிந்த பெரிய இவரு, சொல்லித்தாரு துண்டால தொறச்சிக்க, இந்தக் கூட்டத்திற்கெல்லாம் தலைவர் யார் குருவே!

குரு : எம்பிரான்! நமையீன்ற தம்பிரான், சகல சீவராசிகளுக்கும் படியளக்கும் பரமேஸ்வரன், கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும், புல்லுக்குள் இருக்கும் பூச்சிக்கும் ஏக காலத்தில் படியளக்கும் ஏகாம்பரன்.

சீடன் 2 : அவர் எப்படியிருப்பார் குருவே!

குரு பாட்டு :

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமின் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற்பாதமும் காணப்பெற்றால்
மனிதப்பிறவியும் வேண்டுவதேயிந்த மானிலத்தே;;

இத்தகைய சர்வ வல்லமை பொருந்திய எம்பெருமான், பார்வதி சமோதராய் அங்கு வீற்றிருக்கின்றார். அங்கு, வெள்ளமென வீற்றுருப் போரைப் பார்த்து, "அண்ட பகிரண்ட மெலாம் பாவ, புண்ணிய பலன் தெரிய வேண்டி, நம்ம குமார்கள் இருவராலும் ஆகவேண்டிய காரியங்கள் அனேகம் இருப்பதனால், மற்றும் இங்குள்ள பேர்களில் ஆகத்தக் கவர்கள் யாருமில்லையென்று, சுவாமி பரமேஸ்வரர் பார்வதியை தங்கப் பலகையை எடுத்துவரச் சொல்லி, உருவமைக்க! அதை உமையாள் கண்டு அதிசயிக்க! கருவுருவாய்ப் பேசும்படி கிருபைபயிக்க வேண்டுமென்று பலரிருக்க! அப்படியே கிருபை செய்து மந்திரம் உபதேசிக்க, சித்திரத்தில் உள்ள புத்திரன் சிறுவனாக அவதரிக்க, சித்திரத்திலுதித்த சிறப்பான புத்திரனே? வாராய் மகனேயென்று, மலர்க்கரகள் நீட்டி உமையழைக்க! கருணை வழி நோக்காலே கையில் தவழ்ந்தனனே பாலகனும் சித்திரபுத்திரன் எனச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன் நாமஞ்சூட்ட, பூமாரி பொழிந்து ஆரவாரித்தனர் புடை சூழ்ந்திருந்த தேவர்களே!

சீடன்2 : இந்த தேவர்களுக்கு மலர் தூவுவதும், ஆரவாரிப்பதும் வழக்கமாப் போச்சி.

குரு : இவ்வாறாக, அன்றிலிருந்து இந்த நாயனாரே மண்ணின் பாவ, புண்ணியக் கணக்கை ஈசனுக்கு அறிவிப்பவராக, கயிலயங்கிரியில் கரும மாற்றத் தொடங்கியதால்,

பாட்டு : சித்திரத்தில் உருவெழுதி உருவெழுதி
சிறந்திடப் பிறந்ததாலே பிறந்ததாலே
சித்திரபுத்திர நாமம்பெற்று நாமம் பெற்று
புத்திரரை நாமும் சிந்தையிலே சிந்தையிலே
நித்தமும் நிறுத்திடுவோம்! நிறுத்திடுவோம்!

இது, இவ்வாறு இருக்கின்ற வேளையிலே இந்திரலோகத்திலே, இந்திரனும் மனைவி இந்திராணியும் பண்ணாத தவமில்ல, போகாத இடமில்லபாக்காத வைத்தியமுமில்ல.

சீடன்1 : அடேயப்பா! என்னத்துக்குக் குருவே? இந்திரலோக ராசா, ராணி எடுபிடிக்கு ஆட்களோ ஏராளம்? ஏராளம், அப்படியிருக்கு அவர்களுக்கு எண்ணகுறை? சம்சார மிருந்தும், மின்சாரம் இல்லையென்ற குறையா?

சீடன்2: ஏன்? இங்கிருந்து கொழுவி இந்திரலோகத்திற்கே இணைப்புக் கொடுக்கப் போறாயா? உன்ர கொழுவுற புத்தி உன்ன விட்டுப்போகாது நீங்க கதையச் சொல்லுங்க குருவே.

குரு பாட்டு :

எத்தனை செல்வ மிருந்தாலும் - அது
அத்தனையும் சேய்க்கு நிகராகுமா?
எவளவு சொத்துப்பத்திருந்தாலும்
அவை தாய்க்கு மகனாகிடுமா?

சீடன்2 : ஐயோ? பாவம், இதுவா விசயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு : பெருங்குறை, எத்தனை செல்வங்கள் இருந்தாலும் குழந்தைச் செல்வத்துக்கு ஈடாகுமா? பார்த்தீர்களா? தேவர்களையே விதி விட்டு வைக்கவில்லை. எப்படி நம்ம மானிடர்களை விட்டு வைக்கப் போகிறது. இந்தக் காலத்தில் பிள்ளைவரம் கேட்டு, ஆல மரத்த சுத்துறாங்க, அரச மரத்த சுத்துறாங்க, அதுமட்டுமல்ல தேசம் விட்டு தேசம் போய், அவதார புருஷரை எல்லாம் வணக்கிறாங்க.

சீடன் 1 : ஆமா! ஆமா, அதெண்டா உண்மை தான்.

குரு : இதே போலத்தான், இந்திரனும் இந்திராணியும் எம்பெருமான் சங்கரனை நினைத்து ஆளுக்கொரு திசையில் இருந்து தியானித்து தவம் இயற்றுகின்றார்கள்.

சீடன்1 : இந்திரன் சரியான முறையில் தவம் செய்தானா குருவே, ஏனென்டா, சபல புத்திகாரன் என்று சொல்லுறாங்களே.

குரு: சரியாகச் சொன்னாய், இந்திரனுக்குப் பெண் என்றால், அதிலும் அழகான பெண்ணென்றால் அதிக சபலம்.

சீடன்1 : அடேயப்பா! அப்ப இந்திரனே ஆசப்பட்டிருக்கா னென்றால், இப்ப, நம்மட பொடியன்கள் ஆசைப்பட்டா தப்பா.

சீடன்2 : இந்தச் சந்தர்ப்பத்த உன்ர சபலத்துக்கும் பயன்படுத்தாத? சொல்லுங்க குருவே.

குரு : ஒரு நாள், கௌதம முனியின் பத்தினியாகிய அகலிகை மீது ஆசை கொண்டான்.

சீடன்1: ஆகா... அபச்சாரம்! அபச்சாரம்! பிறர்மனை மீதா ஆசை கொண்டான்?

குரு : ஆமா! கௌதம முனியின் ரிஷிபத்தினியைக் கண்டு, முற்றும் துறந்த முனிவனுக்கா இந்த மோகனாங்கி. என் வாழ் நாளில் இப்படி ஒரு அழகியைக் கண்டதில்லை என்று மயங்கி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டு : பால் பொழியும் வெண்ணிலா இவள்தானா?
பார்வீதி பவனிவரும் தேரா?
வானில் தோன்று வானவில் நிறந்தானா?
வாரியணைத்தின்பம் தருவாளா?
என்று ஏங்கி, நடு இரவு வரை பொறுத்திருந்த
இந்திரன், கௌதம முனியின் பத்தினி சயனித்த வேளையிலே,
அவர்களுடைய ஆச்சிர மத்திற்குச் செல்லுகின்றான்.

சீடன்1 : அப்புறம் என்ன ஆச்சி குருவே.

குரு : முதலில் முனிவரை வெளியில் அனுப்பவேண்டும். பின்னர் அகலிகையோடு ஆலிங்கணம் பண்ணவேண்டும்.

சீடன்1 : கூட்டாளி இதைக்கேட்டுக எனக்கு உடம்பெல்லாம் புல்லரிக் குதுடா.

சீடன்2 : புல்லரிச்சா போய் புளுகுநாவ குளத்தில பாய்.

குரு : உடனே அவனுக்கு ஒரு புத்தி புதிதா உதிக்கின்றது.

சீடன்2 : என்ன யுக்தி குருவே,

குரு : கோழி கூவுவது போல் கூவினால், முனிவரை அனுப்பி விடலாமென நினைத்தான்.

சீடன்1 : இந்திரனுக்கு தந்திரப்புத்தி யதிகம் தான்

குரு : கோழிபோல் கூவினான் இந்திரன்,அதுவரை ஆழ்ந்த நித்திரைசெய்த கௌதமர் விழித்து கோழி கூவிவிட்டதே என்று, அவசர அவசரமாக எழுந்த கங்கை நதியை நோக்கி ஓடினார்.

சீடன்2 : பிறகு என்ன நடந்தது குருவே.

குரு : முனிவர் போல் வேடம் தாங்கிய இந்திரன், அகலிகையிடம் செல்ல, ஆச்சரியமடைந்த அகலிகை


noolaham.org | aavanaham.org

பாட்டு : வாராய்! வாராய்! என் மன்னவரே வாராய்!
தாராய்! தாராய்! வளமான வாழ்வு தாராய்!
இன் நேரம் என் தனற்கு இன்பமதை தாராய்!
கண்ணாளா என்னோடு வந்து சேராய்!

என்று வரவேற்க இந்திரன் தனது இச்சைக் கதையை கொச்சை மொழியில் கூறினான்.

சீடன்1 : அசிங்கம்! அசிங்கம்! பிறகு குருவே!

குரு : அகலிகை, உடனே வெருண்டெழுந்து, கண்களில் கனல் பறக்க, இந்திரனை நோக்கி, பேடியே கொண்டவளிருக்க, கண்ட பெண்ணைத் தீண்ட நினைக்கும் உனக்கு மகனின்றி மடிந்து விடுவாய் என்று சபித்தாள்.

சீடன்2 : சாபம் பலித்ததா குருவே.

குரு : அதத்தானே சொல்லப் போறன். இதற்கிடையில் கௌதம முனிவர், அங்கு கங்கை உறங்குவதைக் கண்டு ஆச்சரிய மடைந்து, நந்தவனம் சென்று பார்க்கின்றார். மலர்கள் எல்லாம் மொட்டவிழாது இருந்ததைக் கண்டு என்ன நடக்கின்றது என்பதை ஞானத்தால் அறிந்தார்.

சீடன்1 : ஆகா! அப்புறம்.

குரு : முனிவர் கண்கள் சிவக்கின்றன. கோபம் கடல் போல் பொங்க ஆச்சிரமத்தை நோக்கி வருகின்றார். இந்திரன் பூனையுருக் கொண்டு வெளியேறுவதைக் கண்ட கௌதமர்,யாரடா? என்று இடித்துக் கேட்க, வருஷப் பலனை சாத்திரம் கேட்க வந்த இந்திரன் நான் என்றான். தம்தாரம் விட்டுப் பல தாரம் கேட்குமுனது அங்கமெலாம் ஆயிரம் பெண்ணகமாய் வெடிக்கட்டும் எனச் சாபமிட்டார்.

சீடன்1 : ஐயோ! பாவம்! பாவி இந்திரன் மனம் வருந்துகின்றான். இப்ப மனம் வருந்தி என்ன பயன்? இப்பாவம் தீர வழியில்லையா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாபாவியாகி விட்டேனே. என்னை மன்னித்து இச்சாபத்தை மாற்றி விடுங்களையா? என்று அலறுகின்றான், பதறுகின்றான்.

பாட்டு : என் மேனியெல்லாம் பார்க்கையிலே என்ன கோலமையோ!
என்னை எவர் பார்த்தாலும் கேவலம் தானையோ!
அடுத்தவன் பொருளில் ஆசை கொண்ட பாவம்
அங்கமெங்கும் வந்ததே அவமானக் கோலம்!

சீடன் 1 : கேட்க பரிதாபமாகத்தானிருக்கு.

குரு : இந்திரன் வருந்தியதை கண்ட கௌதமர் ஆணவத்தால் அறிவழிந்த இந்திரா! நாளும் தாரணியில் மாலவனை பூசை செய்து வழிபட்டால் ஆயிரம் யோணியும் ஆயிரம் கண்களாக மாறும் என்றபடி, வழிபட மாறியது.

சீடன்1 : இதுசரி அப்புறம்.

குரு : கௌதம முனிவர் அகலிகையை அணல் பறக்கப் பார்க்கின்றார்.

சீடன்2 : அகலிகை அம்மாவுக்கும் சுபாமிடப் போறாரோ?

குரு : ஆமா! உடனே, கொண்டவனுக்கும், கண்டவனுக்கும் வித்தியாசமறியாத நீ! கல்லாய்ப் போகக் கடவாய் என சாபமிட்டார்.

சீடன்2 : ஐயோ பாவமே! அதற்கு விமோனசனமில்லையென்றாரா குருவே!

குரு : விமோசன மளியுங்கள் என்று அழுத அகலிகையைப் பார்த்து அரக்கர் குலமழிக்க மாயவனார் ரவிகுலத்தில் வந்துதித்த தசரதன் பாலனாய் பிறந்து தடாதகையை சங்கரித்து, தனிவேள்வி முடிக்க வரும் காலை அகலுமே உன்சாபம் என்று கூறினார்.

இப்படியான சபல மனம் படைத்த இந்திரனின் தவ


noolaham.org | aavanaham.org

வலிமையெல்லாம் தோல்வியடைந்தது. அதனால், இந்திராணியினுடைய திடசங்கற்பமும் தவவலிமையும் காருண்ய சீலராண உலகத்து நாயகன் உள்ளத்தை தொட்டது.

சீடன்1 : அப்போ, உலகத்து நாயகனான சிவன் இரங்கினாரா குருவே.

குரு : ஆமாம்? இரக்கம் கொண்ட இறைவன் சித்திர புத்திரரைப் பார்த்து, தெய்வேந்திரன் மனம் திருந்தி மீண்டும் இந்திராணியுடன் இரவும் பகலும் தவம் இயற்றுகின்றான். அவனுக்கு மகனொன்று அருள வேண்டும் என்று கூற சித்திர புத்திரரோ

பாட்டு : (காவியமெட்டு)
"எல்லோருக்கும் படியளக்கும் இறையோனே
எக்காலத்திலும் இந்திரன் என்பவற்கு
நிச்சியமாக மகப்பேறு யில்லையென்று
கச்சிதமாக கணித்து எழுதியுள்ளதே ஐயா;
என்று கூறினார்.

சீடன்2 : அப்ப, சிவன் என்ன சொன்னார் குருவே

குரு : இந்திரனுக்கு அருள் பாலிக்கும் பொருட்டு காமதேனுப் பசுவை, அவன் மனைக்கு அனுப்பியுள்ளேன். வளமையாக காமதேனுப் பசு நீரருந்த சம்பு மகா பொய்கைக்கு வரும்போது, நீ தாமரைப் பூ வடிவெடுத்து அதன் வாயில் நுளைந்திடு என்று கூறி,

பாட்டு : (தந்தானம் தனம் தான தானினா தானத் தானின)
சித்திர புத்திரா நீயுமே
தாமரைப் பூவாய் தாமரைப் பூவாய்
தான்வடிவம் தாங்கிச் சென்றுமே
இந்திரன் வீடும் உன்தன் வீடுதான்
சென்று மகனாய் சென்று மகனாய்
மீண்டும் என்னிடம் வந்து சேருவாய் என்று விடை கொடுத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன்1 : இனி, இந்திரன் வீட்டில் சந்தோசம் தாண்டவமாடு இல்லையா? குருவே.

குரு : இவ்வாறு, காமதேனுப்பசு கருவுற்றது, ஏழை எளியோர்களுக்கு கெல்லாம் இந்திரன் செல்வங்களை வாரி வாரிக் கொடுத்தான் இந்திராணியும் மகிழ்ச்சியால் திளைத்தான்.

சீடன்2 : இந்திரனும் பாரிவள்ளலாயித்தான் போல, பிறகு,

குரு: காலம் கனிந்தது, காமதேனு மகனை ஈன்றது. இந்திராணி மகளை வாரியணைத்து வகை வகையா முத்தமிட்டாள்.

சீடன்1 : ஐயோ! எனக்கும் முத்தமிட வேணும் போலிருக்கு

சீடன்2 : இந்திரனையா? நீங்க சொல்லுங்க குருவே

குரு : இனி இந்திரன் வீட்டில் ஆண்குழந்தை பிறந்தால் கேட்க வேணுமா?

சீடன்1 : ஆமா! ஆமா! சந்தோசத்தால், தங்கத்தொட்டில் கட்டி தாலாட்டினார்களா குருவே?
நண்பா! எப்படி பாடினார்கள் என்று நீ பாடுவாயா?

சீடன்2 : ஏன் நான் பாடி நீ தூங்கவா!

சீடன்1 : தூங்கல, தூக்கில தொங்காம விட்டாசரி.

சீடன்2 : என்னடா கிண்டலா?

சீடன்1 : இல்ல! இந்தாங்க சுண்டல்.

குரு : இந்த நேரம் எனக்கது ஒத்துவராது குளத்தால போக்கவேண்டி வரும்.

சீடன்2 : சரி, தாலாட்ட பாடுங்க குருவே!


noolaham.org | aavanaham.org

குரு : ஆராரோ! ஆராரோ! ஆரிராரிரோ! ஆராரோ!
தங்கமே! சிங்கமே! ஆரிராரிரோ! சந்திரரே! ஆரிராரிரோ!
பிள்ளையில்லா எங்க வீட்டிலே கிள்ளை மொழி பேசுகிறாய் பாட்டிலே இவ்வாறு தாலாட்டி, பாலூட்டி சோறூட்ட நாளொரு மேனி, பொழுதொழு வண்ணம் வளர்ந்து வந்தார் சித்திரபுத்திரர். வளர்ந்து வந்த வேளையிலே வேதாகமம், அப்பியாசம் பண்ண, உபநயணம் செய்து, குருவிடம் கல்வி பயின்று, வித்தகனாகியபின் தாய், தந்தையரைப் பணிந்து வணங்கி தேரின் மேலேறி வந்து கயிலயங்கிரி பரமேஸ்வரர், பரமேஸ்வரியை கண்டு பணிந்து சிந்தை மகிழ்ந்தார். பார்வதியும் மகனைக் கட்டியணைத்து கடமையை செய்யும் படி பணித்தார்கள்.

சீடன்2 : சித்திர புத்திரர் விரதம் பிடிப்பதால், என்ன பயன் குருவே

குரு : சொல்லுகின்றேன். பூதலத்திலே செட்டியம்மா என்றுசெல்லமாக அழைக்கப்படுகின்ற தர்மராசாவின் பத்தினி அமராபதி செய்யாத தான தர்மமோ? பூசை புணர்க்காரமோ கிடையாது.

சீடன்1 : அப்பதான் தர்மத்தில் கர்ணணை மிஞ்சிடுவர்! தவத்தில் இந்திரன் இந்திராணிய மிஞ்சிடுவா? இல்லையா குருவே.

குரு : ஆமா! ஆனால் செட்டியம்மா சித்திரபுத்திரரை நினையாது, விரதம் அனுஷ்டித்ததால், பலதுன்பதுயரங்கள் பட்டார். உடனே உமாதேவி யாரோ உண்மையை எடுத்துரைத்து, செட்டியம் மாவை சித்திரபுத்திரர் விரதம் நோர்க்க வைத்து, சிவப்பேறடைந்தார் செட்டியம்மா.

எனவே அன்பர்களே பெரியோர்களே இக்கதையின் மூலம் சித்திரபுத்திரர் விரதச் சிறப்பு உங்களுக்கெல்லாம் விளங்கியிருக்கும் என நினைக்கின்றேன்.

பாட்டு : வாழியவே! வாழியவே!
வாழியவே! வாழியவே!
விருப்புடனே வந்திருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லுப்பாட்டு கேட்டிருந்து
ரசித்தவங்க எல்லோருக்கும் வணக்கம்!
எங்களை மதித்த வங்க எல்லோருக்கும்
வணக்கம்! வணக்கம்! வணக்கம்!.

1987 மாவட்ட மட்டம்
1ம் இடம்.

## 9. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்

காப்பு

"விநாயகரே! விநாயகரே! விக்கினம் தீர்க்கும் விநாயகரே!
இக்கணமே! இக்கணமே! எங்களுடன் இருந்து
வில்லிசைக்கும் வல்லமையை எல்லோர்க்குமருளி
நல்லருள் நல்கிடுவாய் செல்வ விநாயகரே

அவையடக்கம்

தந்தனத் தந்தனத் தோமென்று இங்கே
வந்தனம் சொன்னோம் சபையோரே முன்னே
விந்தை புரிந்து வில்லிசைத்து தந்திடும் பாடல்
தன்னை (இரசித்து) சிந்தித்து சீர்தூக்கி மதிப்பீடு
செய்ய வந்திருக்கும் மதிநிறை குழாமே வணக்கம்!
முந்தியிருந்து வாய்ப்பளித்தோர்க்கும் தந்தோம்
பலமுறை வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

பிரதான பாத்திரம் (குரு)

நாங்கள் எல்லோரும் இங்கே ஏன் கூடியிருக்கோம்
தெரியுமா?

1. ஓ! தெரியுமே சக்தி தொலைக் காட்சியில் நம்பிக்கை
நாடகம் பார்க்கத் தானே!

2. முட்டாள்! முட்டாள்! சதா சக்திதான் கக்தியே அறுப்பான்
அவன் கிடக்கிறான்


noolaham.org | aavanaham.org

1. அ. ஆ அதச் சொல்லுறயா? இன்டைக்கு என்ன கதை சொல்லப் போறீங்க?

குரு : அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று என்பதை விளக்கும் ஒரு கதை

சீடன்1 : எனக்கு அந்தக் கதை தெரியும் ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா அடிச்ச கதை அல்லது ஈராக்க அமெரிக்கா புடிச்ச கதை!

சீடன் 2. :வந்து வாச்சாயே எங்கட குழுவில வடிவேலுவுக்கு கோவைசரளா மாதிரி குருவே நீங்கள் சொல்லுங்க

குரு : "சிலம்பு காட்டிய நீதி; என்ற தலைப்பில் ஒரு கதையைச் உங்களுக்கு சொல்லப் போறன்

சீடன்1. : இப்பத்தைய சினிமா உலகில் படத்துக்குப் பெயர் வைக்கிறதுக்கே திண்டாட்டந்தானுங்க! இது மிகவும் நல்ல புதிய புதிய தலைப்பாயிருச்கே எனக்கு இப்பவே ஓப் போடவேணும் போல இருக்கு

சீடன்2. : போடறத்துக்கு வந்தது முடியல்லப் போல

1. முத்தையா முரளிதரன் இலங்கை கிரிக்கட் அணிக்கு சத்தாகவும் சொத்தாகவும் வாச்ச மாதிரி! நீங்க போட்டுக் குடுக்கிறதுக்கு.

குரு : உங்க சண்டையை ஊரிலே போய் வைத்துக் கொள்ளுங்க இந்தியாவிலே பல நாடுகள் உள்ளது என்று உங்களுக்குத் தெரியும் அதிலே ஒரு நாடு பாண்டி நாடு! பாண்டி நாடு,

சீடன் 1. :நம்மட நாடு மாதிரி சமாதானத்துக்காக போர் நடாத்தி சனங்களைச் சாகவைச்சு, இப்ப சமாதானம் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டு, காலை வாரிக்கொண்டிருக்கிற நாடோ!

சீடன் 2.: அமுக்க வெடிமாதிரி படக்குப் படக்குகெண்டு வெடிச்சி மனித உறுப்புக்களை அறுக்காம சும்மா இருந்து கேளு


noolaham.org | aavanaham.org

குரு : பாண்டி மன்னன் வெண்குடைக் கீழ் பண்புடனே
கொலுவிருந்து! மாபெரிய மதுரைதனை மணிவிளக்காய்
ஆக்கி! பால் பொளியும் வெண்நிலவாய் தினம்
வாழ்த்துரைத்து! வணக்கம் செய்யும் அரச மன்னர்
கருணையினால்! அனைத்துயிரும் வாழ்ந்திருக்கும்
பாண்டி நாடு! முத்துக்குவித்து முழு இடமுமே
ஜொலிக்கும், சித்தம் நிறைந்து தினம் கொள்ளும்
செல்வம் மிக்க நாடு!
ஏதிலார்க்கு கொடைகொடுக்கும்
ஏற்ற செல்வம் உள்ள நாடு!
வான் பொலிந்து, நீர் நிறைந்து விளையும் நாடு!
வயல் வடிந்து செந்நெல் குவிய
மன்னன் ஆணையை நாம மறக்கலாமா? என்று
திரைகடலோடினும் வணிகர் குலம்
திரவியம் சேர்த்தது
முடிவில்லா முத்தமிழும் நித்தம்
சத்தாக விளங்கும் நாடு முழங்கும் நாடு
மக்களெல்லாம் மனநிறைவால்,

சீடன்2: ஆ. நாடா இது திருவுடை வீடு

குரு : பாண்டி நாட்டின் அரசாங்கத்தின் அந்தப்புரத்தில் பாண்டிய
மன்னன் கோப்பெருந்தேவியருடன் ஊடலில் ஈடுபட்டுக்
கொண்டிருக்கும் வேளை

சீடன்2: மன்னவா! மகாராசா!

சீடன் 1: யாரது சிவபூசையில் கரடி புகுந்தமாதிரி யார் நீ?
அந்தப் புரத்தில் அனுமதியின்றி நுழைந்து,

குரு : சிலம்பு திருடிய கள்வன் - தேவி (2)
சிலம்பு திருடிய கள்வன்
நூபுரம் சுட்ட திருடன் - அரசி
நூபுரம் சுட்டதிருடம்
மந்திரத்தால் மாயமாக,


noolaham.org | aavanaham.org

தந்திரத்தால் அபகரித்த
சிலம்பு திருடிய கள்வன் - தேவி (2)
சிலம்பு திருடிய கள்வன்
வந்து பட்டான் ஆமா வசமாகப் பிடித்து
மன்னன் ஆணையை நாம் மறக்கலாமா? என்று
பாண்டிய அரசாங்கத்தில் உத்தியோகம் பார்த்து செப்பனிடக் கொடுத்த பாண்டிமாதேவியின் காற்சிலம்பைத் தொலைத்து விட்டேன் என்ற குற்றத்திற்காக கூடலனால் எச்சரிக்கப்பட்டு பழிசுமத்தியிருந்த பொற்கொல்லன் வஞ்சியபப்பந்தன் கூற,

1. என்ன? சற்று நாட்களுக்கு முன்பு காணாமல் போன பாண்டிமாதேவியின் காற்சிலபைச் சுட்ட கள்வனா? எங்கிருக்கிறார்? காவலர்களே!! இங்கே வாருங்கள்!

தேவியுடை திருச்சிலம்பைத் திருவடியன்
அவனேயென்றால்,
வாரியிழுத்தவனை வாளினால் வெட்டி விட்டு
வரிச்சிலம்பை நொடிப் பொழுதில் எடுத்து வாரும்!
என்று மன்னவன் ஆணையிட்டான்!

ஊடலில் இருந்த கூடலன் ஆராய்ந்து பாராமலே அறநெறி தவறி சிந்தை தடுமாறி செய்வதறியாது ஆணையாக உளறிவிட்டான், உத்தரவிட்டுவிட்டான், காவலர்கள் இருவரும் வந்து கோவலன் மதி முகத்தைப் பார்த்தார்கள் இவன் தவறு செய்தவனா? திருடியவனா? தப்புச் செய்தவனாகில் தப்பியோட வல்லவா பாத்திருப்பிப்பான்? இந்த வஞ்சிப்பத்தன் தனது தவறை மறைக்க இப்படி பெரியபொய் சொல்லியிருக்கிறானா? திருடிய கள்வனென்றால் திண்ணையிலேயே உட்காந்திருப்பானா? பாவம் இவனைப் போய் வெட்டிவிடுவதா? நாம் இருந்தாலும் என்ன செய்வது மன்னன் ஆணையை நாம் மறுக்கலாமா? என்று பின்புறமாக இருந்து கொண்டு,

வாளை உருவி வீசிட்டார்.
காளை உடல் கணப்பொழுதில் பிளந்ததுவே
காளிகோவில் பூசாரி கடாவதனை வெட்டியது போல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாளை போல சிரித்த முக சீராளனும் சீர்குலைந்தான்
பொன்மீது வைக்குந்தலை மண் மீது கிடந்தது
கண்ணகை காதலன் தலை செந்நீரில் உருண்டது

குரு : காவலர்கள் கோவலனை இரண்டு துண்டாக வெட்டி விட்டார்கள் இந்தச் செய்தி காட்டுத்தீ போல மதுரை மாநகரமெங்கும் பரவியது.

மோர் விற்பதற்காக தெருவிலே வந்த ஆயர் குலப் பெண்ணொருத்தியின் செவிகளிலும் இச் சேதி எட்ட தனது கையிலிருந்த மோர்ப்பானையை வீசியெறிந்தாள். அது அந்தரத்திலே கீழே விழாமல் இருந்தது அது சுந்தரியாள் கண்ணகையின் பத்தினித் தன்மையைப் பறை சாற்றிற்று. ஓட்டமும் நடையுமாக வடகரை நோக்கி ஓடி வந்த அப்பெண் அக்கா! கண்ணகையக்கா! மதுரைமாநகரில் அரச சபைக்கு முன்பாக உன் கணவன் கோவலரை வெட்டி விட்டார்கள் அக்கா! என மூச்சிரைக்கச் சொன்னாள். என்ன? சொல்கிறாய் நீ? என்று பதறியழுத கண்ணகை படீரென்று கீழே விழுந்தாள். விரைந்தெழுவாள் ஐயோ அத்தான் என் வாயாலே சொல்ல உங்களுக்கா இந்த நிலை வரவேண்டும் மதுரைமாகரில் வெட்டுண்டா சாகவேண்டும் எப்படியெல்லாம் என்னோடு வாழ வேண்டும் என்று எத்தனையோ கனவுகளுடன் காவேரிப்பூம் பட்டினம் நீர்த்து என்னையும் அழைத்து வந்தீர்கள் என்னகொடுமை? என்ன அநீதி உன்மையிலே நீங்கள் கள்வனா? இந்தப் பழிச் சொல்லுடனா நீங்கள் மாழ வேண்டும். ஆதவகுலப் பெண்களே வாருங்கடி, என் கதையை கேளுங்கடி, என்கணவன் கள்வனாம்டி.

கன்னக் கோல் வைக்கும் கள்வனில்லடி
காதல் மன்னனடி அவன்
ஊரறியத் துவறுணர்ந்து ஓடி வந்த - என்
காதல் மன்னனடி! காதல் கள்வனடி.

கன்னக்கோலிடும் கள்வனில்லையடி, என் கணவர் கள்வன் இல்லையடி, அவரை வெட்டிய காவல்வர்கள் கள்வர்கள் ஆணையிட்ட நீதிமுறை தவறிய அநீதிவிளைவித்த காமத்தால் கருத்தழிந்து, அரசியல் பிழைத்த அந்த அரசன் கள்வன் அவர்களே இறக்க வேண்டியவர்கள் மற்றய பெண்களைப் போல் நானும் நடந்தது, நடந்து விட்டது, அதுவே


noolaham.org | aavanaham.org

விதி தலையெழுத்து என்று இருக்கமாட்டேன். நீதியை நிலை நாட்டுவேன். என் கணவர் கள்வனில்லை என உங்களுக்கு அவர் வாயாலே சொல்ல வைத்து, உங்களுக்கும் இப்படியோர் நிலை ஏற்பட மாட்டாதென்பது என்ன நிச்சயம்? விடமாட்டேன் என்னுடன் வாருங்கள்!

"சுட்டெரிக்கும் .சூரியனே சுறுக்காகத் தீர்ப்புரைப்பீர்!
எப்படியிருக்கும் வானகமே என் கணவன் கள்வனா சொல்!
கட்டுக்கடங்காச் சொத்துடையான் கள்வனென்றால்,
மட்டி மன்னன் சொன்னது போல் என் கணவன்
கள்வன் தானா?

இல்லை, இல்லை, இல்லை இல்லை என்று அசரீரியின் வார்த்தை அங்கும் எங்குமே எதிரொலித்தது. ஆராயாமல் தீர்ப்புரைத்த அந்த அரசனை நான் நேரில் பார்க்கிறேன். விரித்த கூந்தலுடன், வேப்பிலை பிடித்த கையுமாக, விரைந்தாள் கூட்டத்தை விலக்கி கோவலன் வெட்டுண்டு கிடக்கும் கோலத்தைப் பாக்கிறாள் அத்தான்!

"கட்டழகு மேனியது கட்டாந்தரைமீது கிடக்கிறதே!
கொட்டும் இரத்த வெள்ளத்திலே கோமானே கிடக்கின்றீரே!
சந்தன மரமதுவே சாய்ந்து விழுந்ததுவே
தங்கப் பெட்டகமே தகரமாக ஆனதுவே;;

என்று கோவலன் மேனியில் விழுந்தழுதாள், புரண்டாள் வடித்த கண்ணீர் வீண்போகவில்லை. கண்ணகை அழு கண்ணீர் அனைத்தும் கோவலன் மேனியிலே விழுந்து மீண்டும் இரத்தோட்டம் புத்துயிர் பெறுகிறது. உடலுடன் தலை பொருந்துகிறது அவள் உத்தமி, பத்தினி என்று நிரூபித்துக் காட்டுவதற்காகவே தராதரப் பத்திரம் வாங்கியவன் போல் கண்களை திறந்து பார்க்கிறான். அவன் மேல் விழுந்து அடித்து அழுது புலம்பிய அவள் மேனியெல்லாம் ரத்தக்கறைகளாகவும் அவிழ்ந்த தலையையும் விரிந்த கூந்தலையும், பார்த்த அவன் அம்மா கண்ணகையே!

"பத்தினியாள் நீயிருக்க பரத்தையிடம் சென்ற பாவம்!
வெண்ணிலவு நீயிருக்க வேசியிடம் சென்ற பாவம்!
தங்கரதமாய் நியிருக்க தாசியிடம் சென்ற பாவம்!
கொன்றதடி கள்வனென்ற வார்த்தை சொல்லி,


noolaham.org | aavanaham.org

பாண்டியன் ஆணையிட பாவிநான் மாட்டினேனடி,
என்றுகூறி உயிர்நீர்த்தான் கோவலன்!
இவன் என் கணவர் கள்வன் இல்லை என்பதை
இப்பொழுது நம்புகிறீர்களா? இப்பொழுது
அழுதுபுலம்பினால் யார் நீதி கேட்பார்கள் வாருங்கள்
என்று அரச சபையை நோக்கி வருகிறாள் வாயில் காவலனிடம்.

"காவலனே! காவலனே! கருணை கொன்ற காவலனே!
அறிவு கெட்டு அறத்தைக் கொண்ட அரசனுன் காவலனே.
காற்சிலம்பு கைப்பிடித்து, கணவனையிழந்தாள் காத்திருக்காள்
என்று கடிந்துரைந்தே சேதி கொண்டு காவலன் மன்னவா?
என்ன! மன்னனைக் காணவென்று பெண்ணொருத்தி சொல்லச்
சொன்னாள். அப்படியா? அவளை வரச்சொல். அம்மா!
உங்களை மன்னவர் அழைக்கின்றார்?

"மன்னவனே மன்னவனே மதிகெட்ட மன்னனே!
என் கணவர் என்ன பிழை செய்ததென்று சொல்லுவாய்;;
மன்னவன் கண்ணீருடன் கலங்கி நிற்கும் காரிகையே நீ
யாரம்மா என்று கேட்க!

"கன்றிழந்த பசு துயர்துடைக்க தன்மகன் உயிர்நீர்த்த
மனுநீதி சோழமன்னன் ஆட்சி செய்யும் சோழநாடு
அங்கே உன் அநீதியாலே வாளாலே வெட்டுண்டு
கிடக்கும் என் கணவன் உண்மையிலே குற்றவாளியல்ல
பூம்புகாரில் செல்வந்தர் குலத்துதித்த மானாகச் செட்டிமகன்
கோவலன்.;;

பெண்ணே நீயென்ன புலம்புகிறாய் நான் புலம்பவில்லை?
உன்மனையாள் சிலம்பை எடுத்துவரச் சொல் காவலர் கோப்
பெருந்தேவியரின் சிலம்பை கொண்டுவா? கொண்டு வரும்
போதே கண்ணகை பாய்ந்தோடி கையிலிருந்தெடுத்து. மன்னா
உன் மனைவியின் சிலம்பின் உள்ளீடு என்னபரல்கள்?
அத்தனையும் சுத்த முத்துக்கள். இச்சிலம்பை வைத்துத்
தானே என் கணவன் கள்வர் என்ற பட்டம் சூட்டி விட்டாய்?


noolaham.org | aavanaham.org

இதோ எனது கணவர் கொண்டு வந்த சிலம்பு சொல்லும் என்று, ஒங்கித் தரையிலறைந்தாள். கண்ணகை ஒளிர்ந்தனவே மாணிக்கங்கள் மாணிக்கங்கள்! பொன் செய் கொல்லன் சொற்கேட்டு, புத்திகெட்டு, அறம் தவறி, அரசியல் பிழைத்தேன், எமக்குச் சிம்மாசனம் எதற்கு? கொடுங்கோலன் எனக்கு செங்கோல் எதற்கு? நானே கள்வன்! நானே அறம் கொன்றேன்! எனக்கு அறமே கூற்றுவனானது, எனச் சிம்மாசனத்திருத்து கீழே விழுந்து "அரசியல் பிழைத்தோர்க்கு அறன் கூற்றாகும்;; என்று கதறியவாறோ மாண்டான்.;;

"வில்லுப் பாட்டுக் கேட்க வென்று
விருப்புடனே வந்திருந்த, நல்லோருக்கு
நாமுரைக்கும் வணக்கம் எல்லோருக்கும்
நாமுரைத்தோம் வணக்கம்! வணக்கம்!! வணக்கம்!!!

1993 மாவட்ட மட்டம் 2ம் இடம்.

## 10. நோதலும் தனிதலும் அவற்றோர் என்ன

அவையடககம்

தந்தனத்தோம் என்று சொல்லியே வில்லிசைபாட
வில்லிசை பாடவரம் தந்தருள்வாய் கணபதியே
தந்தி முகம் தாழ் பணிந்தோம் நாயகனை வேண்டி
நின்றோம். வுந்திருக்கும் சபையோரே வணக்கம்!
வணக்கம்! வாய்ப்பளித்த சபையோரே வணக்கம்!
வணக்கம்!!!

குரு : பெரியோர்களே!!..

எல்லோரும்: ஆமாம்!.

குரு : சபையோர்களே!!

எல்லோரும் ஆமாம்!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு : இந்த ரம்மியமான காலைப்பொழுதிலே நாம் எல்லோரும் எதற்காக கூடியிருக்கிறோம் தெரியுமா?

ஆள் : தெரியவில்லையே குருவே!..

குரு : நோதலும்தனிதலும் அவற்றோர் என்ன?.

ஆள் : என்ன நோதல்!

ஆள்2 : என்ன தணிதல், அப்படி என்றால் என்ன குருவே!..

குரு : அப்படி அல்ல - நோதலும் தணிதலும் அவற்றோர் அன்ன என்றால் ஆக்கமும் கேடும் தாமே விளைவன பிறரால் தரப்படுவதல்ல .இதைத்தான் வினை விதைத்தவன் வினை அறுப்பான் தினை விதைத்தவன் தினை அறுப்பான் என்பார்கள். சரிசரி இக்கருத்தைப் புரியவைப்பதற்காக மகாபாரதத்தில் இருந்து ஒரு கதையைக் கூறுகிறேன் கேளுங்கள்.

ஆள்2 : கதையா கூறுங்கள் குருவே கேட்போம்!!

குரு : பாண்டு புத்திரர்கள் பிரிந்து வாழ சதி செய்தவன் சகுனி இவனின் வலையில் சிக்கிய தருமரும் தாம் பெற்றநன்மைகள் எல்லாம் இழந்தவனானான். வீமனுக்கு விசம் கொடுக்க நினைத்தவன், துரியன் அரக்கு மாளிகை கட்டி பாண்டவரை அடியோடு அழிக்க நினைத்தவனும் இவனே!! .துச்சாதனைக் கொண்டு திரௌபதையின் துயிலை உரிய வைத்தவனும் இவனே - .அபிமன்யுவை அணுஅணுவாக சித்திரவதை செய்தவனும் இவனே சூதாட்டமாடி தர்மரை நாடு நகர் இழக்க வைத்தவனும் இவனே கேடை தனக்குத் தானே தேடிக்கொண்டதால் துரியனின் வாழ்வில் விதி விளையாடத் தொடங்கியது.

ஆள்1 : பின்னர் என்ன நடந்தது குருவே!..


noolaham.org | aavanaham.org

பாடல் : 16ம் நாள் போர் தொடங்கியதே பட்டனர் பீஸ்மர் துரோணருடன் கர்ணனும் மாண்டான் துரியனும் கொட்டம் அடங்கியே தலை குனிந்தான் பாண்டவர் தன்னையே போற்றும்படி பணித்தாரே கிருபரும் பண்புடனே ஆண்டவன் வந்தாலும் வணங்கேன் என்று அடம்பிடித்தானே துரியனுமே!.

குரு : 16ம் நாள் போர் தொடங்கியது!!

எல். : ஆமாம்!!

குரு : வீஸ்மர். கர்ணன். துரோனர் ஆகிய மூன்று பெரிய வில்லாளர்களும் மாண்டனர்

ஆள்2 : ஐயோ பாவம்!!

குரு : இதனைக் கண்ட கிருபர் துரியனை எச்சரிக்கிறார் இப்போதாவது உண்மையைப் புரிந்து கொண்டு பாண்டவரிடம் சமாதானம் செய் என்றார் கிருபர்

ஆள்1 : கேட்டானா குருவே துரியன்!.

குரு : துரியன் கேட்கவில்லை சள்ளியனை சேனைத்தலைவனாக்கி போரைப் புரியுமாறு கட்டளை இட்டான்.

ஆள்1 : எண்ட மகன் சேகர் கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டக் கூடாது எண்டு நினைக்கிறவன்.

ஆள்2 : அவனுக்கு மீசையிருந்தாதானே மீசையில மண் ஒட்றதுக்கு!.

குரு : எல்லாமே உண்மை தான் யார் யார் பிறருக்கு தீங்கு செய்யாமல் வாழ்கிறார்களோ அவர்கள் தனக்குத்தானே நன்மைகளை சேர்ப்பவர்கள் ஆகின்றனர் பாண்டவர்கள் போல் தகுதிபெற்றவர்கள் இப்புவுலகில் யாரும் இல்லை.

பாடல் : தண்டாயுதம் கொண்டு வீமனுமே அங்கு சள்ளியன் ஓடு சமர் புரிந்தார் இங்கு தருமரும் அவ்விடம் வந்தி நின்றிட்டார்


noolaham.org | aavanaham.org

சள்ளியன் மாண்டிட துனை செய்தாரே!. சள்ளியன் போரிலே வீழ்ந்தனைக் கண்டு சஞ்சலம் கொண்டனே. துரியனுமே அன்று தப்பிதமாய் ஓடி ஒழித்தனனே! துரியன் தேடினர் பாண்டவர் எங்கணுமே அவனைக் காணவில்லை!!.

குரு : பாரதப்போரின் 18ம் நாள் அன்று!!

எல்.: ஆமாம்!.

குரு : வீமனும் சள்ளியனும் கதாயுத யுத்தம் புரிந்தனர்!!

ஆள்2 : கதாயுத யுத்தமா?

குரு : ஆம் கதாயுத யுத்தம் இதனைக் கண்ணுற்ற தர்மர் சள்ளியனுடன் பலவாறும் போரிட்டு அழித்தார். துரியனின் தோல்வி உறுதியானது. அசுவத்தாமன்.கிருபவர்மன்.கிருபர். ஆகியோர் துட்டன் துரியனைத் தேடி வலைவிரித்தனர்.

ஆள்1 : குருவே எங்கட ஊர்ல எல்லாம் மீன் பிடிக்கத்தானே வலை விரப்பாங்க!..

ஆள்2 : உனக்கு மூளை வேல செய்யல கிட்னிதான் வேல செய்யுது!.

குரு : துரியனின் எஞ்சிய தம்பிமாரையும் வீமன் அன்றே கொன்றழித்தான் சகாதேவன் சகுனியோடு போரிட்டு தன் சபதத்தை நிறைவேற்றினான்.

பாடல் : என்ன செய்வான் துரியன் பாவி அவன் ஏனோ உணராது போரிட்டான் தாவி. மடையனாம் துரியனும் ஓடி அவன் மறைந்துமே போனானே மறைவிடம் தேடி குலமது அழியுமே என்று அன்று விதுனரும் சொன்தை மறந்தனன் ஏனோ!.. அசுவத்தாமன் கிருபவர்மன் கிருபர் என்று அனைவரும் தேடி போனரே பாய்ந்து!!

குரு : துரியன் ஒரு மந்திரத்தின் வலிமையினால் தடாகத்தில் நீருக்கு அடியில் போய் ஒழிந்து கொண்டான். போர் மூண்டால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசகுலம் அழியும் என்று அன்று விதுனர் சொன்னதை எண்ணி வருந்தினான்.

ஆள்2 : இப்ப வருந்தி என்ன செய்றது குருவே!..

குரு : அசுவத்தாமன் கிருபவர்மன் கிருபர் ஆகியோர் துரியனின் மறைவிடம் கண்டு உரையாடிச்சென்றனர். இதனை சில வேடுவர்கள் கண்ணுற்று பாண்டவரிடம் தெரிவித்தனர். பாண்டவர்கள் உடனே துரியன் மறைந்திருந்த குளக்கரையை வந்தடைந்தனர்.

பாட்டு : குளக்கரயை சென்றடைந்த தருமருமே கூவி அழைத்தனனே போர் புரிய பயந்தனர் துரியன் மன்னர்களைக் கொன்றழித்த மடையனே நீர் வாரும் மட்போர் செய்ய அழைக்கிறோமே சீக்கிரமே சேரும் கர்வம் திமிர் இருமாப்பு களைந்திடவே செய்வம் சொர்க்கம் உன்னை நாடிடவே சாகடித்துக் கொள்வோம் ஏளனங்கள் செய்து எம்மை கேடு செய்த துட்டா எழுந்திடாது உம்மை நாம் அழிந்திடுவோம் விட்டா!..

குரு : தர்மர் துரியனை வெளியே வந்து போர் புரியுமாறு அழைத்தார் துரியன் அஞ்சி நடுங்கினான் தனி ஒருவனாக நான் சமர் செய்வது தகுமா என வேண்டினான் அதற்கு தருமர் அபிமன்யு கொல்லப்பட்ட விதத்தை ஞாபக மூட்டினான் எனினும் யாம் அவ்வாறு செய்ய மாட்டோம் என உறுதிமொழியும் வழங்கினார் தமக்குத்தாமே நன்மைகளை சேர்ப்பவர் ஆகினார் தருமர் நோதலும் தணிதலும் அவற்றோர் அன்ன என்பதை நன்கு உணர்ந்தவர்கள் பஞ்சபாண்டவர்கள்.

ஆள்1 : அப்பப்பப்பா! இப்ப தருமரைப்போல யாரையுமே பார்க்க முடியாது.

ஆள்2: உண்மை தான் பொறுமை சாலிதான் தருமர் இப்ப பேருக்கேத்தப்போல யாரையுமே பார்க்க முடியாது சரிதானே குருவே!

குரு : தப்பே இல்ல பொறுப்பவர் புண்ணியவான். ஏன் பல சாலியும் கூட பொறுத்தார் அரசாள்வார் பொன்கினார் காடு கொள்வார் என்பது உண்மை தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆள் 1 : குருவே பொறுத்தார் அரசாள்வார் பொங்கினார் பொங்கல் சாப்பிடுவார் என்று தானே சொல்லுவார்.

ஆள் 2 : பாத்து சாப்பிடு சுட்டிடப் போகுது!

குரு : காத்த பொறுமைக்கு பரிசு கிடைக்காமலா போய் விடும் அந்த பரந்தாமனின் கடாட்சத்தை விதிப்பவர்களுக்கு அழிவேது அபகீர்த்தி ஏது?

பாடல் வீமனுமே துரியனையே போருக்கழைத்தனனே துரியனும் வீமனையே கதையால் அடித்து மோதினனே! மோதினனே!! சமயம் பார்த்து வீமனுமே தொடையில் அடித்து குதறினனே. வீழ்ந்தனே துரியனுமே கால்கள் இடறி சாய்ந்தனனே! சாய்ந்தனனே! சாய்ந்தனனே! தன்சபதம் முடிந்ததென வீமன் அலறி நின்றனனே பொறித்திடவே தருமருமே புத்தி சொன்னார் வீமனுக்கு. வீமனுக்கு தாழ்வுற்றோரை தாக்குவது தர்மம் அல்ல என்றுரைத்தார் வீமனுமே அண்ணர் வாக்கை தலைமேல் ஏற்றி சென்றனே! சென்றனே! சென்றனே!

குரு : துரியன் வீமனைப் போருக்கழைத்தான் வீமன் துரியனை வீழமட்டும் வேட்டையாடினான் உக்கிரமான போரில் வீழ்ந்தான் துரியன். தொடையும் புண்ணானது இரத்த ஆறு ஓடியது

ஆள் 1 : ஓடிச்சா ஓடிச்சா ஓடிச்சா..............

ஆள்2 : ஓடிச்சா இன்னைக்காவது போய் குளி..........

குரு : அன்று செய்த சபதத்தை இன்று நிறைவேற்றினான் வீமன் துரியனை உருட்டி பந்தாடினான். விட்டுவிடும்படி கெஞ்சினான் துரியன், விடுவான வீமன்

ஆள் : எப்படி விடுவது குருவே துடியாய் துடிச்சு சாகனும்!

குரு : நம்மை அழித்திடவந்தவர் பகைவர் என்றானும் அன்பிற்கு அடி பணிய வேண்டும் தர்மம் தலை காக்கும் என்பதை அறியாதவர்களா நீங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆள் : இல்லை! குருவே இல்லை!

குரு : தாழ்வுற்றோரை அளவுக்கு மீறி தாக்குதல் தர்மமாகாது வீமனுக்கு புத்தி கூறி சாந்தப்படுத்தினார் தர்மர் அன்று துரியனை விட்டு விலகி தர்மருடன் சென்றான் வீமன் தனக்குத் தானே தேடிய கேடை தனதுரிமையாக்கினான் துரியன்.

பாடல் :

அசுவத்தாமன் முதலியோரும் துட்டன் அருகே சென்று வருந்தினனே அசுவத்தாமன் ஆவேசமாய் நெஞ்சை அசைத்தான் சினமே பொங்கிடவே அழிப்பேனே பாண்டவரை என்று ஆவேசம் கொண்டனனே துரியனின் இடம் அதற்கு கிருவர் நியமித்தாரே அசுவனையே இதுகேட்ட துரியன் ஆவி உடன் இறந்தே ஓடிப்போனதுவே கேடே துரியன் பெற்ற நன்மை இது பிறரால் அல்ல அவனே பெற்றான்...........

குரு : அசுவத்தாமன் சினம் பொங்கியவனாயி பாண்டவரை அடியோடு அழிப்பேன் என சபதம் செய்தான். இதனை கண்டு பொறுக்க முடியாத கிருபர் அசுவத்தாமனை படைத் தலைவனாக்கினார். துரியனின் மூடி மூடி விழித்த விழிகள் நிசப்தமாக மூடிட முடிந்தது துரியனின் வரலாறு ஆணவம் அடங்கியது அகங்காரம் ஒடுங்கியது தர்மம் தலைகாக்கும் நோதலும் தனிதலும் அவற்றோர் அன்ன என கூறி

பாடல்

நக்கிரர் பரம்பரையில் நல்ல தீர்ப்பு வழங்க வந்த நற்றமிழைக் கற்றவரே வணக்கம்! நல்ல தமிழ் பெரியவரே வணக்கம்! நாங்கள் விட்ட சொற்பிழைகள் நல்ல தமிழ் மொழிப் பிழைகள் அத்தனையும் பொறுத்தவரே வணக்கம்! அத்தனையும் கொறுத்தவரே வணக்கம்! வணக்கம்! வணக்கம் ...........

**2011ம் ஆண்டு மாவட்ட மட்டம் 2ம் இடம் பெற்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. தேறற்க யாரையும் தேறாது

காப்பு

ஐந்துகரத்தனை ஆனைமுகத்தனை
இந்தியிளம்பிறை போலுமெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைற்றடி போற்றுகின்றோம்
வெள்ளைத் தாமரைப் புவிலிருந்து
வீணை மீட்டுபவள்
அன்னை சரஸ்வதி அவளின் பாதம்
அடிபணிந்திடுவோமே.

அவையடக்கம்

தந்தனத்தோம் என்ற சொல்லியே - வில்லினிற்பாட
ஆமா வில்லினிற்பாட ஆமா வில்லினிற்பாட
வரம் தந்தருள வேண்டுமறிவான தெய்வமே
வந்துள்ள சபையோரே வணக்கம்! வணக்கம்!
வாய்ப்பித்த பெரியோரே வணக்கம்! வணக்கம்!

குரு : பெரியோர்களே

எல்லோரும் : ஆமாம்

குரு: சபையோர்களே!

எல்லோரும் : ஆமாம்!

குரு : இந்த இனிமையான காலையிலே நாம் எல்லோரும் எதற்காகக் கூடியிருக்கிறோம் தெரியுமா?

சீடன் 1 : ஒற்றுமையாக சந்தோசமாக எங்க ஆக்கள் சூடியிருக்கிற தொண்டா சக்தி தொலைக்காட்சியில் "தென்றல்" "வைரநெஞ்சம்" போன்ற நாடகங்களைப் பார்க்கத்தானே.

சீடன் 2 : எண்டைக்கு இந்தத் தொல்லைக்காட்சி வந்ததோ அண்டைக்கே நமது சமுதாயம் கெட்டுக் குட்டிச்சுவராயித்து.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சீடன் : ஏன்! இப்படி அறுத்துக்கிறா உன்னை போல இளசுகள் கையடக்க தொல்லை பேசியால கெட்டலையுதுகளே!

குரு : உங்கட வாதப் பிரதிவாதங்களை நிப்பாட்டுங்க! நாம இந்தப் பெரியவங்க மத்தியில கூடியிருக்கிறது.

சீடன் 1: ஆமா! ஆமா! வில்லிசை பாடத்தானே குருவே!

சீடன் 2 : அப்ப இப்ப எதைப்பற்றி பாடப்போறிங்க குருவே!

குரு : "தேறக்க யாரையும் தேறாது"

சீடன் 1 : என்ன தேறற்க?

சீடன் 2: ம்......தேறக்க யாரும் ....தேறாது.... இதெல்லாம் என்ன புதுசாக்கிடக்கு குருவே!

சீடன் 1 : இதெல்லாம் இப்பவாற சூறாவளிசுனாமி பேருகளா இருக்குமோ? இல்ல புதுப் புதுச் சினிமாப் படப்பெயருகளா இருக்குமோ?

சீடன் 2 : சினிமாவுமில்ல சீனிமாவுமில்ல இவன் கிடக்கிறான் நீங்க தெளிவாகச் சொல்லுங்க குருவே!

சீடன் 1 : ஆமாம்! ஆமாம்! அறிவில்லாதவர் சொல்லித்தாரு

சீடன் 2: அறிவில் ஆதவன் - அறிவில்லாதவன் அப்படித்தானே நண்பா.

சீடன் 2 : நீ அறப்படிச்ச நீ எப்படியென்றாலும் எடுத்துக்க "தேறக்க யாரையுந் தேறாது" விளக்கமாகச் சொல்லுங்க குருவே!

குரு : இது திருக்குறலில் வரும் ஒரு குறலடி அதாவது "தேறக்க யாரையும் தேறாது தேர்ந்தபின் தேறும் பொருள் - இதன் சுருக்கமா கருத்து யாரையும் ஆராய்ந்து தெளிவுகொள். ஆவ்வாறு தொளிந்தபின் அவர் கூறும் கருத்தை சந்தேகமின்றி ஏற்றுக்கொள்வதே" தேர்ந்த நல்லறிவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் : ஆமாம்!

சீடன் 1 : அப்ப! தேர்ந்த நல்லறிவு! எப்படி ஏற்படும் என்பதற்கு என்ன கதை சொல்லி விளக்கப்போறிங்க குருவே!

குரு : பலகதையிருக்கு அதில் இப்ப மகாபாரதத்தில் வரும் கர்ணனைப் பற்றிய ஒரு கதையைக் கூறித் தொடர்கின்றேன்.

பாடல் : பாரினிலே சிறந்த பாரிவள்ளல் கர்ணனே
நேரில் சென்று கேட்டால் எதையும் கொடுக்கும் புனிதரே
கூடப்பிறந்து கவசத்தை கொடுத்த மன்னரே
கொடுத்துக் கொடுத்து கை சிவந்த எங்கள் கர்ணனே
செய்த தருமத்தையும் தாரை வார்த்துக் கொடுத்து
தெரிந்து தெளியாதலால் தன் உயிர் இளந்தவனே!

குரு : இப்படிப்பட்ட கொடைக்குப் புகழ் பூத்த கர்ணன் கண்ணனின் சூழ்ச்சி வலையில் தெளிந்து தெரியாது அதில் அகப்பட்டு மாண்டு அளிந்து போனான்.

சீடன் 2 : எப்படி குருவே கதையை இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்களன். நாங்களும் கேட்போம் இவங்களும் தெரிந்து கொள்வாங்க.

பாடல் : தந்தன தானன தன தன தந்தனதானன
துரியோதனன் தோழன் கர்ணன் தன்னை
போரில் யாரும் வெல்லமுடியாதென்று
கபடக் கண்ணன் கர்ணனை பிரித்து
பாண்டவர் பக்கம் சேர்க்க நினைத்து
தந்தன தானன தன தன தந்தன தானன
குந்தியை கொடை வள்ளல் மாளிகைக்கனுப்பி
கதிரவன் அருளால் பிறந்த மகன் நீ
பழியஞ்சி பேழையிலாற்றில் விட்டவுன்னை
தேரோட்டி எடுத்து வளர்த்தனனே
ஆமாம்! தேரோட்டி எடுத்து வளர்த்தனனே
தந்தன தானன தன தன தந்தனதானன


noolaham.org | aavanaham.org

குரு : "கர்ணா என் தலைமகனே! தூணிடை நெஞ்சம் கொண்ட தீரனே! படைக்கஞ்சா வீரனே! என்னோடு வந்திடடா தம்பி மார்களோடு தரணியாண்டிடலாம்" என்றார் குந்தி தேவி.

சீடன் 1: ஆத்தில விட்டு அழிஞ்சி ஒழிஞ்சி போகவிட்டவ தப்பி தருமத்தின் தலைவனாகி விட்டானென்றதும் தம்பி மாறோடு வாழக் கூப்பிடுறா? இது என்ன பாசமா? வேசமா?

சீடன் 2 : பாசமுமல்ல! வேசமுமல்ல சுயநலம் தம்பிமார்களை சாகடித்து விடுவான் என்ற பயம்! கர்ணன் போனானா குருவே!

குரு : இல்லை தாயோ மீண்டும் மீண்டும் கெஞ்சினாள்.அழுதாள் ஆர்ப்பரித்தாள் எப்படி என்றால்.......

பாடல்: கதிரவன் தன் மகனே- கர்ணனே
நானிப்போ சொல்வதைக்கேளடா
ஐவர்கள் உன்னுடன் பிறப்பு- அரவணைத்து
ஒன்றாக வாழ்திடுவீர்
ஆமா! அரவணைத்து ஒன்றாக வாழ்சந்திடுவீர்
அறத்துக்கு அதிபதி நீயடா- மறத்
துரியனோடு கூடி வாழலாமா!
பெற்றவள் நானழைக்கயிலே - நீயும்
பேசாது வந்திட்டா என்னுடனே ..... நீயும்
பேசாது வந்திட்டா என்னுடனே!

குரு : "மகனே கர்ணா! எனது சந்தர்ப்ப சூழல் செய்த சதியினால் உன்னைப் பிரிய வேண்டிய நிலையேற்பட்டது உன் தாயென்னை மன்னித்து என்னோடு வந்திடு தம்பிமாரோடு மறு வாழ்வு வாழலாம்" என்று குந்தி தேவி நொந்தழுதது அவனது நெஞ்சை உருக்கினாலும் துரியனின் செஞ்சோத்துக் கடனே அவன் மனதில் குவிஞ்சி நின்றுது

சீடன் : சிசு மந்திரம்மச் சொல்லி பெத்தவ ஏதோவது குசி மந்திரத்த சொல்லி கூட்டித்துப் பொய்த்தாவா குருவே !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு : கர்ணன் சூரியனையும் சூரியன் கர்ணனையும் நன்கு தெரிந்து தெளிந்து கொண்ட புரிந்துணர்வும் களங்கமில்லாத் தெளிவும் ஒருவரோடு ஒருவரை அன்பு பிணைப்பால் பிணைத்திருந்தது.

சீடன் : தேறக்க யாரையும் தேராத எப்படி குருவே

பாடல் : தாய் சொன்ன வார்த்தைகளை- அவன்
தானாவே மறுத்தனனே
உண்டியிட்டு ஆதரித்த நட்பை
உயர்வாக மதித்தனனே
ஆமா! உயர்வாக மதித்தனனே
அங்க நாட்டிற்கு அரசனாக்கி
அகிலமது போற்ற வைத்தவனை
கருணைக் கண்திறந்தவனை - காவல்
கரம் நீட்டி காத்தவனை
காவல் கரம் நீட்டி காத்தவனை

குரு : எப்படி பிரிய முடியுமம்மா?
"எந்நன்றி கொண்டார்க்கு உய்வுண்டாம் உய்வில்லை செந்நன்றி கொண்ட மகர்க்கு" என்ற வள்ளுவன் வாக்கை கர்ணன் பின்வறுமாறு தாய்குரைத்தான்

சீடன் 2 : குருவே மேலே சொல்லுங்க எவ்வாறு தாய்குரைத்தான்

குரு : "தந்தை சொல் மிக்க மந்திரம்மில்லை - என்று தக்கோர் போற்றும் புகழ் தந்தையாரையும்" முந்நூறுநாள் சுமந்து பெற்ற அன்பு எம்மிதய தெய்வ அன்னையாரையும் அஞ்ஞான இருளகற்றி யெமக்கு - என்றும் மெஞ்ஞான அறிவொளி குருவையும் - அந்தணர் பசு விளம்பாலகரையும் - கொன்ற எப்பாவமும் பழியும் குறைந்து விடலாம்" என்றும் தெரிந்து தெளிந்து கொண்ட நன்றி கொல்வார்க்கு உய்வில்லை என்று

எல்லோரும் : ஆமா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன் 2 : பெற்றோர்கள் பலர் இப்பத்தையப் பிள்ளைகளுக்கு எப்படி புத்தி சொல்லுற என்று ஏங்கித் தங்களுக்குள்ளேயே தாங்கள் அழுறாங்க குருவே !

சீடன் 1 : கர்ணன் இதையெல்லாம் கூறக் கேட்ட குந்தி தேவி என்ன செய்தா குருவே

சீடன் 2 : பிறகென்ன நரி திராட்சைப் பழக் கதைதான் சீசீசீ...இந்தப் பழம் புளிக்குமென்று ஓடியிருப்பாவு இல்லையா குருவே!

சீடன் 2 : இவன் கிடக்கிறான் நீங்க மேல சொல்லுங்க குருவே

குரு : கண்ணனின் கடைசி தாரக மந்திரத்தை பயன்படுத்தித் தன் மகனிடம் வரம்பெற்று வரம் அளித்துச் செல்லுகிறாள்

சீடன் : என்ன வரம் குருவே!

குரு : பாரதப் போரிலே அருச்சுனன் மீதிலே நாகபாணம் ஒரு தரமே ஏவவேணும் அருச்சுனனன்றி மற்ற நால்பேரோடும் எச்சந்தர்ப்பத்திலும் எதிர்க்காதே!

பாடல்: தந்தேன் வரமதை உந்தனுக்கு - நானும்
உந்தன் மடியிலே என் தலைவைத்து
செந்திருவே போரில் மாண்டதவன் பின்
என் மகனே என்று அழுதிடம்மா
என் மகனே என்று அழுதிடம்மா

குரு : கர்ணன் குந்தி தேவியையும் குந்தி தேவி கர்ணனையும் நன்கு தெரிந்து தெளிவுடைய சிந்தனையுடையவர்களாயினர்.

சீடன் : ஒருவரை ஒருவர் தெரிந்து தெளிவடைவதற்கு இதுவும் ஒரு நல்ல உதாரணம் தானே குருவே!

சீடன் 1 : அப்ப போர் தான் முண்டதா குருவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு : ஆம் பாரதப் போர்.................................

பாடல் : பாரதப் போர் தனிலே - கர்ணன்
பட்டானே கண்ணனினால்
பாண்டவர் மன மகிழ்ந்து - நிமிர்ந்து
நின்றாரே கண்ணனினால்
நிமிர்ந்து நின்றாரே கண்ணனினால்
கர்ணனும் மாண்டிடவே - குந்தி தேவி
களம்பு குந்து மடியேந்தி
பட்டீரோ மகனே என்று - கண்ணீர்
விட்டு அழுதனளே
கண்ணீர் விட்டு அழுதனளே

குரு : இவ்வாறு மகாபாரதத்திலே பாண்டவர்களுக்கும் பலவழிகளிலும் பல துன்பங்களை விளைவித்த பாத்திரங்களை நன்கு தேர்ந்து தெளிவு கொண்டு தேறிய கண்ணனையும்
இராமயணத்திலே இராம குடும்பத்தினருக்கு எத்தனையோ வகையிலும் இடரிழைத்த அத்தனை பாத்திரங்களையும் ஆழமாக அறிந்து தேர்ந்த இராமனையும் தெரிந்து திருவள்வர் "தேறற்க யாரையும் தேராது" என்றாறோ என்று நாமும் தெரிந்து தெளிய வேண்டும்.

சீடன்: என்ன குருவே இராமாயணத்திலும் கர்ணன் துரியோதனன் போல தெரிந்து தொளிந்தவர்களுண்ரே?

குரு : ஆமாம்! ஆமாம்!.... இவர்கள் மட்டுமல்ல, இந்த உலகமே நாடகமேடை தான் அதில் நாம் அனைவரும் நடிகர் தான். மகாபாரதத்தில் கர்னனும் துரியோதனனும் குந்தியும் போல இராமாயணதில் இராவணனும், கும்பகர்ணனும், சீதை, திரிசடையும் நடிப்பால் தேர்ந்த நல்லறிவினால் என்றும் எம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கினறார்கள்.

பாட்டு :

விருப்புடனே வந்திங்கே
வில்லடிப்பாட்டு கேட்டிருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரசித்தவங்க எல்லோருக்கும் வணக்கம்!
எங்கள் மதிச்சவங்க எல்லோருக்கும்
வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

2014ம் ஆண்டு மாவட்ட மட்டம் 1ம் இடம் பெற்றது.

## 12. தானே வரும் தன்கேடு

காப்பு

தந்தி முகத்தினை முன்னிறுத்தி சரஸ்வதி யன்னையை நாவிருத்தி
செந்தமிழ் சொற்பூக்கள் தொடுத்து தெம்மாங்குப் பாட்டமைத்து
தந்தனத்தோமென வில்லிசைத்து பாடிடவந்த எங்களுக்கு
வந்தருள் புரியவேண்டுமையா தொந்திவயிற்றுக் கணபதியே.

அவையடக்கம்

வில்லுப்பாட்டு கேட்கவென்று விருப்புடனே வந்திருக்கும்
எல்லையற்ற ஏற்றமிக்க ஆற்றல்மிகு அறிஞர்கட்கும்
நல்லவர்க்கும் நாட்டமுள்ளவர்க்கும் நன்றியுடன் சொல்வோம்
நாங்க முதல் வணக்கம் முதல் வணக்கம் முதல் வணக்கம்.

பக்கப்பாட்டு :

ஆமா இன்றைக்கு, இப்ப வில்லிசைத்து வில்லுப்பாட்டில் என்ன கதை சொல்லப்போறீங்க என்று எனக்குத் தெரியும்.

பக்கப்பாட்டு :

பெரிய இவரு, துப்புத்துலக்க வந்திருக்காரு! காணமபோன ரைட்டானிக் கப்பல் கண்டுபிடிச்சவரு.

1 : என்ன? என்னகிண்டலா?

2 : இல்ல வீச்சில் விக்கிற சுண்டல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1: ஆகா! அது நல்ல ரேஸ்ட்டு

2 : இந்த அறிவில்லாதவன் கிடக்கிறான். நீங்க சொல்லுங்க குருவே.

குரு : இப்ப நான் சொல்லப்போற கதை......

1 : சொந்தக் கதையா?

2 : இல்ல சோகக்கதை என்ன கேள்வி ஒரு மாதிரி தொக்கு நிக்குது? குருமேலேயே சந்தேகமா?

குரு : துயரிலும் இன்பக் கீற்று நெருடும் இதமான சோகக்கதை

1 : இப்படியென்று தெரிஞ்சிருந்தா நான் வந்திருக்க மாட்டேன்.

2 : இப்பெண்டாப்போல என்ன? போறதானே குரு நாளுக்கு நாள் உலகத்தில் எந்தப்

குரு : பக்கத்தில் பார்த்தாலும் துன்பம், துயரம், கொடூரம்
போர், சிறுவர் துட்பிரயோகம், பெண்கள் கொடுமை
என கேட்டுக் கேட்டு, பார்த்துப் பார்த்து பழகிப்
போச்சுதுங்க சனங்கள் துன்பத்தலுமொரு சுக முண்டு
கதையக் கேளுங்க.

பாட்டு :

வாவியிலே மீனிசைக்க (மீனிசைக்க) வளர்விருட்சம் தேன்
சொரியும் தேன்சொரியும்
காவினிலே கனிகுலுங்கும், காண்பவர்கள் மனம் கிறங்கும்
ஆழி அருகினிலே அழகாய் உயர்ந்தமைந்த அந்த
வீட்டினிலே

கடற்கரை காற்று, உடற் சுகம் பேண உயர்ந்து அமைந்த அந்த மாடி வீட்டில் 10 வயது மதிக்கத்தக்க அனித்தாயி என்ற சிறுமி திரு அம்பி அவர்களால், திருமதிஅம்பியின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணையின் பேரில் வீட்டு வேலைக்காரியாக அமர்த்தப் பட்டார். திருமதி பெயர் கருணையம்மா, ஆனா, செயலுக்கும் பெயருக்கும், மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம்.

1 : அப்ப, ஏணி வைச்சி ஏறியா திரு. அம்பி கதைப்பாரு?

2 : இவனொருவன். இந்த உலகத்தில் எதஎத எவரெவருக்கு கொடுக்கணும், வைக்கணும் என்று தெரியாம இறைவன் இடம் மாறி வெச்சிருவாறு. அதெல்லாம் தடுமாறி திரியுது. கலிகாலம் தானே.

பாட்டு : அம்பி என்பார் தும்பியாக அவர் பறப்பார்
பம்பரமாய்த்தான் சுழன்று பதிவிரதை பணிமுடிப்பார்
எள் என்று சொல்ல முன்பே, எண்ணெயோடு அவருநிற்பார்
வெட்டிவாவென்று சொன்னா, கட்டி காலடியில் குவிப்பார்

பேரளவுதான் கண்ணவன் காசால வாங்கிய உத்தியோக புருஷன். மாமியும் மனிசியும் சேர்ந்து நடத்திற வீட்டுக் கூட்டாட்சியில், மாப்பிள குடைசாய்ந்து போவாரு. அவளவு அடக்குமுறை, அட்டகாசம்.

1: சர்வாதிகாரிகளான கிட்லர், முசோலினி மீண்டும் பிறந்து வந்து இவங்கிட்ட சர்வாதிகாரம் என்றா என்னவென்று கற்கவேணும் போல இருக்கு.

2 : அப்ப திருமதியால வெகுமதியாக அடி உதையும் கிடைக்குமோ?

1 : அடக்கி வாசி, ஆராவது கேட்டுத்துப் போய் அவட்ட சொல்லிப் போடுவாங்க.

குரு : இப்ப அப்படியான சந்தர்ப்பத்தில், அணித்தாயிட தலையில் தான் எல்லாம் இடியாக இறங்கும்.

பாட்டு : நிண்டாக் குத்து இருந்தாலடி படுத்தா உத எழுந்தாலிடி
அன்றாடம் அனித்தாயிக்கு அவள் கொடுக்கும் பரிசு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.2 : பொல்லாப்ப விலைக்கு வாங்கி வேலைக்காரி தலையில் போட்டு துப்பாக்கி வேட்டுப்போல சொல்லால் சுடுவா தாய்க்கிழவி

1.3 : எடுத்த ஏனத்தால அடுத்த கணம் சிந்திக்காம மடத்தனமா அடிப்பா புள்ள மதி கெட்டு துடிச்சிடுவா.

1. : ஏன் குருவே அவர்களுக்கு மூள இசகுபிசகா?

குரு : இல்ல, ஏழையென்றால் ஏளனம், இளக்காரம், பணக்காரத் திமிர், வேலைக்காரியென்றால் விருப்பம் போல எதையும் செய்யலாம் என்ற மமதை. இப்படி கொடுமைகள் இப்ப உலகத்தில் எங்கும் நடக்குது. ஏன் குருவே அவர்களுக்கு பிள்ளை குட்டி இல்லையா? பிள்ளை மொழி கேட்டிரங்காத பில்லிகளா?

பாட்டு :

கல்லுல நெல்லு முளைத்தது போல் - கடுஞ்
செல்லம் பொழிகின்ற பெண்ணொருத்தி
அல்லும் பகலும் அவளட்டகாசத்தை
சொல்லால் விளைக்கிட முடியாது.

குரு : ஆஸ்த்திக்கு ஒரு பெண், தினம் அவள் அடிக்கிறலூட்டி அனுஸ்தாயி

2 : ஏன் இந்தக் கொடுமை இதைக் கேட்கப் பார்க்க யாருமில்லையா? தன்பிள்ளை தங்கக்கட்டி மாற்றான் பிள்ளை மண்ணாங்கட்டியா? அதிகாரச் செருக்கு ஆணவக்குவிப்பு.

1 : ஆனமான அமெரிக்காவே பிடரியில் ஆப்கானிஸ்தான் பின்லேடனிடம் அடிவாங்கல்லையா? கதிகலங்கலையா? அதேமாதிரி இவங்க திமிரையும் இறைவன் அடக்குவாரா? ஏன் குருவே இந்த அனித்தாயி யாரு? அவளுக்குச் சொந்தக் காரரில்லையா?


noolaham.org | aavanaham.org

பாட்டு : இயற்கை எழில் நிறை இலங்கை நகர் தன்னில்
பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்து
(தந்தானத் தானதனா தானதன தானதனா
தானதன தானனா - தான)

பச்சைக் கம்பளமாய் மலைகளை மூடி
இச்சைகொள்ளச் செய் மலையகமதிலே
தலைநிமிர்ந்து தேயிலைத் தொழிற்சாலை விளக்கு
தலவாக்கலையிலே கலையிழந்த லயத்தில்
தாய் தந்தையையிழந்து சகோதரிகளுடன் வாழ்ந்த
அனித்தாயியை அம்பி வேலைக்கு அழைக்க
தாங்கள் படும் துயர் தமது தங்கையும் படக்கூடாதென்றும் அவளாவது
வயிறாரவுண்டு, வசதியாக உறங்கி எதிர் காலம் சிறக்க வாழட்டுமே என நினைத்து.

(தந்ததன னாதந்த னாதந்த னானன
தன்னா தனா தந்த னாதந்தனான)

பாட்டு :

ஐயாவே உன்கை அடைக்கலமே
மெய்யாக - தங்கை அனித்தாயினியும்
பொய்யறியாள் வேறு புரட்டறியாள்
நல்வழியில் வாழ வழி காட்டுவீரையா!
என்று சகோதரிகள் சிவப்பாயி, கறுப்பாயி கண்ணீர் மல்க, அனித்தாயியை அம்பியிடம் கையளித்தார்கள். அம்பி வீட்டுக்குக் கூட்டிவந்தார். அன்றிலிருந்து வேண்டா வெறுப்பாக, என்ன சாதியோ? என்ன சமயமோ? என்று தொணதொணத்த தாயும் மகளும் மாறிமாறி ஏட்டிக்குப் போட்டியாக கட்டளை பிறப்பித்தே வேலைகள் வாங்குவர். அனைத்தையும் பொறுமையுடன் செய்யும். அவளை
(தந்தானத்தான தானதனா தனதான தனா)

பாட்டு : சமையலறைத் தாழ்வாரத்தில் சாக்கு மேலே சாப்பாட்டைக் கொட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கையோடு போட்டி போட் டுண்ண கச்சிதமாய் ரசித்திருப்பார்கள் பின்னே
மொட்டை மாடியிலே தனிய கொட்டும் பனியினிலே படுக்க விட்டர்
ஓட்டான் பத்தான் சட்டையோடு மரவட்டை போல சுருண்டு தரையோட
சாமத்திலே வேலை செய்ய தண்ணீர் கொட்டி எழுப்பிடுவார்
தாமதித்தா மேனியங்கும் சூடுபோட்டு துடிக்க வைப்பா ரங்கையே.

1: கொடுமை கொடுமையிலும் கொடுமை இதனைப் பொறுத்திருப்பது மடமையிலும் மடமை.

2 : ஐயோ! ஐயோ! சுட்டுட்டா, யாரோ பேசின வசனத்த சுட்டுட்டா ஏன் குருவே அந்த அனித்தாயி வீட்டை விட்டு ஓடிப்போக வேண்டியது தானே?

பாட்டு : தேயிலைச் செடிக்கு உரமதாகி உரமதாகி
தாயியவள் தன்னுயிரை நீத்தாள் தன்னுயிரை நீத்தாள்
போதை தனக் கடிமையாகி அடிமையாகி
போக்கிவிட்டார் தந்தை உயிரதனை உயிரதனை
தேற்றி வளர்த்தார் சகோதரிகள் சகோதரிகள்
ஆற்றுப்படுத்தியென்னை வேலைக்கு அனுப்பிவைத்தார்
வார்த்தை தன்னைக் காத்திட நானும் காத்திட
ஏற்றேன் இந்த துயரதனைத் துயரதனை.
(தானினன்னா)

என்று தன்னைத் தேற்றிடுவாள் ஆற்றாத வேலையிலே அலைகடலைப் பார்த்து, கடலன்னையே இக்கஷ்டங்களிலிருந்து விடுபட என்னைக் காவு கொள்ளம்மா என்று கண்ணீர் ஊத்துவாள். கடிநாய் கட்டுல்ல கிடக்கும் வேளை ஓடியவளை அந்த நாய் குரைத்துக் காட்டிக் கொடுத்து, பிடித்திழுத்து வந்து சித்திரவதைக்குள்ளாகி எத்தனை நாட்கள் துடித்திருக்கிறாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 : ஏன் குருவே இந்தப் பரிதாபத்தை பக்கத்து வீட்டில் வசிப்பவர்களும் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்களா?

2 : அதுதானே குரு சொன்னாரு! தாயையும் மகளையும் வீட்டக்காரருக்கே சிம்ம சொப்பணமென்று குரு எழியாரை வலியாரடித்தால், வலியாரைத் தெய்வமடிக்கும். நமக்கேன் வீண் வம்பு அரசன் அன்று கொல்வான், தெய்வம் நிண்டு கொல்லும் என்று, அவர்கள் பேசாமலிருக்கிறார்கள். அனித்தாயிக்கும் ஒரு காலம் வராமலா போயிடும் வரும்! வரும்! இவங்கள கவுண்டமணி செந்தில சாத்திர மாதிரி சாத்தவேணும்.

பாட்டு :

சனிக்கிழமையன்று மாலை துடித்தழுதாள் அனித்தாயி
கொதித்த கொதி நீரதனை கொட்டிவிட்டாள் கொலைகாரி
அழுகுரலின் அலறல் கேட்டு அயலவரும் கலங்கிநின்றார்
நம்பிக்கை தன்னை நவின்று - என்னை
நம்பு உண்ண இந்த கொடுமையிலிருந்து திங்கட்கிழமை
விடுவிப்பேன் என்று ஆறுதல் கூறினானம் வீட்டில் -
அயலிலுள்ளோர்!

பாட்டு :

அயலவர்கள் ஒன்று கூடி அவசரமாய் முடிவெடுத்தார்
சிறுவர் நலக் காப்பகத்தில் திங்கள் சேதிசொல்வதென்று
தன்பிள்ளையானாலும் தண்டிக்க முடியாதென்று
சண்டாளப் பாவிகளுக்கு சட்டமூல முணர்த்துவதென்று

1 : சபாஷ், இப்பத்தான் அயலவர்க்கும் அறிவுக் கண் திறந்திருக்கு. ஈராக், கூட்டுப்படையை உள்வாங்கி ஒட்டங்காட்டி வெடிவைக்கிற மாதிர் அனித்தாயி அழுதமாதிரி, அந்தச் சண்டாளிகளும் கலங்க வேண்டும்.

குரு : ஞாயிற்றுக்கிழமை காலையில், கடற்கரையில் வாங்கின மீனக் கருவாடு காயப்போட மொட்டைமாடிக்கு அனித்தாயிய அனுப்பினா தாய் நாய்க்கு இறைச்சி வாங்க அம்பிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பினர் மகள். தாயும் மகளும் முற்றத்தில் தமது மகளுடன் கொஞ்சிக் குலாவிக்கொண்டிருந்த நேரத்தில்.... நேரத்தில் தங்குதடையின்றி ஆவேசம் கொண்ட அரக்கனாக அலைக்கரம் நீட்டி பொங்கிவந்த ஆழி அலையைக் கண்டு மகளை இழுத்துக் கொண்டு......

1 : ஓடினார்கள்? ஓடினார்கள்? மரணத்தின் மடியிக்கே ஓடினார்கள்?

குரு : ஓடிய அவர்களை.........

பாட்டு : சுற்றி சுற்றி வந்த அலை சுருட்டி வாரி இழுத்தெடுத்து
பற்றிப் பற்றி மகளைப் பறித்து பனைமரத்தில் மோதியடித்து
பெத்தாவுடன் தாயைப் பிரித்து புரட்டி புரட்டியடிக்க
மாற்றன் பிள்ளை மனசு துடிக்க வைத்தபாவம்! பாவம்
கூற்றவனா.... ஆழி பொறுக்காது பொங்கி அழிக்கின்றதே
ஐயோ! ஐயோ! ஐயையோ என்று மூச்சோசை அடங்கியதே
மீண்டும், வந்த மறுவலை மூவரையும் வாரி
எடுத்து கடலன்னை வயிற்றில் புதைத்தது தப்பி ஓடிய
அயலவர் அவ்வதிசயத்தை சொல்லிச் சொல்லி
அங்கலாய்ந்தனர்.....

எராளமான உயிர்களை இரண்டே நிமிடத்தில் சாவு கொண்ட செய்தி, நகரின் எல்லா இடங்களிலும் வானொலி, தொலைக்காட்சி
வாயிலாக சோகமழை பொழிந்து கொண்டிருந்தது.

1,2 : எப்படி?

பாட்டு : ஆழிப்பேரலையே! ஆட்கொண்ட கடலையே!
ஊழிப்பேரழிவை ஊட்டி விட்டாயே - ஒரு
நாழியிலே நாட்டை நாசமாக்கிச் சென்றாயே!
எழையென்று செல்வரென்றும்
எக்காளமிடும் பாவிகளே - ஏற்றத்தாழ்வு
என் கொதிப்பிலில்லையே! ஏற்பிரினி இந்தச் சொல்லையே
- என்று
வீறுகொண்டு விரைந்தழித்துச் சென்றாயோ!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய சிறுவர்கள் தான் - நாளையத் தலைவரென்று
இம்சை செய்யு மெத்தர்களுக் குணர்த்திட
சீறிச் சினந்தழித்துச் சென்றாயோ?
தேசமெல்லாம் சேதிகொடுத்து வென்றாயோ?
(நானனுன்ன நானனுன்ன நானனன்ன நானன்னா நான)

ஆயிரக்கணக்கான உயிர்களைக் காவுகொண்ட இச் சோகச் செய்தியை கேட்டு, தெருமூலயினின்று அம்பி, ஆலாய்பறந்து, அயலவர் கூறியதைக் கேட்டுத் தெரிந்து, வீட்டை நோக்கி விரைந்து மொட்டை மாடி புகுந்து, எதுவும் அறியாத பேதையாய் கருவாட்டுக் காவல் காத்த அனித்தாயியை அள்ளி அணைத்து.

பாட்டு : எந்தனக்கு இனிப் பிள்ளை நீயேதானம்மா
சொந்த மில்லை யென்று நீ துடியாதேயம்மா
நொந்தழுத வாழ்வு நொடியில் வெந்த தம்மா
உந்தன் உயர்வுக்கு எத்தனுயிர் உருகும்மா! என்று
ஆறாயத்துயரிலும் தேறியவனாக ஆனந்தம் பொங்க
அனித்தாயிக்கு கல்வியழித்து
கனத்த செல்வமோடு வாழ்வளிக்க திடசங்கர்ப்பம் பூண்டான் அம்பி.

2 : இப்ப - தம்பி

பாட்டு : விரும்பி நெருங்கி வந்து இங்கே
வில்லுப்பாட்டுக் கேட்டிருந்து - ருசித்து
ரசித்த சபையோருக்கு
எங்கள் வணக்கம்! எங்கள் வணக்கம்!
எங்கள் வணக்கம்! எங்கள் வணக்கம்!
நன்றி

2015ம் ஆண்டு தேசியமட்டம் 2ம் இடம் பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. மகளிர் நிறை காக்கும் காப்பே தலை

காப்பு

செம்மொழிச் செந்தமிழைச் சிறப்புடனே யுணர்ந்து
இன்பமுடனோத வைத்த எம்மிறையே - உள்ள முறை
வல்ல பகவானே யுன்திருவடியை பணிந்தே
வில்லிசைக்கு எம்மைக் காத்தருளே!

அவையடக்கம்

குரு : தந்தனத்தோம் என்று சொல்லியே வில்லினில் பாட

குழு : ஆமா! வில்லினைப் பாட, ஆமா! வில்லினில் பாட

குரு : அருள் புரிவாய் ஆதிமுதலே

குரு : ஆமா அருள் புரிவாய் ஆதிமுதலே

குரு : சந்தத்தோடு கடதாளம், சிற்றுடுக்கை, கருதியோடு
வந்து வில்லிசைக்கு எங்களுக்கு

குழு : வரம் தந்தருள்வாய் மூல முதலே

குரு : வந்திருக்கும் அனைவருக்கும் அன்பு வணக்கம்!

குழு : ஆமா! அன்பு வணக்கம்!

குரு : சங்கத்தமிழ் நடுவர்க்கும் சொன்னோம் வணக்கம்!

குழு : ஆமாம் சொன்னோம் வணக்கம்!

குரு : எங்கள் பண்பான வணக்கம்!
வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

குரு : வில்லிசைத்துச் சொல்லப் போகிறோம் - நாங்க
வில்லிசைத்துச் சொல்லப் போகிறோம்

குழு : ஆமா! வில்லிசைத்துச் சொல்லப் போகிறோம்.

குரு : மகளிர் நிறைகாக்கும் காப்பே தலையென்ற புகழான திருக்குறளடி விளக்கும் கதையொன்றை வில்லிசைத்துச் சொல்லப் போகிறோம்.

குழு : ஆமா! ஆமா! வில்லிசைத்துச் சொல்லப் போகிறோம்.

சீடன் : காப்பு என்றால் கோயிலில் வாங்கி கையில் கட்டுவாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவா? அல்லது கடையில வாங்கி கையில் போடுவாங்களே அதுவா குருவே?

குரு : இல்ல... இல்ல... இந்தக் காப்புக்கெல்லாம் மேலாக பெறுமதியான காப்பொன்று இருக்கு அதுதான் மகளிர் நிறை என்னும் பண்பால் தம்மைத் தாமே காக்கும்காப்பு.

சீடன் 2: அப்படியென்றால் செட்டி கடையில் வாங்கிற காப்பில்லயா....?

சீடன் 1: கிழிந்து போச்சு கைகளில் அணியும் காப்பில்லை ஐயா இது மகளிர் நிறை எனும் பண்பால் தம்மைத்தாம் காக்கும் காப்பு.

குரு : சரி சரி உங்க எல்லோருக்கும் விளங்கும் படியாக நான் சொல்லுறன் கேளுங்க.

பாடல் 1: பெண்களால் போற்றப்படும் கற்பு - அது
கடையில் வாங்கும் கடைச்சரக்குமல்ல
மங்கையரின் மகா கவசமதை - என்ற
கட்டிக்காத்த கன்னியருமுண்டு

குழு : ஆமா! கன்னியருமுண்டு

குரு : கயவர்களால் அதைப் பறி கொடுத்து
உய்வின்றி உயிர்விட்டவருமுண்டு
காசுக்காகக் கடைத் தெருவிலே - விற்று
ஜாலியாக வாழ்பவருமுண்டு

சீடன் 1: குருவே இந்தக் காலத்தில் கண்டதும் காதல் கொண்டதே மோகம் எண்டெல்லாம் இளசுகள் கற்பை ஒரு பொருட்டாக எண்ணுறாங்களேயில்லை.

சீடன் 2 : அதுமட்டுமா? அடங்காத ஆசை கொண்ட காம வெறியர்கள் பாடசாலை செல்லும் பட்டாம் பூச்சிகளினதும். கற்பை சூறையாடி சீரழித்தும் விடுகின்றார்களே. இதை நாம் இந்த உலகத்தில் அடிக்கடி காணக்கூடியதாக இருக்குதே குருவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு : நீங்க கூறுறமாதிரியெல்லாம் இருக்க ஒரு பெண் தன் கற்பை உயிருக்கு மேலாக பூசித்து பார்போற்ற வாழ்ந்த ஒரு கதையை சொல்கிறேன் கேளுங்கள்.

பாடல் - 02

குரு : பரத்தையர் சேரியிலே பண்போடு வாழ்ந்த மஞ்சு

குழு : ஆமா பண்போடு வாழ்ந்த மஞ்சு

குரு : குலத்தொழில் தனையொழித்து குவலயம் நன்கு போற்றிடவே

குழு : ஆமா குவலயம் நன்கு போற்றிடவே

குரு : நிறைகாக்கும் காப்பே தலையென்று நேர்மையாக வாழ்ந்து வந்தாள்.

குழு : ஆமா நேர்மையாக வாழ்ந்து வந்தாள்.

சீடன் 1 : பரத்தையர் எண்டதுமே இவன் வாயைப் புளக்கிறான். சீ மூடு வாயை குட்டி நாக்கு தெரியுது.

குரு : இவ்வாறு வாழ்ந்து வரும் வேளை. அச்சேரியிலே நல்ல மனிதன் என்ற போர்வையிலே வாழும் புல்லுருவியான கறுப்பன் சட்டத்தின் கரங்களைப் பணத்தினாலும், பலத்தினாலும் அடக்கி, ஒடுக்கி கற்புள்ளவர்களாக வாழ நினைக்கும் பெண்களின் கற்பை செல்வச் செருக்கால் சூறையாடிச் சுவைக்கும் மிருகமாக வஞ்சக நண்பர்களைத் துணையாகக் கொண்டு அச்சேரியையே கலக்கி வந்தான்.

சீடன் 2 : இதுதானே வேணாங்கிறது.

சீடன் 1 : அவன் வலையிலே மஞ்சுவும் விழுந்திட்டாளா குருவே?

குரு : அதத்தான் சொல்கிறேன் கேளப்பா....


noolaham.org | aavanaham.org

பக்குவமாகப் பருவமடைந்து அஞ்சுகமாக வளர்ந்த மஞ்சுவின் வடிவில் மயங்கி அவளை கொஞ்சி விளையாடக் கெஞ்சிக் கேட்க மஞ்சு அவன் நாச காரிய செயல்களை அறிந்தவளாக.

சீடன்1,2: அறிந்தவளாக! அறிந்தவளாக

குரு : மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை என்னும் இலட்சியத்தினை கைக்கொண்டவளாகவும், தன் குலத்தொழில் ஒழித்து, தன்னை மணம் முடிக்கும் கணவனைத் தவிர வேறு யாரும் தன்னைத் தொடக் கூடாது என்னும் மன உறுதியுடன் வாழ்ந்த அவள் அவனது இச்சைக்கு மறுத்து விட்டாள்.

சீடன் 1 : சபாஷ்! அப்படித்தான் பெண்கள் எண்டா இருக்கணும்

சீடன் 2 : காம வெறியனின் முகத்திரையை மஞ்சு கிழிச்சு எறிந்துவிட்டாள். இல்லையா குருவே.

குரு : அதை நான் விளக்கமாக கூறுகின்றேன் கேளுங்கள்

பாடல் - 03

சூழ்சிகள் பல செய்து வீழ்ச்சிகண்ட கறுப்பன்
காமவெறி தலைக்கேறியதால்
அடைந்தால் மஞ்சு இல்லையேல்
அருந்துவேன் நஞ்சு என்றான்.

குழு : ஆமா! அருந்துவேன் நஞ்சு என்றான்

குரு : என்று மிரட்டித் தூதனுப்பியும் அஞ்சாது மஞ்சு நெஞ்சுரத்துடன் நிலை உணர்த்திட்டாள்.

சீடன் 1 : அப்புறம் என்ன நடந்தது குருவே!

சீடன் 2 : அப்புறமென்ன? சினிமாவில் வாற வில்லனாட்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்களோட சேர்ந்து எல்லையற்ற தொல்லைகளைச்செய்து இறுதியிலே உறுதியாக கடத்தத் திட்டம் தீட்டினானா? குருவே

குரு : இல்லை இல்லை நண்பர்கள் புடைசூழ மஞ்சுவிடம் சென்று ஆசை வார்த்தைகளால் பேசினான்.

சீடன் 1 : பசப்பு வார்த்தைகள் அவனுக்கு கைவந்த கலையாச்சே குருவே

சீடன் 2 : இல்லை.. இல்லை... இனிப்பு வார்த்தைகளால் ஈர்க்கப் பார்த்தானில்லையா குருவே? எப்படி வார்த்தைகளோ?

பாடல் - 04

குரு : அத நான் பாட்டில சொல்லுறன் கேளுங்க
கோடீஸ்வரி ஆக்கிடுவேன் - உன்னை நானும்
கொடிமுடியோடு வாழவைப்பேன்
இதயத்து ராணியாக்கி - உன்னை நானும்
உதய தாரகையாக்கிடுவேன்.

குழு : ஆமா உதய தாரகையாக்கிடுவேன்

குரு : என் தோட்டம் துரவுகளை நாட்டமுடன் - உன்
பேரில் எழுதி வைப்பேன்
என்னாளும் உன்னை உன்விருப்பம் போல
நன்றாக வாழ வைப்பேன்

குழு : ஆமா! ஆமா! நன்றாக வாழவைப்பேன்

சீடன் : ஆகா! ஆகா! என்ன ஆச்சரியம்! விந்தையிலும் விந்தை எந்தக் காலத்திலும் சீதனக் கொடுமையாலே சீரழிந்த பெண்கள் கதை ஏராளம் ஏராளம். கறுப்பன் விருப்பமோ சீதனமும் கொடுத்து சாதனை புரியப் போறான் இது நேர்மாறான காரியமா இருக்குதே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன் : இது நேர் மாறும் இல்ல பக்க மாறுமில்ல பக்காவேலை செய்து கற்பைப் பறிக்க காடையன் கறுப்பன் கூட்டும் கடைப்பலி நீங்க மேல மேல சொல்லுங்க குருவே.

குரு : காமக் கறுப்பா! கருத்திழந்து பேசுகிறாய் அசோக வனத்தில் இராவணனின் நெட்டூரம் பொறுக்காது மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை என்று தன்னுயிரை விட்டுவிடத் துணிந்த கற்புக்கரசி சீதையைப் போல் நானும் எனது உயிரைத் துறப்பேனே அன்றி ஒருக்காலும் உன் இச்சைக்குப் சோரம் போகேன். நீ தாயின் வயிற்றில் பிறந்திருந்தால் தாவி ஓடி விடு என்றாள்.

சீடன்1,2: ஓடி விட்டானா? ஓடி விட்டானா?

பாடல் - 05

காமத் தீ கொண்டு அலைகின்ற கறுப்பா
ஏழைப் பெண்களென்ன கிள்ளுக் கீரையா
பாதகம் பண்ணிட எண்ணி நீ வந்தாயோ
ஏகிடு சாவினை நீ அடைந்திடு முன்னே
விற்றிடுவேனோ பெண்ணினிய கவசமான கற்பை
இது எப்போதும் நடக்காதறிவாய்
மகளிர் நிறைகாக்கும் காப்பே தலையடா
மாசுடை மங்கையாய் வாழேனொரு போதும்.

சீடன் : மஞ்சு தாசி குலப் பெண் தானே அதனால் கறுப்பனின் ஆசைக்கு இசைந்து கொடுத்து பிழைப்பை நடத்தியிருக்கலாம். எவ்வளவு செல்வம் கொடுக்கான். இவட கற்பென்ன பெரிய கற்பு.

சீடன் : ஏன் இவருக்கு இதானல் என்ன லாபம்? இவன் கிடக்கிறான் ஓட்ட வாயன் நீங்க மேல மேல மேல சொல்லுங்க குருவே.

குரு : இதைக் கேட்டு கறுப்பன்....
இடி கேட்ட நாகமதாய் பதை பதைத்து உள்ளம் பதறியே சிதைந்து....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலே மயிலே இறகு போடென்றால் போடாது
கிளியேயுன் கொடும் பேச்சும் குயிலிசை ஆகுதடி
தூண்டிலில் சிக்கிய சுறா போல
வேங்கையிடம் பிடிபட்ட வெள்ளாடாய்
அரவின் வாய்பட்ட தேரை போலாகி நான்
துடி துடிக்கின்றேனடி.
ஒரு நாள் உன்னை அரவணைத்து சுகம் காணாது
விட மாட்டேனடி.

என்று கர்ச்சித்து கறுப்பன் நண்பர்களோடு நடையைக் கட்டினான்.

சீடன் : எப்பவோ இவ அவனிட்ட வசமா மாட்டப்போறா அப்ப தெரியும் கறுப்பன் யாரெண்டு.

சீடன் : நீயே மஞ்சுவ பிடிச்சி கறுப்பனிட்ட குடுத்திடுவ போல கிடக்குது. ஏன் அவள் கற்போட வாழ்வது உனக்கு விருப்பமில்லையா?

குரு : உங்கட சண்டய விடுறீங்களா? இல்லாட்டா நான் கதையை விடவா?

சீடன் : இல்லை குருவே இவன்தான் முந்திரிக் கொட்டயப்போல முந்திக்கொண்டு என்னமோ எல்லாம் அவசகுணமா பேசுறான். நீங்க மேல மேல சொல்லுங்க குருவே.

குரு : மரத்தால விழுந்தவனை மாடு மிரிச்சாப்போல மஞ்சுவின் குடும்பத்தார். அவள் தோழிமார், உற்றார் உறவினர்கள் எல்லோராலும் மஞ்சுவுக்கு தொல்லைகள் வந்தன.

சீடன் 1 : ஏன் குருவே அவர்கள் எல்லோரும் கறுப்பனின் ஆசையை நிறைவேற்றச் சொல்லி வற்புறுத்தினார்களா?

குரு : கொஞ்சம் பொறு நான் அதை கூறுகின்றேன்.

பாடல் - 06

காசியை அள்ளி வீசக் கறுப்பன் - மஞ்சுவின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழியரை விலைக்கு வாங்கி
உற்றார் உறவினரைப் பிடித்து பணத்தால்
மஞ்சை தன் இச்சைக்கிணங்க வைக்கச் சொன்னான்.

சீடன் 1 : இப்போ மஞ்சுவின் நிலை ஐயோ பரிதாபம், பரிதாம்

சீடன் 2 : மத்தளத்திற்கு இரண்டு பக்கம் அடிவிழுவது போல மஞ்வுட வீட்டிலையும் ஒரே நச்சரிப்பாக இருந்திருக்கும் என்ன குருவே.

குரு : சரியாகச் சொன்னாய் சீடா

சீடன் 1 : அப்ப நான்

சீடன் 2 : இவன் கிடக்கிறான் மூடன் நீங்க மேல மேல சொல்லுங்க குருவே

குரு : மஞ்சு சிந்தித்தாள் மூர்க்கமுடனே ஒரு முடிவெத்தாள்

சீடன் 1 : ஐயோ! மஞ்சு என்ன தூக்கில் தொங்கப் போறாளா? இல்ல ஆத்துல விழப்போறாளா குருவே

சீடன் 2 : சீ... சீ... அவள் அப்படி எல்லாம் முடிவெடுக்க உன்னைப் போல் துடை நடுங்கியா? நீங்க மேலே... மேலே... சொல்லுங்க

குரு : தன் கற்புக்கொரு வேலியையும், வாழ்க்கைக்கு ஒரு தாலியையும் தேர்ந்தெடுக்க, முடிவு செய்தாள். மண நாளையும் குறித்தாள்.

பாடல் : தன் கற்புக்கொரு வேலியையும் - மெய்
வாழ்க்கைக்கொரு துணையையும்
தேர்ந்தெடுக்க முடிவு செய்து - தான்
மண நாளினையும் தான்குறித்தாள்.

சீடர் : ஆமா தன் மண நாளினையும் குறித்தாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு : சேதியறிந்து கறுப்பன் - நிறைகாத்து
வாழ நினைத்த மஞ்சுவைத்தடுக்க
தன் பரிபாரம் புடைசூழ - கூடி
மண மேடைக்கு சென்றனனே

சீடன் 2 : சிவ பூஜையில் கரடி புகுந்தாற்போல கறுப்பன் என்ன செய்யப் போறானோ படுபாவி

சீடன் 1: பாவம் குருவே மஞ்சு தன் பலத்தையும் அதிகாரத்தையும் கொண்டு மஞ்சுவை அடையப் போறானா?

குரு : பொறுங்கள் கூறுகிறேன் மணமேடையில் இருந்த ஆட்களையெல்லாம் கலைத்துவிட்டு மணம் முடிக்க இருந்தவனையும் துரத்திவிட்டு மஞ்சுவை தாவி அணைக்க எத்தனிக்க செய்வதறியாது. தன் நிறைகாக்க துணிந்திட்ட மஞ்சு வேங்கையாக வீறு கொண்டெழுந்து வீரத்துடன் விளக்கை எடுத்து ஓங்கி குத்தினாள். அவன் மார்பதனில், கதறியபடி கறுப்பன் குடைசாய்ந்து குப்புற விழுந்தானே... இதயத்தைத் துளைத்ததால் இரத்த வெள்ளத்தில் வீழ்ந்தான். பரிபாரங்கள் எல்லாம் ஓடி ஒழிந்தன.

சீடன் 01: ஐயோ! அழிந்தான்... கறுப்பன் கொலையும் செய்வாள் பத்தினி என்பது இதுதானா குருவே?

சீடன் 02:கற்பு என்பது எப்படிப்பட்ட ஒரு பொக்கிசம் என்பதையும் அதை எப்படி பெண்கள் பாதுகாக்க வேண்டும் எனும் உண்மையையும் மஞ்சுட கதையால அறிந்து கொண்டன் குருவே- ஏன் நான் மட்டுமா இவங்களும் அறிந்திருப்பாங்க என்ன குருவே.

சீடன் 1,2: ஆமா, அறிந்திருப்பாங்க... அறிஞ்சிருப்பாங்க

குரு : தன்னிறை காக்க துணிந்திட்ட மஞ்சுவும் பார்போற்றும் மங்கையாக உயர்ந்தாளே புவிதனில் இவ்வாறு பெண்கள் கற்பை பாதுகாத்து கொள்வதுடன் பெண்கள் தமது கற்பிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமே உலைவைக்க கூடாது. அதாவது மகளீர் கவர்ச்சியான உடைகளையும் தேவைக்கு அதிகமான அலங்காரங்களையும் செய்து கொள்வது அவர்களின் கற்பின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் பல காரணிகளுள் இதுவும் ஒன்றாகும்.

சீடன் : அப்ப வெள்ளைக்காரன், வெள்ளைக்காரி அரையும் குறையுமாக திரிகின்றார்களே.

சீடன் : அதை நானும்

குரு : காகம் அன்ன நடை நடக்கப் போய் தன் நடையும், கெட்டுதாம் என்பது ஒரு பழமொழி அதே போல வெள்ளைக்காரன் வெள்ளைக்காரி பண்பாடு கலாசாரத்திற் அது பொருந்தும். ஆனால் எமது நாட்டு கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களை எமது பெண்கள் கடைப்பிடித்தால் அவர்களை கையெடுத்து கும்பிட வேண்டும் போல இருக்கும்.

சீடன் : கற்பென்பது கண்ணாடி போன்றது. இதை நழுவ விட்டு உடைச்சி நொறுக்காம பெண்கள் எப்போதுமே பாதுகாத்துக் கொள்ள வேண்டும். என்ன குரவே.

சீடன் : அப்போ நீ கண்ணாடி உடைந்தால் ஒட்ட முடியாது என்று சொல்ல வாறா...

சீடன் : இப்ப விளங்குதா நான் யாரெண்டு

குரு : இவ்வாறு ஒவ்வொரு பெண்களும் தங்கள் தங்கள் கற்பை தாங்களே காக்கும் காப்பே தலையென மதித்து வாழ வேண்டும் என்று கூறி.

சீடன்1,2: என்று கூறி....

குரு : விருப்புடனே வந்திருந்து வில்லுப்பாட்டு கேட்டிருந்து ரசிச்சவங்க எல்லோருக்கும் வணக்கம் எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிச்சவங்க எல்லோருக்கும் வணக்கம் வணக்கம் வணக்கம்.

மங்களம், மங்களம் மங்களம் மங்களம்
இங்கு வந்து கதை கேட்ட உங்களுக்கு மங்களம்
இன்பமாக இதை சொன்ன
எங்கட்டு மங்களம்
மங்களம் மங்களம் ஜெய மங்களம்
மங்களம் மங்களம் சுப மங்களம்

(2017ம் ஆண்டு தமிழ்மொழித்தினம்
பிரதேச மட்டம் 2ம் இடம்)

## 14. சினம் சினந்தாரைக் கொல்லும்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு

தந்தனத்தோம் என்று சொல்லியே
வில்லினில் பாட வில்லினில் பாட
வரம் தந்தருள வேண்டும் அறிவான தெய்வமே
வரம் தந்தருள வேண்டும் அறிவான தெய்வமே
வந்துள்ள சபையோரே வணக்கம் வணக்கம்
வாய்ப்பளித்த பெரியோரே வணக்கம் வணக்கம்

வெள்ளைத் தாமரை மீதிருத்து வீணை மீட்டுபவள்
அன்னை சரஸ்வதி அவளின் நாமம்.
அடி பணிந்திடுவோமே!

இன்றைய தமிழ்த் தினப்போட்டி நிகழ்வினிலே - ஆமா
வில்லடித்து சொல்கொண்டு "சினம் என்றும்
சேர்ந்தாரைக் கொல்லும்" என்ற சிறந்த
கதையை வில்லிலே இசைகூட்டிச் சொல்ல
வந்துள்ளோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு : சீடர்களே! இராமன் எவ்வாறு காட்டிற்குச் சென்றான். என்பது நாங்கள் எல்லோரும் நன்கு அறிந்த கதை அல்லவா? ஆதனால் அதை நான் மீண்டும் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

சீடன் : ஆமாம் மந்தரையின் சூழ்ச்சியாலும், கையேகி கேட்ட கடும் வரத்தாலும் இராமன், சீதை, இலக்குமணன் எல்லோரும் காட்டிற்குப் போனார்கள் என்பது இந்த உலகறிந்த கதை.

சீடன்1 : அதை..... எங்கட அம்மம்மாட்ட கேட்டுக் கேட்டு நல்ல மனப் பாடமாயிற்று.

குரு : ஆனால், இவர்கள் காட்டிற்குச் சென்ற பின்பு, இலக்குமணனின் அழகில் மயங்கிய சூர்ப்பனகை தனது ஆசையைக் கூறி, மூக்கறுபட்டு, அந்தச் சினத்தாலே இராம - இராவண யுத்தம் நடந்து இராவணனின் குலமே அழிந்த கதை தெரியுமோ?

சீடன்1 : சூர்ப்பனகையின் மூக்கு அறுக்கப்பட்ட கதையா? இது எல்லாம் எங்கட அம்மம்மா சொல்லல்ல.

சீடன்2 : எனக்கும் தெரியாது குருவே. விளக்கமாகச் சொல்லுங்களன் இவர்களும் கேட்பாங்க.

குரு : இலக்குமணன் இராமனின் தம்பி என்பது அவன் இராமன் மேல் அளவற்ற அன்பும், மரியாதையும் கொண்டவன் என்பது உங்களுக்கு தெரியுமோ?

சீடர்கள் : ஆமாம்

குரு : ஆனால், அவனுடைய அழகைப்பற்றி உங்களுக்குத் தெரியுமோ?

சீடர்3 : இல்லை, விளக்கமாகச் சொல்லுங்களன்.

குரு : இலக்குமணனின் அழகைச் சாதாரண வார்த்தைகளால் கூறமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன் : கீறிக் காட்டப்போறாரோ?

குரு பாடல் :

சிவந்த வாய் அழகுடையவன்
சிறந்த நல்ல குணமுடையவன்
காண்போரைக் கவர்ந்திடும் அழகன்
அவன் இராமன் தம்பி இலக்குமணன்
அழகென்ன அழகு அற்புத அழகு
அழகுமணி மாளிகையின் அலங்கார திருவுருவோ
அழித்தெழுதா சித்திரமாம் இலக்குமணன்
அகிலத்தை மயக்கவந்த அழகன் தான் இவனோ?

இவ்வாறு. அனைவரையும் வியக்க வைக்கும் அழகுடைய இலக்குமணனை, இலங்கையர் கோனின் தங்கையான சூர்ப்பனகை கண்டு சும்மா இருப்பாளா? அவனின் அழகில் மனம் மயங்கி அவனை அடைய வேண்டும் என்று ஆசைப்பட்டாள்.

சீடன்1 : ஆள்தான் அரக்கி எண்டா, ஆசையும்அப்படித்தான் இருக்கு.

குரு : ஆமாம் அரக்கியான அவள் அழகிய பெண் உரு ஒன்றை எடுத்தாள் இலக்குமணனை அணுகி தனது விருப்பத்தைத் தெரிவித்தாள்.

சீடன்2 : அதற்கு இலக்குமணன் என்ன சொன்னான் குருவே (வெட்கத்துடன்)

குரு : நீ வெட்கப்படாதே அப்படி ஒன்றும் நடக்கவில்லை சூர்ப்பனகையின் செயல்கள் அவனுக்கு ஆத்திரத்தையும் எரிச்சலையும் ஏற்படுத்தியது. சூர்ப்பனகை சற்றும் எதிர்பாராத வகையில் அவளது மூக்கை இலக்குமணன் வெட்டி அரிந்தான்.

சீடன்2 : ஐயையோ..... அப்புறம்?

சீடன்1 : இது தெரியாதா உனக்கு? ஐயோ? அம்மா! என்று கத்திருப்பாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு : அவள் அப்படி ஒன்றும் அழவில்லை. இரத்தம் சொட்டச் சொட்ட அறுக்கப்பட்ட மூக்குடன் நின்ற அவளுக்கு, வேதனை ஒருபுறம், ஏமாற்றம் மறுபுறமாக இரண்டும் சேர்ந்து ஆத்திரத்தையும், கோபத்தையும் ஏற்படுத்தியது.

பாடல் :

அழிப்பேன் அழிப்பேன் அழிப்பேன்
அழகன் உன்னை அழிப்பேன்
அழகிய மூக்கை அரிந்த உன்னை
அகிலத்தில் இருந்து ஒழிப்பேன்
அண்ணனைத் துணைக்கு அழைப்பேன்
பத்துத் தலை கொண்ட இராவணன்
பதறி வந்து அழித்திடுவான் உன்னை.

என்று கூறி மாயமாக மறைந்து விட்டாள்.

சீடன்1 : வில்லன் இனித்தான் வரப்போறான்.

சீடன்2 : அப்ப நல்ல சண்டைக் காட்சியெல்லாம் வரும்போல?

சீடன்1 : கதை நல்ல விறுவிறுப்பாய் போகும் போல.

சீடன்2 : அப்படியெண்டா அவளின் அண்ணனை உடனே அடிக்க கூட்டி வந்துவிட்டாளா குரு?

குரு : இல்லை முதலில் அவள் சண்டையை மூட்டவில்லை தனது சபதத்தை தனது தமயனான இராவணனின் ஊடாக நிறைவேற்ற எண்ணினாள் இராவணன் பெண்கள் மேல் இயல்பாகவே சபலபுத்தி உடையவன் என அறிந்து ஓர் சூழ்ச்சி வலையை வீசினாள் சீதையின் அழகினைப் புகழ்ந்து கூறத் தொடங்கினாள்

பாடல் :

நிலவொன்று கண்டேன்
அவள் முக ஒளியினிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையொன்று கண்டேன்
அவள் இடை அசைவினிலே
மயில் ஒன்று கண்டேன்
அவள் குழல் அழகினிலே
மனம் மயங்கி விழித்தேன்
சீதை சிரிப்பொலியினிலே.

இந்த வருணனை வலையினை சூர்ப்பனகையின் சூழ்ச்சி வலை என்று தெரியாமல் இராவணனின் மனம் என்னும் மீன் சிக்கித் தவித்தது. சீதையின் அழகினை அப்படியும் இப்படியும் எண்ணில் பார்க்கும்போது அவளை நேரில் காண வேண்டும் என்னும் ஆசையால் துடி துடித்தான்.

சீடன்1 : கொஞ்சம் பொறுங்க சீதை இராமணனின் மனைவியல்லவா? இவன்ர புத்தி எங்க போனது?

சீடன் 2 : பாவம் செய்யப்பொறான் பாதகன்.

குரு : கேடு வரும் முன் மதி கெடும் என்று கேள்விப்பட்டிருக்கின்றீர்கள் தானே?

சீடர்கள் :ஆமாம்

குரு : தான் செய்வது பாவமா? புண்ணியமா? என்று எண்ணிப்பார்க்கக் கூட அவனது மனம் நினைக்கவில்லை அந்த பெண்மானைக் கண்டு தன்மானாக்க புட்பக விமானத்தில் ஏறிப் பறக்கத் தொடங்கினான்.

சீடன்1 : கொஞ்சம் பொறுங்க புட்பக விமானமா? அது என்ன?

சீடன்2 : இது தெரியாதா உனக்கு? அதுதான் அந்தக் காலத்து ஜெட் விமானம் நீங்க கதையை மேல சொல்லுங்கள்

சீடன்2 : கொஞ்சம் பொறுங்க அப்படியெண்டா.... அவர் விமானம் ஓட்ட படிச்சிரிப்பாரா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு : அவர் படிச்சிருப்பாரா படிக்கல்லையோ என்பது முக்கிய மில்லை. ஆனால் சீதையை விழுத்தாட்டாமல் கொண்டு வந்து சேர்ந்திருக்கான். இனி குறுக்க கேள்வி கேட்கக் கூடாது. (எரிச்சலுடன்)

காட்டிற்குச் சென்ற இராவணன் சீதையைக் கண்டான். அவள் அழகினை நேரில் கண்டதும் தடுமாறிப் போனான் சூர்ப்பனகையை மனதுக்குள் திட்டிக்கொண்டான்.

சீடன்1 : ஏன் சூர்ப்பனகை சொல்லித்தானே சீதையை அவனுக்குத் தெரியும்?

குரு : அதாவது இப்படிப்பட்ட பேரழகியான சீதையை சொற்ப வார்த்தைகளில் அல்லவா குறைவாகக் கூறி விட்டாள் என்று அவனுக்கு தங்கைமேல் கோபம் வந்தது. பொறாமைக்காரி என்று மனதுக்குள் திட்டிக்கொண்டான்.

மாரிசனை மாயமானாக்கி, அதனை சீதையின் முன்பு அனுப்பினான். மான் துள்ளித் துள்ளி விளையாடியது. மானின் மருட்சியைவிட இவளின் கண்கள் எவ்வளவு அழகானது என்று வியந்து நின்றான்.

சீடன்1 : என்னுடைய கண்கள் மாதிரியா குரு?

சீடன்2 : உன்ர கண்ணா?

சீடன்1 : அது மாட்டுக் கண்.

குரு : அவள் மானை ஒடிப் பிடிப்பதனையும், அது மான் தள்ளித் தள்ளி ஓடுவதனால் ஒடி ஓடிக் களைப்பதனையும் ரசித்து இன்புற்றாள்.

சீடன்1 : இவ்வளவிற்கும் இராமன் என்ன செய்து கொண்டிருந்தான்?

குரு : இராவணன் மாயமாக நின்றிருந்தபடியால் அவன் நிற்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்கும் தெரியவில்லை. மானைப் பிடிக்க முடியாது களைப் படைந்த சீதை இராமனை பிடித்துத் தருமாறு அழைக்கலானாள்.

பாடல் :

புள்ளி மானொன்று துள்ளியே ஓடுது
பிடித்துத் தாருமையா.....
அள்ளியே என்மனதை தள்ளியே ஓடுது
விரைவாய் வாருமையா - நீரும்
ஓடியே வாருமையா.....

சீடன்1 : இராமன் வந்து மானைப் பிடித்தாரா?

குரு : இராமன் வெளியில் வந்தான். தன்னாலே எல்லாம் இழந்து நிற்கும் தன் மனைவியின் இந்த ஆசையையாவது நிறைவேற்றி வைப்போம் என்று எண்ணி மானைத் துரத்தி ஓடினான் மானும் தூரத் தூர ஓயது. சீதையினதும் இலக்குமணனதும் கண்களுக்குப் புலப்படாத வண்ணம் மிகவும் தூரத்தில மானும் இராமனும் மறைந்தனர். அப்பொழுது "இலக்குமணா அபயம்" என்று மாயமாக ஓர் சத்தம் கேட்டது.

சீடன்1 : இராமனுக்கு முள்ளுக் குத்திருக்குமா குருவே?

குரு : இல்லை இதுவும் இராவணனின் சூழ்ச்சிதான். அண்ணனுக்கு ஆபத்து என்றால் இலக்குமணன் தாங்கமாட்டான். அத்துடன் கணவனுக்கு ஆபத்து என்றால் இலக்குமணனைப் பார்த்து வரும்படி சீதை அனுப்புவாள் என்று அவன் ஊகித்து திட்டமிட்டது நடந்தது.

சீடன்2 : அப்ப இலக்குமணனும் போய்விட்டானா?

குரு : ஆமாம் இப்பொழுது சீதை மட்டும் தன்னந்தனியாக நின்றாள். கணவனும், மைத்துனனும் சென்ற வழியை எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த வேளையில, இராவணன் சீதை நிற்கும் இடத்துக்குச் சென்றான். அவளை நின்ற இடத்துடனே பெயர்த்து புட்பக விமானத்தில் ஏற்றினான் அவளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தீவில் கொண்டு வந்து அசோக வனத்தில் சிறைவைத்தான். சீதை தன்னந்தனியே சிறையில் வாடத் தொடங்கினாள்.

பாட்டு :

என்ன கொடுமையையா - எனக்கு
ஏன் இந்த சோதனையோ?
கானகம் தனிலே காரிகைவாட (2)
என்ன கொடுமையையா?
பாதகன் இராவணன் கவர்ந்து வந்த
என் நிலையினை யார் அறிவாரோ?
கண்ணிறைந்த பதியே - எந்தன்
கனிவுள்ள இராமா நீயோ
உன் சீதை தேடுகின்றாள்
ஓடி வந்தே நாதா என்னை மீட்பாய் ஐயா!

சீடன் 1 : என்ன வேலை இது. அவன் நல்லா இருப்பானா?

சீடன் 2 : அப்ப இராமனுக்கு தம்பிக்கும் எப்படி இந்த விடயம் தெரிய வந்தது?

குரு : அங்கே குற்றுயிராக கிடந்த ஒரு பறவை மூலம் இதை அறிந்து கொண்டதும் இராமனும் இலக்குமணனும் இடியோசை கேட்ட நாகம் போல் ஆனார்கள். தங்களை நம்பி வந்த ஒரு பெண்ணைக் காப்பாற்ற முடியாத பாவிகளாக தம்மைத் தாமே நொந்து கொண்டனர். சீதையைத் தேடி அங்கும் இங்கும் அலைந்து திரிந்தனர். இவ்வாறு அலைந்து திரியும்போது அனுமானின் தொடர்பு அவர்களுக்கு கிடைத்தது.

சீடன்1 : கடவுளை நம்பினார் கைவிடப்படார் என்பது எவ்வளவு உண்மை என்ன?

குரு : ஓம் அதுவெண்டா சரிதான் அனுமான் இராமன் சுட்டிக் காட்டிய வழிப்படி சென்று இலங்கையை அடைந்தான். அவன் சீதையின் நிலையினை நேரில் கண்டு மனம் நொந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டான். சீதா பிராட்டிக்கு தான் யார் என்பதையும். தெரிவித்து தென்பூட்டும் வார்த்தைகளைக் கூறி இரவணனிடம் சென்றான்.

சீடன்1 : சென்று

குரு பாடல் :

இலங்கை வேந்தே இராவணா
நீ என்ன பாதகம் செய்தாயோ?
மாற்றான் மனைவியில் மையல் கொண்டு
மறைத்து வைத்தது சரிதானா?
விட்டுவிடு சீதையையே - இல்லை
வீணில் மடிவாய் நிச்சயமே.

குரு : இவ்வாறு அனுமான் இராவணனிடம் புத்தி கூறிய போது அதை ஏற்றுக் கொள்வில்லை.

சீடன்2 : அவன் அரக்கன் தானே? அதுதான் அவ்வளவு சினமும் அகம்பாவமும்.

குரு : அப்படிச் சொல்லாதே அரக்கர்களுக்குள்ளும் நல்லவர்களாக கும்பகர்ணன், விபுடணன் என இரண்டு தம்பிகள் இருந்தனர். தமது தமையனான இராவணனுக்கு பல புத்திமதிகள் கூறி சீதையை விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டனர். ஆனால் அவன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் விபுடனன் நீதியின் பக்கமாய் இராமனிடம் சேர்ந்து கொண்டான். கும்பகர்ணன் அண்ணனுக்கு நன்றிக்கடன் தீர்ப்பதற்காகவே இராவணன் பக்கம் நின்றான்.

சீடன்1 : அப்பவே இப்பமாதிரி அவங்களுக்குள்ளும் பிரிவு வந்துட்டு என்ன?

குரு : ஆமாம் நற்புத்தி கூறியவர்கள் எல்லோரையும் சினம் கொண்டு இராவணன் வெறுத்து விட்டான். இப்படியாக ஒரு பெண்ணுக்காக இருபடையணிகளும் போருக்கு ஆயத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யத் தொடங்கினர்.
(போருக்கான ஒலி) முரசு ஒலித்தல்.

இராம இராவண யுத்தம் நடைபெற்றது. ஆறுவது சினம் என்று அறிஞர்கள் கூறியும் இவர்கள் கேட்கவில்லையே. போர் உக்கிரம் பெற்றது.

இராவணனதும் அவனைச் சேர்ந்தவர்களும் அழிந்தனர். விபுடனன் மட்டும் சினத்தின் வழி செல்லாமல் நீதியின் வழிசென்றதால் தப்பித்துக் கொண்டான்.

குரு : இராம இலக்குமணர்கள் வெற்றி பெற்றனர். இதனால் நாம் எல்லோரும் அறிந்து கொண்ட விடயம் என்ன?

சீடன் 2 : "சினம் என்றும் சேர்ந்தாரைக் கொல்லும்";

குரு : ஆமாம் நாம் சினம் கொள்வோமானால் அச்சினம் நமது மதியை மயக்கி நம்மை அழித்துவிடும்.

பாடல் :

கொள்ளாதே சினம் கொள்ளாதே
கொள்ளாதே சினம் கொள்ளாதே
நல்லது கெட்டது நாமும் அறிந்து
நலமாய் வாழ்ந்திடுவோம் எந்நாளுமே
கொள்ளாதே சினம் கொள்ளாதே
நாடறிந்த மன்னன் நற்குலம் அழிந்த கதை
நாமெல்லாம் அறிந்தோமே
நாமெல்லாம் அறிந்தோமே
சூர்பனகை சினத்தால் சிறந்த குலம்
சிதைந்த கதை கேட்டீரோ கேட்டீரோ
இன்று கேட்டீரோ

குரு : அகிலத்தை ஆண்டிருந்த அரக்கர் குலம் அழிந்து கொண்டதை நாம் எல்லோரும் அறிந்து கொண்டோம் சினம் கொள்வோருக்கு இது சிறந்த பாடமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, நீங்களும் இவ்வாறு சினமறுத்து வாழ்ந்தால் எப்பொழுதும் உயர்வுடன் வாழலாம் இவங்களுக்கு மட்டுமல்ல உங்களுக்கும் தான் ஆறுவது சினம் சினம் என்றும் சேர்ந்தாரைக் கொல்லும் என்று கூறி.

விருப்புடனே வந்திருந்து
வில்லுப்பாட்டுக் கேட்டிருந்து
ரசிச்சவங்க எல்லோருக்கும் வணக்கம்
எங்களை மதிச்சவங்க எல்லோருக்கும் வணக்கம்
வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

மங்களம் மங்களம்
அங்கயற் கன்னியவள்
அம்பிகைக்கு மங்களம்
அம்பலத்தில் ஆடுகின்ற அண்ணலுக்கு மங்களம்
இங்கு வந்து கதை கேட்ட
உங்களுக்கு மங்களம்
இன்பமாக கதை சொன்ன
எங்களுக்கு மங்களம்
மங்களம்! மங்களம்! மங்களம்! ஜெய மங்களம்!
மங்களம்! மங்களம்! மங்களம்! சுப மங்களம்

(2000 ஆண்டு, தேசிய மட்டம் 2 இடம்)

## 15. மன்னன் உயிர்த்தே மலர்த்தலை உலகம்

தந்தனத்தோம் என்று சொல்லியே
வில்லிசை பாட வந்திடுவாய் கணபதியே
வரம் தந்திடுவாய் கணபதியே

நாவினில் உறைந்திட்ட நாமகளே தாயே
நாட்டமுடன் உன் பாதம் பணிந்தோம் அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையிலுள்ள கற்றோரே பெரியோரே சிறுவர்மாரே
எல்லோருக்கும் இந்நேர வந்தனங்கள்
ஔவையார் வாக்கு ஒன்றின் பெருமைதனை - சிறுவர் நாமே
கூறவந்தோம் சபைதனிலே

நாம் இச்சபை தனிலே ஔவையார் வாக்கு ஒன்றின் பெருமைதனை எடுத்தியம்ப வந்துள்ளோம்.

நாம் கூறும் விடயங்களில் சொற்பிழை, பொருட்பிழை ஏதேனும் இருந்தால் மன்னித்தருளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சீடன் 1 யாரந்த ஔவையார்

சீடன் 2 எங்கட முருகப் பெருமானிடம் சுட்ட பழம் எது, சுடாத பழம் எது என்று கேட்ட பாட்டி தானே!

ஆமாம்! இற்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பல புலவர்கள் இன்னும் மக்களால் போற்றப்படும் ஔவையார் நாவினிக்க நாவினிக்க பற்பல பாடல்களைப் பாடி புலமை பெற்ற இவர் மன்னன் தம் பெருமையையும் பாடவும் தவறவில்லை.

சீடன் 1 : எங்கட தாத்தாவின் அப்பா இவரைப் பற்றிச் சொல்லித் தந்த பாட்டு இப்ப எனக்கு நினைவு வருது.

சீடன் 2 : ஓமாம்! இப்ப நான் பாடுறான் கேளன்.
வரம்பு உயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயர குடி உயரும்
குடி உயர கோன் உயரும்

சீடன் 1: உனக்கு என்ன பைத்தியமா பிடிச்சிருக்கு தேவாரம் பாடுற மாதிரியல்லா பாடுற. குரு சொல்வதை பொறுமையாக் கேள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு : நெல்லும் உயிரன்று நீரும் உயிரன்று
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்

சீடன் 1 : கேட்க உடம்பெல்லாம் புல்லரிக்குது.

சீடன் 2 : கவனமாயிரு! கன்றுக்குட்டி மேய்ஞ்சிடும்

குரு : அப்படியென்றால் என்ன குருவே. உலகில் வாழும் மக்கள் அனைவரும் சீரும் சிறப்புமாக உயிர் வாழ்வதற்கு நெல்லோ, நீரோ அவசியமாகும் என்பதனை அழகாக கூறியுள்ளார். அதாவது மன்னனாவன் நல்லாட்சி செய்து நாட்டை வளமுடன் வைத்திருப்பானால் உலகிலுள்ள மக்கள் அனைவரும் சந்தோசமாக இருப்பார்கள் என்பதே இதன் பொருள்.

சீடன் 1 : அப்ப சோறு இல்லாம மக்கள் உயிரோட இருப்பார்களா?

சீடன் 2 : அது தானே நீரும் இல்லாம உயிரோட இருப்பார்களா?

குரு : அந்த வகையிலே இராமாயணம், மகாபாரதம், சிலப்பதிகாரம், அரிச்சந்திர புராணம் போன்ற பல்வேறுபட்ட இலக்கியங்களில் கூறப்படும் மன்னர்கள் நல்லாட்சி புரிந்து வந்தமையும் அதனால் மக்கள் வளமுடன் வாழ்ந்தார்கள் என்பதற்கும் சான்றுகள் உள்ளன.

இப்போது நான் உங்களுக்கு இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட சிலப்பதிகாரம் எனும் நூலில் கூறப்படும் மன்னன் பாண்டிய நெடுஞ் செழியன் பற்றி எடுத்து கூறுகின்றேன் கேளுங்கள்.

பாண்டிய நாட்டினை பலருமே போற்றிட
புரிந்தான் மன்னன் ஆட்சிதனை
சீருடம் சிறப்புடன் நாட்டினை ஆண்டிட்டு
மகிழ்ந்தான் மன்னன் நெடுஞ் செழியன்

இவனது காலத்திலே மக்கள் பாண்டியனை போற்றினார்கள், சிரித்தனர் மகிழ்ந்தனர் செழிப்புடன் வாழ்ந்தனர் துதித்தனர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றினர் துயரின்றி இருந்தனர் நீதியை நாட்டிய பாண்டி மன்னனை நிலை பெற்று வாழ்ந்திட நீடுழி வாழ்ந்தனர்.

பாண்டிய நெடுஞ் செழியன் நீங்காத பெருஞ் சிறப்பினை உடையவன். வீரத்தின் சிகரமாக விளங்கியவன் நீதி தவறாது நேர்மையுடன் மக்களின் நலனுக்காவே தன் உயிரை தியாகஞ் செய்யக் கூடிய மனப்பாங்கு உடையவன். தன் ஒப்பற்ற திறமையால் மதுரை மாநகரையே ஆட்சி புரிந்து, செல்வச் செழிப்புடன் வாழ வைத்த பெருமைக் குரியவன். இவனது காலத்தில் மக்கள் துன்பம் ஏது? நோய் ஏது என்று தெரியாதவர்களாகவும் மகிழ்ச்சியாகவும் தன் வாழ்க்கையை நடாத்தினார்கள். மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் மதுரையை அலங்கரித்தன. இப்படியான மன்னனைப் புகழ வார்த்தைகளே கிடையாது.

துன்பம் துயரம் எதுவுமின்றி மதுரை மக்கள் வாழ்ந்த காலம்
செல்வச் செழிப்பு ஒன்றே மட்டும் கண்டதோர் மக்கள்
அந்தக் காலம் பசியோ பட்டினியோ என்னவென்று புரியாது
மக்கள் வாழ்ந்த காலம்
இன்பக் கடலில் மூழ்கி மக்கள் இனிதே
இப்படியாக மக்கள் இன்புற்று வாழ்ந்த காலத்திலே தான்
மன்னன் நெடுஞ் செழியனின் வாழ்விலே விதி விளையாடியது

சோழ நாட்டிலே பூம்புகார் நகரத்திலே கோவலன் எனும் வணிகன் இருந்தான். அவன் மனைவி கண்ணகை நடனக் கலையிலே ஆர்வமும் ஆசையும் கொண்ட கோவலன் நடன மங்கையான மாதவி என்பவளின் நடனதிலும் அழகிலும் மதிமயங்கி தனக்கே உரிய அனைத்து செல்வத்தையும் இழந்தான். இறுதியில் மனையாளின் இசை முழங்கும் இரு காற்சிலம்புகளை விற்று பொருள் பெறுவதற்கு விரும்பிய அவன், புலவர் போற்றும் பெருஞ்சிறப்பும் மாட மாளிகைகள் நிறைந்த பெருமையும் உடைய பாண்டியனின் தலைநகரான மதுரையை கண்ணகையுடன் சென்றடைந்தான்.

சீடன் 1 : பாவம் கோவலன் மாதவியை நம்பி ஏமாந்து போனாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன் 2 : சீச்சி கண்ணகையை நினைக்க கவலைதான் வருது.

நாடக மங்கை மாதவியாலே
இழந்தான் கோவலன் சொத்தினையே
மதுரை மாநகர் புகழினை கோவலன்
அறிந்தே வந்தான் சிலம்புடனே
தன் துயர் துடைப்பான் பாண்டியன் என்று

வரும் வழியிலே பொன் வேலை செய்யும் கொல்லன் ஒருவனிடம் தன் சிலம்பில் ஒன்றைக் கொடுத்து பணம் தருமாறு வேண்டினாள். அவனோ தான் முன்பு பாண்டிய நாட்டு அரசியாகிய கோப்பெருந்தேவியரின் காற்சிலம்பை களவாடிய நினைவு வர ஏதோ திட்டமிட்டவனாக, கோவலனிடம் பின்வருமாறு கூறினான். மன்னனின் தேவியைத் தவிர வேறு எவராலும் வாங்கி அணியும் தகுதி உடையதன்று இச் சிலம்பு ஆதலால் அரண்மனைக்குச் சென்று கேட்டு வருகிறேன் என்று கூறினான்.

பாண்டியனைக் கண்டு நம் அரசியின் காற்சிலம்பை ஒரு அயலானின் கையிலே கண்டேன் என்றான்.

வினையின் பயன் வந்து விளையும் காலம் வந்து விடவே மேற்கொண்டு எதையும் ஆராய்ந்து தெளியாதவனாகினான். தன் காவலரை அழைத்து "இதோ இவன் காட்டும் கள்வனைக் கொன்று காற்சிலம்பினை கொண்டு வா என ஏவினான். இதன் விளைவால் கோவலன் கொலயுண்டு மாண்டான்."

விதியின் வசத்தால் பாண்டிய மன்னன்
கொல்லனின் சொற் கேட்டான்
விளக்கம் ஏதும் கேட்கும் முன்பே
பணித்தான் தனது ஆணையினை

கண்ணகையோ துடித்தாள். புரண்டாள். அழுதாள் அவள் பத்தினியல்லவா. தன் வலிமையால் பாண்டியனை அழியச் செய்தாள். முத்தாரம் தவழும் மார்பின் முலை முகத்தைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகி எறிந்து மதுரை நகரையே தீக்கு இரையாக்கினாள்.

அந்நாள் முதல் நாட்டிலே மழை பெய்யாது நிலம் எல்லாம் வரண்டு போயின.

மன்னன் பாண்டியன் உயிரது சென்றது
மதுரை நகரமே முற்றாக அழிந்தது
மக்கள் முழுவரும் துன்பத்தில் ஆழ்ந்தனர்
மறக்க முடியாத மயானம் ஆனது.

துன்பமும் துயரமும் நாட்டினைச் சூழ்ந்தது
கோயிலும் பிணியிலும் மாந்தர்கள் துவண்டனர்
செழுமையும் வளங்களும் நாட்டிலே குன்றின
மாட மாளிகைகள் மல்லாந்து கிடந்தன.

நெல்லும் உயிரன்று நீரும் உயிரன்று
மன்னன் உயிரத்தே மலர்தலை உலகம்
ஔவையின் வாக்கு இங்கேயே பலித்தது.

2015 மட் மாவட்டம் 1ம் இடம்

## 16. புலித்தலைமை நாய் மோத்தல் இல்

காப்பு

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தியிளம் பிறை போலுமெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றோமே.

வெள்ளைத் தாமரைப் பூவிலிருந்து
வீணை மீட்டுபவள்
அன்னை சரஸ்வதி அவளின் பாதம்
அடி பணிந்திடுவோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையடக்கம்

தந்தனத்தோம் என்று சொல்லியே - வில்லிசைபாட
ஆமா வில்லினிற்பாட ஆமா வில்லினிற்பாட
வரம் தந்தருள வேண்டுமறிவான தெய்வமே
சந்தத்தோடு பானை தாளம் சிற்றுடுக்கை பம்பையோடு
வந்துபாடு மெங்களுக்கு துணைபுரிவாய் - நாயகா
எங்களுக்கு துணைபுரிவாய்
வந்துள்ள சபையோரே வணக்கம்! வணக்கம்!
வாய்ப்பளித்த பெரியோரே வணக்கம்! வணக்கம்!

குரு : பெரியோர்களே!

எல்லோரும் : ஆமாம்!

குரு : சபையோர்களே!

எல்லோரும் : ஆமாம்!

குரு : நாங்கள் எல்லோரும் இந்த இனிமையான வேளையிலே இங்கே ஏன் கூடியிருக்கின்றோம்.

சீடன் 1: இணையத்தளத்திலே முகப்புப் புத்தகத்தில் "நாயும் புலியும்;; விளையாட்டு விளையாடத்தானே.

சீடன் 2 : இணையத்தளமா? முகப்புப்புத்தகமா எல்லாப் புத்தகங்களுக்கும் முகப்பு இருக்கு தானே?

சீடன் 1: இணையத்தளமென்டா "வெப்சைட்", முகப்புப் புத்தகம் என்டா "பேஸ்புக்" இது கூடத்தெரியாதா மண்டு.

சீடன் 2 : அப்படி "வெப்சைட்", "பேஸ்புக்" எண்டு சரியான தமிழில விளக்கமாகச் சொல்லு.

சீடன் 1 : இவரு ஒரு பெரிய செந்தமிழ்ப் புலவர்! எது தமிழ்? எது ஆங்கிலம் என்று புரியாத மண்டூகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு : நீங்க உங்க விவாதப் போட்டிய நிறுத்துங்க? எப்ப பார்த்தாலும் நாயும் புலியுமா குரைக்கிறதும் பாயிரதுமாத் தானிருக்கிறீங்க.

சீடன் 1: இவன் கிடக்கிறான்! நீங்க சொல்லுங்க குருவே.

குரு : நாம் இப்பொழுது "புலித்தலையை நாய்மோத்தல் இல்" எனும் தலைப்பில் வில்லிசைக்கப் போகின்றோம்.

சீடன் 2 : நான் சொன்னேனே! நான் சொன்னேனே! நாயும் புலியும் வினையாட்டுத்தானென்று.

சீடன் 1: என்னமோ எல்லாம் இவருக்கு விளங்குனமாதிரி முந்திரிக் கொட்ட மாதிரி முந்தாத. இது என்ன சிக்கலான தலைப்பாக இருக்குதே குருவே! கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்க குருவே.

சீடன் 2: இப்ப உங்க எல்லோருக்கும் மக்கு, மண்டூகம் ஆரெண்டு தெரியுது தானே? நீங்க சொல்லுங்க குருவே.

குரு : நாடறியப்பட்ட பெருஞ்செல்வர் நல் கூர்ந்து வாடிய காலத்தும் வட்குபவோ! - வாடி வலித்துத் திரங்கிக் கிடந்தே விடினும் புலித்தலையை நாய் மோத்தல் இல். அதாவது, புலி எவளவுதான் வாடிக்கிடந்தாலும், நாய்க்கு அதனருகே சென்று மோந்து பார்க்கும் தகுதி ஒருபோதும் உண்டாவதில்லை. அதுபோல, பெரியோர் வாடி வறுமையுற்றாலும் சிறியோர்க்கு அவரை அணுகும் தகுதி ஒரு போதும் உண்டாகாது என்பதே "புலித்தலையை நாய்மோத்தல் இல்" என்பது பழமொழி புலியை பெரியோருக்கும் நாயைச் சிறியோருக்கும் உவமானமாக இப் பாடல் மூலம் புலியூர் கேசனார் கூறுகின்றார்.

சீடன் 2 : இப்படி நடக்க முடியுமா குருவே,

குரு : இதற்கான எத்தனையோ கதைகள் உண்டு.

சீடன் 2 : கதையா குருவே இப்பத்தைய சினிமாப்படங்களிலே கதையே இல்லாம் அடி உதை எண்டு நேரத்த இழுத்தடிக்கிறாங்க,



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சீடன் 1 : இப்பத்தைய இவர் போன்ற இளைஞர்கள் கையடக்க தொல்லைக் காட்சியில் படம் பார்த்துப் பார்த்தேகெட்டு குட்டிச் சுவராகிறாங்க. நீங்க பொருத்தமான ஒரு கதையைச் சொல்லுங்க குருவே.

குரு : எழுவானுக்கும் படுவானுக்கும்.
இன்ப சுகமளிக்கும்
முழுமதியின் வனப்பினிலே
முகிழ்ந்திருக்கும் ஊரு
குயிலினங்கள் கவிபாட
மயிலினங்கள் ஆடும்
மீன் பாடத் தேன் சிந்தும்
தென்மோடிக் கூத்திசைக்கும்
தெம்மாங்கு பாட்டினிக்கும்.
உழவர்கள் உழைப்பைப் பழுத்த
நெல்மணிகள் சொல்லுமூரு

சீடன் 2 : ஆககா! இனிமையான தித்திக்கு மூரு

சீடன் 1 : எமது வாச்சொல்லு, இனிப்பென்று சொன்னாலே இப்ப, நீரழிவு நோய் பிடிக்கிற காலம் நீங்க சொல்லுங்க குருவே.

குரு : இப்படியான ஒரு ஊரில,
எல்லோராலும் அறியப்பட்ட புகழுடைய
பலத்தில் புலியையொத்த பலசாலியை
அனைத்து அவ்வூர் மக்களும் மதித்தனரே,
போடியாரென்று பயம் கலந்த மாரியாதையுடன்
கூறுகின்ற அவர்வார்த்தை வேதமென மதித்து
தத்தன் சொல்லை அவர்கள் நித்தம் துதித்து
பெருமைக்குரிய பெரியவராக நினைத்து
அருமருந்தென அவரை அவர்கள் மதித்தனரே.

எல்லோரும் :

தந்தனத் தானதனத் னாதனத னானா
தனனா தனாதந்த னாதந்தனானா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன் 1 : அப்படியான பெரும் மதிப்புக்குரிய புலியையொத்த பலமுடைய போடியாரா? தத்தன் குருவே.

சீடன் 2: சில காலத்துக்கு முன்ன புலியென்ற சொல்லக் கேட்டாளே புடிச்சி அடைச்சிடுவாங்க அதற்குப்பிறகு அந்த பெரியாருக்கு என்ன நடந்தது குருவே.

குரு : இப்படியான பெரியார் வாழ்ந்த அதே ஊரில,

சீடன் 1 : அதே ஊரில

குரு : பெற்றோருக்கு அடங்காத சீவகனென்போன்
மற்றோரிடம் சண்டித்தனம் காட்டி
துட்டனாய் வாழ்வதைப் பொறுக்காத
பெற்றோர் தம்முயிரை மாய்த்தனரே.

எல்லோரும் :
ஆமா! பெற்றோர் தம்முயிரை மாய்த்தனரே

குரு : வேலை வட்டியற்றவன் கெட்டழிந்து
ஊரில் பிச்சையேற்று சீரழிந்து
சிறியோனாகிச் சிறப்பிழந்து வாழ
மற்றோர்கள் கீழோனாக மதித்தனரே.

எல்லோரும் :
ஆமா! மற்றோர்கள் கீழோனாக மதித்தனரே.

சீடன் 2 : இந்தக் காலத்து சிறுசிகள் தான் பெற்றோரைப் பெரியோரை மதிக்கிற தில்லையெண்டா அந்தக்காலத்திலயும் அப்படியா?

சீடன் 1: "சொற்கேளாப் பிள்ளை குலத்துக்கீனம்" என்று சும்மாவா சொன்னாங்க கெட்டவைய வேணுமென்பவருக்கு இந்தக் காலமென்ன அந்தக் காலமென்ன? நீங்க சொல்லுங்க குருவே.

குரு : சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாவரை
பேணிக்கொள்வோம் என்னும் நோக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன் 2 : இது என்ன பழமொழி குருவே

குரு : இது பழமொழியல்ல, திருவள்ளுவரின் திருக்குறளில் ஒன்று.

சீடன் 1 : இக் குறள் மூலம் வள்ளுவர் என்ன சொல்லுகிறார் குருவே.

குரு : பெரியவர்களை வழிபட்டு அவர்கள் குணங்களை நாமும் தேடிக்கொள்வோம். என்ற எண்ணம் சிறியவர்கள் மனதில் எப்போதும் உண்டாகாது என்று கூறுகின்றார்.

சீடன் 2 : எவ்வளவு உண்மையான கருத்து, பெரியோர் பெரியோர்தான்! சிறியோர் சிறியோர்தான்

சீடன் 1 : அப்பாடா! நீயிப்பவாவுதல் உண்மையை ஒத்துக் கொண்டாயே! அது போதும், பிறகு என்ன நடந்தது குருவே.

குரு : தத்தன் என்ற பெரியவருக்கு எதிர்பாரதவிதமாக!

சீடன் 1: எதிர்பாராத விதமாக!

குரு :

கண்களை மின்னி மறைக்க! எண்ணமதுவே
வன்மையது தானிழந்து மண்ணிலே சாய்ந்தது
என்னவென்று அறியாது ஏங்கித்தவித்து
கண்ணிமைக்கும் நேரமதில் கடுகதியாய்த்தான்
கொண்டு சென்றார்கள் கொழும் பினிற்கே
இருதய நோயதனால் மாற்றுச் சிகிச்சையளித்து
இருந்த செல்வம் அத்தனையும் கரைந்தது
பொன்னிழந்து பொருளிழந்து நடைதளர்ந்து
தன்னூருக்குத் திரும்பி வந்தார் தத்தன்

சீடன் (1): ஐயையோ! என்ன பாவம் எல்லாச் சொத்துக்களையும் அந்த நோய் சுருட்டி விட்டதே பணம் இல்லாவிட்டால்.

சீடன் (2): வெளிநாட்டில் இருக்கிற இரண்டு மக்களும் இனி தகப்பனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநாதை ஆச்சிரமம், அல்லது முதியோர் இல்லத்தில் சேர்த்திருப்பாங்க இல்லையா குருவே. அதுதானே மக்கள் இப்பத்தைய தந்தைக் காற்றும் உதவி.

சீடன் 1: உன்னைத் திருத்தவே முடியாது? உன்ர புத்தியைத் தான் காட்டுவாய், பிறகு என்ன நடந்தது குருவே,

குரு : சொத்துக்களை இழந்தார் அவர் சொந்த பந்தம் தானிழந்தார் மக்கள் மறந்துவிட்டார் ஊர்மக்கள் மறந்து விட்டார்

எல்லோரும் :

ஆமா, ஊர்மக்கள் மறந்துவிட்டார். தன்னுடைய வீட்டினிலே அவர் தன்னந்தனியா என்றுமே தளராது உறுதியுடனிருந்தார்.

எல்லோரும் :

ஆமா, உறுதியுடனிருந்தார்.

சீடன் 2: இது என்ன சமுதாயம் பெரியோர்கள் நன்றாக இருக்கும் போது, மதிப்பதும், துன்பமுறும் போது மிதிப்பதும்

சீடன் 1: ஆனால், அப்பெரியார் தன்நிலையிலிழுந்து குறைந்து விடவில்லை. என்பதை நீபுரிந்து கொள்.

குரு : பெரியோரை மதியாதவர்களை திருவள்ளுவர்,

சீடன் 2 : திருவள்ளுவர் எப்படிச் சாடுகின்றார் குருவே

குரு : "எரியால் சுடப்படினும் உய்வு உண்டாம், உய்வில்லை பெரியார்ப் பிழைத்து ஒழுகுபவர்.; என்கிறார்.

சீடன் 1: இதன் கருத்தென்ன குருவே

குரு : நெருப்பினால் எரிக்கப்படினும், அதிலிருந்து தப்பிப்பிழைக்க வழியுண்டு. ஆனால் பெரியாரை அவமதிப்பவர் தப்பி பிழைக்க முடியாது என்று கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன் 2: ஆனித்தரமான கருத்து இதை இன்றைய இளைஞர்கள் தெரிந்து, புரிந்து நடந்து கொள்ளவேண்டும்.

சீடன் 1 : சரிசரி நீங்க சொல்லுங்க குருவே!
தானானத் தானதன்ன தானா - தன
தானானத் தானதன்ன தானா

குரு : சீவகன் நாள் தோறும் தனது
சீவியம் நடத்த பிச்சை எடுக்க
தத்தனுடை வீடுதனைக் - கடந்தே
நித்தம் சென்று வந்தான் பயந்தே.

எல்லோரும் :
ஆமா, நித்தம் சென்று வந்தான் பயந்தே.

குரு : தத்தனைக் கண்டு மவரை - அணுக
தகுதி உண்டாக வில்லையே துணிந்து
வாடி வறுமையுற்றார் - அறிந்தும்
சீவகன் மனத்தினிலே என்றும்.

எல்லோரும் :
ஆமா, சீவகன் மனத்தினிலே என்றும்

சீடன் 1: புலி புண்பட்டாலும் வலிமை குறையாது என்பது, சிறியோனாகிய சீவனுக்குபுரிந்து விட்டது.

சீடன் 1: இன்றைய என் போன்ற மானவர்களாயிருந்தா, இதுதான் சந்தர்ப்படம் என்று அந்தப் பெரியாரை வம்புக்கு இழுத்திருப்படம்.

குரு : எல்லா மிருகங்களினதும் தலையை மோப்பம் பிடித்து உண்ணும் நாய் கூட, புலி எவ்வளவுதான் வாடிக்கிடந்தாலும் அதனருகே சென்று மோந்து பார்க்கும் தகுதி ஒரு போதும் உண்டாகாதென்பதனை "புலித்தலையை நாய் மோத்தம் இல்" என்னும் பழமொழி பொய்யாதென்பதனை இவ் வில்லிசை மூலம் தெள்ளிய தெளிவாகப் புரிந்திருப்பீர்கள், இன்றைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள், இளைஞர்களும் பெரியாரை மதித்து மூத்தோர் சொல்லும் வார்த்தைகளை அமிர்தமென ஏற்று நடப்பீர்கள் என நினைத்து,

விருப்புடனே வந்திருந்து வில்லுப்பாட்டு கேட்டிருந்து
ரசிச்சவங்க எல்லோருக்கும் வணக்கம்
எங்களை மதிச்சவங்க எல்லோருக்கும்
வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

மங்களம்! மங்களம்! மங்களம்! மங்களம்!
அங்கயற் கன்னியவள் அம்பிகைக்கு மங்களம்!
அம்பலத்தில் ஆடுகின்ற அண்ணலுக்கு மங்களம்!
மங்களம்! மங்களம்! மங்களம்! மங்களம்!
இங்கு வந்து கதைகேட்ட உங்களுக்கு மங்களம்!
இன்பமாக கதைசொன்ன எங்களுக்கு மங்களம்!
மங்களம்! மங்களம்! ஜெய மங்களம்!
மங்களம்! மங்களம்! சுப மங்களம்!

2015 மட்டக்களப்பு வடக்குப் பிரதேசம்
02ம் இடம்

## 17. குறைப்பர் தம் மேலே வீழப்பனை

காப்பு

வக்ர துண்ட மகா காய கூர்ய கோடி சமர்கிரதோ
நிர்விக்னம் குருவே தேவ
சர்வ காரியே சமர்பத

அவையடக்கம்

தந்தனத்தோம் என்று சொல்லியே வில்லினில் பாட - ஆமா
வில்லினில் பாட ஆமா வில்லினில் பாட
தந்தருள்வாய் கணபதியே வரம் தந்தருள்வாய் கணபதியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பப்போய் ஆமப்போய் அப்படி போடு ஓஓ.......
சந்தத்தோடு பானை தாளம் சிற்றுடுக்கை பம்கையோடு
எந்தனுக்கு ஆமா! எந்தனுக்கு ஆமா! எந்தனுக்கு
அருள் புரிவாய் கணபதியே..... எந்தனுக்கு அருள்தருவாய்

குரு : வந்திருக்கும் சபையோரே!

குழு : ஆமாம்!

குரு : சமன் செய்து சீர்தூக்க வந்திருக்கும்
மதிப்பிற்குரிய மத்தியஸ்த்தர்களே!)

குரு : அடடடடே ஆமாம்!

குழு : எல்லோருக்கும் வணக்கம்

குரு : வில்லிசைத்து சொல்லப்போறோம் நாங்க
வில்லிசைத்து சொல்லப்போறோம்

குரு : வில்லிசைத்து சொல்லப்போறோம்
நாங்க நல்ல கதை சொல்லப்போறோம்
சான்றவர் கையுண்டும் கூறுவர் மெய்யென்ற
நிறைவான மனதோடு... நீங்க கேட்பதற்கு
ஆன்றோர் பழமொழி விளக்கும் கதையொன்றை
குறைப்பர் தம் மேலே வீழப்பனை இது வில்லிசைத்து
சொல் விளக்கும் பழமொழிக்கதை

சீடன்1 : பழமொழி, முதுமொழி இப்ப யாரு கேக்கப்
போறா?

சீடன் 2 : இன்டர்நெட், ஈமையில் எண்டாத்தான் தம்பி இலிச்சி இலிச்சி
கேப்பான் போல....

சீடன் 1 : உலகமயமாதல் உள்ளங்கையிலிலுகம்
எல்லாமிப்ப கையடக்க தொலைபேசியால


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன் 2 : கையடக்க தொலைபேசியால தான் இளைஞர்கள் மதி கெட்டு அலையுறாங்க உண்மையைச் சொல்லனும் எண்டா அது தொலைபேசியில்லை - தொல்லைப்பேசி!

சீடன் 1 : ம் ம்.... சொல்ரன் நல்நாடு என்றொரு நாடு
அதில் எழில் என்றொரு ஊரு அந்த ஊரில்
பெயரிற்கேற்ற வனப்போட வளம் நிறைந்த நாடு

குரு : தானினம் தானினம்
உழவுத் தொழிலில் உயர்ந்த இடம் - அது
உற்றார் உறவை வளர்க்கும் இடம்
பொறுமை அன்பு காக்கும் இடம் - என்றும்
வறுமை வந்து வாட்டா புதுமை இடம்

அம்மானை பாட்டு ஒலிக்கும் இடம் - எங்கும்
செந்தமிழ் தேனாய் இனிக்கும் இடம்
அன்றில் பறவை போல் ஒன்று கூடி - உயர்
ஒற்றுமை நிமித்தம் நிலவுமிடம்

சீடன் 1 : அருமை! அருமை! அருமை! இப்படியல்லவா இருக்கணும் ஊர்.

சீடன் 2 : எருமை! எருமை! எருமை! அங்கும் வந்ததாமே கேடு.

குரு : உண்மைதான்! இப்படியான அந்த ஊரில் அவ்வூர் மக்களால் மன்னனுக்கும் மேலாக மதிக்கப்பட்டவன் தான் நாதன் எனும் நல்லோன்.

சீடன் 1 : என்னையும் எங்கட ஊரில் நல்லவன் எண்டுதான் சொல்றவங்க

சீடன் 2 : கள்ளத்தனமுள்ள உன்ன நல்லவன் எண்டுதான் சொல்றவங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன் 1 : ஆ, ஆ, ஆ சரி ஏன் குருவே அவன்
நல்லவனா மதிக்கப்பட்டான்

குரு : பட்டப்படிப்பு படித்தவன் தான் - நாதன்
மட்டற்ற செல்வமும் படைத்தவன்தான்
சொந்தங்களாக ஊரை நினைப்பவன் - தூய
பண்புடன் பழகும் பத்திமான் தான்
நன்னான.....
கொடையிலே சிறந்தவன் தான் - நல்
நடையிலுமே அவன் சிறந்தவன் தான்
ஏழை எளியவர்கென்றும் இல்லை என்னாது
கொடுப்பவன் தான்.
தன்னலம் கருதாதவன் தான் - கற்ற
சான்றோர்க்கு மதிப்பளிப்பவன்
பிணக்குகளைத் தீர்த்திடுவான் சரியா
குணக்குன்றா உயர்ந்தவன் தான்

சீடன் 1: இப்படியான மதிப்புள்ள மன்னன் போன்றவனுக்கு வில்லன் இல்லாமலா இருக்கும்

சீடன் 2 : நல்லாச்சொன்னா உன்னைப்போல ஒண்டல்ல, ரெண்டல்ல மூணு பேர் சேந்திட்டானுகள் இல்லையா குருவே?

குரு : சரியாகச் சொன்னாய் சிஷ்யா நாதன் வீட்டுக்கு அருகில் வாழ்ந்து அவரிடமே கணக்குப்பிள்ளையா வேலை செய்யும் கீதன், அவர் வயலில் முல்லைக்காரனாக இருக்கும் வேதன், அவரிடமே சாரதியாக வேலை செய்யும் பூதன்

சீடன் 2 : நா... தன் கீ...தன்.வே... தன், பூ என்னவொரு பேர் பொருத்தம்

சீடன் 1: பேர் பொருத்தம் பாத்து கல்யாணமா கட்டி வைக்கப்போறயா? நீங்க சொல்லுங்க குருவே அவனுகள் என்ன செய்தானுகள்

குரு : நாதனின் வளர்ச்சி, மதிப்பு உயர்வு கண்டு பொறாமை கொண்டு, நாதனே சினங்கொள்ளும் அளவிற்கு அவரை அழித்தொழிக்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன் 2 : அழித்தொழிக்க, கொடுமையான தீமைகள் செய்தார்களா குருவே!

சீடன் 1 : அந்த தீங்குகள் பலித்ததா குருவே? ஆம்! சொல்கிறேன் கேளுங்கள்

குரு : கீதனுடன் வேதன் பூதனும் - கூடியொன்றாய்
நாதனை அழிக்க தீங்குகள் செய்தாரே
பொறாமைத் தீ கொப்பளிக்கவே வேணுமென்று
மேணுமென்று அறத்தை மறந்து அநீதிகள்
செய்தாரே (தந்தானம் தானனம்.....)

சீடன் 1 : இவனுக்குள் சினிமாப்பட வில்லன்களையும் வென்றிடுவானுகள் போல?

சீடன் 2 : படத்தை பார்த்து பார்த்து தானே இளைஞர்கள் மதிகெட்டு திரியுறாங்க இப்படி கொடுமை செய்பவர்களுக்கு தீமை வராதா?

குரு : அப்படி இல்ல சிஷ்யா தீய செயல்களை செய்பவர்கள் அத் தீச் செயலின் பயனை அவர்களே அனுபவித்து கெட்டுப்போவதாகும். அதாவது அவனது நிழல் அவனது காலடியில் தங்குவது போன்றது ஆகும்.

சீடன் 1 : அப்படியெண்டா வினை விதைத்தவன் வினையறுப்பான் தினை விதைத்தவன் தினை அறுப்பான் இல்லயா குருவே!

சீடன் 2 : இல்ல நம்ம ஒருவருக்கு குழிதோண்டினா நமக்கு இன்னொருவர் வந்துகுழி தோண்டுவார். அப்படித்தானே குருவே?

குரு : உனக்கும் மூளை வேலை செய்யுது?

சீடன் 1 : ஹா, பிறகு என்ன நடந்தது குருவே?

சீடன் 2 : என்ன நடக்கும் அவனுகள் அடங்கிதானுகள் தானே குருவே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு : அடங்கியது போல நடித்து

சீடன் 1: நடித்து பெரிய குண்டு போட திட்டம் தீட்டினார்களா?

சீடன் 2 : தீட்டமலா இருப்பாங்க? அவனுகள்தான் கெட்ட குள்ளநயாச்சே தீட்டி இருப்பாங்க

சீடன் 1 : சீவிலியா கொண்டு போனவங்க?

சீடன் 2 : இதுக்கு சிரிப்பு வரல்ல

குரு : சண்டய விடுங்க மீதிக்கதையை சொல்லறன். கீதனின் மகனும் நாதனின் மகனும் உயர்தரம் தன்னிலே ஒன்றாக கற்றனர் நாதனின் மகன் பல்கலைக்கழகம் சென்றான். ஆனால் கீதனின் மகனோ வீட்டுக்குச் சென்றான்.

சீடன் 2 : இதத்தான் மாதா பிதா செய்தது மக்களுக்கு என்றவங்க

சீடன் 1 : ஐயோ! தெய்வமே உனக்கு அறிவு இருக்கிறது ஒத்துக் கொள்றன் குருவே அவனுகள் பிறகு என்ன தான் செஞ்சவனுகள்

குரு : இதனால் சீற்றமுற்ற கீதன், நாதனை பழிவாங்க ஒரு பாரிய திட்டம் தீட்டினான்.

சீடன் : என்னதிட்டம்?

குரு : கீதன், வேதன், பூதன் மூவரும் நாதனைப் பழிவாங்குவதற்காக ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்திருந்தனர்.

சீடன் : சந்தர்ப்பம் கிடைத்ததா குருவே

குரு : கிடைக்காமலா இருந்திருக்கும் சொல்கிறேன் கேழுங்கள் நாதனின் மனைவியும் பதிவு செய்வதற்காக பல்கலைக்கழகம் சென்றது வாய்ப்பாக அமைந்தது அவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சந்தர்ப்பபத்தை பயன்படுத்திய கீதனும், வேதனும், பூதனும் தங்களுக்கு நன்கு போதையை ஏற்றிக் கொண்டு நன்கு பொதி செய்யப்பட்ட ஒரு பொருளுடன் நாதனின் வீட்டை நோக்கி விரைந்தனர்.

சீடன் 2 : குருவே போதையில் போத்தலோட போறது சரி. அதென்ன பொதியோட......

சீடன் 1 : உன்ட பழக்கத்தயெல்லாம் சொல்லாத போறது சரி அதென்ன பொதியோட.....

குரு : அதுல என்ன இருந்ததென்டா "நேரம்கணிப்பு வெடிகுண்டு"

சீடன் 1 : நேரம்கணிப்பு வெடிகுண்டா? அப்படி என்டா என்ன குருவே?

சீடன் 2 : சிவபூசையில் கரடி பூந்தமாதிரி ஆங்கிலத்துல சொன்னாத்தான் விழங்குமா "டைம் பாம்"

சீடன் 1 : அந்த பாம் உண்ட வாய்குள்ள இருந்து வந்திடும் போல இருக்குதே மூடு வாய அதுக்கு பிறகு என்ன நடந்தது குருவே

சீடன் 1,2: திறக்க??

குரு : வெடித்தது வெடிகுண்டு?

சீடன் 1 : அவனுகள் மூன்று பேருக்கும் என்ன நடந்தது

குரு : என்ன நடக்கும்? தீயது செய்தால் அத் தீச் செயலின் பயனை அனுபவிக்கத்தானே வேணும் வெடிகுண்டோட சேர்த்து அவனுகளும் வெடித்துச் சிதறினர்.

சீடன் 2 : நாதனுக்கு என்ன நடந்தது குருவே?

குரு : அவருக்கு பெரிதாக ஒன்றும் ஆகிடவில்லை வெடிகுண்டின் ஒரு சிறிய துண்டு நெற்றியில் பட்டு அவ்விடத்திலே மயங்கினான் நாதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன் : நாதன் பிழைத்தானா குருவே?

குரு : வெடிச்சத்தங் கேட்டதுவே காது செவிடாக! ஓடிவந்தார் ஊரவர் நாதனைக் கொண்டு சென்றார். வைத்தியசாலைக்கு உடன் சிகிச்சை செய்ததால் உயிர் பிழைத்தான் நாதனுமே

சீடன் 1: அப்பா! நாதன் பிழச்சிட்டான் ஆனா குருவே வெடிகுண்டு வச்சசங்க அந்த மூணு பேரும் தானே அப்படியென்டத அவனுகளுக்கு வெடிக்கிற நேரம் தெரியாமலா இருந்திருக்கும்.

சீடன் 2 : நல்ல போதையோடு இருந்தவனுகளுக்கு நாதனை அழிக்கனும் என்ட கொலவெறி மட்டும் தான் இருந்தது. அவனுகளுக்கு மண்டையில் இருந்த மசாலா எல்லாம் மண்ணாய் போய்விட்டது.

சீடன் 1 : ம்ம்... கூடவே இருந்து துரோகம் செஞ்சவனுகள் நல்லா பட்டானுங்கள் பாடு

சீடன் 2 : துரோகம் செஞ்சவனுகள் தொம்சமாகிப் போனானுகள்.

குரு : நாதனுக்கு செய்த தீமை மூவரின் அழிவிற்கு காரணமாகியது இதையே "மெய்மையே நின்று மிக நோக்கப்பட்டவர் கைமேலே நின்று கறுப்பான செய்தொழுகிய பொய்மேலே கொண்டவர் விறைவர்க் கொண்டார் குறைப்பார் தன்மேலே வீழப்பனை" சான்றோர் கூறுகின்றனர். இந்தக் கதை மூலம் குறைப்பார் தன்மேலே வீழப்பனை எனும் பல மொழியின் கருத்து விளங்குகிறதா?

சீடன் : விளங்குகிறது குருவே

குரு : இளைஞர்கள், மாணவர்களாகிய அனைவரும் இந்தப்பழ மொழியை மனதில் நிறுத்தி இனிமேலாவது தீச் செயல்களை மனதாலும் நினையாது வாழப் பழகிக் கொள்ள வேண்டும் எனக் கூறி விடைபெறுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்புடனே வந்திருந்து
வில்லுப்பாட்டு கேட்டிருந்து
ரசித்தவங்க எல்லோருக்கும் வணக்கம்
வணக்கம் வணக்கம்

2016ம் மட்மாவட்பம் 1ம் இடம்

## 18. மயிர்நீப்பின் வாழாக் கவரிமான்

காப்பு

செம்மொழிச் செந்தமிழைச் சிறப்புடனே யுணர்ந்து
இன்பமுடன்ஓத வைத்த எம் இறையே - உள்ளம் உறை
வல்லபகவானே உன்திருவடியை பணிந்தே
வில்லிசைக்கு எம்மைக் காத்தருளே.

அவையடக்கம் :

குரு : தந்தனத்தோம் என்று சொல்லிலே வில்லினின் பாட

குழு : ஆமா! வில்லினின் பாட ஆமா! வில்லினின் பாட

குரு : அருள் புரிவாய் ஆதிமுதலே

குழு : ஆமா! அருள் புரிவாய் ஆதிமுதலே

குரு : சந்தத்தோடு கடதாளம், சிற்றுடுக்கை, சுருதியோடு
வந்து வில்லிசைக்கும் எங்களுக்கு வரம் தந்தருள்வாய்
மூலமுதலே

குழு : வரம் தந்தருள்வாய் மூலமுதலே

குரு : வந்திருக்கும் அனைவருக்கும் அன்பு வணக்கம்!

குழு : ஆமா! அன்பு வணக்கம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு : சங்கத்தமிழ் நடுவர்க்கும் சொன்னோம் வணக்கம்!

குழு : ஆமா! சொன்னோம் வணக்கம்!

குரு : எங்கள் பண்பான வணக்கம்!

குழு : வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

குரு : வில்லிசைத்து சொல்லப்போகின்றோம் - நாங்க
வில்லிசைத்து சொல்லப்போகின்றோம்.

குழு : ஆமா! வில்லிசைத்து சொல்லப்போகின்றோம்.

குரு : மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் என்ற புகழான திருக்குறள் அடி விளக்கும் கதை ஒன்றை வில்லிசைத்து சொல்லப் போகின்றோம்.

சீடன் 1 : ஓம்! மான் என்று பொம்பிளைகளைத்தானே சொல்லுவாங்க குருவே! அப்போ அரச சபையில் அரசனுக்கு காத்துப் படுறதுக்கு இரண்டு பக்கமும் நின்று கவரி வீசுகின்ற அந்த அழகான பெண்களைப்பற்றி கதையையா சொல்லப்போறீங்க? அப்ப நல்ல சோக்கான கதையாத்தான் இருக்கும். ஆ.....

சீடன் 2 : சீ, மூடுவாய குட்டி நாக்குத் தெரியுது. அட! அடடா! நீயல்லோவொரு புத்திமான் சுரக்கா குடுத்தலையா. புள்ளிமான், கஸ்தூரிமான் என்ற பலவகையான மான்களில் கவரிமானுமொரு வகைடா. இவண்ட கதைய விட்டுட்டு நீங்க மேல மேல சொல்லுங்க குருவே.

குரு : "மயிர் நீப்பின் வாழாக்கவரின் மான் - அன்னார்
உயிர் நீப்பின் மானம் வரின்" என்று பொய்யா மொழி தந்த பொய்யாமொழிப் புலவராம் திருவள்ளுவரின் குறள் விளக்கக் கதை ஒன்றினை நான் இப்போது உங்களுக்கு கூறப் போகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன் 1 : இப்ப ஆரு திருக்குறள் பற்றி கதைக்கிறா, கேட்கிறா "முகப்புத்தகம் பார்க்காதோர் வாழ்வு முழுமையடையா தென்ப துலகு" என்ற புதுக்குறள் பற்றி சொன்னா நல்லாரிக்கும்.

சீடன் 2 : கைபேசி வந்த பிறகு இப்படியான பொய்பேசிகளாலும், மாய லீலைகளாலும். மெய்வருத்தி பிணியுற்று, உயிர்விட்டவர்கள் எத்தனையோ பேர். ஆமா! குருவே 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமான்; என்ற குறளுக்கு என்ன கருத்து என்று புரியும் படி சொல்லுங்க இந்த கிணத்து மண்டுகேத்துக்கு அப்பயாவது புரியுதா எண்டுபாப்பம்.

குரு : கொஞ்சம் பொறுங்கப்பா மயிர் நீப்பின் வாழாக்கவரின் மான் - அன்னார் உயிர் நீப்பின் மானம் வரின் என்பதன் பொருள் விளக்கத்தை நான் பாட்டிலசொல்றன்.

குரு : புரியும் படி நான் உரைப்பேன்
பொறுமையுடன் கேளும்
அறிவிழந்து அவதிப்பட்டால்
ஆகாதெதுவும் தெளிவாய்

குழு : ஆமா! ஆகாதெதுவும் தெளிவாய்

குரு : உடம்பிலிருந்து மயிர் நீங்கின்
வாழா கவரிமானெனும் விலங்கு
தன்மானம் இழக்க நேருமாயின்
சான்றோர் தன்னுயிர் விடுவார்

குழு : ஆமா! சான்றோர் தன்னுயிர் விடுவார்

குரு : அதாவது உடம்பிலிருந்து மயிர் நீங்கினால் உயிர் வாழாது. கவரிமானெனும் விலங்கு அம்மானைப் போன்று விளங்கும் சான்றோர் தன்மானம் இழக்க நேருமாயின் தம் உயிரையே விட்டு விடுவார்! என்பதே இதன் கருத்து.

சீடன் 1 : இப்ப விளங்கிட்டுது ஆனா.....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன் 2 : ஆனா, ஆவன்னா... நீ என்ன சொல்லவாறாயெண்டு புரியுது. உலகமயமாதல், உள்ளங்கையிலுலகமாகிய இந்தக்காலத்தில் தன்மானமுள்ள சான்றோர் எள்ளளவுமில்ல என்பதைத் தானே, ஆனால் அந்தக்காலத்தில் இத்தகையவர்களிருந்தார்கள் குருவே! அவர்கள் பற்றிய கதை சொன்னால்திருக்குறளின் பொருளும் விளங்கும் புதுக்குறளின் இருளும் நீங்கும்.

குரு : அப்படி வாழ்ந்த சான்றோர்கள் பலர், அவர்களில் ஒருவரின் கதையைத் தெளிவாகக் கூறுகின்றேன்.

பாட்டு : சோழநாட்டுக்குட்பட்ட சிற்றரசாண்ட
சேரமான் நெடுஞ்சேரலாத மன்னன்
அஞ்சா நெஞ்சம் கொண்டரசன் - அவன்
ஆட்சி கோலோட்சிய மகாவீரன்.

குழு : ஆமா! ஆட்சி கோலோட்சிய மகாவீரன்

குரு : சேரவள நாட்டினிலே மக்கள் - ஒன்று
சேர்ந்து வாழ வழிகளமைத்து
மானமோடு மக்கள் கூடிவாழ - நல்
ஆட்சி செய்தானே சேரலாதன்.

குழு : ஆமா! ஆட்சி செய்தானே சேரலாதன்

குரு : நீதி நெறிமுறை தவறாவாட்சி - எங்கும்
சாதி மத பேதம் அற்ற மாட்சி
தேச பற்றோடு தானுழைத்து - நாட்டை
நேசித்து காத்து ஆட்சி செய்தான்

குழு : ஆமா! நேசித்து காத்து ஆட்சி செய்தான்.

குரு : இப்படியாக, சேரலாத மன்னன் ஆட்சிக்காலத்திலே சேரநாடு சாந்தி, சமாதானம் சமநீதி, நாட்டுப்பற்று, சுய உழைப்பு என்று மக்கள் வறுமையின்றியும் வாழ வழிகாட்டி தன்னுயிர் போல் மண்ணுயிர்களையும் காத்து வந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன் 1 : ஆகா, ஓகோ இப்படியுமொரு அரசனா? ஆட்சியா? கேட்கவே உள்ளமெல்லாம் தித்திப்பாயினிக்கின்றதே?

சீடன் 2 : மெதுவா வாசி, இப்ப இனிப்பென்று சொன்னாலே சீனிவருத்தம் சீக்கிரமாவாற காலம். இந்த அரசன்ட காலத்தில் ஆட்சிக்கெந்த அபாயமுமில்லை தானே குருவே?

குரு : இவ்வாறு சேரநாட்டில் நல்லாட்சி நடந்து கொண்டிருக்கும் வேளை தீடிரெனவொரு பொல்லாத பேரிடி!

சீடன் 1 : நல்லாட்சி என்றாலே தொல்லைகள் வருவது சகசம் தான், கண்டம் விட்டு கண்டம் பாயுமேவுகணையை எதிரி நாடு ஏவி விட்டதா குருவே?

சீடன் 2 : ஏவுகணை ஏவுவது இந்தக்காலம். ஓலை மூலம் தூது ஏவுவது அந்தக்காலம் என்ன வில்லங்கம் விளைந்தது குருவே.

குரு : அத நான் பாட்டுல சொல்றன் அப்பா!!

குரு : சோழநாட்டு பேரரசன் தொடுத்தானொரு ஓலை
சேரநாட்டு சிற்றரசன் திறை கட்ட வேணுமென்ற செய்ய
மறுதலித்தால் மறுகணமே வரவேண்டும் சமர் செய்ய
உறுதியில்லா விட்டால் ஓடவேண்டும் நாட்டை விட்டு
வெளியே,
போரது செய்வதாயிருந்தால் போர் நடக்கு மிடத்த
சேரலாதனே நீதான் தெரிவு செய்ய வேண்டுமந்தவிடத்த
ஓலைகண்ட அரசன் அமைச்சரவை கூட்டி ஆலோசித்து
வீரன் நானும் போரென தூதனுப்பினானோலை வரைந்து.

சீடன் 1 : திறை,வரி, வட்டி, அதுதானே அந்த நாளைய ஆட்சியில் நட்டாமுட்டி வேலை.

சீடன் 2 : வீரபாண்டியகட்டப் பொம்மன் போல சேரலாதனும் மறுத்து போர் செய்ய இடம் குறித்தனுப்பினானா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு : சரியாச் சொன்னாய் சீடா?

சீடன் 1 : அப்ப நான்?

சீடன் 2 : இவன் கிடக்கிறான் மூடன் நீங்க மேல மேல சொல்லுங்க குருவே.

குரு : சோழநாட்டின் தலைநகரான காவிரிபூம்பட்டணத்தில் சோழ அரச பெருவளத்தான் அரியணையிலிருக்க தூது சென்றவன் துணிந்து சென்று, அரசே வாழி என்றான். திறை செலுத்த சேரமன்னன் ஒப்புக்கொண்டாரா? இடம்பார்த்தேன் என்று இயம்பிக் கொண்டாரா? என்று கேள்வி கணைகளை தொடுத்த, சோழமன்னரிடம் தூதுவன் அமைதியாக.

சீடன் 1 : அமைதியாக! அமைதியாக தூதுவன் என்ன சொன்னான் குருவே

சீடன் 2 : அமைதியாச் சொல்லுவது என்டால் திறை கட்ட சேர மன்னர் ஒப்புக்கொண்டான் என்று தானே அர்த்தம்.

குரு : இல்ல இல்ல அதநான் பாட்டுல சொல்லுறன்.

பாட்டு : ஓலை கண்டு சேரன் உவகை கொண்டு உவகை கொண்டு
வேளையிது போர்செய்யவென்று போர் செய்யவென்று
வெண்ணிப் பறந்தலையைப் தேர்ந்தெடுத்து தேர்ந்தெடுத்து
வீரர்களைத் தான் திரட்டி அங்கே தான் திரட்டி
வரும் முழுமதி தினத்தினிலே அந்த தினத்தினிலே
இரு படைகளும் சமர் செய்ய வென்றார் சமர் செய்ய வென்றார்.

சீடன் 1 : சிற்றரசன் என்றாலும் என்னைப்போல வீரத்தில் சளைக்காதவன் தானே குருவே

சீடன் 2 : யாரும் பெலத்து கதைத்தாலே தொடை நடுங்கிற நீ! வீரம் பற்றி கதைக்கிறாயா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு : உங்கட சண்டைய விடுறிங்களா அல்லது நான் கதைய விடவா?

சீடன் 2 : இல்ல குருவே இவன் தான் இடக்கு முடக்காக கதைத்து என்னமோ எல்லாம் பிதட்ரான் நீங்க இவன்ட கதைய விட்டுட்டு மேல மேல சொல்லுங்க குருவே.

குரு : சரி சரி சொல்லுறன்னப்பா

குரு : நாற்படைகள் தான் நகர்த்தி தளபதி தலைமையிலே
சோழன் வந்தான் பெருந்தேரிலே
வெண்ணிப் பறந்தலைக்கு வீரர்கள் சூழவர
சென்றான் சேரலாதன் தேரிலே.

குழு : சென்றான் சேரலாதன் தேரிலே

குரு : முரசங்கள் தான் முழங்க மூண்ட போரினிலே
வாளோடு வாள் மோதியே
வாளோடு வாள் மோதியே
சோழமன்னன் வேலது சேரலாதன் மார்பில்
பாய சாய்ந்து வீழ்ந்தான் நிலத்திலே

குழு : சேரன் சாய்ந்து வீழ்ந்தான் நிலத்திலே

சீடன் 1 : ஐயோ! சேரலாதன் மாண்டு விட்டான். திறை கட்டியிருந்தால் இப்படி நடந்து இருக்காதே மானம் போய்ச்சே...

சீடன் 2 : திறை கட்டாத தீரன். மார்பில் வேல்பாய்ந்தனால் வீர மானஸ்தனானான். இல்லையா குருவே.

குரு : முந்திரிக் கொட்ட மாதிரி முந்தாதிங்க. நடந்ததை என்னவென்று கேளுங்கப்பா.

சீடன் 1 : அப்படி யென்றால் வேல்தாக்கி சேரமன்னன் மாழவில்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு : இல்லையில்லை, சேரலாதன் மாண்டு விட்டானென்ற மமதையோடு, சோழன் போரை நிறுத்தி வெற்றிக் கோசம் முழங்க சோழநாடு சென்று வெற்றிக் களியாட்டம் ஆடினான்.

சீடன் 1 : நான் நெனச்சன் சேரன் சாகல்ல என்று.

சீடன் 2 : நீ எப்பவும் சந்தர்ப்ப வாதிதானே! ஒருவர் சரியென்றா சரியென்று சொல்லுவா, மற்றவர் பிழை என்றால் ஆம், பிழையென்பா. நாரதர் மாதிரி கலகம் மூட்டுவா. இவன் ஓட்ட வாயன் இவன்ட கதைய விட்டுட்டு நீங்க மேல மேல சொல்லுங்க குருவே.

குரு : உயிருக்குப் போராடிய சேரலாதனை அவரது வீரர்கள் பாசறைக்குக் கொண்டு செல்ல, மன்னரவை மருந்துவர் மார்பில் பாய்ந்து வேல் முதுகைத்துளைத்துள்ளது. வேலை பிடுங்கி மாய மூலிகைகள் வைத்து கட்டி மறுபடியும் உயிரை மீட்டெடுத்து, மயக்கமுடனே மன்னரை தன் கருவூலத்துக்கு பல்லக்கில் எடுத்து சென்றார்கள்.

சீடன் 1 : கதை சும்மா களை கட்டுது, ஆங்கிலப்படம் மாதிரி மர்மம், திகில் எல்லாம் சேர்ந்து வருகுது.

சீடன் 2 : உனக்கு தமிழே ஒழுங்கா தெரியிதில்ல, அதற்குள்ள ஆங்கிலப்படம் பாக்கிறயா? பொய்தானே சொல்றா.

சீடன் 1 : மகிழ்ச்சி

குரு : போர் நிகழ்ந்து சில திங்கள் பின்பு
அரியணையில் கரிகாற் பெருவளத்தான்
அவையினர் அவரவ இருக்கையிலிருக்க
பெரும் புலவர் வெண்ணிக்குயத்தியர் வரவே
அரசரெழுந்து அவர் காசனம் அளித்து
அரிய பெரும் பேரவை வந்ததென்றான்.

பல நாடுகளையும் சுற்றி விட்டு, சேரநாடு சென்று சில நாட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கி, அங்கிருந்து இங்கு வந்தேன் என்றார் புலவர் அப்படியானால் எனக்கும் சேரலாதனுக்கும் எங்கும் நிகழாத கடும் போர் பற்றியும், அதில் நான் வெற்றி பெற்றதையும் போற்றி புகழாத புலவர்கள் இல்லையென்பதையும் அறிந்திருப்பீர்கள் என்றான் பெருமையுடன் கரிகாலச் சோழன்.

சீடன் 1 : சேர மன்னன் பிழைத்த செய்தி சோழனுக்கு தெரியாது போல,

சீடன் 2 : போரில் வென்ற பேரானந்தத்தால் தோல்வியடைந்த நாடு துவண்டு விட்டதென்று நினைச்சிருப்பாரு. அப்படித்தானே குருவே.

குரு : அரசே! சேர அரசர் உயிர் பிழைத்து, அதனால் புகழிலும் உயர்ந்து விட்டார். புலவர்கள், சான்றோர்கள் எல்லோரும் சேர அரசரையே புகழ்ந்து பேசுகிறார்கள். நீங்கள் போரிலடைந்த வெற்றிப் புகழ் மங்கிவிட்டதென்றார் புலவர்.

புலவரே! போரில் பெரும் வீரம் காட்டி வென்றவன் நான் என்னிடம் தோற்று உயிர் பிழைத்தவன் சேர அரசன். அவனை இந்த உலகம் புகழ்கிறதா? கேட்பதற்கு வேடிக்கையாக உள்ளதே என்றான் சோழ மன்னன். ஓரே மாதத்தில் வடுவை யறிந்து துடித்தார். என்று புலவர் கூற, இதில் துடிப்பதற்கு என்ன இருக்கின்தென்று சோழன் வினவ:

பாட்டு : மார்பினிலே விழுப்புண்வடு இருந்தாவது
நேர் நின்று போர் செய்த நினைவையே யுணர்த்தும்
புற முதுகில் காணப்படும் வடுத்தழும்பு
அறமுறை தவறிய அடையாளமதையுணர்த்தும்
புறமுதுகிட்டோடு மிழிவான செயலுடையோரை
பெற்ற தாய் மனைவி உற்றார் மற்றோரும் மதியார்
மார்வில் தாங்கிய வேலே முதுகில் வடுவானதென்பதை
மாற்றறியாது வசைபாடுவானென்றே துடித்தார்.

குழு : மாற்றறியாது வசைபாடுவானென்றே அவர் துடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன் 1 : பிறகு என்ன நடந்தது குருவே

சீடன் 2 : இதுதான் விதி என்று தலைகுனிந்திருப்பார்

குரு : இல்லை இல்லை

குரு : சேரலாதனோ, எங்கள் சேரர் குடி மானம்மிக்க குடி. என் முன்னோனான சேரமான் இணக்க இரும் பொறையரசன் பகைவனால் சிறையிடப்பட்ட வேளை. அவன் குடிக்க நீர் கேட்ட போது, காலந்தாழ்த்தி கொடுக்க மானமே பெரிதென நீரைக் குடிக்காதுயிர் நீர்த்தான் அந்த வரலாறு அறிந்த நான் அம் மரபில் வந்த நான் எம் குடிக்கு இழுக்கு ஏற்பட ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன். புறப்புண் கண்டவனென்றால் போரில் நடந்ததை அறிந்தவர்கள் இதை ஒப்புக்கொள்ளலாம். ஆனால் அறியாத மக்களோ வசை சொல்லுவார்கள். இதனால் எனது குடிக்கே இழுக்கு நேர நான் சம்மதியேன் வடக்கிருந்து உயிரைத்துறப்பதே உறுதியெனக் கூறி வடக்கிருந்து இறுதியெய்தி தன்மானம் காத்தான்.

சீடன் 1 : இம்முடிவை அந்நாட்டு புலவர்கள். சான்றோர்கள் தடுக்கவில்லையா? தன் மானம் காக்க உயிர் நீத்த மன்னன் வாழ்க?

சீடன் 2 : சேர மன்னர்கள் தானா தன் மானம் காக்க உயிர் நீத்தவர்கள் குருவே?

குரு : இல்லை உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட கோப்பெருஞ் சோழ மன்னன்,

பாடல் : புலமையோடு வீரம் - அறிவு அற்றல்
நிறையப்பெற்றவன்தான்
அறிஞர் புலவர்களைக் கூட்டி தினம் தினம்
அறிவாராட்சி செய்து வந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழு : ஆமா! அறிவாராட்சி செய்து வந்தான்
கோக்கிள்ளி இளங்கிள்ளி - என்னுமிரு
புதல்வர்களுக்குமிது பிடிக்காது
தந்தையுடன் போர் செய்ய - கோட்டையை சுற்றி
சூழ்ந்தனரே.

குழு : ஆமா! விந்தையுடன் சூழ்ந்தனரே.

சீடன் 1 : என்ன கொடுமை பெற்ற மக்களாளே தந்தை தன் மானம் இழப்பதா?

சீடன் 2 : ஏன் இண்டைக்கும் இந்த உலகத்தில் பெற்ற பிள்ளைகளாதன் மானம் இழந்து எத்தனை தாய் தந்தையர்கள் அநாதைகளாகி உயிரை மாய்க்கின்றதை நீ அறியவில்லையா? தந்தை என்ன செய்தார் குருவே?

குரு : பெற்ற மக்களோடு போரிட்டு நான் வென்றாலும்
மிஞ்சுவது தோல்விதான் மக்கள் எமை வென்றாலும்
விஞ்சுவது பழிதான் என்று தன்மானம் காக்க வடக்கிருந்து
உயிர் நீர்த்தான் அரசன்.

சீடன் 1 : மக்களுக்காக தன்மானம் காக்க தன்னுயிர் நீத்த கோப்பெரும் சோழனதும் புற முதுகில் புண்பட்டதால் தன்மானம் காக்க நீத்த சேரலாதனதும் மானச் சிறப்பு செயற்கரிய செயலை அல்லவா காட்டுகிறது.

சீடன் 2 : போரில் பெருவீரம் காட்டி வெற்றி பெற்ற கரிகாலனினும் புறப்புண்பட்டதனால் தன்மானம் காத்து வடக்கிருந்து உயிர் நீத்த சேரலாதன் புகழ் சிறப்பானதல்லவா குருவே?

குரு : நீங்க கூறியதையே கரிகாலச் சோழனிடம் வெண்ணிக்குயத்தியார் கூறினார். இதனை திருவள்ளுவர் இப்படிக் கூறியுள்ளார்.

குழு : எப்படிக் குருவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு : "இளிவரின் வாழாதமானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு"
அதாவது தமக்கு இழிவு வரும் போது தொடர்ந்து உயிர் வாழ விரும்பாத தன்மானம் மிக்கவரின் புகழ் வடிவை உலக மக்கள் கையெடுத்துக் கும்பிட்டு மகிழ்வர். என்பது உண்மை என்பதை கரிகாற்பெருவளத்தான் புலவரை நோக்கி என் வீரதிலும் பார்க்க மயிர் நீர்ப்பின் வாழாக் கவரிமான் போல தன்மானம் காக்க வடக்கிருந்து உயிர் நீத்த சேர அரசனின் மானம் உயர்ந்து நிற்கிறது. வென்றநான் தோற்றவனாகிவிட்டேன். தோற்றும் அவர் மானம் காத்து புகழில் என்னை வென்று விட்டார். வாழ்க சேரலாதன் தன் மானப்புகழ் என உணர்ச்சி பொங்கச் சொன்னார்.

சீடன் 2 : மயிர் நீப்பின் வாழாக்கவரிமான் என்ற குறளுக்கு நல்ல ஒரு கதையை சொன்னீங்க நீங்கதான் என் குரு.

சீடன் 1 : ஆமா ஆமா நல்ல கதை எனக்கும் பிடிச்சிருக்கு.

குழு : விருப்புடனே வந்திருந்து வில்லுப்பாட்டுக் கேட்டிருந்து ரசிச்சவங்க எல்லோருக்கும் வணக்கம் எங்கள் மதிச்சவங்க எல்லோருக்கும் வணக்கம் வணக்கம்.

மங்களம், மங்களம் மங்களம் மங்களம்
இங்கு வந்து கதை கேட்ட உங்களுக்கு மங்களம்
இன்பமாக இதை சொன்ன
எங்களுக்கும் மங்களம் ஜெய மங்களம்
மங்களம் மங்களம் ஜெய மங்களம்
மங்களம் மங்களம் சுப மங்களம்

(2018ம் ஆண்டு தமிழ் தினப்போட்டி
மாவட்ட மட்டம் 2ம் இடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. யாகாவாராயினும் நாகாக்க

காப்பு

தேனூறு செந்தமிழை சிறப்புடனறியாத
பாலகர் நாங்கள் பணிவோடமர்ந்து
ஆல் அரச நிழலமர்ந்தருளும்
ஐங்கரனார் பாதம் பணிந்து
வல்லமையாய் சொல்லெடுத்து கதையமைத்து
வில்லிசைபாட வேழமுகனே முன்னருள்வாய்.

அவையடக்கம்

பாடறியேன் படிப்பறியேன்
படிப்பறியேன்
நான் பாட்டிலுள்ள வகையறியேன்
வகையறியேன்
அவையோரே ஏடறியேன் எழுத்தறியேன்
எழுத்தறியேன்
நான் ஏட்டிலுள்ள பொருளறியேன்
பொருளறியேன்.

குரு : தந்தனத்தோம் என்று சொல்லியே வில்லினில் பாட

குழு : ஆமா! வில்லினில் பாட, ஆமா! வில்லினில் பாட

குரு : அருள் புரிவாய் ஆதிமுதலே

குழு : ஆமா அருள் புரிவாய் ஆதிமுதலே

குரு : சந்தத்தோடு கடதாளம், சிற்றுடுக்கை, சுருதியோடு
வில்லிசைக்கும் எங்களுக்கு

குழு : வரம் தந்தருள்வாய் மூல முதலே - 2

குரு : வந்திருக்கும் அனைவருக்கும் அன்பு வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழு : ஆமா அன்பு வணக்கம்

குரு : சங்கத்தமிழ் நடுவருக்கும் சொன்னோம் வணக்கம்

குழு : ஆமாம் சொன்னோம் வணக்கம்
எங்கள் பண்பான வணக்கம்
வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

குரு : வில்லிசைத்துச் சொல்லப் போகிறோம் - நாங்க
வில்லிசைத்துச் சொல்லப் போகிறோம்.

குழு : ஆமா! வில்லிசைத்துச் சொல்லப் போகிறோம்.

குரு : "யாகாவாராயினும் நாகாக்க" என்ற தலைப்பில்
வில்லிசைத்துச் சொல்லப்போகிறோம்.

சீடன் 1 : அட நம்மட பக்கத்துவீட்டு நாகாத்தையிட கதையா?
அவட கதை எனக்கு நல்லாத் தெரியுமே

சீடன் 2 : அடே! மண்டூகமே! நாகாத்தையில்ல நாகாக்க!

குரு : "யாகாவாரயினும் நாகாக்க", என்றால் யாராயிருந்தாலும் நாவடக்கம் வேண்டும் என்னும் திருக்குறளடியை விளக்கும் கதை.

சீடன்1 : குருவே எனக்கு புதுக்குரல், என்டாத்தான் விளங்கும் திருக்குறளெல்லாம் பழங்குரல்.

குரு : சீ... மூடு வாய, திருக்குறள் பற்றி உனக்கு என்ன தெரியும் நான் சொல்வதை மட்டும் கேள்.

சீடன்2 : இதத்தான் சொல்றது நாக்கென்ற பொல்லாத ஆயுதத்த அடக்கிப் பேச வேணுமென்று. நாவை அடக்காவிட்டால் வரும் அவதி, அழிவு பற்றிய நல்லொரு கதை கூறுங்க குருவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு : அந்நாளில் தென்னகத்தில் சேர, சோழ, பாண்டிய நாடுகள் அதில் சேர நாடு சொல்லுக்கும் செயலுக்கும் சுடர் சேர்த்த நாடு. நீதி தவறாத மன்னர்கள் பலர் நெறிமுறை தவறாது நீண்ட காலம் ஆட்சி புரிந்த நாடு. குறுநில மன்னர்கள் வரமுறை தவறாது பேரரசிற்கு கப்பம் என்னும் திறை கட்டி நட்போடு வாழ்ந்த நாடு... இதற்கு விதிவிலக்காக சேரநாட்டின் மேற்கு கரையோரமுள்ள நெய்தல் நாட்டினை மன்னன் மூவன் ஆட்சி செய்த காலத்திலே....

சீடன் 1 : எங்கட முப்பாட்டன் எனக்குச் சொல்லிருக்காரு!

சீடன் 2 : என்ன உங்கட முப்பாட்டனும் குறுநில மன்னனாக ஆண்டதெண்டா சொல்லிருக்காரு!

சீடன்1 : சீச்சீ!... முச்சங்கமைத்து தமிழ் வளர்த்த நாட்டில். இந்த மூவேந்தரும் தங்களுக்குள்ளேயே சண்ட பிடிச்சி அழிஞ்சி தமிழருக்கென்றே ஒரு நாடில்லாம செஞ்சவங்கென்று.

சீடன் 2 : அடடடடா நீயல்லவோ ஒரு புத்திமான் சுரக்கா கூட்டுத்தலையா

சீடன்1 : இவன்ட கதைய விட்டுட்டு நீங்க மேல மேல சொல்லுங்க குருவே.

பாட்டு : சேர மன்னன் இரும்பொறைக் கீழ்
ஏற்றமுடன் குறுநில மாயிருந்து இருந்துவந்தது - 2
வான்பொழிய நீர் நிறைந்து வயல்விளையும் நாடு
நெல் முத்துக்கள் குவிந்து யொலிக்குமே முழுவிடமும்
சித்தம் நிறைந்து தினம் கொள்ளும் சேரநாடு
செல்வமிக்க வளமுள்ள நாடு.

சீடன் 1 : நாடென்டா இதுவல்லவா நாடு. சோற்றாலே மடையடைக்கிற நாடென்று கேள்விப்பட்டிருக்கிறேன். இப்படிபட்ட நெய்தல் நாட்டில், நான் பிறக்கலையே...

சீடன் 2 : சீ... எச்சில் ஒழுகுது வாய மூடு! சோறு கண்ட இடமே சொற்கமெண்டு அலையிறியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன் 1 : இவன்ட கதய விட்டுட்டு நீங்க மேலமேல சொல்லுங்க குருவே

சேர நாட்டின் சிற்றரசு மன்னன் மூவன்
பேரானபெரு மாற்றலுடையோன்
அஞ்சாத நெஞ்சுடைசிங்கமவன் நல்ல
நற்குணமும் பல உடையவந்தான்
நாவடக்கமின்றி பேசிடுவான் அவன்
நல்லது கெட்டது அறியாது
யாவரையும் தூக்கியெறிந்து பேசியே
வேதனை கொள்ள வைத்திடுவான்
தாம்பேசிய பேச்சில் பிழையென்றாலுமொரு
நாளுமதற்கு வருத்தப்படான்
அவனோடிருக்கு மமைச்சர்கள் கூட ஆலோசனை சொல்ல அஞ்சிடுவார்.
ஆமா ஆலோசனை சொல்ல அஞ்சிடுவார் - 2

குரு : இவ்வாறு திறமை, அறிவு, ஆற்றல், நற்குணமுடையவனாகிலும் நாவடக்கமின்றி அனைவரையும் எடுத்தெறிந்து பேசுவதாலும் அவரின் அமைச்சர்கள் கூட அவனுக்கு ஆலோசனை சொல்ல அஞ்சுவார்கள்.

சீடன் 1 : துட்டனக் கண்டா எட்ட விலகு என்றது இவரைத்தான் போல. நாவடக்கம் இல்லாத தலைவர்கள் நாடாளுவதும் ஒன்றுதான். காடாளுவதும் ஒன்றுதான். எல்லோரையும் எடுத்தெறிஞ்சி பேசுபவங்க தனிச்சி, தவிச்சித்தான் சாகுவாங்க.

சீடன் 2 : நீங்க புத்திசாலிதான் நாவமடக்கிப் பேசுறீங்க. குருவே! அந்த மன்னன் மூவன் காலத்தில் புலவர்கள் அவர்களை பாடிப்பரிசு பெறுவார்களாமே. மன்னன் மூவன் புலவரையும் நாவடக்க மில்லாமல் பேசியிருக்கின்றாரா குருவே?

குரு : சரியாக சொன்னாய் சீடா

சீடன் 1 : அப்ப நான்....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன் 2 : இவன் கிடக்கிறான் மூடன் இவன விட்டுவிட்டு நீங்க அந்த கதைய சொல்லுங்க குருவே

குமணவள்ளலைப்பாடி பரிசுகள் பல பெற்று
அப்பரிசுகளையெல்லாம் ஏழைக்களித்து
அதனாலே ஏழ்மைநிலைதனை அடைந்த
பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர்
பல நாட்கள் காத்திருந்து மூவனைப் பாடியே
பரிசு பெறச் சபை வந்தாரே
வந்தவரை அவமதித்து வாவென்றும் சொல்லாது
நிந்தனைகள் செய்தாரே அன்று - 2

சீடன் 1 : புலவருக்கும் இக் கெதியா? அபச்சாரம்! அபச்சாரம்!

சீடன் 2 : நீங்க பிரச்சாரம் செய்றதில் கெட்டிக்காரன் தான். பிறகு என்ன நடந்தது குருவே?

குரு : பெருந்தலைச் சாத்தனார் தானொரு புலவர் என்றும், தன்பெயரையும், குமணவள்ளலைப் பாடிப் பரிசு பெற்றதையும் கூற, அவரை ஏளனப் படுத்தினான் அந்த மூவன்.

சீடன்1,2: அப்படியென்றால் எப்படி அவமதித்தான் குருவே!

குரு : அத நான் பாட்டில சொல்றனப்பா
அரசே நானொரு நற்புலவன்! - 02
என் பெயர் பெருந்தலைச் சாத்தனார்!
பெயருக்கும் உருவுக்கும் பொருத்தமில்லை!
பொருத்தமில்லை பொருத்தமில்லை உன்தலை சிறியதாக இருக்கு!
ஊரின் பெயர் பெருந்தலை மன்னா! ஊரின்
பெயர் பெருந்தலை மன்னா
குமண வள்ளலைப்பாடி பரிசுபெற்றேன்!
இப்போது அவனிடம் செல்லு செல்லு! இப்போ தவனிடம் செல்லு செல்லு தப்பாது அவன் போண்டியாவான்! ஆவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன் 1 : மன்னனினும் மமதை பிடித்த மன்னன்

சீடன் 2 : கிழிஞ்சு போச்சு உனக்கும் அந்தக் குணம் தாராளமாக இருக்குத்தானே.

சீடன் 1 : இதுதானே வேணாங்கிறது இவன்ட கதய விட்டுட்டு நீங்க மேல மேல சொல்லுங்க குருவே.

குரு : "அரசே, பழம் பழுத்த மரங்களை நாடித்தானே பறவைகள் வரும் அதைப்போல, மன்னர்களையும், வள்ளல்களையும் தேடித்தானே பாவலர்களாகிய நாங்கள் வருகின்றோம்;' என்று கூற, மூவன் நாவடக்கமின்றி "நீங்கள் பொய்யையே புனைந்து கூறுவீர்கள், இல்லாதத்தை இருப்பதாகக் கூறுவீர்கள், அதைக்கேட்டு சில மன்னர்கள் உங்களுக்குப் பரிசு கொடுக்கிறார்கள் அவர்கள் தற்புகழ்ச்சியை விரும்புபவர்கள். நீங்கள் பொய் சொல்லியே பிழைக்கும் ஒரு வஞ்சகக் கூட்டம்" என்றும் யாரங்கே? "இந்தப் புலவனைப் புறடியில் பிடித்து வெளியே தள்ளுங்கள்" என்று ஏளனமாகக் கற்சித்தான்.

சீடன் 2 : புகழ் பாடும் புலவனுக்கு

சீடன் 1 : இக்கெதியா? புலவனோ அவமானத்தால் மனம் சோர்ந்து, நானே சென்று விடுகிறேன் என்று கூறிச்செல்ல மூவன் ஆணவத்தோடு ஆகா! ஆகா! என்று, சிரித்தான்.

சீடன் 1 : புலவன் ஏழைதான் என்றாலும் மன்னன் இப்படியா அவமானப்படுத்துவது? நானந்த புலவனாயிருந்திருந்தால்..

சீடன் 2 : சீ... நாறடிச்சிருப்பாயாக்கும். குருவே வாயுள்ளவன் கையுள்ளவனிடம் போய்ப்படுவான் என்பார்களே? இந்த மூவனின் நாவடக்க ஒருத்தருமில்லாமல் போய்விட்டர்களா குருவே?

குரு : சேர நாட்டைப்பற்றிச் சொல்லியிருந்தேனல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன்1,2: ஆமா! ஆமா! சொல்லியிருந்தீர்கள்.

குரு : அந்த சேர நாட்டரசன் கணைக்கால் இரும்பொறையின் ஆட்சிக்குட்பட்ட குறுநில மன்னன் மூவன் மூன்றாண்டுகளாக திறை செலுத்தாததையறிந்த இரும்பொறை தூதுவனை அழைத்து திறை பெற்று வருமாறு அனுப்ப தூதுவனுக்கும் மூவனுக்குமிடையே.....

சீடன் 1 : வட்டமேசை மகாநாடா நடந்தது குருவே.

சீடன்2 : வட்டமும் இல்ல தட்டையும் இல்ல திறை கட்ட மூவன் ஒத்துகொண்டானா குருவே.

என்ன சொல்கிறான் மூவன் என்றறிந்து வர
சென்ற தூதுவன் வந்தங்கு சேதியினைச் சொன்னான்
கணைக்காலிரும் பொறைக்கு பணத்தட்டுப்பாடு வந்ததால்
என்று எடக்கு முடக்காக பேசிய மூவனிடம்
மன்னா உங்களிடம் நான் யாசகம் கேட்கவில்லை
மூன்று வருசம் மன்னருக்குக்கட்டா திறையையே கேட்டேன்.

குரு : என்று தூதுவன் சொன்னதும், தூதுவனே நன்றாகக் கேட்டுக்கொள் இன்றிலிருந்து எனது நெய்தல் நாடு சுதந்திர பூமி. இனியாருக்கும்.

சீடன்1,2 :யாருக்கும்.......2

கட்டமாட்டேன் திறைகட்டமாட்டேன்
நான் கட்டமாட்டேன்
அந்த, கணைக்கால் இரும்பொறைக்கு திறை
கட்டமாட்டேன், நான் கட்டமாட்டேன்
விடமாட்டார் உன்னை விடமாட்டார்
அரசர் விடமாட்டார்
அரசனின் பெருமை கண்டு இப்படிப் பேசினால் விடமாட்டார்
அரசர் விடமாட்டார்
நீ வரச்சொல்லு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணைக்காலனுக்கு காலன் நான்தான். உன் மன்னனை
வரச்சொல்லு போருக்கு வரச்சொல்லு
முடியாது உன்னால் முடியாது
உன்னால் முடியாது
எங்களரசனை போரில் வெல்ல முடியாது
உன்னால் முடியாது
ஓடிவிடு தூதுவனே ஓடிவிடு தூதுவனே ஓடிவிடு
நீ ஓடாவிட்டால் பற்களைத் தட்டுவேன்
ஓடிவிடு! தூதுவனே ஓடிவிடு!

குரு : "தூதுவன் ஒருவனின் பற்களைத் தட்டுவேன் என்றும் நாவடக்கம் இல்லாமல் பேசிய மூவனை போர்களத்தில் சந்தித்தேதீருவேனென்று கூறிய அரசனைப் பார்த்து தளபதி உங்கள் வீரதத்திற்கு இது இழுக்கு மன்னா சிங்கமது செல்வதா சிறு நரியை எதிர்க்க நாவடக்கமின்றி பேசிய மூவனை வென்று பாருங்கள் முற்பற்களைத் தருவேன் காணிக்கை என்று தளபதி கூற அதுவும் சரிதான் என்று வென்றுவா வீரமுடன் நீரும் சென்று என்றதும் உத்தரவு மன்னா நொடியில் வாறேனென்று படைவீரர்களோடு தளபதி சென்றாரே.

குரு : சென்ற படை வீரர்கள் மூவனை விரட்டிப்பிடித்து தளபதியிடம் கொண்டு வந்தனர். நாவடக்கம் இன்றிப் பேசிய மூவனின் முற்பற்கள் தட்டப்பட்டன. அரசன் இரும்பொன்றை கூறியவாறே, அவன் முற்பற்களைப் பிடுங்கி தொண்டைக் கோட்டையின்வாயிற்கதவுகளில் பொருத்தி, "யாகாவாராயினும் நாகாக்க! மூவனின் பற்களைப் பாரீர்" என்றதன் கீழ் எழுதியும் வைத்தனர். மூவன் சேரநாட்டுச் சிறையில் அடைக்கப்பட்டபின் தன் செயலுக்காக வருந்தினான்.

சீடன்1,2: இப்பயாவது புத்திவந்திச்சோ? எப்படி வருந்தினான் குருவே?

குரு1,2 : ஐயோ! நாவடக்கமின்றி நானும் நடந்ததாலே இப்போ
பாவம் பழிக்கு ஆளானனே - 2

சீடன்2 : ஐயோ! எடுத்தெறிந்து பேசியதனாலே என்தனற்கு
நானே எதிரியாகி சிறையினிலே தவிக்கிறேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயோ சொந்த நாட்டிற்கே என்னால் அவமானம் தேடி
இப்போ சொல்லொன்னாத் துயராலே மாழுகிறேன் வாடி
ஐயோ நினைந்து நினைந்து எந்தன் நெஞ்சமே புண்ணாகி
நினைவிழந்து மதிமயங்கி சாகிறேனே
என்று வருந்தி சிறையினிலே உயிரிழந்தான் மூவன்.

குரு : இவ்வாறான செயல்களை விளக்கவே திருவள்ளுவர் "யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்கப்பட்டு" என்று, அதாவது,

யாராக இருந்தாலும், நாவை அடக்கிகாக்காது பேசினால், தான் பேசிய சொல்லால் உண்டாகிய குற்றத்திற்கு ஆளாகி துன்புறுவர் என்பதற்கு மூவனின் கதை நாடி பிடித்து காட்டுவதனால்,

சீடன்1,2: ஆமா ஆமா நாடி பிடித்து காட்டுவதனால்.

குரு : இன்றைய சிறார்களே நாளை மன்னர்கள் ஆகவே, வாய்க்கு வந்தவையெல்லாம் பேசி பிறருடைய மனதை புண்படுத்தி குற்றத்திற்கு ஆளாகி துன்புறாதிருக்க வேண்டுமென்று கூறி...

சீடன் 1, 2: என்று கூறி...

விருப்புடனே வந்திருந்து வில்லுப்பாட்டு கேட்டிருந்து
ரசிச்சவங்க எல்லோருக்கும் வணக்கம்
எங்கள மதிச்சவங்க எல்லோருக்கும்
வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

மங்களம் மங்களம் மங்களம் மங்களம்
இங்கு வந்து கதை கேட்ட உங்களுக்கும் மங்களம்
இன்பமதாய் கதைச் சொன்ன எங்களுக்கும் மங்களம்
மங்களம்! மங்களம்! ஜெய மங்களம்!
மங்களம்! மங்களம்! சுபமங்களம்!

2019 மட்டக்களப்பு மாவட்டம் – 2ம் இடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்

காப்பு

செம்மொழிச் செந்தமிழைச் சிறப்புடனே யுணர்ந்து
இன்பமுடனோத வைத்த எம்மிறையே - உள்ள முறை
வல்ல பகவானே உன் திருவடியை பணிந்தே
வில்லிசைக்கும் எம்மைக்காத்தருளே.

சீடர்கள் :வணக்கம் குருவே!

குரு : வணக்கம் சீடர்களே!

சீடன் 1 : குருதேவா! இனிய மலர்ச் சுகந்தம் கமழ இளந்தென்றல் இவ்வேளையில் தாங்கள் எங்களை இங்கு அழைத்து வந்த கராணம் என்னவோ?

சீடன் 2 : ஆகா! அதுவா பந்திக்கு முந்தியிருக்கின்றோம். அப்பளம் அடுப்பில் பொரிகின்றதாம் சற்று பொறுடா தம்பி

குரு : சீடர்களே! இந்த அழகான வேளையில் அறுசுவை உணவிலும் இனிதான அமுதத்தை ஊட்ட வந்துள்ளேன்.

சீடர்கள் :ஐயோ! அருமை அருமையிலும் அருமை கூறுங்கள் குருவே கூறுங்கள்.

குரு : கதை கூறுவதற்கு முன்பு சபையோருக்கு வணக்ககம் கூறிவிட்டு வருவோமா?

சீடர்கள் :ஆமா! ஆமா! அதுதானே முறைமை குருவே

குரு : தந்தனத்தோம் என்று சொல்லியே வில்லினில் பாட

குழு : ஆமா! வில்லினில்பாட ஆமா வில்லினில் பாட

குரு : அருள் புரிவாய் ஆதிமுதலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழு : ஆமா! அருள் புரிவாய் ஆதிமுதலே!

குரு : சந்தத்தோடு கடதாளம் சிற்றுடுக்கை சுருதியோடு வந்து வில்லிசைக்கும் எங்களுக்கு

குழு : வரம் தந்தருள்வாய் மூல முதலே

குரு : வந்திருக்கும் அனைவருக்கும் அன்பு வணக்கம்.

குழு : ஆமா! அன்பு வணக்கம்

குரு : சங்கத்தமிழ் நடுவர்க்கும் சொன்னோம் வணக்கம்.

குழு : ஆமாம் சொன்னோம் வணக்கம்

குழு : எங்கள் பண்பான வணக்கம்
வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

குரு : வில்லிசைத்துச் சொல்லப்போகிறோம் - நாங்க
வில்லிசைத்துச் சொல்லப்போகிறோம்.

குழு : ஆமா வில்லிசைத்து சொல்லப்போகிறோம்.

குரு : உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்ற புகழான திருக்குறளடி விளக்கும் கதையொன்றை வில்லிசைத்துச் சொல்லப் போகிறோம்.

சீடர்கள் : ஆமா ஆமா வில்லிசைத்துச் சொல்லப் போகிறோம்.

குரு : சீடர்களே இந்த அற்புதமான உலகத்திலே மானிட பிறவிகளை எடுத்த நாம் ஒவ்வொருவரும் "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" அதாவது செய்யக்கருதும் எதனையும் உயர்வாக கருத வேண்டும். அப்போது தான் நாம் வாழும் வாழ்வு அர்த்தமுள்ளதாக அமையும்.

சீடன் 1 : குருவே! நான் உயரமான மொட்டை மாடியில் இருந்து தான் சிந்திக்கிறனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன் 2 : மொட்டை மாடியிலிருந்து எப்படி கீழே குதிக்காலம் என்றா "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்பதை சரியாக தம் வாழ்வில் கடைபிடித்து வாழ்ந்தவர்கள் பற்றிய கதை ஒன்றை கூறுங்கள் குருவே.

குரு : ஆம் கருவிலே உருவான காலம் தொடக்கம் சிந்தையிலே உயர்வாக சிந்தித்து எத்துன்பம் தன் உடல் உயிர்க்கு ஏற்படினும் கொடுப்பதையே உயர்வான சிந்தனையாக கொண்டு வாழ்ந்த அதாவது உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளலாக வாழ்ந்த கர்ணனின் கதையைத்தான் இன்று உங்களுக்கு கூறப் போகிறேன்.

சீடன் 1 : குருவே கர்ணனது உயர்வான சிந்தனையில் உதித்தது தானா கொடை. அதனால் தானா அவனை சிறந்த கொடையாளி என்கிறார்களா?

குரு : ஆமப்பா! கர்ணன் கொடையில் சிறந்தவன். அந்த கொடையில் சிறந்தவனாவதற்கு நல்ல உள்ளம் வேண்டும். அந்த உள்ளத்தில் எழும் சிந்தனை உயர்வானதாக இருக்க வேண்டும். கர்ணனின் நல் உள்ளத்தில் உதித்த உயர்வான சிந்தனை எல்லாம் கொடையாகவே இருந்தது. இந்த உயர்வான சிந்தனையாலேயே கர்ணன் உலகம் போற்றும் கொடையாளியானான்.

சீடன் 2 : குருவே அப்ப கர்ணனின் உயர்வான சிந்தனையாகிய கொடை பற்றி கூறுங்களேன்.

பாடல் : என்ன கொடுப்பான் எதையும் கொடுப்பான்
எண்ண முன்னமே பொன் பொருள் கொடுப்பான்
போதாது என்றாலே இன்னும் (கொடுப்பான்)
உலகம் தன்னிலே ஏழ்மை நிலை ஒழிய
அள்ளி கொடுப்பான் கொடுப்பான்
கல்வியோடு செல்வம் கொடுப்பான்
எண்ணியவர் எண்ணும்படி எல்லாம் கொடுப்பான்
தன் உயர் சிந்தனையால் எல்லாம் கொடுப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன் 1 : எச்சிக் கையால காகம் திரத்தாத இந்த உலகத்தில் இப்படியொரு உயர்வான சிந்தனையுடைய கொடை வள்ளலா குருவே....

சீடன் 2 : சா...... அப்ப நான் பிறந்திருந்தால்.......

சீடன் 1 : அத்தனை சொத்தயும் சுருட்டியிருப்பா. நீ கொஞ்சம் பேசாம இரு. சிவ பூசையில் கரடி பூந்த மாதிரி நல்ல கட்டத்தில் தொல்லை செய்யாமல் இரு. குருவே கர்ணனின் பிறப்பு வளர்ப்பு பற்றிக் கூறுங்களேன்.

குரு : அதை நான் பாட்டுல சொல்றனப்பா......

பாட்டு : துர்வாசருக்கு பணிவிடை செய்த - அவள்
மந்திரத்தை சோதித்த வேளை
கதிரவன் போன்று கவச குண்டல
மதி நிறை மாமகனை ஈன்றாளே.

கன்னியான தனக் கவதூறு என அஞ்சி
பொன் பொருள் தன்னாடை பேழையில் வைத்து
கங்கா தேவியிடம் அடைக்கலமளித்து
ஓடும் நீரலையில் நேரடியாய் விட்டாளே.

குரு : அஸ்தினா தேரொட்டி அப் பேழை
கண்டெடுத்து திறந்த வேளை
அதிரதன் அகம் மலர்ந்தந்தக் குழந்தையை
அன்போடு மனைவியிடம் மளித்தானே.

குரு : அக் குழந்தையைக் கொண்டு வரும் போது கண்ட தவசிரேஷ்டர் யார் இந்த குழந்தை என்று கேட்க அவர்கள் கூறியதை கேட்டு சூரியபிரகாசம் பொருந்திய மகனே வாவென்று வாரியணைக்க நீட்டிய கரங்களில் அக் குழந்தையின் சிந்தனை உயர்வால் யாசிக்கின்றாறென நினைத்து தன் நெற்றி சுட்டியை பியத்து அவர் கைகளில் திணிக்க அதிசயித்தவர் இவன் கொடுப்பதையே உயர்வான சிந்தனையாக கொண்டு கவச குண்டலத்தோடு பிறந்ததால் "கர்ணன்" எனப் பெயர் சூட்டினார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சீடன் 1 : அப்பிஞ்சுக் குழந்தைப் பருவத்திலே உயர்வான உள்ளுதல் பெற்றுவிட்டான்! இல்லையா குருவே.

சீடன் 2 : அவனது உயர்வான சிந்தனையாகிய கொடை உள்ளத்தில் உதித்து உதிரத்தில் கலந்து உடலோடு ஒட்டி விட்டதில்லையா குருவே.

குரு : நீங்கள் சண்டையிட்டாலும் சரியாக புரிந்து கொண்டீர்கள். அவன் வளரும் போதே.

பாடல்

வளம் குறைந்த மக்களுக்கு கர்ணன் மக்களுக்கு
வலது கை கொடுக்கும் என்றும் கை கொடுக்கும்
இடது கை தானறியாதென்றும் தானறியா!
இப்படியவன் கொடையே நீண்டு செல்லும் நீண்டு செல்லும்.

நன்னே நன்னேன நன்னா நன்ன நானே நன்னா - நன்ன
நானான நானே நன்னா நன்ன நானே நன்னா

குரு : மழை கொடுக்கும் கொடையோ இரண்டு மாதம் இரண்டு மாதம், வயல் கொடுக்கும் கொடையோ மூன்று மாதம் மூன்று மாதம், பசு கொடுக்கும் கொடையோ நான்கு மாதம் நான்கு மாதம். பார்த்தீபன் கர்ணன் கொடைக்கோ நாளும் மாதம் நாளும் மாதம்.

குரு : நாணிச் சிவந்தன மாதர்கள் கண்கள் மாதர்கள் கண்கள்
நடந்து சிவந்தன பாவலர் கால்கள் பாவலர் கால்கள்
நற்பொருள் தேடிச் சிவந்தன ஞானியர் நெஞ்சம் ஞானியர் நெஞ்சம், கொடுத்து தேய்ந்தே சிவந்தன கர்ணனின் கரமே கர்ணனின் கரமே.

சீடன் 1 : கர்ணனின் உயர்வான சிந்தனையாகிய கொடையால் கல்லும் உருகி மகிழும் இல்லையா குருவே!

சீடன் 2 : எனது மனமும் உருகிவிட்டதை நீயறியவில்லையா? தோழா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன் 1 : அது மனம் உள்ளவர்களுக்கே. உனக்குதான் அது இல்லையே. பொன் பொருளை மட்டும் தான் கர்ணன் கொடுத்தாரா குருவே.

குரு : வந்திருப்பவன் யாசகன் அல்ல. இந்திரன். சூதினால் கவச குண்டலத்தை கவர வந்திருப்பவன் என்று கதிரவன் அசரீரியாக அறிவித்திருந்தும் உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்பதற்கேற்ப கொடையையே உயர்ந்த சிந்தனையாகக் கொண்ட கர்ணன் கேட்பவர்களுக்கு கேட்பதை கொடுக்கும் சிந்தனையுடையோன். கவச குண்டலம் தன் உடல் உயிர்க்கு காப்பகமானது அவை இருக்கும் வரை தன்னை யாரும் வெல்ல முடியாதென்றறிந்திருந்தும் உடலோடொட்டிய கவசமும் செவியோடொட்டிய குண்டலமும் யாசித்த இந்திரனுக்கே யோசிக்காது கொடுத்த கொடையாளி கர்ணமகான்.

சீடன் 1 : குருவே தனது உயிருக்கு ஆபத்து நேரும் என்று தெரிந்திருந்தும் கர்ணன் தன் உயர்வான கொடை என்றும் சிந்தனையை கைவிடாது தன்னோடு ஒட்டிப் பிறந்தவைகளையே தியாகம் செய்தவன் என்றால் இவனே உலகில் உயர்ந்த கொடையாளி, கர்ணன் வாழ்க!

சீடன் 2 : பறவாயில்லையே உனக்கும் கொஞ்சம் அறிவு இருக்குதே! குருவே தாய் தந்தையை அறியாததால் கர்ணனுக்கு சமுதாயகத்தில் பல கேடுகள் வந்திருக்குமே.

குரு : அப்பப்பா! ஒண்டா இரண்டா எத்தனையோ சோதனைகள் அதனால் வேதனைகள் பீஸ்மர் துரோனாச் சாரியார் போன்ற குருமார்கள் அரசர்கள் மந்திரிமார்கள் போன்ற பலர் நிறைந்த சபையினிலே சத்திரிய குலத்தை சேர்ந்த, வில் வித்தையில் வீரதீரச் செயல்கள் புரிந்த அருச்சுணனே சிறந்தவன் என்று போற்ற, நானும் துரோ ணாச்சாரியாரின் மாணவர்களில் ஒருவன். எனது வில் வித்தைகளை கண்ட பின் முடிவிற்கு வாருங்கள் என்று கர்ணன் கேட்க.....

சீடன் 1 : விட்டார்களா? குருவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன் 2 : சத்திரிய குலத்தவனோடு சத்திரிய குலத்தவன் தான் போட்டியிட வேண்டும் என்று தடுத்தார்களா குருவே

குரு : அத நான் பாட்டுல சொல்றனப்பா......

பாடல் : விடமாட்டோம் நாங்கள் விடமாட்டோம் - 2
பெற்றோர் தெரியாத தேரோட்டி மகனை நாங்கள் விடமாட்டோம் - 2

தடுக்காதீர் என்னை நீங்கள் தடுக்காதீர் - 2
துரோனாச்சாரியாரின் மாணவன் என்னை
தடுக்காதீர் நீங்கள் தடுக்காதீர் - 2

குலம் என்ன? உன்தன் குலம் என்ன?
குலம் தெரியாத உன்னை நாங்கள்
மோத விடமாட்டோம் நாங்கள் விடமாட்டோம் - 2

என்று தடுத்து கர்ணனை சபையை விட்டு வெளியேறு, வெளியேறு இத்துடன் சபை கலைகின்றது. என்று கூற அவமானத்தால் கூனிக் குறுகி நின்றான் கர்ணன்.

சீடன் 1 : நானாயிருந்தால் அந்த கிழட்டுச்சபையை சின்னா பின்னம் ஆக்கி இருப்பன்.

சீடன் 2 : யாரும் பெலத்து கதைத்தாலே தொடை நடுங்கிற நீ, வீரம் பற்றி கதைக்கிறாயா?

குரு : உங்கட சண்டைய விடுகிறீர்களா? அல்லது நான் கதையை விடவா?

சீடன் 2 : இல்ல குருவே இவன் தான் இடக்கு முடக்காக கதைத்து என்னமோ எல்லாம் பிதற்றுகின்றான். நீங்க இவண்ட கதையை விட்டு விட்டு மேல சொல்லுங்க குருவே.

குரு : பாண்டவர்களின் பகையாளியான துரியோதனன் இதுதான் சரியான சந்தர்ப்பம் என்று துரோணாச்சாரியாரின் வார்த்தைக்கு


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஏற்ப. கர்ணன் அநாதை அல்ல. இப்பொழுதே என் நண்பன். அவனை எனது சிற்றரசாக அங்க தேசத்திற்கு அதிபதியாக்கி சரியாசனம் கொடுக்கின்றேன் என்று சபையோர் முன் அறிவித்தான்.

சீடன் 1 : நான் நினைத்தேன் குரு சொல்லிவிட்டார்.

சீடன் 2 : உன்ற நினைப்புத்தான் பிழைப்பை கெடுக்கிற. பிறகு என்ன நடந்தது குருவே?

குரு : அந்த இக்கட்டான நிலையிலும் கர்ணன் தனது உயர்வான உள்ளுதலால்....

சீடன் 1 : உயர்வான உள்ளுதலால் கர்ணன் என்ன செய்தான் குருவே?

குரு : கொஞ்சம் பொறுங்க நான் சொல்றன்.

பாடல் : தக்க சமயத்தில் மானம் - காத்து
அங்க தேசத்திற்கு அரசனுமாக்கி
திக்குள்ளோர் எல்லோரும் போற்ற
செய்தானே துரியோதனராசன்
இத்தகைய செயல் தீரத்தாலே - அவன்
என்றுமேயெனக்கு ஒரு தெய்வமென்றானே

தக்கிட தரிகிடதித்தோம் - தாதை
தாகிட தத்துமித்தித்தோம் - 2

சீடன் 1 : எனக்கு இப்ப கூத்தாடி பாடவேணும் போல இருக்கு குருவே.

சீடன் 2 : உங்கட பரம்பரை கூத்தாடி பரம்பரை என்று சொல்ல வாறாயா? இவனை விட்டுவிட்டு கதைக்கு வாங்க குருவே. கடைசி வரைக்கும் கர்ணனுக்கு பெற்றோர் யாரென்று தெரியாதா?

குரு : பாரத போருக்கு நாள் குறித்த பின் கபட நாடக சூத்திரதாரியான கண்ணன் குந்தியிடம் வந்து முந்திய கதையை கூறி நீ பேழையில் விட்ட மகன் தான் கர்ணன் துரியோதனனுடன்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கூடி அருச்சுனனை அழிக்கவென்று நாகாஸ்த்திரத்தை வளர்த்து வருகின்றான். அவனிடம் சென்று அருச்சுனனை தவிர மற்றைய சகோதரர்களுடன் போர் தொடுப்பதில்லை என்றும், நாகாஸ்த்திரத்தை ஒரு முறைக்கு மேல் விடுவதில்லை என்றும் வரம் பெற்று வா என அனுப்பிய படியே சென்று, துரியோதனனை விட்டு தன்னுடன் வரும்படி தாய் குந்தி வருந்தி அழைக்க.....

சீடன் 1 : கர்ணன் தம்பிமார்களிடம் ஓடோடி வந்தானா குருவே?

சீடன் 2 : புதிசாரை கண்டு பழசாரை கைவிடும் புத்தி உனக்குத்தான் கர்ணனுக்கு இல்ல. அப்படித்தானே குருவே?

குரு : சரியாகச் சொன்னாய் சீடா! கர்ணன், தாயிடம்

பாட்டு :

1. சுற்றமற்று சுய மதிப்பு விட்ட என்னைத் தாயே
இந்த அங்க நாட்டுக்கதிகபதியாய் ஆக்கினவன் தாயே
ஆமா - ஆக்கினவன் தாயே

2. மானம் காத்து மதிப்பளித்த துரியனைத் தாயே - எந்தன
சிந்தையிலே தெய்வமாகி விட்டவன்தான் தாயே
ஆமா - விட்டவன் தான் தாயே

3. ஊரவனை எப்படியும் எண்ணிடலாம் தாயே - ஆனால்
ஊழி காலம் வரை அவனே தெய்வம் அம்மா தாயே

சீடன் : உண்மைத் தெய்வம்மா தாயே

குரு : என் உள்ளத்தின் உள்ளுதலால் உயர்ந்த தெய்வமவனை விட்டு வரமாட்டேன் அம்மா வரமாட்டேன் என்ற அவனிடம் எனக்கு இரண்டு வரங்களைத்தா மகனே என்றால் குந்தி.

சீடன் 1 : தாய் தனயனுக்கு வரமளிப்பதே வழக்கு இது என்னடா பிணக்கு.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சீடன் 2 : உனக்குத் தெரிந்ததை முளக்கு தெரியாததை விட்டு விலக்கு என்ன வரம் குருவே

குரு : தன்னானத் தான தன்ன தானாதன்ன தானனத்தான தன்ன தானா - 2

1. தனஞ்செயன் தவிர்ந்த தம்பிமார்களோடு - நீயும் போர் பொருதக் கூடாது நின்று

2. நாகாஷ்திரத்தை ஒரு முறை தவிர - எடுத்து மீண்டும் விடக்கூடாது அடுத்து, என்று கேட்க உயர்சிந்தனையுள்ளம் கொண்ட கர்ணன் வரத்தையும் கொடுத்தான்.

சீடன் 1 : இப்படிப்பட்ட ஒரு பிள்ளையா? இவன் கொடைக்கும் எல்லை இல்லையா?

சீடன் 2 : போர் நடந்ததா குருவே? போர் களத்திலும் கர்ணனின் உயர்ந்த சிந்தனையான கொடை இருந்திருக்குமே குருவே.

குரு : குருசோத்திர போர்களத்தில் துரியனுக்கான உயர்வான உள்ளுதலால் இளம் மகனையும் இழந்தான் கர்ணன் அருச்சுனனின் அம்புகள் மார்பை துளைக்க கர்ணன் செய்ததான தர்மத்தால், தர்மத்தாய் அருச்சுனனின் கணைகளைத் தடுத்து மாலைகளாக்கி மாற்றி சொரிந்திட்டாள்.

சீடன் 1 : அது தானே அவனது உயர்வான சிந்தனையால் உதித்த கொடையாகிய தர்மம் தலைகாத்து விட்டது, இல்லையா குருவே!

சீடன் 2 : தர்மம் தலைகாக்க வர: சதி உயிரெடுத்ததா குருவே

குரு : ஆம் உண்மை அறிந்த கண்ணன் கிழப்பிராமண வேடத்தில் வந்து தர்மம் இப்படி வீழ்ந்து கிடக்கின்றதே யாசிக்க வந்த நான் எதையும் பெறமுடியாதே எனக் கூற அம்புகள் பாய்ந்து அவதியுறு நிலையிருந்த கொடையையே உயர்ந்த சிந்தனையாக கொண்ட கர்ணன் இல்லை என்ற சொல்வராது என்னிடம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்போது உள்ளது உயிர் மட்டும் தான் இறக்கும் போது பெருமை வரச்செய்ய உள்ளதைக் கேள், என்று கூற என்னிடம் நீர் செய்த தர்மத்தின் பலனை எல்லாம் எனக்கு தாரைவார்த்து தரவேண்டும் என்று கேட்க, உடலால் உதிரத்தை தாரைவார்த்து உனக்களிக்கின்றேன் என்று கொடுத்தான் கர்ணன்.

சீடன் 1 : ஐயகோ! வாரி வாரி வழங்கிய வள்ளல் உயிர் பிரிந்து விட்டதே இது என்ன கொடுமை! கொடுமையிலும் கொடுமை!

சீடன் 2 : மடமை! உனது மடமையே மடமை! கர்ணன் உடழழியலாம் ஆனால் அவனது உயர்வான சிந்தனையால் வந்த கொடை வள்ளல் எனும் புகழ் அழியாது இல்லையா குருவே.

குரு : தர்ம தேவதை வந்து கர்ணன் எப்படிப்பட்டவன் என்றும் அவனின் தாய் சகோதரர்கள் யார் என்றும் கபடக் கண்ணன் மற்றோர் முன்னிலையில் கூறினாள்.

சீடன் : எப்படி குருவே

பாடல் :

1. தரு : தனனா தனதானினா தானினதானா
தன்னா தனதானினா - தனனா தனதான தனனா தனதான
தானின தானா

2. தர்மத்திற்கு ஒரு மகனாய், இந்த தரணியில் அவதரித்து கர்ம மாற்றிக் கர்ணா, இறுதி வரை உறுதியாயயிருந்து சிந்தித்ததெல்லாம் உயர்வு பற்றியே எண்ணி எல்லோருக்கும் எல்லாமே (ஈர்ந்திருந்தாயே! - 2)

குரு : எத்தனையோ வஞ்சனைகள், உன்னைப்பற்றிப் படர்ந்த போது அத்தனையையும் உயர் உள்ளுதலாலே நிச்சயமாய் நீ அறுத்தெறிந்து செய்திட்ட தான தர்ம பயனையும் தாரைவார்த்து கொடுத்துச் சரித்திரம் படைத்தாயே.

சீடன் 1 : உண்மை உண்மையிலும் உண்மை உள்ளுவதெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வுள்ளல் என்பதைக் கர்ணனின் உயர்வான சிந்தனைகளால் தெட்டத்தெளிவாக விளங்கிக் கொள்ளச் செய்து விட்டீர்கள் குருவே!

சீடன் 2 : இப்பத்தான் தம்பிக்கு தெளிவு வந்திருக்கு. உனக்கு விளங்கினா ஊருக்கே விளங்கின மாதிரித்தான்.

குரு : "உள்ளுவதெல்லாம், உயர்வுள்ளல் மற்றது தள்ளினும் தள்ளாமை நீர்த்து" என்று வள்ளுவன் வாக்கு கர்ணனால் மெய்ப்பிக்கப்படுகின்றது. ஆகவே நாமும் எம் வாழ்வில் செய்யக் கருதுபவைகளை உயர்வாகவே எண்ணுதல் வேண்டும். என்று கூறி.

சீடர்கள் : என்று கூறி

விருப்புடனே வந்திருந்து வில்லுப்பாட்டுத் கேட்டிருந்து
ரசித்தவங்க எல்லோருக்கும் வணக்கம்
எங்களை மதிச்சவங்க எல்லோருக்கும்
வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

மங்களம் மங்களம் மங்களம் மங்களம்
இங்கு வந்து இதைக்கேட்ட உங்களுக்கும் மங்களம்
இன்பமதாய் கதைசொன்ன எங்களுக்கும் மங்களம்
மங்களம் மங்களம் ஜெயமங்களம்
மங்களம் மங்களம் சுப மங்களம்

**2020, மட்டக்களப்பு வடக்கு வலயம்**
**1ம் இடம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வில்லடிப்பாட்டு

அன்பு, அறிவு, அடக்கம், ஆற்றல், அமைதி, பண்பு, பாரம்பரியம், பக்தி, கலை, கலாசாரம் என அனைத்து அம்சங்களும் பொதியப் பெற்ற எனது பெரும்மதிப்புக்கும், மரியாதைக்கும் உரிய ஆரையூர் அருள் ஐயாவின் சிறப்பு பற்றி கூறக்கிடைத்தது பெரும்பாக்கியமாக கருதுகின்றேன். ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் தற்போது விரல் விட்டு சுட்டிக் காட்டக்கூடிய ஒருவரென்றால் அது அருள் ஐயா என்று சொன்னால் மிகையாகாது.

கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், வில்லுப்பாட்டுக்கள், நாடகங்கள், கூத்துக்கள், ஒலிப்பேழை வெளியீடுகள், பல நூல்களை நூல் வடிவில் வெளியிட்டும் வைத்துள்ளார். தமிழ் இலக்கியத் துறையில் தன்னை நிலைநிறுத்தி சாதனை புரிந்து பல விருதுகளுக்கும், பாராட்டுதல்களுக்கும் சொந்தக்காரராக விளங்குகின்ற ஐயாவின் சிறப்பு எண்ணிலடங்காதது.

பல்கலை வித்தகரான அருள் ஐயாவின் வித்துவச்சிறப்பு வில்லடிப் பாட்டுக்களின் தலைப்பு, தலைப்பின் கதைக்கரு, நடை, வசனம், ஒவ்வொரு பாராட்டுகளுக்குமான தகுந்த மெட்டு, காப்பு அமைந்திருக்கும் விதம் என்பன சிறப்புக்குரியதே. வில்லடிப் பாட்டுக்கள் வாயிலாக ஐயாவின் சுயசிந்தனை, தூரநோக்குப் பார்வை என்பன வெளிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கவிஞனாக, நடிகனாக, இலக்கிய விற்பனராக ஒட்டுமொத்தத்தில் கலைக் களஞ்சியமாக திகழ்கின்ற அருள் ஐயாவின் கலைப்பணிக்கு "வில்லடிப்பாட்டு" எனும் இந்நூல் அவருடைய வித்துவச் சிறப்பினை எடுத்தியம்புகின்ற ஓர் ஆவணமாக அமைகின்றது.

**கலைமாமணி ம. கேதீஸ்வரன்**
முனைக்காடு

9 786245 421008

அக்ஷயன் அச்சகம், கொக்கட்டிச்சோலை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org